அல்லாஹ்வின் வஞ்சனை

The Deception of Allah

Author: CHRISTIAN PRINCE
Translation in to Tamil: JD



ஆசிரியரைப்பற்றி (About the Author)

மத்திய கிழக்கில் வளர்ந்து வந்த ஒரு அரேபிய கிறிஸ்தவராகிய நான், உண்மையை(சத்தியத்தை) கடினமான முதல்நேரடி அனுபவத்தால் கற்றுக்கொண்டேன். புத்தகங்களிலும் ஆவணங்களிலும் உண்மையைப் பகிர்ந்து கொள்ளலாம் ஆனால் அதை அன்றாடம் வாழும் வாழ்க்கையோடு எதையும் ஒப்பிட முடியாது.

நான் பள்ளியில் சிறுவனாக இருந்தபோது, எனது முஸ்லிம் ஆசிரியர்கள் வகுப்பறையில், "முஸ்லிமல்லாத எவரும் அழுக்கானவர்கள்"என்று என்னிடம் சொன்னார்கள். யூதர்கள் அனைவரும் பன்றிகள் அல்லது குரங்குகள் என்பதற்கு குர்ஆனிலிருந்து நேரடியாகச் எடுக்கப்பட்ட ஆதாரத்தை ஆசிரியர் எனக்குக் கொடுத்தார். அதில்:

> *அல்-மயிதா, அத்தியாயம்: 5, வசனம்: 60*
> *"அல்லாஹ்விடமிருந்து கெட்ட பிரதிபலனை அடைந்தவர்களைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கட்டுமா? (அவர்கள் யாரெனில்) எவரை அல்லாஹ் சபித்து, இன்னும் அவர்கள் மீது கோபமுங்கொண்டு, பொல்லாததை வணங்கினார்களோ அவர்களைக் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் ஆக்கினான். அவர்கள்தாம் மிகவும் தாழ்ந்த நிலையினர். நேரான வழியிலிருந்தும் தவறியவர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக"*
>
> *"Say should I tell you about an evil as judgment from Allah, the one which Allah curses him, and being angry of them, and made from them monkeys and pigs those who worshipped evil;– these are worse in position, and far more astray from the right path!"*

அத்தகைய கலாச்சாரத்தில், உங்களுக்கு இரண்டு வாய்ப்புகளில் ஒன்று உள்ளது: ஒன்று நீங்கள் அதன் ஒரு பகுதியாக இருக்க முடிவு செய்யலாம், அல்லது உண்மையைக் கண்டறிய முடிவு செய்யாலாம். ஒரு சனிக்கிழமையன்று மீன்பிடிக்கச் சென்ற யூதர்களை எல்லாம்-வல்ல இறைவன் பன்றிகளாகவும் குரங்குகளாகவும் மாற்றினார் என்பதை உலகில் யார் நம்பப் போகிறார்கள்?

அந்தக் கதை என்னை குர்ஆனின் நியாயத்தன்மையை (முறையானதா என்ற) கேள்விக்குள்ளாக்கியது.

முஸ்லிம்கள் மிகவும் நீதியுள்ள இறைவன் என்று கூறப்படும் அல்லாஹ், ஒருவன் தனது குழந்தைகளுக்கு உணவளிக்க முயற்சிப்பதற்காக அவனை பன்றியாகவும் குரங்காகவும் மாற்றப் போகிறான் என்பதில் அர்த்தமில்லை. குறிப்பாக அந்த கதையின் விளக்கத்தைப் படித்த பிறகு, சனிக்கிழமை தவிர ஒரு வாரம் முழுவதும் மீன் காணாமல் போகும்படி அல்லாஹ் வேண்டுமென்றே செய்தான் என்று கூறுகிறது. குர்ஆன் 5:3 க்கு முரணாக உள்ளது: "ஆனால் உங்களில் எவரேனும் பாவம் செய்யும் நாட்டமின்றி, பசிக் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப்பட்டு (மேலே கூறப்பட்ட விலக்கப்பட்டவற்றைப் புசித்து) விட்டால் (அது குற்றமாகாது). ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணை மிக்கோனாகவும் இருக்கின்றான்." (யூசுஃப் அலி

மொழிபெயர்ப்பு).


அந்தக் கதையைக் கேட்டதிலிருந்து என் மனதில் பல கேள்விகள் எழுந்தன. சனிக்கிழமை மீன்பிடித்தவர்களுக்கு பதிலாக கொலைகாரர்கள், கற்பழிப்பவர்கள், திருடர்கள் ஆகியோரை ஏன் அல்லாஹ் பன்றிகளாகவும் குரங்குகளாகவும் மாற்றவில்லை?


இதன் விளைவாக, ஒரு கிறிஸ்தவன் என்ற எனது நம்பிக்கைக்கு எதிராக முஸ்லிம்கள் கொண்டிருந்த அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் மேலாக இது என்னை இஸ்லாமை படிக்க வைத்தது. என்னால் முடிந்தவரை நன்கு கற்றுக்கொள்வதற்கு கடினமாகப் படித்தேன். உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற பிறகு, எந்தவொரு இஸ்லாமிய தேசத்திலும் ஒரு வழக்கறிஞராகவோ அல்லது நீதிபதியாகவோ பணியாற்றுவதற்குத் தகுதியுடைய இஸ்லாமிய சட்டப்படிப்பை படிக்க முடிவு செய்தேன். உண்மையில், நான் பெற்ற பட்டங்கள் இஸ்லாத்தைப் பற்றிய அறிவை எனக்குத் தரவில்லை, மாறாக இஸ்லாமிய புத்தகங்களை பல வருடங்கள் கடின உழைப்பு மற்றும் ஆராய்ச்சியோடு படித்ததால் பெற்றேன். இஸ்லாத்தைப் பற்றிய உண்மையை மக்களுக்குத் தெரிவித்து அவர்களு உதவி செய்ய வேண்டிய நேரம் வந்தது என்று நான் உணர்ந்தேன். “அல்லாஹ்வின் வஞ்சனை” மற்றும் எனது வரவிருக்கும் புத்தகங்கள் ஆகிய இரண்டு பகுதிகளையும் படிக்கப் போகிறவர்கள் அவருடைய கேள்விகளுக்கு "அரசியல் செய்யத் தெரியாவர” என்ற பதில்களைக் கண்டுபிடிப்பார்கள் என்று நம்புகிறேன்.


> யோவான் 8:32 (பைபிள்)
> "சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்."
>
> John 8:32 (KJV)
> “And ye shall know the truth, and the truth shall make you free.”


ஆசிரியர்(Author): கிறிஸ்டியன் பிரின்ஸ் (Christian Prince)
தமிழாக்கம்(Translation in to Tamil): சகோதரர் JD

Books written by Christian Prince:
Visit http://amazon.com









அல்லாஹ்வின் வார்த்தைகள்

அல்லாஹ்வின் வஞ்சனை - பாகம் 1

வண்ணங்களின் உபயோகம்:

Blue – Quran verses: ஊதா நிறம் – குர்ஆன் வசனங்கள்
Green – Hadith quotes: பச்சை நிறம் – ஹதிஸ் மேற்கோள்கள்
Red – Bible verses: சிவப்பு நிறம் – பைபிள் வசனங்கள்
Tamil Bible: http://www.tamil-bible.com

இந்த புத்தகத்தை நீங்கள் படிக்கக்கூடாது என்று இஸ்லாத்தின் (இமாம்கள்) மற்றும் ஜனங்கள் தங்களுக்குள்ளே நினைப்பார்கள்.

அல்லாஹ்வின் வார்த்தைகள்

> குர் ஆன் 4:82 “அவர்கள் இந்த குர்ஆனை ஏன் புரிந்துகொள்வதில்லை? (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்களே?”

இது ஒரு முக்கியமான வசனமாகும், இது குர்ஆனை ஆராய ஒரு அளவுகோலாக நாம் பயன்படுத்துவோம். இது இறைவனின் புத்தகமா இல்லையா என்பதை ஆராய்வதற்காக அல்லாஹ்வே இந்த சவாலை உருவாக்கியுள்ளான். முஸ்லிம்கள் அல்லாஹ்வின் கட்டளைகளையும் அவன் கொடுத்த பரிசோதனை முறையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்! குர்ஆனில் நாம் முரண்பாடுகளைக் கண்டால், அது அந்த வசனம் சொல்வது போல் அது உண்மையான இறைவனிடமிருந்து வந்திருக்க முடியாது.

முஸ்லிம்களின் கூற்றுக்களைப் பார்த்து குர்ஆனின் முரண்பாடுகளை வெளியேகொண்டுவருவோம். முஸ்லிம்களின் விஞ்ஞான அற்புதங்கள் என்று அழைக்கப்படும் தவறான கூற்றுக்களையும் நாம் அம்பலப்படுத்துவோம்.

ஹருன் யாஹ்யாவுக்கு பதில்:

இவர் தனது இணையதளத்தில் (http://miraclesofthequran.com and http://www.harunyahya.com) ஹருன் குர்ஆனைப் பற்றி ஏராளமான கூற்றுக்களைச் கொடுத்துள்ளார். என் புத்தகங்களான அல்லாஹ்வின் வஞ்சனை, மற்றும் குர்ஆனின் அறிவியலும் அற்புதங்களும் ஆகியவற்றில் இவரின் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு தவறானவை என்று வாசகர்களுக்கு காண்பிப்பேன், இவரின் (திரு. ஹருனின்) தவறான கூற்றுக்கள் வேண்டுமென்றே ஏமாற்றுவதற்காகவே உள்ளன. பின்வரும் புள்ளிகள் அவரது வலைத்தளத்திலிருந்து அவர் கூறிய சில கூற்றுக்கள். இந்த புத்தகத்தில், குர்ஆனின் இந்த வசனங்களின் உண்மையான அர்த்தத்தையும் நான் வெளியேகொண்டுவந்து காட்டுவேன், அதில் திரு. ஹருன் வாசகர்களை ஏமாற்ற முயற்சிக்கிறார். அனைத்து உரிமைகோரல்களும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டுள்ளதால், வானியல் அறிவியலைப் பற்றிய அவரது கூற்றுக்கள் அனைத்தையும் ஒரு பிரிவில் வைக்கப் போகிறேன். நான் அதற்குச் செல்வதற்கு முன், இஸ்லாம் மற்றும் முஹம்மது பற்றி ஒரு அறிமுகத்தை நான் உங்களுக்கு வழங்க வேண்டும்.

இஸ்லாம் என்பது **மூன்று முக்கியமான பெயர்களை** அடிப்படையாகக் கொண்ட ஒரு ஸ்தாபனமாகும்:

1. **அல்லாஹ்** என்பவன் இறைவன், அவனுக்கு **தொண்ணூற்றொன்பது பெயர்கள்** உள்ளன.
2. **ஜிப்ரீல்** (கேப்ரியல்) என்னும் வானவர், முஸ்லிம்கள் பரிசுத்த ஆவியானவர் என்று கூறுகிறார்கள் (ஆனால் இந்த கூற்று குர்ஆனில் ஒருபோதும் கூறப்படவில்லை).
3. **முஹம்மது** இஸ்லாத்தின் நபி (தீர்க்கதரிசி), அவர் அல்லாஹ்வின் நபிமார்களின் முத்திரை (கூறப்படும் 124,000 நபிகளுக்கு).

இஸ்லாம் மத சுருக்கங்கள்:

- அல்லாஹ் இரு உலகங்களுக்கும் (மனிதகுலம் மற்றும் ஜின்கள்) இறைவன், ஆனால் எப்படியோ அல்லாஹ் வானவர்களை (தேவதூதர்களை/ மலக்குகளை) மறந்துவிட்டான்! ஏனெனில் அவர்கள் இந்த இரண்டு உலகங்களிலிருந்து இல்லாததால் தான்!

- அல்லாஹ் 124,000 முஸ்லிம் நபிகளை (தீர்க்கதரிசிகளை) அனுப்பினான். துஃபாத், அல்-அபிப், ஆலா ஷர்ஹ், அல்-கித்தாப் (புத்தகம்), பக். 431, 432.

- முஸ்லிம்கள் நயவஞ்சகர்கள் (குர்ஆன் 4: 142).

- குர்ஆனைத் தவிர அல்லாஹ்வின் எல்லா புத்தகங்களும் கெட்டுப்போயுள்ளன (குர்ஆன்

4:46).

- முஹம்மது கடைசி நபி (குர்ஆன் 33:40).

- முஸ்லிம் அல்லாத கைதிகளின் தலை துண்டிக்கப்படுவது (குர்ஆன் 8:67; 47: 4)

- அல்லாஹ்வுக்கு மகன்கள் இல்லை (குர்ஆன் 4: 171).

- இஸ்லாத்தில் வானவர்களை பெண்களின் பெயரால் பெயரிட முடியாது; முஸ்லிமல்லாதவர்கள் மட்டுமே அவ்வாறு செய்கிறார்கள் (குர்ஆன் 53:27).

- அல்லாஹ்வுக்கு காதலி இல்லை (முஹம்மதுவின் காலம் வரை), (குர்ஆன் 6: 101; 72: 3)

- அல்லாஹ்வுக்கு ஒரே ஒரு கால் மட்டுமே உள்ளது (ஒரு முழந்தாள்) (குர்ஆன் 68:42)

- அல்லாஹ்வின் இரண்டு கைகளும் அவனது வலது பக்கத்தில் உள்ளன (அல்லாஹ்வுக்கு இடது கை இல்லை).(குர்ஆன் 49: 1). குறிப்பு: இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில், இடது கை தீட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகும் (எ.கா. கழிப்பறைக்கு பயன்படுத்தப்படுகிறது). தீட்டுப்பட்ட (இடது) கையை ஷைத்தான் மட்டுமே வைத்திருக்கிறான் (சஹீஹ் முஸ்லீம், புத்தகம் 023, ஹதீஸ் 5007). அல்லாஹ்வுக்கு தீட்டுப்பட்ட கை இருக்க முடியாது; எனவே அல்லாஹ்வின் இரண்டு கைகளும் சரியான (சுத்தமான) கைகளாக இருக்க வேண்டும்.

- அல்லாஹ்வுக்கு ஒரு முகம் இருக்கிறது (குர்ஆன் 55:27)

- அல்லாஹ் தனக்கு பெண் குழந்தைகளைப் பெறுவதை விரும்புவதில்லை (குர்ஆன் 53: 21-22)

- நீங்கள் அவனிடம் கேள்விகளைக் கேட்காத வரை, அவனிடம் கேள்விகளைக் கேட்க யாரும் அனுமதிக்கப்படாத வரை அல்லாஹ் எல்லாவற்றையும் அறிந்தவன் ஆவான் (குர்ஆன் 5: 101-102)

- முஸ்லிம்கள் நம்பிக்கையற்றவர்களை (முஸ்லிமல்லாதவர்களை) நண்பர்களாக எடுக்க முடியாது (குர்ஆன் 3:28; 4: 139; 5:51, 57, 81)

- முஃமின்கள் அல்லாத அனைவருக்கும் (முஸ்லிமல்லாதவர்களுக்கு) ஷைத்தான் ஒரு

நண்பன், (குர்ஆன் 7:27; 30)

- முஃமின்கள் (விசுவாசிகள்) அல்லாதவர்கள் ஒருவருக்கொருவர் மட்டுமே நண்பர்கள், ஆனால் முஸ்லிம்களுக்கு அல்ல (குர்ஆன் 8:73)

- முஸ்லிம்கள் காஃபிர்கள்களை (நம்பிக்கையற்றவர்களை) தங்களுக்கு நண்பர்களாக கூட எடுக்க முடியாது. அவர்கள் உங்கள் குடும்ப உறுப்பினராயிருப்பினும். (குர்ஆன் 9:23)

- “அல்லாஹ் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு நபியை அனுப்பினான், ஆனால் சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு முஸ்லிம்களால் ஒரு நபி என்று யாரையும் குறிப்பிட முடியவில்லை. (குர்ஆன் 10:47; 16:36, 84, 89; 23:44)

- ஒவ்வொரு தேசத்துக்கும் தங்கள் சொந்த மொழியில் பேசும் ஒரு நபியை அல்லாஹ் அனுப்பினான் (குர்ஆன் 14: 4). ரஷ்ய மொழியில் அல்லாஹ்வின் புத்தகம் என்னவாயிருக்கும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது?”

- குர்ஆன் என்பது முஸ்லிம்களின் புனித நூலாகும். இது இரண்டு வகையான கட்டளைகளைக் கொண்டுள்ளது: அவை நடைமுறைக்கு **செல்லுபடியாகுபவை** மற்றும் **ரத்து செய்யப்பட்டவை** ஆகும். ரத்து செய்யப்பட்டது என்றால் வசனங்கள் உள்ளன ஆனால் முஸ்லிம்கள் இனி அவைகளை பின்பற்ற அல்லது செய்ய அனுமதிக்கப்படுவதில்லை அல்லது வசனங்களைக் காணவில்லை (குர்ஆன் 2: 106).

- குர்ஆனிலிருந்து எல்லா ஷைத்தானின் வசனங்களையும் அல்லாஹ் ரத்து செய்வான் (குர்ஆன் 22:52)

- காபா என்பது அவர்களின் தொழுகைகளின் திசையை வைத்து ஒரு முஸ்லீம் யார் அல்லது யார் அல்ல என்று காண்பதற்கான ஒரு வழியாகும் (குர்ஆன் 2: 143) அதாவது குர்ஆன் 5:97 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி காபா ஒரு புனித வீடு அல்ல.

- இறந்தவர்கள் உயிருள்ளவர்களுக்கு சமமானவர்கள் அல்ல (குர்ஆன் 35:22). முஹம்மது இறந்துவிட்டார், ஆனால் இயேசு உயிருடன் இருக்கிறார். எனவே, முஹம்மது இயேசுவுக்கு சமமானவர் அல்ல என்று நாம் முடிவு செய்ய வேண்டும்!

- அல்லாஹ்வின் பொருட்டு இறப்பவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் (குர்ஆன் 2: 154)

- ஏமாற்றுபவர்களில் (வஞ்சிப்பவர்களில்) அல்லாஹ் சிறந்தவன் (குர்ஆன் 3:53; 7:99; 8:30; 10:21; 27:50)

- அல்லாஹ்வுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது, அவன் சிறந்த ஏமாற்றுக்காரன் (குர்ஆன் 13:42)

- அல்லாஹ் யாரை ஏமாற்றுகிறானோ அவருக்கு எந்த வழிகாட்டலும் இல்லை (குர்ஆன் 4: 143; 6:39, 125; 7:178, 186; 13:27; 16:37, 93)

- அல்லாஹ் தான் ஏற்கனவே வழிநடத்தியவரை ஏமாற்றி தவறாக வழிநடத்தக்கூடும்! (குர்ஆன் 9: 115; தப்சீர் அல்-ஜலாலெய்ன் மொழிபெயர்ப்பைக் காண்க. ஃபெராஸின் ஹம்சா, மற்றும் தப்சீர் இப்னு-கதிர், தொகுதி 2, பக். 395 {அரபு})

- காஃபிர்களை மேலும் வழிதவறச் செய்வதற்காக அல்லாஹ் ஒரு அசிங்கமான நடத்தையை, அழகு போல காட்டுவான்! (குர்ஆன் 6, வசனம் 137)

- பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள் அல்ல (குர்ஆன் 3:36)

- முஸ்லீம் ஆண்கள் தங்கள் மனைவிகளை அடிக்கலாம் (குர்ஆன் 4:34; 38:44)

- முஸ்லீம் ஆண்கள் ஒரே நேரத்தில் நான்கு பெண்களை திருமணம் செய்து கொள்ளலாம் மற்றும் திருமணத்திற்கு வெளியே வரம்பற்ற அடிமைகளுடன் உடலுறவு கொள்ளலாம் (குர்ஆன் 4: 3)

- முஸ்லீம் ஆண்கள் திருமணமான அடிமைப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்யலாம் (குர்ஆன் 4:24)

- முஸ்லீம் ஆண்கள் தங்கள் மனைவிகளை பாலியல் பலாத்காரம் செய்து எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும் படுக்கைக்கு கட்டாயப்படுத்தலாம் (குர்ஆன் 2: 223)

இஸ்லாம், கிறிஸ்தவ பெயர்கள்/வார்த்தைகள்:

இஸ்லாம்	*கிறிஸ்தவம்*
ஈசா	*இயேசு*
இப்ராஹீம்	*ஆபிரகாம்*

மூஸா	மோசே
சுலைமான்	சாலொமோன்
ஆதம்	ஆதாம்
தாவூது	தாவீது
மலக்குகள், வானவர்கள்	தேவதூதர்கள்
நபி	தீர்க்கதரிசி
மர்யம்	மரியாள்
யாஹ்யா	யோவான்
யஃகூப்	யாக்கோபு
இஸ்ஹாக்	ஈசாக்கு
இஸ்மாயீல்	இஸ்மவேல்
ஈமான்	நம்பிக்கை (விசுவாசம்)
முஃபமின்கள்	விசுவாசிகள்
காஃபிர்கள்	நம்பிக்கையற்றவர், புறமதத்தார்
அய்யூப்	யோபு
ஹாரூன்	ஆரோன்
இறைவன்	தேவன்

அல்லாஹ் யார்

அல்லாஹ் யார் என்று நாம் முஸ்லிம்களைக் கேட்டால்: “இறைவன்தான் படைப்பாளன் , எல்லாம் அறிந்தவன்” என்று பதிலளிப்பார்கள். அவர்களுடைய பதில் மற்றவர்கள் தங்கள் கடவுளைப் பற்றி சொல்லும் பதிலில் இருந்து வேறுபட்டதல்ல. ஆனால் அல்லாஹ் என்கிற இறைவனைப் பொறுத்தவரை, நிறைய சிக்கல்கள் உள்ளன. நாம் அவைகளுக்குளே போவோம்.

அல்லாஹ் என்கிற நபரை நாம் புரிந்துகொள்வதற்கு முன்பு, அவருடைய பெயரை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் கிறிஸ்தவத்தின் இறைவன் மற்றும் மோசேயின் இறைவன் என்று நாம் நம்புவதற்கு முஸ்லிம்கள் முயற்சி செய்கிறார்கள். அல்லாஹ் ஒரு அராமிய சொல் என்றும், இயேசு அராமிய மொழியில் பேசியபோது அதைப் பயன்படுத்தினார் என்றும் அவர்கள் நம்மை நம்பவைக்க முயற்சிக்கிறார்கள். இந்த கூற்று எவ்வளவு உண்மை?

சில ஆண்டுகளுக்கு முன்பு “**Passion of Christ**” திரைப்படம் வெளிவந்தபோது, முஸ்லிம்கள் இயேசு கடவுளின் பெயரை அராமிய மொழியில் பேசியதை திரைப்படத்திலிருந்து கிளிப்களை (துண்டு வீடியோ) எடுத்தனர். அல்லாஹ் என்ற பெயர் உண்மையில் அராமிய மொழி என்று தங்கள் கூற்றுக்களை நிரூபிக்க அவர்கள் தங்கள் சொந்த வீடியோக்களை உருவாக்க அந்த கிளிப்களைப் பயன்படுத்தினர். அவர்கள் தத்தெடுக்க முயற்சித்த அராமைக் சொல்லாகிய “**இலாஹ்**”(Elah), அல்லாஹ்வைப் போன்ற “**அல்**”(Al) அல்ல.

குர்ஆன் 4: 125 -இல் துரிதமான மற்றும் எளிதான ஆய்வு இங்கே:

وَمَنْ أَحْسَنُ دِينًا مِّمَّنْ أَسْلَمَ وَجْهَهُۥ **لِلَّهِ** وَهُوَ مُحْسِنٌ وَٱتَّبَعَ مِلَّةَ إِبْرَٰهِيمَ حَنِيفًاۗ وَٱتَّخَذَ **ٱللَّهُ** إِبْرَٰهِيمَ خَلِيلًا

குர்ஆன் 4: 125 ல், அல்லாஹ்வுக்கு இரண்டு சொற்கள் உள்ளன, ஆனால் அவற்றுக்கு ஒரே அர்த்தம் இல்லை.
உங்களுக்கு அரபு தெரியாது என்றால், இந்த இரண்டு சொற்களுக்கும் அதிக வித்தியாசத்தை நீங்கள் கவனிக்க மாட்டீர்கள், ஆனால் உண்மையில் அவற்றின் வேறுபாடு அதைவிட மிக அதிகம்.

முதல் வார்த்தையானது لِلَّهِ(**Lillah - லில்லாஹ்**).

இரண்டாம் வார்த்தை ٱللَّهُ (**Allah - அல்லாஹ்**).

அரபிய மொழியில் **அல்** - என்றால் **The** (தி) எனப்படும் சுட்டுப்பெயர்.

நாம் **அல்** என்ற வார்த்தையும், **லில்** என்ற வார்த்தையும் இவைகளில் இருந்து எடுத்துவிட்டால் நமக்கு

லாஹ் என்ற வார்த்தை மிஞ்சுகிறது.

உண்மையில் “**லாஹ்”** என்ற வார்த்தையானது சந்திரக்கடவுள் ஆகும். இது எகிப்தியரின் முக்கியமான கடவுள். https://en.wikipedia.org/wiki/Allah_as_a_lunar_deity பார்க்கவும். இது அரபியர்களால் வணங்கப்பட்டு வருகிறது. தமிழில் **லில்லாஹ்** என்பது “**லாஹ்-க்கு**” என்றும், **அல்லாஹ்** என்பது “**இந்த லாஹ்**” என்றும் பொருள்படும்.

لِلَّهِ = லில் + லாஹ் = லாஹுக்கு (To Lah)	ٱللَّهُ = அல் + லாஹ் = தி லாஹ். (The Lah)

மேலே உள்ள விளக்கத்தில் நீங்கள் காணக்கூடியது போல, **லில்லாஹ்**வும் **அல்லாஹ்**வும் அரபு மொழியில் ஒரே வார்த்தையாக எழுதப்பட்டிருந்தாலும், **லில்** மற்றும் **அல்** என்பது **லாஹ்** என்ற வார்த்தையின் ஒரு பகுதியாக இல்லை - அதாவது **லில்லாஹ்** மற்றும் **அல்லாஹ்** ஒவ்வொன்றும் இரண்டு சொற்களால் ஆனவை. மீண்டும், **லில்லா** என்றால் **“லாஹ்-வுக்கும்”**, **அல்லாஹ் என்றால் “இந்த லாஹ்”** என்றும் பொருள்.

அரபு மொழியில், **அல்** எப்போதும் “**தி(The)**” க்கு சமம், அது இறைவனுக்கு மட்டுமே காரணமான பெயர்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் அல்லாஹ்வின் 99 பெயர்களும் **அல்** அல்லது “**தி(The)**” உடன் தொடங்குகின்றன. இருப்பினும், "**தி(The)**" என்பது பெயரின் ஒரேபகுதியாக இல்லை என்பதை கவனத்தில் கொள்க.

பெயர் கடவுளுக்கு தனித்துவமானது என்பதைக் குறிக்கப் பயன்படும் மொழியை ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்துகிறோம்; கடவுளுக்கு மட்டுமே இந்த வேறுபாட்டைக் கொடுக்க முடியும், அது ஒரு பெயர், அது விளக்கம் அல்ல.

உதாரணமாக, “தி முஹம்மது" என்று நாம் கூற முடியாது, ஏனென்றால் முஹம்மது ஒரு நபரின் பெயர் மட்டுமே.

அல்-லாத் மற்றும் **அல்**-உஷா தெய்வங்களின் பெயர்கள் **அல்**-லாஹ்வின் பெயருடன் மிகவும் ஒத்திருக்கின்றன என்பதை கவனிக்கவும். இப்படி கடவுளை மனிதனிடமிருந்து வேறுபடுத்த **அல்** (அதாவது “தி”) என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

குர்ஆனில் மேசியா **அல்-மசீ** என்று அழைக்கப்படுகிறார் என்பது சுவாரஸ்யமானது. அதாவது உலகம் முழுவதிலும் ஒரே மேசியா என்று அர்த்தம். முழு குர்ஆனில் **அல்** அல்லது "**தி(The)**" என்ற பதம் ஒரு மனிதருக்கு இணைக்கப்படுள்ளது என்றால் அது மேசியா ஒருவருக்கே ஆகும், வேறொருவருக்கும் அல்ல.

அல்லாஹ் தன்னைப் பற்றி என்ன சொல்கிறான்:

அல்லாஹ் மகன்களை விரும்புகிறான், மகள்களை அல்ல. குர்ஆன் 53: 19-22:

أَفَرَءَيْتُمُ ٱللَّٰتَ وَٱلْعُزَّىٰ وَمَنَوٰةَ ٱلثَّالِثَةَ ٱلْأُخْرَىٰٓ أَلَكُمُ ٱلذَّكَرُ وَلَهُ ٱلْأُنثَىٰ تِلْكَ إِذًا قِسْمَةٌ ضِيزَىٰٓ	19. நீங்கள் (ஆராதிக்கும்) அல்-லாத்தையும், அல்-உஸ்ஸாவையும் கண்டீர்களா? 20. மற்றும் மூன்றாவதான ''மனாத்''தையும் (கண்டீர்களா?) 21. உங்களுக்கு ஆண் சந்ததியும், அவனுக்குப் பெண் சந்ததியுமா? 22. அப்படியானால், அது மிக்க அநீதமான பங்கீடாகும்.

ஒரு இறைவன் இதுபோன்ற ஒரு விஷயத்தை பேசி இதற்கு முன்பு நான் கேள்விப்பட்டதில்லை. முதலாவதாக, அவருக்கு மகன்களுக்குப் பதிலாக மகள்கள் (அல்-லாத், அல்-உசா, மற்றும் மனாத்) இருப்பது நியாயமற்றது என்று அல்லாஹ் கூறுகிறான். இரண்டாவதாக, அரேபியர்கள் தங்களுக்கு மகன்களைப் பெறுவது நியாயமற்றது - “உங்களுக்காக ஆண்களும் எனக்கு பெண்களுமா?” - அவனுக்கு மகள்கள் மட்டுமே-வா? இப்போது அதைப் பற்றி சிந்தியுங்கள். அல்லாஹ் அரேபியர்கள் தன்னைவிட ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று புகார் கூறுகிறான். ஏனென்றால் அவர்களுக்கு மகன்கள் கிடைக்கிறது, தனக்கோ வெறும் மகள்கள் கிடைக்கிறது. அல்லாஹ் படைப்பாளன் அல்லவா? அவர் தனக்குத்தானே மகன்கள் கொடுத்து ஏன் ஆசீர்வதிக்கமாலிருக்கிறான்?

குர்ஆன் 6: 101 (முஹம்மது பிக்தால் மொழிபெயர்ப்பு) ஏன் அப்படி சொன்னான் என்பதை விளக்குகிறது:

“வானங்களையும் பூமியையும் தோற்றுவித்தவன்! அவன் எல்லாவற்றையும் படைத்து, அனைத்தையும் அறிந்திருப்பவன்! அவனுக்கு அவருக்கு ஒரு துணைவியும் இல்லை எனில் எப்படி ஒரு குழந்தை பிறக்க முடியும்?”

குர்ஆன் 6: 101 என்பது ஒரு கேள்வி. அல்லாஹ்-வுக்கு ஒருபோதும் காதலி இல்லாவிட்டால்

எப்படி ஒரு மகனைப் பெறுவான்? இது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையைப் பற்றி அல்லாஹ்வுக்கு தவறான எண்ணம் இருக்கிறது என்பதை காட்டுகிறது. இயேசுவின் தாயான மரியாள் இறைவனின் காதலி (அல்லது துணைவி) என்று எந்த கிறிஸ்தவரும் நம்புவது இல்லை.

இஸ்லாத்தில் பரிசுத்த ஆவி யார்? மர்யம்-உடன் யார் பேசியது?

நான் உங்களுக்கு குர்ஆன் 6:101-ல் காட்டியுள்ளபடி:

> 6:101 “அவன் வானங்களையும், பூமியையும் முன் மாதிரியின்றிப் படைத்தவன். அவனுக்கு மனைவி, எவரும் இல்லாதிருக்க, அவனுக்கு எவ்வாறு பிள்ளை இருக்க முடியும்? அவனே எல்லாப் பொருட்களையும் படைத்தான். இன்னும் அவன் எல்லாப் பொருட்களையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.”

உடலுறவு கொள்ள தனக்கு ஒரு பெண் இல்லாவிட்டால் அல்லாஹ்வினால் பிள்ளை பெற முடியாது என்று ஒருபக்கம் சொல்லியிருக்க, மரியாள் (மர்யம்) ஒரு கன்னியாக இருந்தாள் இருப்பினும் அவள் கர்ப்பம் தரித்து இயேசுவை (அவர் குர்ஆனில் ஈஸா என்று அழைக்கப்படுகிறார்) சுமந்தாள்.

குர்ஆன் 3:47-ல் நமக்கு சொல்கிறது:

> قَالَتْ رَبِّ أَنَّىٰ يَكُونُ لِى وَلَدٌ وَلَمْ يَمْسَسْنِى بَشَرٌ ۖ قَالَ كَذَٰلِكِ ٱللَّهُ يَخْلُقُ مَا يَشَآءُ ۚ إِذَا قَضَىٰٓ أَمْرًا فَإِنَّمَا يَقُولُ لَهُۥ كُن فَيَكُونُ
>
> 3:47 (அச்சமயம் மர்யம்) கூறினார்: “என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் உடலுறவுகொள்ளாதிருக்கும்போது எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?” (அதற்கு) அவன் கூறினான்: “அப்படித்தான் அல்லாஹ் தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவன் அதனிடம் “ஆகுக” எனக் கூறுகிறான், உடனே அது ஆகி விடுகிறது.” ”

இந்த வசனத்தைப் பற்றி, முஸ்லிம்கள் மர்யம்முடன் பேசிக் கொண்டிருந்தவன் கேப்ரியல் என்னும் வானவர (மலக்கு) அல்லது ஜிப்ரீல் என்று உங்களுக்குச் சொல்வார்கள். (நாம் இங்கே பைபிளுள்ள இதே சம்பவத்தை விவாதிக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள கதையைப் பின்தொடர்கிறோம். எனவே இரண்டையும் போட்டு குழப்பவேண்டாம். இங்குள்ள கதையே வேறு).

மர்யம் உண்மையில் ஜிப்ரீலுடன் பேசிக் கொண்டிருந்தார் என்று சொல்வார்கள். மேலும் முஸ்லிம்கள் "மர்யம் உடன் பரிசுத்த ஆவியானவர்தான் ஜிப்ரீல் என்கிற வானவர் (தேவதூதன்) வடிவத்தில் அவளுக்குத் தோன்றி பேசினான்" என்று உங்களுக்கு சொல்வார்கள்: ஆனால் அவர்களது குர்ஆன் ஒருபோதும் பேசிய வானவர் ஜிப்ரீல் என்று குறிப்பிடவில்லை என்கிற உண்மையை உங்களிடம் சொல்லமாட்டார்கள்.

47-வது வசனத்தை கவனமாக ஆய்வு செய்வோம்:
அவள் (மர்யம்), "**என் இறைவனே**, எந்தவொரு மனிதனும் என்னுடன் உடலுறவுகொள்ளாதிருக்கும்போது நான் எப்படி ஒரு மகனைப் பெறப்போகிறேன்". அதற்கு அவன்: அப்படித்தான் அல்லாஹ் தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவன் அதனிடம் "ஆகுக" எனக் கூறுகிறான், உடனே அது ஆகி விடுகிறது.

குர்ஆன் மனிதனால் உருவாக்கப்பட்டது என்பதற்கான மற்றொரு ஆதாரத்தை இந்த வசனம் நமக்கு முன்வைக்கிறது. கீழே கொடுக்கப்பட்டதை கவனிக்கவும்:

மரியம் (மனிதனான தோன்றிய) பரிசுத்த ஆவியை (குர்ஆன் 19:17), "என் இறைவனே (RABY - ரப்பி - **رَبِّ**)" என்று அழைக்கிறார். ஆனால் அவன் அவளிடம்: நான் வெறும் இறைத்தூதர், இறைவன் அல்ல என்று கூறினான் (குர்ஆன் 19:19).

குர்ஆன் 3:47-ல் மர்யம் அவனை அல்லாஹ் என்று நினைத்தாள். அவனோ: "நான் 'ஆகுக' என்று சொன்னால் ஆகும் என்று சொல்லாமல், அவன் ஆகுக என்று சொன்னால்" என்று மூன்றாவது நபரைப்போல் சொல்கிறான்.

மரியாள் பரிசுத்த ஆவியை "என் இறைவனே" (RABY - ரபி - رَبِّ) என்று அழைக்கிறார். பரிசுத்த ஆவியை "என் இறைவனே" என்று அழைக்கும் போது மர்யம் தவறு செய்தாரா? அல்லது பேசியது உண்மையில் அல்லாஹ்வா? எந்த வகையாயினும், அவளிடம் பேசியவர் யார் என்பதை குர்ஆன் சொல்லவில்லை. மேலும் ஜிப்ரீல் என்னும் மலக்கு (angel) மர்யத்துடன் பேசினார் என்றோ, ஜிப்ரில் என்பவர் பரிசுத்த ஆவி என்றோ குர்ஆனில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

அடுத்து, குர்ஆன் 3:45-ல் இப்படியாக வாசிக்கிறோம்:
மலக்குகள் கூறினார்கள்; "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு சொல்லைக் கொண்டு உமக்கு (ஒரு மகவு வரவிருப்பது பற்றி) நன்மாராயங் கூறுகிறான். அதன் பெயர் மஸீஹ்; மர்யமின் மகன் ஈஸா என்பதாகும். அவர் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் கண்ணியமிக்கோராகவும் (இறைவனுக்கு) நெருங்கி இருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார்.

இங்கே "மலக்குகள்" (angels-வானவர்கள்) என்று பன்மையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால்

19:19-ல் ஒருமையில் ஆவியானது (spirit, ரூஹ்) ஒரு மனிதனாக வந்தான் என்று வாசிக்கிறோம். இது முரண்பாடு.

எனவே ஒரு தெளிவான தவறு உள்ளது, ஏனெனில் அந்த மலக்கு (தேவதூதன்) என்பவர் பரிசுத்த ஆவி என்றால், அவரே சரியான மனித உருவில் தனி நபராக பேசினார் என்றால், அவரே நற்செய்தி கொண்டுவந்தவர் என்றால், குர்ஆன் 3: 45-ல் அனைத்து மலக்குகளும் (தேவதூதர்களும்) ஏன் பேசினார்கள்? அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியா?

அப்படியானால் பரிசுத்த ஆவி என்பது பரிசுத்த **ஆவிகள்** என்று அர்த்தமாகிவிடும். இருப்பினும், இது குர்ஆன் 19:16-21-ல் நாம் காணும் மற்றொரு அறிவிப்பின் கதைக்கு முரண்படுகிறது. குர்ஆன் 19:17-ஐ பார்க்கவும்:

فَاتَّخَذَتْ مِنْ دُونِهِمْ حِجَابًا فَأَرْسَلْنَا إِلَيْهَا رُوحَنَا فَتَمَثَّلَ لَهَا بَشَرًا سَوِيًّا
19:17. அவன் (தன்னை) அவர்களிடமிருந்து (மறைத்துக் கொள்வதற்காக) ஒரு திரையை அமைத்துக் கொண்டான்; அப்போது நாம் அவனடத்தில் நம் ரூஹை (ஜிப்ரீலை) அனுப்பி வைத்தோம்; (மர்யமிடம்) சரியான மனித உருவில் தோன்றினார்.

நாம் பார்ப்பது போல், இங்கே ஒரு ஆவி ஒரு மனிதனாக மாறியது. மேலும், முஸ்லிம்கள் அதை: பரிசுத்த ஆவியானவர் என்பவர் ஒரே நபர், அது ஜிப்ரீல் என்னும் தேவதூதன்(மலக்கு) என்று கூறுகின்றனர். பெரும்பாலான முஸ்லிம்கள் மொழிபெயர்க்கிறார்கள்.

முஸ்லிம்கள் “ரூஹ் (ஆவி)” என்ற சொல்லை “மலக்கு (angel - தேவதூதன்)” என்று சொல்கின்றனர். இவை தவறான மொழிபெயர்ப்புகள் ஆகும்.

‘பரிசுத்த ஆவி’ மர்யமால் “இறைவன்” என்று அழைக்கப்படுகிறார், ஆனால் அதே நேரத்தில், பரிசுத்த ஆவி தன்னைப் பற்றி இறைவனின் தூதராக பேசுகிறார். அந்த பரிசுத்த ஆவி குர்ஆன் 19:19-ல் கூறுகிறார்: நிச்சயமாக நான் உம்முடைய இறைவனின் தூதன்; பரிசுத்தமான புதல்வரை உமக்கு நன்கொடை அளிக்க (வந்துள்ளேன்) என்று கூறினார். ஏன் குர்ஆன் பரிசுத்த ஆவியை ஜிப்ரீல் என்னும் வானவர் என்று சொல்லவில்லை? இதைக் கண்டறிய குர்ஆன் 16:2 வாசிக்கவேண்டும்: “அவன் மலக்குகள் மற்றும் ரூஹ் (ஆவி) ஆகியோருடன் கட்டளை கொடுத்துத் தன் அடியார்களில் தான் நாடியவர் மீது (அனுப்பி வைத்து,) நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன், என்னைத்தவிர வேறுயாருமில்லை; ஆகையால் நீங்கள் எனக்கே அஞ்சுங்கள் என (மக்களுக்கு) எச்சரிக்கை செய்யுங்கள் என்று இறக்கி வைக்கிறான்.’’

அல்லாஹ் இந்த மலக்குகளை ஆவியுடன் அனுப்புகிறான். அப்படியானால் மலக்குகள் ஆவியாக இருக்க முடியாது. முஸ்லீம்கள் ரூஹ் (Ruh), என்ற வார்த்தையை வெளிப்பாடு(revelation) என்று

மொழிபெயர்ப்பு செய்ய முயற்சிக்கின்றனர். அது வெட்கமானது. பிக்தல் என்னும் மொழிபெயர்ப்பில் இப்படியாக வாசிக்கிறோம்: " அவர் **தேவதூதர்களை அவர் கட்டளையிடும் ஆவியோடு** அவர் விரும்பியவர்களுக்கு அனுப்புகிறார். அவருடைய அடிமைகளில், "என்னைத் தவிர அல்லாஹ் இல்லை என்று மனித குலத்திற்கு எச்சரிக்கை செய்யுங்கள் உன் கடமையை என்னிடம் வைத்துக்கொள்". மேலும் குர் ஆனில் அத்தாட்சிகள் உள்ளது 2:192-193:

192. மேலும், நிச்சயமாக இந்த வேதமானது அகிலங்களின் (ஜின் உலகம், மனிதர்களினி உலகம்) இறைவனால் இறக்கி வைக்கப்பெற்றது.
193. உண்மையுள்ள ஆவி(ரூஹ்) (faithful spirit) இதைக் கொண்டு இறங்கினார்.

அல்லாஹ் ஜிப்ரில் இதனுடன் இறங்கினார் என்று சொல்லவில்லை. அது மலக்கு என்றால் அல்லாஹ் ஏன் அதை தெளிவுபடுத்தவில்லை?

குர்ஆன் 70:4 சொல்கிறது: ஒரு நாள் மலக்குகளும் (angels), அவ்வான்மாவும் (spirit-ஆவி), அவனிடம் (அல்லாஹ்) ஏறிச் செல்வார்கள்; அந்த நாளின் அளவு ஐம்பதினாயிரம் ஆண்டுகள் இருக்கும். மலக்குகள் என்பவர்கள் ஆவி என்று சொன்னால், மலக்குகளும், ஆவியும் என்று ஏன் என்று தனித்தனியாக இங்கு கூறப்பட்டுள்ளது?

குர்ஆன் 78:38 ரூஹு ம் (ஆவியும்), மலக்குகளும் அணியணியாக நிற்கும் நாளில் அர்ரஹ்மான் எவருக்கு அனுமதி கொடுகிறானோ அவர்களைத் தவிர்த்து வேறெவரும் பேசமாட்டார்கள் - அ(த்தகைய)வரும் சரியானதையே கூறுவார்.

மீண்டும் அல்லாஹ் ஆவியும், மலக்குகளும் தனித்தனியே அவர்களுடைய வகுப்பின்படி நிற்பார்கள் என்கிறான். நிச்சயமாக முஸ்லீம்கள் குழப்பத்தில் உள்ளனர். அவர்களை நான் குறைசொல்லவில்லை. அவர்களது நபிதான் சரியான பதில் சொல்லுவார் என்றால், பதில் எங்கே? பைபிளில் லூக்கா 1:19ல் தெளிவாக சொல்லப்பட்டதுபோல ஏன் சொல்லவில்லை?

"லூக்கா 1:19. தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்;"

குர்ஆன் 7:52ல் "நிச்சயமாக நாம் அவர்களுக்கு ஒரு வேதத்தை கொடுத்தோம். அதை நாம் பூரண ஞானத்தைக் கொண்டு விளக்கியுள்ளோம்; அது நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நேர் வழியாகவும், அருளாகவும் இருக்கிறது."

இப்படி **விளக்கமான வேதம்** என்று சொல்வது வேடிக்கையாக உள்ளது. அதே சமயத்தில் குர்ஆன் 3:7ல் குர்ஆன் இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. ஒன்று தெளிவானது, மற்றது தெளிவற்றது அதை அல்லாஹ் மட்டுமே அறிவான், வேறொருவரும் அறியார்கள்.

முஹம்மது யார்?

அவரது உண்மையான பெயர் قثم, Qathem, **காத்தெம்**.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை முஹம்மதுவைக்குறித்த அடிப்படை தகவல்களை தருகிறது:

பெயர்	காத்தெம் (Qathem)
குடும்பப் பெயர்	இப்னு கிலாப் (Ibn Kilab - நாயின் மகன்)
குடும்பம் - கொள்ளு தாத்தா	க்யூஸி இப்னு கிலாப் (நாயின் மகன் க்யூஸி)
புதிய பெயர்(கள்)	முஹம்மது, அகமது
உண்மையான தந்தையின் பெயர்	அறியப்படவில்லை
பெயரிடப்பட்ட தந்தையின் பெயர்	அப்துல்லா (Abdullah) (அல்லாஹ்வின் அடிமை)
தாய்	அமீனா (Amena)
பிறப்பு	கி.பி. 570
இறப்பு	கி.பி. 632 யூத பெண் விஷம் கொடுத்து இறப்பு
மனைவிகள் (தெரிந்தவரை)	13
தாதிகள் (வைப்பாட்டிகள்)	அநேகம்
பாலியல் சக்தி	40 ஆண்களின் சக்தி (முஹம்மதுவின் கோரல்)
விசேஷ திறன்	தேவதைக் கதைகள் சொல்வது

அவர் எப்போது பிறந்ததார்?

முஹம்மது 570 ஆம் ஆண்டில் பிறந்தார். அப்துல்லா என பெயரிடப்பட்ட அவரது தந்தை இறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முஹம்மது பிறந்தார்! சிலர், “நான்கு (4) ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு குழந்தை எப்படி பிறக்கும்? என்று கேட்கலாம்.

பதில் எளிது: அப்துல்லா அவரது தந்தை என்று அழைக்கப்பட்டார், ஆனால் அவர் உண்மையான தந்தை இல்லை.

இஸ்லாமுக்கு முன்பு, ஒரு விதமான Zawaj Al Rahe’t, என்று அழைக்கப்பட்ட கலியாணம் இருந்தது. அதற்கு அர்த்தம் கூட்டமான-கலியாணம். இப்படித்தான் கலியாணம் நடந்தது: ஒரு பெண் அநேக (ஏழு, பத்து அல்லது அதிகமான) ஆண்களுடன் படுப்பாள் அது ஒரு பொருட்டே

அல்ல. எல்லாம் Rahe’t அதாவது குழுக்கள் (groups). நீங்கள் அதை கலியாணம் என்றே சொல்லமாட்டீர்கள். இது கிட்டத்தட்ட சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாலியல் முறை. ஒரு தாய் தனது குழந்தையை பெற்றெடுக்க தந்தையை தெரிந்தெடுப்பாள்.

முஹம்மதுவினுடைய தந்தையின் உண்மையானப் பெயர் அப்துல்லா இல்லை. அவரது உண்மையான பெயர் “**அப்த் அல்லாத்**” (Abd Allat). அதின் அர்த்தம் அல்-லாத்தின் அடிமை என்று அர்த்தம். அல்லாத் (என்பது புறமதத்தினரின் கடவுளான அல்லாஹ்வின் மூன்று மகள்களில் ஒருத்தி). முஸ்லீம்கள் அப்துல்லா என்ற பெயரைத்தான் பயன்படுத்தினர், ஏனெனில் அவரது தந்தையின் உண்மையான பெயர் அவமானத்துக்குரியதாகும். முஹம்மதுவின் சிறுவயதைக்குறித்து ஆழமாக என்னால் எழுத முடியும், ஆனால் இந்த புத்தகத்தின் நோக்கம் அதுவல்ல; இருப்பினும் சில குறிப்பிடல்களை கொடுத்தால், முஹம்மதுவின் பிறப்பைக்குறித்த கருத்தை அவைகள் நிரூபிக்கும்.

முஹம்மதுவின் தாயாருக்கு முஹம்மதுவைத்தவிர அநேக பிள்ளைகள் இருந்தன. அவளுக்கு எப்படி இத்தனை பிள்ளைகள்? இமாம் “அல் சுயுட்டி”-யின் “அல் காசாவின் அல்-குப்ரா”வின் புத்தகத்தில், தொகுதி 1 பக்கம் 132, 133, 134, 135-ல் முஹம்மதுவின் தாயார் இப்படியாக சொல்கிறார்:

قالت حملت به فما حملت قط أخف منه فأريت في النوم حين حملت به أنه خرج مني نور

நான் அவனை கர்பத்தில் கொண்டிருந்தேன். அது மிகவும் சுலபமான ஒன்றாகும்.

முஹம்மதுவின் சகோதர்களைக்குறித்து யாரும் பேசுவதில்லை. புதிதாக திருமணம் ஆன சில மாதங்களிலேயே அவளின் கணவர் இறந்துபோனார். அதாவது முஹம்மது பிறக்கும் முன்பே இறந்துபோனார். மற்ற கணவர்(கள்) இல்லாமல் எப்படி அத்தனை சகோதரர்கள் பிறக்கமுடியும்?

நாம் சொல்லுவதற்கு பல கதைகள் உள்ளன, ஆனால் விஷயங்களை சிக்கலாக்காமல் சொல்ல முயற்சிப்பேன்.
வரக்கூடிய ஹதீஸில், முஹம்மதுவின் தந்தை (அப் அல்லாத்) முஹம்மதுவின் (அதாவது காத்தெம்மின்) தாயை திருமணம் செய்ததில்லை என்று நான் தெளிவாக நிரூபிப்பேன்.
கதையை அரபி மொழியில் உள்ளபடியே காட்டி, அதை மொழிபெயர்த்து தருகிறேன்.
முஸ்லிம்கள் சொல்வார்கள், "இதை எங்கள் புத்தகங்களில் நிச்சயமாக காண முடியாது என்று!”
அது மட்டுமல்ல, நான் இணையத்தில் உள் புத்தகங்களுக்கான மிகப்பெரிய இஸ்லாமிய இணையதளத்திற்கான இணைப்பையும் கொடுப்பேன்.

சிரா அல்-ஹலபியா (இன்சான் அல்-யூஇயோன் ஃபே செராத் அல்-மாமுன்), தொகுதி 1, பக்கம் 128 :

السيرة الحلبية
وهو الكتاب المسمى
(إنسان العيون في سيرة الأمين المأمون)
علي بن برهان الدين الحلبي

وفي الإمتاع: لما مات قثم بن عبد المطلب قبل مولد رسول الله صلى الله عليه وسلم بثلاث سنين وهو ابن تسع سنين وجد عليه وجدا شديدا، فلما ولد رسول الله صلى الله عليه وسلم سماه قثم حتى أخبرته أمه آمنة أنها أمرت في منامها أن تسميه محمدا، فسماه محمد

முஹம்மதுவின் மாமா “காத்தெம்-இப்னு-அப்த்-அல்-முத்தலேப்” ஒன்பது வயதில் இறந்த போது (முஹம்மது பிறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு), அவரது தந்தை அப்துல்-அல்-முத்தலேப்
மிகவும் சோகமாக இருந்தார். அதனால் நபி பிறந்தபோது, அவருக்கு **காத்தெம்** என்று பெயரிட்டார்.

இஸ்லாமிய ஹதீஸ் புத்தகங்களுக்கு இங்கே செல்லவும்:
http://www.al-eman.com/Islamlib/viewchp.asp?BID=185&CID=4&SW=قتيلة-بنت-نوفل#SR1

الطبقات الكبرى
الجزء الأول
من 4 حتى 118
وحدثنا عبيد الله بن محمد بن صفوان عن أبيه وحدثنا إسحاق بن عبيد الله عن سعيد بن محمد بن جبير بن مطعم قالوا جميعا هي قتيلة بنت نوفل أخت ورقة بن نوفل وكانت تنظر وتعتاف فمر بها عبد الله بن عبد المطلب فدعته يستبضع منها ولزمت طرف ثوبه فأبى وقال حتى آتيك وخرج سريعا حتى دخل على آمنة بنت وهب فوقع عليها فحملت برسول الله صلى الله عليه وسلم ثم رجع عبد الله بن عبد المطلب إلى المرأة فوجدها تنظره فقال هل لك في الذي عرضت علي فقالت لا مررت وفي وجهك نور ساطع ثم رجعت وليس فيه ذلك النور

இந்த ஹதீஸ் மொழிபெயர்ப்பு: அல்-தபகத் அல்-குப்ரா புத்தகம், அச்சு. 1, 1968, தொகுதி. 1 பக்கம் 95, 96:

ஓபேத்-அல்லா எங்களிடம் கூறினார்:
வரக்கா-இப்னு-நோஃபல் என்பவரின் சகோதரி ரோட்டில் நின்று ஆண்களைத் தேடினார். அவள் அப்துல்லாவை (முஹம்மதுவின் தந்தை) பார்க்கும்வரை நடந்து சென்ற யாரையும் அவளுக்கு பிடிக்கவில்லை. அவள் அவனிடம் சொன்னாள், அவனது ஆடையைப் பிடித்துக் கொண்டு, "என் பொருட்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" (உங்கள் தேவையை என்னிடமிருந்து பெறுங்கள்.) அவர் கூறினார், "இப்போது இல்லை. நான் திரும்பி வரும்போது" அவர் வேகமாக வெளியே சென்று அமேனா-பெண்ட்-வாஹப் (முஹம்மதுவின் தாய்) வீட்டிற்குள் நுழைந்து அவளுடன் உடலுறவு கொண்டார். திரும்பும் வழியில், அவர் வந்து வரக்கா-இப்னு-நோஃபலின் சகோதரியைச் சந்தித்து அவளிடம், "நீ இன்னும் என்னோடு படுக்க விரும்புகிறாயா?" என்று கேட்டார். அதற்கு அவள், "இல்லை! நீங்கள் என்னை விட்டுச் செல்வதற்கு முன்நடந்து சென்றபோது, நான் பளபளப்பான முகத்தைப் பார்த்தேன், ஆனால் இப்போது நீங்கள் அந்த பளபளப்பான முகத்தை இழந்துவிட்டீர்கள். (ஒருவேளை அவர் செக்ஸால் சோர்வடைந்திருக்கலாம்)

நாம் இதே போன்ற ஒரு கதையை அல்சரா அல்-நப்யா லி-இப்னு-ஹிஷாம் (அரபி) அச்சு 2.02, தொகுதி 1, பக்கம் 292, ஆசிரியர்: இப்னு கிஷம் அல்-அன்சாரி/அப்த்-அல்லாஹ் பின் யூசுப் -ல் வாசிக்கலாம்.

السيرة النبوية، الإصدار 2.02 - لابن هشام
المجلد الأول >> ذكر المرأة المتعرضة لنكاح عبدالله بن عبدالمطلب >> عبدالله يرفضها

قال ابن إسحاق : ثم انصرف عبدالمطلب آخذا بيد عبدالله ، فمر به - فيما يزعمون - على امرأة من بني أسد بن عبدالعزى بن قصي بن كلاب بن مرة بن كعب بن لؤي بن غالب (1/ 292) بن فهر ، وهي أخت ورقة بن نوفل بن أسد بن عبدالعزى ، وهي عند الكعبة ؛ فقالت له حين نظرت إلى وجهه : أين تذهب يا عبدالله ؟ قال : مع أبي . قالت : لك مثل الإبل التي نحرت عنك ، وقع علي الآن ، قال : أنا مع أبي ، ولا أستطيع خلافه ، ولا فراقه

மேலே சொல்லப்பட்ட புத்தகத்தில் ஒருபெண் தன்னைத்தானே செக்ஸ்-காக கொடுக்க அப்துல்லா-இப்னு-அப்த்-அல்-முத்தலேப்விடம்(முஹம்மதுவின் தந்தை) கேட்ட ஹதீஸின் மொழிபெயர்ப்பு:

இப்னு-இஷாக் சொன்னார்: "பின்பு அப்த்-அல்-முத்தலேப் (முஹம்மதுவின் தாத்தா) சென்றார். அவர் தன்னுடன் அப்துல்லாவை (முஹம்மதுவின் தந்தை) கூட்டிசென்றார், அந்த சமயத்தில் ஒரு பெண்ணை அவர்கள் கடந்து சென்றனர். அவள்

ஃபஹார் மகன் கலேப் மகன் லூவின் மகன் கயேப் மகன் முராஹ் மகன் நாயின் (முஹம்மதுவின் முப்பாட்டன் பெயர் நாய்) மகனாகிய கூசாயின் மகன் ஊசாவின் மகனாகிய ஆசாத்தின் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் அவன் முகத்தைப்பார்த்தபோது, "எங்கே செல்கிறீர்கள் அப்துல்லா?" என்றாள். அதற்கு அவர் "என் தந்தையோடு செல்கிறேன்". அதற்கு அவள் சொன்னாள் "நீ என்னோடு வந்து படுத்தால் நான் உனக்கு பலிசெலுத்தப்படும் நாளின் அளவு ஒட்டகங்களை (100 ஒட்டகங்கள்) உனக்குத் தருவேன்." அதற்கு அவன், "நான் இப்போது என் தந்தையோடு இருக்கிறேன், அவரை விட்டுவிடமுடியாது" என்றான்.

நாம் இந்த கதையை படிக்கும்போது, இதில் ஒரு பெண் எந்த அளவு தன் வாழ்க்கையில் கட்டுப்பாடுகளை வைத்திருந்தாள் என்று தெரிகிறது. தங்களுக்கு யாரை பிடிக்கிறதோ அவர்களோடு படுத்தனர்.

முதலாவது சொல்லப்பட்ட கதையில் முஹம்மதுவின் தந்தை என்னப்பட்டவர் அந்த ஒப்பந்தத்துக்கு வேண்டாம் என்று சொல்லவில்லை என்பதை கவனிக்கவும். இருப்பினும் அவர் முஹம்மதுவின் தாயோடு படுத்தார்.

அவன் திரும்பி வரும்போது வரக்கா-இப்னு-நோஃபல் என்பவரின் சகோதரியோடு செக்ஸ் கொள்ளும்படி விரும்பினான். ஆனால் அவளோ தனது முடிவை மாற்றிக்கொண்டாள், ஏன்?

இது கலியாணம் என்ற ஒன்று அக்காலத்தில் அவ்விடத்தில் இல்லாமல் இருந்தது என்பதை நிரூபிக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதுபோல் முஹம்மதுவின் தந்தை திறந்த உடலுறவு முறையை பின்பற்றினார் என்பதை நிரூபித்துள்ளேன்.

இந்த கதை சும்மா வெற்றிடத்திலிருந்து அப்படியே வரவில்லை. அந்த நாட்களில் அரேபியர் தங்கள் சகோதரிகள், மகள்கள் ஆகியோரை தங்களது குறிக்கோள்களுக்காக பயன்படுத்தினர்.

வரக்கா-இப்னு-நோஃபல் என்பவன் முஹம்மதுவின் தந்தை அமீனாவோடு உடலுறவு கொள்வதை தடுக்க ஒருவேளை தனது சகோதரியை அனுப்பியிருந்திருக்கலாம், ஏனெனில் அமீனா என்பவள் வரக்கா-பின்-நோபலுக்கு பிரியமானவள். ஒருவேளை தனது சகோதரியோடு அவன் (முஹம்மதுவின் தந்தை) படுத்திருந்தால் அமீனாவோடு இல்லாமல், கதை வரக்கா-வின் சகோதரியோடு மாறியிருக்கும்.

அதே ஹதீஸில் இப்படியாக படிக்கிறோம்:
“பாத்திமா-பின்-முர்” என்பவள் உயர்குடியில் மிகவும் கனம்பெற்றவளாயும், மிகவும் அழகுள்ளவளாயும் இருந்தாள். அவள் புத்தகங்களை படித்து கற்றறிந்தவள். குரேஷ் குடிமக்களில் வாலிபர்கள் அவளைக்குறித்து பேசிக்கொள்வார்கள்.

கதையில் அவள் நபிகள்மாரின் சாயல் ஒளியை அவன் முகத்தில் கண்டாளாம். அவள் தன்னுடன் அவன் படுக்கும்படி 100 ஒட்டகங்களை அவனுக்கு வெகுமானமாக கொடுக்கும்படி பேசினாள்.

فاطمة بنت مر وكانت من أجمل الناس واشبه واعفه وكانت قد قرأت الكتب وكان
شباب قريش يتحدثون إليها فرأت نور النبوة في وجه عبد الله فقال يافتى من أنت
فأخبرها قالت هل لك أن تقع علي وأعطيك مائة من الإبل

பெண்கள் செக்ஸ்-காக கொடுக்கும் பணத்தை வாங்கும் அளவுக்கு எப்படி முஹம்மதுவின் தந்தை இருந்துள்ளார் என்று பாருங்கள். அவருடைய முகத்தை பற்றிச் சொல்லுகிறேன், ஒழுங்கைப்பற்றி அல்ல. நான் சொல்வது என்னவென்றால் கனம்பொருந்திய ஆண் ஒரு பெண்ணிடமிருந்து இன்னொரு பெண்ணுக்கு விபசாரியைப்போல காசுக்காக தாவமாட்டான். இந்நாட்களில் அதற்கு ஆங்கிலத்தில் gigalo (வயாதான பெண்கள் காசுக்காக இளைஞர்களை கொள்வது) என்பார்கள்.

அரபிய குரேஷ் குடியினரின் தினசரி வாழ்க்கையைக் காட்டத்தான் நான் இதை உங்களோடு சொல்கிறேன். முஸ்லீம்கள் முஹம்மதுவின் குடும்பம் ஒரு கனம்பெற்ற குடும்பம் என்று சொல்கிறார்கள். அது உண்மைக்கு கொஞ்சமும் ஒத்துப்போவதில்லை. இவை எல்லாவற்றிற்கும்மேல் முஹம்மதுவின் பெற்றோர் இப்படி புறமதத்தினராக வாழ்ந்தனர், புறமதத்தினராகவே இறந்தனர்.

குரான் 9:28ல் அல்லாஹ் புறமதத்தாரை “அசுத்தமான (**filthy**)" என்று சொல்கிறான்.

9:28 "O ye who believe! Truly the Pagans are **unclean**; so let them not, after this year of theirs, approach the Sacred Mosque. And if ye fear poverty, soon will Allah enrich you, if He wills, out of His bounty, for Allah is All knowing, All-wise.”(Translation of Yusuf Ali).

9:28 ஈமான் கொண்டவர்களே! நிச்சயமாக இணை வைத்து வணங்குவோர் **அசுத்தமானவர்களே** ஆதலால், அவர்களின் இவ்வாண்டிற்குப் பின்னர் சங்கை மிகுந்த இப் பள்ளியை (கஃபத்துல்லாஹ்வை) அவர்கள் நெருங்கக் கூடாது (அதனால் உங்களுக்கு) வறுமை வந்து விடுமோ என்று நீங்கள் பயந்தீர்களாயின் - அல்லாஹ் நாடினால் - அவன் அதி சீக்கிரம் அவன் தன் அருளால் உங்களைச் செல்வந்தர்களாக்கி விடுவான் - நிச்சயமாக அல்லாஹ் (எல்லாம்) அறிந்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

அல்-ரஹீக் மக்தோம் புத்தகத்தில், பக்கம். 45, அவரது மாமா ஹம்சா இரண்டு பெண்கள் தனக்கு முலைப்பால் கொடுத்ததை சொன்னார். பின்னர், அதே இரண்டு பெண்கள் முஹம்மதுவுக்கு முலைப்பால் கொடுத்தனர். இரண்டு பெண்களின் பெயர்கள் **தவ்பியா** மற்றும் **ஹலிமா அல்-**

சடியா.

وكان عمه حمزة بن عبد المطلب مسترضعًا في بني سعد بن بكر، فأرضعت أمه رسول الله صلى الله عليه وسلم يومًا وهو عند أمه حليمة.فكان حمزة رضيع رسول الله صلى الله عليه وسلم من جهتين، من جهة ثويبة ومن جهة السعدية.
الرحيق المختوم ص 45
صفي الرحمن المباركفوري

மொழிபெயர்ப்பு:
மேலும் அவரது மாமா ஹம்ஸா என்பவர் பேக்கரின் மகன் பானி சையத்தின் குடும்பத்திலிருந்து முலைப்பால் குடித்தவர். முஹம்மது ஹலிமாவால் பாலுண்டபோதும், அவரது அம்மா (ஹம்ஸாவின் அம்மா) முஹம்மதுவுக்கு முலைப்பால் கொடுத்தார். இப்படி இரண்டு பெண்கள் முஹம்மதுக்கு முலைப்பால் கொடுத்தனர்.

முஹம்மதுவின் வாழ்க்கைக்கு இன்னொரு அறிமுகம் என்னவெனில், (நாம் கொஞ்சம் ஒளியை அனுப்பி இவர் யார், எப்படிப்பட்டவர் என்று பார்ப்போம்). முஹம்மதுவின் வாழ்க்கை கையில் செல்வம் வரும்வரை சுலபமாக இருக்கவில்லை.

உங்களுக்கு முதலாவது கதை ஞாபகம் இருந்தால் அதில் வரக்கா-வின் சகோதரி காட்டிலா பின் நோஃபல் (Qatila bin Naofal) எப்படி அப்-அல்லாத் (அப்துல்லா) என்பவன் அமினாவுடன் உடலுறவு கொல்லாமல் இருக்க அவனிடம் தன்னை கொடுக்க பேசினாள். அவன் அமீனாவோடு உடலுறவுகொண்டபின், அவனை தனக்கு வேண்டாம் என்று காத்திலா விட்டுவிட்டாள். இந்தக் கதையை நாம் மற்றக் கதைகளுடன் ஒப்பிடும்போது, வரக்கா-இப்னு-நோஃபல் என்பவர் முஹம்மது வாழ்க்கையின் ஒவ்வொரு அடியிலும் காணப்படுகிறார். அதே புத்தகத்தில் (அல்-தபாகாத் அல்-குப்ரா, அச்சு 1, 1968, பிரதி 1, பக்கம் 95), முஹம்மதுவைப்பற்றி:

تزوج عبد المطلب بن هاشم وتزوج عبد الله بن عبد المطلب في مجلس واحد فولدت هالة بنت وهيب لعبد المطلب حمزة بن عبد المطلب فكان حمزة عم رسول الله صلى الله عليه وسلم في **النسب وأخاه من الرضاعة** قال أخبرنا هشام بن محمد بن السائب الكلبي عن أبيه وعن أبي الفياض

الخثعمي قالا لما تزوج عبد الله بن عبد المطلب آمنة بنت وهب أقام عندها ثلاثا وكانت تلك السنة عندهم إذا دخل الرجل على امرأته في أهلها.

அப்த் அல்-முத்தலேப்-இப்னு ஹாஷேம் மற்றும் அவரது மகன் அப்த்-அல்லாஹ் ஒரே நாளில் கல்யாணம் செய்து கொண்டனர். வாஹேபின் மகள் ஹலாஹ் ஹம்சாவைப் பெற்றெடுத்தாள்,

ஹம்ஸா முஹம்மதுவின் மாமா ஆனார். முஸ்லீம்கள் இரண்டு பேர் ஒரு பெண்ணிடம் முலைபாலுண்டதால் அவர்கள் இருவரும் சகோதரர் ஆவார்கள் என்று நம்புகின்றனர். மற்றும் இப்னு-இஷாக் சொன்னார்: முஹம்மதுவின் தந்தை அமீனாவை (முஹம்மதுவின் தாய்) திருமணம் செய்தபோது அவர் அவளுடன் மூன்று இரவுகள் தங்கினார், அந்த நாட்களில் அந்த பாரம்பரியம் இருந்தது.

முஹம்மதுவின் தாத்தா மற்றும் அவரது மகன் இருவரும் அமேனா மற்றும் ஹலா என்ற இரண்டு சகோதரிகளுடன் உடலுறவு கொண்டனர். எனவே வழக்கத்தின்படி, முஹம்மதுவின் அத்தை அவருடைய தாத்தாவின் பெண், அல்லது நாம் அவரை அவரது மனைவி என்று அழைக்கலாம். மேலும், ஹலா ஹம்ஸாவை (முஹம்மதுவின் மாமா) பெற்றெடுத்ததாக அது கூறுகிறது. இந்த முஹம்மது மற்றும் ஹம்ஸா இருவரும் ஹம்ஸாவின் தாயால் முலைப்பால் கொண்டனர். அது ஹம்ஸாவை முஹம்மதுவின் சகோதரனாக (ஒரே முலைப்பால் குடித்ததால்) ஆக்குகிறது. **முஹம்மதுவின் தந்தை முஹம்மதுவின் தாயோடு மூன்றுநாள் படுத்தார். அதுவும் அவளுடைய வீட்டில்**. அவள் எப்படி அவனுக்கு மனைவியாக இருக்கமுடியும்? கலியாணம் ஆகியிருந்தால், அவன் ஏன் அவளை தன் வீட்டுக்கு அழைத்துசெல்லவில்லை? முஹம்மதுவின் தாய் அப்துல்லாவின் வீட்டுக்கு ஒருபோதும் குடிபுகவில்லை.

இப்னு கதிர் புத்தகத்தில், தொகுதி. 1, ப. 255, இப்னு ஹிஷாம் கூறினார்: முஹம்மதுக்கு **அல்-ஃபஜர் போர்** தொடங்கிய போது 14 அல்லது 15 வயது.

السيرة النبوية الأبن كثير حرب الفجار 255/1
وقال ابن هشام: فلما بلغ رسول الله صلى الله عليه وسلم أربع عشرة سنة - أو خمس عشرة سنة

இதே கதையை நாம் Dr. முகம்மது அகமது மஹ்மூத் ஹசபலா மற்றும் Dr. முகம்மது அப்து-அல்கதேர் அல்-கத்தே ஆகியோர எழுதிய அல்-சிரா அல்-நபோயா என்னும் புத்தகத்தில் காணமுடிகிறது. இருவரும் இஸ்லாமிய வரலாறு மற்றும் நாகரிகத்தின் பேராசிரியர்கள். அல்-அசார் பல்கலைக்கழகத்தில் (ஒசாமா பின்லேட்ன், அல்-ஜவாஹிரி மற்றும் முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிக உயர்ந்த பல்கலைக்கழகம்).

அவர்கள் இருவரும் தங்கள் புத்தகத்தில் கூறுகிறார்கள்: அல்-ஃபஜர் போர் ஹம்ஸாவின் தந்தை அப்துல்-அல்-முத்தலெப்பின் மரணத்துக்குப்பின் 12 ஆண்டுகளுக்குப் பிறகு தொடங்கியது மற்றும் ஹம்சாவுக்கு 22 வயது.

அதே புத்தகத்தில், இரு அறிஞர்களும் அல்-ஃபஜரின் போர் தொடங்கியபோது முஹம்மதுவுக்கு 15 வயது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களின் புத்தகத்திற்கான இணைப்பு கீழே

உள்ளது. முஸ்லிம்கள் இதை நம்ப மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். 99% முஸ்லிம்கள் புத்தகங்களைப் படிப்பதில்லை என்று வைத்துக்கொள்வோம். பின்னே அவர்களுக்கு எப்படித் தெரியும்? இந்த இணைப்பைப் பார்வையிட்டு நீங்களே பாருங்கள்.

http://www.alsiraj.net/sira/html/page08.html, راجفلا برح

போரின்போது ஹம்சாவுக்கு 22 வயது மற்றும் முஹம்மதுவுக்கு 15 வயது என்றால், இந்த அறிஞர்களின் கூற்றுப்படி, ஹம்சா முஹம்மதுவை விட **ஏழு** வயது மூத்தவர். ஆனால், முஹம்மதுவின் தந்தை இறந்த அதே ஆண்டில் ஹம்சா பிறந்தார்! இதன்பொருள் முஹம்மது தனது தந்தையின் மரணத்திற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தார்.

من كتاب السيرة النبوية بقلم الدكتورمحمد أحمد محمود حسب الله أستاذ التاريخ و
الحضارة الاسلامية بجامعة الأزهر و الدكتور محمد محمد عبد القادر الخطيب أستاذ
التاريخ و الحضارة الاسلامية بجامعة الأزهر
شهد حمزة حرب الفجار الثاني، وكانت بعد عام الفيل بعشرين سنة، وبعد موت أبيه
عبد المطلب باثنتي عشرة سنة، ولم يكن في أيام العرب أشهر منه ولا أعظم، وتعد
" حرب الفجار" أول تدريب عملي بالنسبة لحمزة ـ رضي الله عنه ـ مارس فيها
التدريب العملي على استخدام السلاح وعاش في جو المعركة والحرب الحقيقية،
وكان عمره آنذاك نحو اثنتين وعشرين سنة.

புத்தகம் சிரா இப்னு கதிர், தொகுதி. 1, ப. 263 கூறுகிறது:
முஹம்மது கதீஜாவை திருமணம் செய்ய விரும்பியபோது, அவர் தனது மாமாவிடம் அவளைப் பற்றி கூறினார். ஹம்ஸா கதீஜாவிடம் சென்று முஹம்மதுக்காக அவளைக் கேட்டார்.

أبن كثير السيرة الجزء الأول 263
فخرج معه عمه حمزة حتى دخل على خويلد بن أسد فخطبها إليه، فتزوجها عليه
الصلاة والسلام.

அரேபியர்களின் பாரம்பரியங்களாகிய எங்கள் மரபுகளை நான் நன்கு அறிவேன், உங்கள் வயதுள்ள யாரையும் அனுப்பி ஒரு பெண்ணின் கையைக் கேட்கக்கூடாது. அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. இந்த விஷயத்தில், ஹம்ஸா இந்த வேலையை செய்ய இரண்டு வழிகளிலும் பொருந்துகிறார்: அவர் முஹம்மதுவின் மாமா மற்றும் அவர் முஹம்மதுவைவிட வயதில் மூத்தவர்.

டேர்ட் அல்-மா-மரேஃப் அல்-இஸ்லாமியா புத்தகத்தில் தொகுதி. 29, ப. 9112, படிக்கும்போது முஹம்மது கி.பி. 570ல் பிறந்தார் என்றும் 'ஓஹோத் போர்' கி.பி.625ஆம் ஆண்டு என்று, அனைத்து இஸ்லாமியரின் புத்தகங்கள் ஒப்புக்கொள்கின்றன என்று நாம் கண்டறிகிறோம்.

(دائرة المعارف الإسلامية ج 29 ص 9112)

இதிலிருந்து ஒன்று தெளிவாகும்: நாம் 625 ஆம் ஆண்டை ('ஓஹோட் போர்) எடுத்துக் கொண்டு மற்றும் 570ஐ (அவருடையது பிறந்த வருடம்) கழித்தால் = 55 ஆண்டுகள் (முஹம்மதுவின் வயது) மட்டும் கிடைக்கும்.

அல்-தபகத் அல் குப்ரா புத்தகத்தில், தொகுதி. 3, ப. 29/118,
கனிக்காவின் (முஹம்மதுவால் கொல்லப்பட்ட யூதர்களின் கோத்திரம்) புத்திரர்களுக்கு எதிரான தாக்குதலில் ஹம்சா கொடி பிடித்துகொண்டிருந்தார். மற்றும் அவர் இறந்தபோது, அவரது வயது 59. இங்கே, ஹம்ஸா நபியை விட 4 வயது மூத்தவர்.

وحمل حمزة لواء رسول الله صلى الله عليه وسلم في غزوة بني قينقاع ولم يكن الرايات يومئذ وقتل رحمه الله يوم أحد على رأس اثنين وثلاثين شهرا من الهجرة وهو يومئذ بن تسع وخمسين سنة كان أسن من رسول الله صلى الله **عليه وسلم بأربع سنين**

இதை விஷயங்களைச் நானே உண்டாக்கி சொல்கிறேன் என்று முஸ்லீம்கள் சொல்லலாம். இதை பல இஸ்லாமிய மொழியில் உள்ள புத்தகங்களில் காணலாம்:

11/83 الكتاب : سبل الهدى والرشاد، في سيرة خير العباد، Book Sabil Al-Huda Wa Al-Rashad, Vol. 11, p. 82, 83:

إذا كان أسن من رسول الله صلى الله عليه وسلم بأربع سنين، كيف يصح أن تكون ثويبة أرضعتهما معا، والحديث صحيح فهو مقدم على غيره إلا أن تكون أرضعتهما في زمانين.

ஹம்ஸா அல்லாஹ்வின் தூதரை விட நான்கு வயது மூத்தவராக இருந்தால், எப்படி [அவரால்] ஒரே பெண்ணிலிருந்து இவ்விருவர் (ஹம்ஸா, முஹம்மது) முலைப்பால் குடித்தனர்? பதில், ஹதீஸ் சரியான ஹதீஸ் ஆக உள்ளது. மற்ற ஹதீஸ்களை விட இது மேலாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவள் அவ்விருவருக்கும் வெவ்வேறு வருடங்களில் அவள் முலைப்பால் கொடுத்தாள்!

அல்-முஸ்டாடார்க் ஃபெ அல்-சாஹி, தொகுதி. 3, ப. 212, ஹதீஸ் 4873:

المستدرك [جزء 3 - صفحة 212] حديث رقم 4873 حمزة بن عبد المطلب كانت له كنيتان أبو يعلي و أبو عمارة لابنيه يعلي و عمارة أسلم حمزة في السنة السادسة من النبوة و كان أسن من رسول الله صلى الله عليه و سلم بأربع سنين و قتل يوم السبت في المغزى بأحد لسبع خلون من شوال سنة ثلاث من الهجرة

ஹம்ஸாவுக்கு அபு-அலி மற்றும் எமாரா என்ற இரண்டு பெயர்கள் இருந்தன. அவர் இஸ்லாம் தொடங்கி ஆறு வருடம் கழித்து முஸ்லிம் ஆக மாறினார். பல வருடங்கள் கழித்து அவர் முஹம்மதுவை விட நான்கு வயது மூத்தவர். அவர் ஓஹோட் போரில் கொல்லப்பட்டார், சஹோல் மாதத்தில் ஏழாவது நாள் சனிக்கிழமை.(இஸ்லாமிய நாட்காட்டி).

அல்-தபகத் அல்-குப்ரா புத்தகம், அச்சு. 1, 1968, தொகுதி. 3, ப. 103:

"وقتل، رحمه الله، يوم أحد على رأس اثنين وثلاثين شهرا من الهجرة وهو يومئذ بن تسع وخمسين سنة، كان أسن من رسول الله، صلى الله عليه وسلم، بأربع سنين"

ஹம்ஸா (அல்லாஹ் அவன் மீது கருணை காட்டுவானாக) வஹ்ஷி என்ற மனிதனால் கொல்லப்பட்டான்.
அவர் **ஐம்பத்தொன்பது** வயதுள்ளவர் மற்றும் நபியை விட **நான்கு** வயது மூத்தவர்.

இந்த எல்லா கதைகளிலிருந்தும் நாம் என்ன பெறுகிறோம்?

முஹம்மதுவின் தாத்தாவும் அவரது தந்தையும் சகோதரிகளுடன் ஒரே காலகட்டத்தில் படுத்துள்ளனர். அதன் பிறகு முஹம்மதுவின் தந்தை சில நாட்கள் கழித்து (வாதத்திற்கு சில மாதம் கழித்து என்று சொன்னாலும் உண்மை என்னவெனில் அவர்)அமினாவை விட்டு வெளியேறினார். எனவே:

1. முஹம்மதுவின் தாத்தா மற்றும் அவரது மகன் அப்துல்லா இருவரும் இரு சகோதரிகளை ஒரே சமயத்தில் கொண்டிருந்தனர்.
2. முகதுவின் தந்தை இறந்த அதே காலகட்டத்தில் ஹம்சா பிறந்தார்.
3. ஹம்ஸா முகதுவைவிட மூத்தவர் (அது நான்கு அல்லது ஒருவேளை ஏழு ஆண்டுகள் என்பதில் அறிஞர்கள் விவாதிக்கின்றனர்).
4. ஹம்சா 59 வயதில் ஓஹோட் போரில் கொல்லப்பட்டார். அப்போது முஹம்மதுவுக்கு வயது 55.
5. முஸ்லிம்கள் அப்துல்லா என்று அழைக்கும் மனிதனின் மகனாக முஹம்மது இருக்க முடியாது. நாம் இப்னு கதிர் என்பவரின் புத்தகத்தில் (Al-Bidayah & Al-Nihayiah, Vol. 2, p. 316) அல்-பிதாயா & அல்-நிஹையியா, தொகுதி 2, பக் 316ல் பார்ப்பதுபோல்:

இறுதியில், பானு நாடரின் பழங்குடியில் ஒருவர் முஹம்மது குழந்தையாக இருந்தபோது முஹம்மது தங்களின் குழந்தை என்று கூறி கேட்டார். எனவே அவருக்கு தந்தை இல்லை என்பது தெளிவாகிறது.

البداية والنهاية لابن كثير باب ترويج عبد المطلب أبنه عبد الله ج 2ص 316) "بلغ
النبي أن رجالاً من كندة يزعمون أنهم منه وأنه منهم ... فقال: إنا لن ننتفي من
آبائنا، نحن بنو النضر بن كنانة

6. இந்த வெளிப்படையான முரண்பாட்டை மறைக்க, ஒரு பெண் பல ஆண்டுகளாக கர்ப்பமாக இருக்க முடியும் என்று முஹம்மது அவர்களிடம் கூறினார்.

தத்தெடுக்கப்பட்டவர்

முஹம்மது தத்தெடுக்கப்பட்ட மகன்

முஹம்மதுவின் வம்சாவளியை பற்றிய இந்த ஆய்வை முடிக்க, என்னுடன் சஹி-அல்-புகாரி, புத்தகம் 40, ஹதீஸ் 563 ஐ வாசிக்கவும்: இந்த முக்கியமான ஹதீஸ் முஹம்மது, அவர் வளர்ந்த குடும்பத்தில் ஒரு அடிமைக்கு மேல் இருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது:

அந்த விரும்பத்தகாத பார்வையை நான் பார்த்தபோது, நான் அல்லாஹ்வின் தூதரிடம் சென்று கதையை அவரிடம் சொன்னேன்; சையத்-பின்-ஹாரித்தின் துணையுடன் நபி வெளியே வந்தார். அவர் பின்னர், நானும் அவர்களுடன் சென்றேன். தூதர் ஹம்ஸாவிடம் (முஹம்மதுவின் மாமா) சென்று காரசாரமாக அவரிடம் பேசினார். ஹம்சா நபியைப் பார்த்து சொன்னார்: “எனது பரம்பரைக்கு நீ ஒரு அடிமையைக் காட்டிலும் மேலானவன் அல்ல”. தூதர் தன்னை விலக்கிக் கொண்டு வெளியேறினார். இந்தச் சம்பவம் குடிப்பது தடை செய்வதற்கு முன்பு நடந்தது. (சஹி-அல்-புக்காரி, புத்தகம் 40, ஹதிஸ் 563).

1. முகமதின் மாமா அது உண்மையாக இல்லாவிட்டால் ஏன் பொய்யைச் சொல்கிறார்?
2. மேலும், முஹம்மது ஏன் என்று ஒரு வார்த்தைகூட சொல்லாமல், ஏன் உடனே விலகினார்?
3. மறுத்து விவாதிக்க முடியாத ஒரு உண்மையை ஹம்ஸா கூறினபடியால், முஹம்மதுவால் எதிர்பேச முடியவில்லை.
4. அநேகமாக, முஹம்மது அதிகம் பேசினால், ஹம்சா இன்னும் கேட்க விரும்பாத பல விஷயங்ககளைச் சொல்வார் என்று கவலைப்பட்டார்.
5. முஹம்மது அவரது மாமாவாகிய ஹம்சா இப்படி பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது.
6. இவையெல்லாம் ஒன்றை நோக்கி நம்மை கொண்டுசெல்கிறது. முஹம்மதுவின் தந்தை யாரென்று தெரியவில்லை.
7. இந்தக் குடும்பம் தங்களது ஒரு மகனை இழந்தபின்பு அவரை (முஹம்மதுவை) தத்தெடுத்து அவருக்கு காத்தெம் என்று பெயரிட்டனர்.

முஹம்மதுக்கு அவர் ஒரு நபி (தீர்க்கதரிசி) என்று சொன்னது யார்?

வானவர் (தேவதூதன்) ஜிப்ரீல் கொடுக்க, முஹம்மது தனது கடவுளிடமிருந்து முதல்

வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டதாகக் குர்ஆன் 96:1 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜிப்ரீல் முஹம்மதுவிடம், "**படி**!" என்றார்.
முஹம்மது பதிலளித்தார், "**என்னத்தை படிக்க?**". இதை முஸ்லிம்கள் "என்னால் படிக்க முடியாது" என்று அவர் பதிலளித்ததாக கூறுகின்றனர்.

வானவர் (தேவதூதன்) என்னிடம் வந்து, "இக்ரா" (படி) என்று என்னிடம் கூறினார். நான் அவரிடம், “என்னால் படிக்க முடியாது”. அவர் என்னை இறுக்கி அவர் மீண்டும், "படிக்கவும்" என்றார். நான், "என்னால் படிக்க முடியாது" என்றேன். பின்னர் அவர் என்னை மூன்றாவது முறையாக இறுக்கி, "உங்கள் ஆண்டவனின் பெயரால் படியுங்கள்" என்றார்.

இந்த கதை எந்த வகையிலும் அர்த்தமுள்ளதாக இல்லை; இதைக்குறித்து நாம் சற்றே சிந்திப்போம்.
மலக்கு (வானவர்/தேவதூதன்) "படி" என்று சொன்னாரா? நான் உங்களுக்கு முன்பாக படிக்க ஒரு
காகிதத்தையோ அல்லது புத்தகத்தையோ கொடுக்க வேண்டாமா? முஸ்லிம்கள், இந்தத் தவறை மறைக்க,
அதின் அர்த்தம் "ஒப்பி (recite)" என்று கூறுகின்றனர். அதின் அர்த்தம் ஒப்பித்தல் என்றால் ஏன் முஹம்மது "எனக்கு ஒப்பிக்கத் தெரியாது" என்று ஏன் கூறவில்லை? "ஐந்து வயது குழந்தைகள் கூட சொன்னதை திரும்பச்சொல்ல முடியும். இது வாசிப்பதைப் பற்றியதாகத்தான் இருக்கவேண்டும், ஏனெனில் அரபு மொழியில் அந்த வார்த்தையின் அர்த்தம்
"**படிக்க**" என்பதாகும்.
இது ஆரம்பத்திலிருந்தே இஸ்லாம் தவறானது என்று நிருபிக்கும்படி சில விஷயங்களைக் காட்டுகிறது.

1. முஹம்மதுவுக்கு படிக்கத் தெரியாவிட்டால், அவர் படிப்பறிவில்லாதவராக இருந்தால், வானவர ஏன்
தவறான வார்த்தையை (வார்த்தை: "படி")பயன்படுத்துகிறார்?

2. இறைவன் ஒருவரை படிக்கும்படி கட்டளையிட்டால், அவர் படிப்பறிவில்லாதவராக இருந்தாலும் அற்புதத்தினால் படிக்கமுடியுமே!
இதை மேலும் விளக்கும்படியாக, குருடனிடம் இயேசு "பார்வையடைவாயாக" என்று சொல்வதை கற்பனை செய்வோம். அந்த பார்வையற்றவர், "என்னால் பார்க்க முடியவில்லை" என்று பதில் சொல்கிறார். பின்னர் இயேசு மீண்டும், "பார்வையடைவாயாக!" என்கிறார். பார்வையற்றவர் மீண்டும் ஒருமுறை, "என்னால் பார்க்க முடியவில்லை!" என்கிறார். இயேசு மூன்றாவது முறையாக "பார்!" என்கிறார். கடைசியில், பார்வையற்றவர் மீண்டும் சொல்கிறார், "என்னால் பார்க்க முடியவில்லை!" இது ஒரு கேலிக்குரிய வேடிக்கையாக

இருக்கும்! எந்த மாற்றமும் இல்லை என்றால் அவர் மூன்று முறை சொன்னதன் பயன் என்ன? முஹம்மதுவுக்கு இன்னும் (மூன்றாவது முறையும்) படிக்க முடியவில்லையே!

3. இது "ஒப்பித்தல்" பற்றி இருந்தால், மலக்கு ஏன் "இக்ரா-Iqra" (அதாவது "படி") என்ற வார்த்தையைப் பயன்படுத்தினான்? நன்றாக நினைவில் கொள்ளுங்கள், இக்ரா என்ற வார்த்தையைத் தேர்ந்தெடுத்தது மலக்கு(தேவதூதன்) அல்ல, அல்லாஹ். எனவே, முஹம்மதுவை குழப்பும்படி தவறான வார்த்தையை அல்லாஹ்தான் தேர்ந்தெடுத்தான்.

4. முஹம்மதுவை மலக்கு அமுக்குவதன்-பின்னால் உள்ள ரகசியம் என்ன? மலக்கு சொல்வது முஹம்மதுக்கு
புரியவேண்டும் என்பதற்காக அவரை இறுக்கினாரா? இல்லவே இல்லை!

5. ஏன் **மூன்று**முறை இறுக்கி/அமுக்கினார்? எல்லாம் எண்களைப்பற்றியது. இஸ்லாம் திரித்துவம் (மூன்று) என்கிற அடிப்படையை கொண்டு
ஆரம்பிக்கப்பட்டது. ஒருமுறை "படி" என்று சொல்வது பத்தாது. மூன்றாவது தடவை சொன்னால் மட்டுமே அது பூரணம்/முழுமை அடையும்!

6. இஸ்லாத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் **மூன்று** என்கிற எண்ணை அடிப்படையாகக் கொண்டது. உதாரணமாக எல்லாவற்றிற்கும் முன்பாக அல்லாவின் மூன்று
பெயர்களை சொல்வது. ஒவ்வொரு நடவடிக்கைகளில் மூன்று முறை திருப்பிச்செய்வது சரியாக தூய்மைப்படுத்தும்! அவர்களின் மூக்கை மூன்று முறை சிந்துதல், மூன்றுமுறை கைகளைத் கழுவுதல், மற்றும் அவர்களின் அந்தரங்க உறுப்பை மூன்று முறை ஆட்டி ... எல்லாம் மீண்டும் மீண்டும் மூன்று முறை. ஏன்?

7. இந்த கதையில் ஆழமான வெளிப்பாடு இருப்பதாக நான் நினைக்கிறேன்.

உண்மை என்னவெனில் முஹம்மது தனது குருவாகிய “வரக்கா-இப்னு-நோஃபல்” **தயாரித்து சொன்ன கதையிலிருந்து** ஆகும். உண்மையிலேயே யார் இஸ்லாமை ஆரம்பித்தது என்று அறிய என்னுடன் ஏசாயா 40:5-6 வாசிக்கவும்.

ஏசாயா 40:5, 6
பொருள்: அல்லாஹ்வின் நபிகளின் வாய்களில் வார்த்தைகளையும் அத்தியாயங்களையும் அவர்கள் வேறுபடுத்தி உணராமலேயே வீசினான்.

4. முஹம்மதுவின் புத்தகம் உட்பட அல்லாஹ்வின் அனைத்து புத்தகங்களும் விதிவிலக்கு இல்லாமல் சீர்கேடுக்கு ஆளாகின்றன என்பதை இந்த சிந்தனையிலிருந்த நாம் புரிந்துகொள்கிறோம்.

5. குர்ஆனுக்கு செய்ததுபோலவே முந்தைய தூதர்கள் அனைவரின் வாயிலும் வீசப்பட்ட சாத்தானின் வீண்பேச்சுகளை அல்லாஹ் அகற்றினான் என்றால், இந்த புத்தகங்கள் எப்படியும் கெட்டுப்போகப் போகின்றன என்றால் அப்படிச் செய்வதால் என்ன பயன்? ஆனால் குர்ஆனைத் தவிர அல்லாஹ்வின் அனைத்து புத்தகங்களும் கெட்டுபோயின என்ற முஸ்லிம்களின் கூற்றுக்கு இது பொருந்தவில்லை.

6. இதன் பொருள் என்னவென்றால், நபி யார் என்பதைப் பொருட்படுத்தாமல் அல்லாஹ் தனது புத்தகங்களைப் பாதுகாக்க கடுமையாக உழைக்கிறான், இருப்பினும் ஒரு பெரிய தோல்வியாகிறது, ஏனெனில் முஸ்லிம்களின் கூற்றுப்படி, குர்ஆனைத் தவிர வேறு எந்த புத்தகத்தையும் பாதுகாப்பதில் அல்லாஹ் வெற்றிபெறவில்லை.

7. "ஆனால் ஷைத்தான் எதை எறிந்தானோ அதை அல்லாஹ் ரத்து செய்கிறான், அல்லாஹ் அவனது வெளிப்பாடுகளை உறுதிப்படுத்துவான்" (குர்ஆன் 22:52) என்ற வசனத்தை மீண்டும் ஒருமுறை படிக்கவும். இந்த வசனத்தில், அல்லாஹ் அனைத்து ஷைத்தானிய வசனங்களையும் நீக்கிவிடுவேன் என்று ஒரு தெளிவான வாக்குறுதியை அளிக்கிறான், மேலும் அது அவனது முந்தைய நபிகள் மற்றும் புத்தகங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது. இதற்கு மேல், அவன் ஷைத்தானிய வசனங்களைச் சுத்தப்படுத்துவது மட்டுமல்லாமல், அவன் தனது வெளிப்பாடுகளையும் உறுதிப்படுத்துவான். அல்லாஹ்வின் அனைத்துப் புத்தகங்களும் சிதைந்துள்ளன(கெட்டுப்போயுள்ளன) என்ற முஸ்லிம்களின் கூற்றுகளுடன் இது ஒத்துப்போகவில்லை. ஏனெனில் இது அந்த குர்ஆன் வசனத்திற்கு (22:52) தெளிவான முரண்பாடாக இருக்கும்.

8. சிறந்த குர்ஆனை உருவாக்க குர்ஆன் மனித இனத்திற்கும் ஜின்களுக்கும் சவால் விடுகின்றது. குர்ஆன் 17:88ல் நாம் படிப்பது போல், மனிதர்களுக்கு மட்டுமே சவால் என்று முஸ்லிம்கள் கூற முடியாது.

“மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து இந்த குர்ஆனைப் போன்றவற்றை உருவாக்கினால், அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்தாலும், அதைப் போன்றதை அவர்களால் உருவாக்க முடியாது” என்று கூறுவீராக.

எனவே, முஸ்லிம்களிடம் நாம் கேட்க வேண்டும்: அல்லாஹ் என்றால் கடவுள் என்றால், இஸ்லாம் சொல்வது போல் ஷைத்தான் ஜின்களில் இருந்து வந்தவன் என்பது அவனுக்குத் தெரியாதா? (குர்ஆன் 18:50, "... எனவே இப்லீஸைத் {சாத்தானைத்} தவிர அவர்கள் அனைவரும் ஸஜ்தா செய்தார்கள். அவன் ஜின்களில் ஒருவன்") ஷைத்தான் அதைச் செய்வான், குர்ஆன் 22:52 வசனம் கூறுவது போல், கடந்த 1,24,000 நபிகளுக்குச் செய்திருக்கிறான்.

உமக்கு முன் நாம் எந்தத் தூதரையோ அல்லது நபியையோ அனுப்பியதில்லை, ஆனால் அவர் [வேதத்தை] ஓதும்போது ஷைத்தான் அவனுடைய ஓதலில் (தன்னுடைய வார்த்தைகளை) ஏவினான், ஆனால், ஷைத்தான் எதை எறிந்தானோ அதை அல்லாஹ் ரத்து செய்துவிட்டான்.

அல்லாஹ் ஷைத்தானின் வசனங்களை ரத்து செய்வேன் என்று சொன்னான், ஆனால் எந்த வசனங்கள் ரத்து செய்யப்படும், எந்த வசனங்கள் ஷைத்தானால் உருவாக்கப்பட்டன என்பதை முஸ்லிம்களுக்கு அவன் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. அவன் கெட்ட ஷைத்தானின் வசனங்களை ஒவ்வொன்றாக சுட்டிக் காட்டவில்லை என்றால் முஸ்லிம்கள் எப்படி கண்டுபிடிப்பார்கள்? ஒருவேளை அல்லாஹ் அவர்களை சொர்க்கத்தில் உள்ள தனது பாதுகாக்கப்பட்ட பலகை புத்தகத்தில் (குர்ஆன் 85:22, "பாதுகாக்கப்பட்ட பலகையில்") நீக்கிவிடுவான்! சாத்தானின் போதனைகள் இன்னும் முஸ்லிம்களின் கைகளில் இருந்து, தினமும் நடைமுறைப்படுத்தினால், இந்தப் பாதுகாப்பின் பலன் என்ன?

22:52 ம் வசனம் ஷைத்தானுடையது அல்ல என்பதை எப்படி சொல்லமுடியும்? முஹம்மதுவின் வாயில் அவன் தாராளமாக வசனங்களைச் செலுத்தும் வரை அது நமக்கு எப்படித் தெரியும்? இன்னும் ஒன்றுகூட ஷைத்தானால் எறிய முடியாதா? எனவே, ஷைத்தான், 'இதுவரை எனக்குக் கொடுக்கப்பட்ட இழிவான தவறான போதனைகளைப் பற்றிக் கவலைப்படாதே, நான் அவற்றை அகற்றுவேன்!' என்று அல்லாஹ்வைப் போல் பேசியிருக்கலாமே.

9. இறுதியாக, இந்த ஷைத்தானிய வசனங்கள் முஹம்மதுவின் வாயில் போடப்பட்டபோது, அவர் ஷைத்தானின் வார்த்தைகளை மட்டும் சொல்லவில்லை, ஆனால் அவர் சிலைகளை வணங்கினார். இதன் அர்த்தம், முஹம்மதுவின் உடலின் மீது சாத்தானின் முழுக் கட்டுப்பாடும் இருந்தது, ஏனெனில் கதை தஃப்சீர் இபின் காதிர், 1999 அச்சிடுதல், சவுதி அரேபியா, தொகுதி. 5, ப. 442-ல் உள்ளது:

قَرَأَ رَسُول اللَّه صَلَّى اللَّه عَلَيْهِ وَسَلَّمَ بِمَكَّة النَّجْم فَلَمَّا بَلَغَ هَذَا الْمَوْضِع " أَفَرَأَيْتُمْ اللَّات وَالْعُزَّى وَمَنَاة الثَّالِثَة الْأُخْرَى " قَالَ فَأَلْقَى الشَّيْطَان عَلَى لِسَانه : تِلْكَ الْغَرَانِيق الْعُلَى وَإِنَّ شَفَاعَتهنَّ تُرْتَجَى قَالُوا مَا ذَكَرَ آلِهَتنَا بِخَيْرٍ قَبْل الْيَوْم فَسَجَدَ وَسَجَدُوا فَأَنْزَلَ اللَّه عَزَّ وَجَلَّ هَذِهِ الْآيَة "

,

இப்னு கதீரின் அறிக்கை: “அல்-நஜம் (நட்சத்திரம், குர்ஆன் 53) அத்தியாயத்தை நபி ஓதிக் கொண்டிருந்த போது, ஷைத்தான் தனது வாயில், '**அல்-லாத்** மற்றும் **அல்-உஸா** மற்றும் **மனாத்** ஆகியோரை மூன்றாவதாகப் பார்க்கிறீர்களா? அவர்களைப் போற்றுவது அவசியம், அவர்களின் பரிந்துரை கேட்கப்பட வேண்டும்.' மேலும் புறஜாதி ஆள் கூறினார், 'முஹம்மது இன்று போல் எங்கள் கடவுள்களைப் புகழ்ந்ததில்லை' என்று கூறினார். மேலும் அவர் (முஹம்மது) குனிந்து வணங்கினார், அவரும் (முஹம்மது) அவர்களுடன் (புறஜாதிகளுடன்) சிலைகளை வணங்கினார் (சிலைகள் - அல்லாஹ்வின் மூன்று மகள்கள்).

இது முஹம்மதுவை கடவுளின் நபி என்று நிராகரிப்பதற்கான பிற காரணங்களுக்கு நம்மை எடுத்துச் செல்கிறது, ஏனெனில் இது குர்ஆனில் ஒரு பெரிய முரண்பாடாகும், குர்ஆன் 15:42-இல் நாம் பார்க்கலாம்:

"நிச்சயமாக என் அடியார்கள் மீது உனக்கு(ஷைத்தானுக்கு) எவ்வித அதிகாரமும் இல்லை (நான் அவர்களைப் பாதுகாக்கிறேன்) - உன்னை (சாத்தானை)ப் பின்பற்றி வழிகெட்டவர்களைத் தவிர !"

1. இதன் பொருள் முஹம்மது கெட்டவர்களிடமிருந்து இருக்க வேண்டும்;
2. முஹம்மது நபியாக இருக்க முடியாது;
3. அவர் அல்லாஹ்வால் பாதுகாக்கப்படவில்லை;
4. அல்லாஹ்வின் பாதுகாப்பு பொய்யானது; அப்படி ஒன்று இல்லை. இதனால்தான் முஹம்மதுவுடன் எதுவும் எடுபடவில்லை;
5. சாத்தானை எப்படி முஹம்மது கும்பிட முடிந்தது? அவன் இந்த மனிதரை முழு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தானா? ஒருவேளை முஹம்மதுவும் சாத்தானும் ஒன்றாயிருக்கக்கூடுமோ! நிச்சயமாக முஹம்மது சாத்தானால் ஆட்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்; எனவே, அவர் எந்த வகையிலும் நபியாக இருக்க தகுதியானவர் அல்ல.

முஹம்மது: பிசாசுகளால் பிடிக்கப்பட்டார்

நான் அந்த முடிவுக்கு வர முயற்சிக்கிறேன் என்று சிலர் கூறலாம், ஆனால் உண்மை என்னவென்றால், முஸ்லிம்கள் இதைத்தான் நம்புகிறார்கள் (ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 53, ஹதீஸ் 400):

حدثني محمد بن المثنى حدثنا يحيى حدثنا هشام قال حدثني أبي عن عائشة
أن النبي صلى الله عليه وسلم سحر حتى كان يخيل إليه أنه صنع شيئا ولم يصنعه

ஆயிஷா அறிவித்தார்: "நபி பில்லிசூனியம் செய்யப்பட்டார், அதனால் அவர் ஒரு காரியத்தைச் செய்ததாக கற்பனை செய்யத் தொடங்கினார், உண்மையில் அவர் அதை ஒருபோதும் செய்யவில்லை."

முஸ்லீம்கள் மற்றும் அவரது மனைவி கூறியது போல், முஹம்மது பிசாசு பிடித்திருந்தார். ஆனால் இது குர்ஆன் 15:42 கூறும் மற்றும் வாக்குறுதிக்கு எதிரானது:

"நிச்சயமாக என் அடியார்கள் மீது உனக்கு(சாத்தானுக்கு) எவ்வித அதிகாரமும் இல்லை (நான் அவர்களைப் பாதுகாக்கிறேன்) - உன்னை (சாத்தானை)ப் பின்பற்றி வழிகெட்டவர்களைத் தவிர !"

கெட்ட நபர்கள் மீது சாத்தானுக்கு அதிகாரம் இருக்கும் வரைக்கும் மற்றும் அவர்களைக் கட்டுப்படுத்தும் அளவு இருக்கும் வரைக்கும்: இதன் பொருள் முஹம்மது ஒரு கெட்ட மனிதர் மற்றும் சாத்தானைப் பின்பற்றுபவர் என்றாகிறது. இல்லையெனில், ஷைத்தானால் எப்படி முஹம்மதுவை தனது சூனியத்தின் கீழ் வைக்க முடிந்தது? மேற்கண்ட வசனத்தின்படி, பின்வருவனவற்றைப் படிக்கிறோம்: ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 71, ஹதீஸ் 658; ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 73, ஹதீஸ் 89; மற்றும் சாஹிஹ் அல்-புகாரி, புத்தகம் 7, தொகுதி. 71, ஹதீஸ் 661:

ஆயிஷா விவரித்தார்: "அல்லாஹ்வின் நபி (முஹம்மது) மீது பில்லிசூனியம் செயல்பட்டது, அதனால் அவர் செய்யாத ஒன்றைச் செய்துவிட்டதாக அவர் கற்பனை செய்யத் தொடங்கினார்."

இந்தக் கதை எவ்வளவு வேடிக்கையானது என்றும் மற்றும் முஹம்மதுவின் வாழ்க்கை விசித்திரக் கதைகளால் நிறைந்தது என்பதையும நீங்கள் காண்பீர்கள். எப்போதும் போல, யூதர்களை குற்றம் சொல்ல வேண்டும் அல்லது ஒரு யூதர் அதை செய்தார். முஹம்மது கூறியது போல் இந்த யூத மனிதன் எப்படி முஹம்மதுவை “சீப்பு மற்றும் அதில் ஒட்டியிருந்த முடி மற்றும் ஆண் பேரீச்சம்பழ மரத்தில் உள்ள மகரந்தத்தின் தோலினால்" கட்டுப்படுத்த முடிந்தது என்று பாருங்கள். இப்படிப்பட்ட கதையை நம்புவதற்கு ஒரு மனிதனின் மூளை எவ்வளவு சிறியது.

முஹம்மது ஏன் இந்தப் பொய்களை உருவாக்குகிறார் என்று நாம் கேட்க வேண்டும்.

1. முதலில், அவரது விசித்திரமான நடத்தைக்கு ஒரு சாக்குபோக்கு.

2. அவர் எப்பொழுதும் பொய்யை உருவாக்கி, பில்லிசூனியத்தின் சக்திக்குக் கீழ் இருப்பதாகக் கூறினார். (முஸ்லிம்கள் சொல்வது போல், ஆனால் என்னைப் பொறுத்தவரை, அவர் ஷைத்தானல் ஆட்கொண்டிருந்தார்). அப்படி சொன்னால் அவரது மோசமான நடத்தைக்காக யாரும் அவரை தவறாக எடைபோடமாட்டார்கள்.

3. முஹம்மதுவின் பொய்களில் ஒன்று இந்த ஹதீஸ், சாஹிஹ் முஸ்லீம், புத்தகம் 23, ஹதீஸ் 5081:

அமிர் பின் சஅத் பின் அபு வகாஸ் (Amir bin Sa'd bin Abu Wa'qas) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "காலை வேளையில் ஏழு பேரீச்சம் பழங்களை உண்பவருக்கு அந்த நாள் முடியும் வரை விஷமும் சூனியமும் தீங்கு செய்யாது."

அவர் அவர்களுக்கு பொய்களை கற்பித்தார், இருப்பினும் மந்திரத்தால் பாதிக்கப்பட்டார், அவர் விஷத்தால் இறந்தார்! அவரது மரணம் பற்றி பின்னர் பேசுவோம்.

முஹம்மது எவ்வளவு மோசமான மனநிலையில் இருந்தார் என்பதைப் பற்றிய சில புரிதல்களைப் பெற, நாம் ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 73, ஹதீஸ் 89 இன் தொடக்க வரியைப் பார்க்கலாம்:

ஆயிஷா (முஹம்மதுவின் குழந்தை-மனைவி) விவரித்தார்: "நபி அவர்கள் தனது மனைவிகளுடன் (உடலுறவு) படுத்தார் என்று கற்பனை செய்து கொண்டு இருந்தார்! உண்மையில் அவர் அவ்வாறு படுக்கவில்லை”

இந்த மனிதனையும் அவருடைய பைத்தியக்காரத்தனத்தையும் முஸ்லிம்கள் எவ்வளவு மறைக்க முயல்கிறார்கள் என்பது உண்மையில் முக்கியமில்லை. மேலாக, அவர் தனது ஒன்பது மனைவிகளுடன் உண்மையிலேயே உடலுறவு கொண்டாரா அல்லது கற்பனை செய்து கொண்டிருந்தாரா என்பதுகூட அவருக்குத் தெரியாத அளவுக்கு அவர் மாயையிலும் கற்பனையிலும் எவ்வளவு மோசமாக வாழ்ந்து வந்தார் என்பதை எதுவும் விளக்க முடியாது. இவை அனைத்திற்கும் பிறகு, நாம் கேட்க வேண்டிய சில முக்கியமான கேள்விகள் உள்ளன:

1. முஹம்மது அவர் ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருந்தார் என்பதற்கான ஆதாரத்தை இப்போது பார்த்தவுடன், அவர் ஒரு மலக்கை (வானவாரைப்) பார்த்ததாகவும், அவருடைய பெயர் ஜிப்ரீல் என்றும் சொல்வதை எப்படி நம்புவது? யாருக்கு தெரியும்? ஒருவேளை இந்த ஜிப்ரீல் கதையும் மாயையில் ஒன்றாக இருக்கலாம்.

2. மர்யமையும் அவள் மகனையும் ஷைத்தானிடம் இருந்து அல்லாஹ் பாதுகாத்தான் என்று குர்ஆன் கூறும் போது ஏன் அல்லாஹ் முஹம்மதுவை ஷைத்தானிடமிருந்து பாதுகாக்க முடியவில்லை? குர்ஆன் 3:36: நான் அவளுக்கு மர்யம் (மரியாள்) என்று பெயரிட்டேன், மேலும் நான் அவளையும் அவளுடைய சந்ததியையும் அல்லாஹ்வின் மூலம் சபிக்கப்பட்ட தீயவனிடமிருந்து பாதுகாப்பேன்.

3. அதாவது முஹம்மதுவை விட ஈஸா அதிகமாக நேசிக்கப்பட்டாரா? அல்லாஹ் பாதுகாப்பதாக வாக்கு கொடுக்கப்பட்டவர் முஹம்மது அல்லவா? நல்ல முஸ்லிம்களை அல்லாஹ் பாதுகாப்பான் என்று வசனம் கூறுகிறது. இதற்கு பதிலளிக்க, நாம் வரும் இரண்டில் ஒன்றை கருத்தில் கொள்ளவேண்டும்:

குர்ஆன் என்பது பொய்களின் புத்தகம், அல்லாஹ் ஒரு பொய்யான நபியை உருவாக்கினான், மேலும் அவர் மற்றும் அவரது கும்பல் (வரக்கா இப்னு நௌஃபல் மற்றும் துறவி புஹிரா) ஆகியோரால் உருவாக்கப்பட்ட ஒரு போலி பெயர் முஹம்மது. அல்லது...

முஹம்மது ஒரு முஸ்லிம் அல்ல, அந்த வசனம் உண்மையான முஸ்லிம்களுக்கானது! எப்படியிருந்தாலும், இஸ்லாம் ஒரு ஆணால் ஆணுக்கென்றே உருவாக்கப்பட்ட ஒரு தவறான மதமாகும்.

அப்பாவி பையன்

ஒரு அப்பாவி பையனின் கொலை - எப்படி, ஏன்?

அல்-காதர் நபியை மோசஸ் சந்திக்கிறார், குரான் 18:65:

> فَوَجَدَا عَبْدًا مِّنْ عِبَادِنَآ ءَاتَيْنَٰهُ رَحْمَةً مِّنْ عِندِنَا وَعَلَّمْنَٰهُ مِن لَّدُنَّا عِلْمًا
>
> 18:65 (இவ்வாறு) அவ்விருவரும் நம் அடியார்களில் ஒருவரைக் கண்டார்கள்; நாம் அவருக்கு நம்மிடமிருந்து கிருபை அருளியிருந்தோம்; இன்னும் நாம் அவருக்கு நம்மிடமிருந்து கல்வி ஞானத்தையும் கற்றுக் கொடுத்திருந்தோம்.

இந்த வசனத்திலிருந்து இந்த மனிதர் (அல்-காதர்) அல்லாஹ்வின் கருணையை பெற் இறைவனின் நபி என்பதை நாம் புரிந்துகொள்கிறோம், மேலும் பின்வரும் வசனத்தில் (குர்ஆன் 18:66) நாம் பார்க்கிறபடி, மூஸா கூட அவரிடம் அவருடைய மாணவராக இருக்கும்படி கேட்டார்:

> قَالَ لَهُۥ مُوسَىٰ هَلْ أَتَّبِعُكَ عَلَىٰٓ أَن تُعَلِّمَنِ مِمَّا عُلِّمْتَ رُشْدًا
>
> 18:66 "உங்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட நன்மையானவற்றை நீங்கள் எனக்குக் கற்பிக்கும் பொருட்டு, உங்களை நான் பின் தொடரட்டுமா? என்று அவரிடம் மூஸா கேட்டார்.

இங்கே நாம் பார்ப்பது போல், இந்த அல்-காதர் ஒரு பெரிய நபி ஆவார். அல்லாஹ் அவருக்கு "கருணை" மற்றும் "அறிவை" கொடுத்தான் என்று அந்த வசனம் 18:65 கூறியதை நினைவில் கொள்ளவும். இந்த நபிக்கு கருணை மற்றும் அறிவின் சிறப்பு ஆகிய நன்கொடை உள்ளது.

இந்தக் கதையில், அவர்கள் வழியில் செல்லும்போது, அவர் (அல்-காதர்) ஒரு சிறுவனைக் கண்டான், அவர அவனைக் கொன்றான் என்பதை அறிந்து கொள்கிறோம்! எனவே ஒரு அப்பாவி பையனை எப்படி கொல்ல முடியும் என்று மோசே அவரிடம் கேட்டார். அதற்கு அல்-காதர்,

"உன்னால் என்னைப் பொறுத்துக்கொள்ள முடியாது!" என்றார். குரான் 18:74ல் கதை தொடங்குகிறது.

فَٱنطَلَقَا حَتَّىٰٓ إِذَا لَقِيَا غُلَٰمًا فَقَتَلَهُۥ قَالَ أَقَتَلْتَ نَفْسًا زَكِيَّةًۢ بِغَيْرِ نَفْسٍ لَّقَدْ جِئْتَ شَيْـًٔا نُّكْرًا

18:74 பின்னர் (மரக்கலத்திலிருந்து இறங்கி) இருவரும் வழி நடக்கலானார்கள்; (வழியில்) ஒரு பையனை அவ்விருவரும் சந்தித்த போது, அவர் அவனைக் கொன்று விட்டார். (உடனே மூஸா) "கொலைக்குற்றமின்றி, பரிசுத்தமான ஜீவனைக் கொன்றுவிட்டீர்களே? நிச்சயமாக நீங்கள் பெருத்தக் கேடான ஒரு காரியத்தையே செய்து விட்டீர்கள்!" என்று (மூஸா) கூறினார்.

கதை 18:80 வசனத்தின் மூலம் தொடர்கிறது, அங்கு அல்-காதர் கூறுகிறார்:

وَأَمَّا ٱلْغُلَٰمُ فَكَانَ أَبَوَاهُ مُؤْمِنَيْنِ فَخَشِينَآ أَن يُرْهِقَهُمَا طُغْيَٰنًا وَكُفْرًا

18:80 "(அடுத்து) அந்த சிறுவனுடைய தாய், தந்தையர் இருவரும் முஃமின்களாக இருக்கிறார்கள்; அவன் (வாலிபனாகி) அவ்விருவரையும் வழிகேட்டிலும், குஃப்ரிலும் சேர்த்து விடுவான் என்று நாம் பயந்தோம்.

சஹிஹ் முஸ்லிமில், புத்தகம் 033, ஹதீஸ் 6434, இந்தக் கதையின் விளக்கத்தைக் காண்கிறோம்:

அல்லாஹ்வின் நபி கூறினார்: “அல்-காதர் நபி கொலை செய்த இளைஞன் அவனது இயல்பிலேயே காஃபிர், மேலும் அவன் கொல்லப்படாவிட்டால், அவன் தனது இயல்பால் காஃபிராக இருந்திருப்பான், மேலும் அவன் கொல்லப்படாவிட்டால், அவன் கீழ்ப்படியாமை மற்றும் அவநம்பிக்கையில் அவனது பெற்றோரை ஈடுபடுத்துவான்.”

இப்போது இந்தக் கதையைப் படித்து அதில் என்ன தவறு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்போம்:

1. சிறுவன் எந்த தவறும் செய்யாத முஸ்லிம் பையன். இஸ்லாத்தின் இரு நபிகளும் அவர் குற்றமற்றவர் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

2. இதுவரை செய்யாத குற்றத்திற்காக ஒருவரை எப்படி நியாயம்தீர்ப்பது? அவன் என்ன

செய்தான், என்ன செய்திருப்பான் என்று கூட அறியாத ஒரு குழந்தை. உண்மையில், அவன் இதுவரை எதுவும் செய்யவில்லை.

3. சிறுவன் அநியாயம் செய்துவிடுவானோ என்று அல்-காதர் பயந்ததாக வசனம் 80 கூறுகிறது.

4. சிறுவன் இஸ்லாத்தை விட்டு வெளியேறுவாரா இல்லையா என்பது உறுதியாக அல்-காதருக்குத் தெரியவில்லை.

5. மிக முக்கியமான கேள்வி என்னவென்றால், அல்லாஹ் நமக்கு ஒரு உண்மைக் கதையைச் சொல்கிறான் என்றால், ஏன் மில்லியன் கணக்கான குழந்தைகள் வளர்ந்து பெரிய நாத்திகர்களாக மாறுகிறார்கள், இது அவர்களின் பெற்றோருக்கு அவமானம், ஆனால் குழந்தை பருவத்தில் அவர்களின் மரணத்தை அல்லாஹ் ஏற்படுத்தவில்லை? இந்த ஒரு பையன் மட்டுமா?

6. இஸ்லாத்தின் நபி அல்-காதர் சிறுவனைக் கொன்ற விதம் மிகக் கொடியது.

7. 18:74 வசனத்தின் அல்-ஜலாலைன் விளக்கத்திலிருந்து, இந்த பகுதியைக் காண்கிறோம்:

فَانْطَلَقَا" بَعْد خُرُوجهمَا مِنْ السَّفِينَة يَمْشِيَانِ "حَتَّى إِذَا لَقِيَا غُلَامًا" لَمْ يَبْلُغ الْحِنْث
يَلْعَب مَعَ الصِّبْيَان أَحْسَنهمْ وَجْهًا "فَقَتَلَهُ" الْخَضِر بِأَنْ ذَبَحَهُ بِالسِّكِّينِ مُضْطَجِعًا أَوْ
اقْتَلَعَ رَأْسه بِيَدِهِ أَوْ ضَرَبَ رَأْسَهُ بِالْجِدَارِ

அவர் சென்று ஒரு பையனைப் பார்த்தார், அவர் கத்தியால் அவனைக் கொன்றார், அவன் தலையை எடுத்து சுவரில் அடித்து நொறுக்கத் தொடங்கினார்!

8. ஏன் யாரேனும் ஒருவரை இப்படிக் கொல்ல வேண்டும்? குறிப்பாக அவன் இறந்த பிறகு அவனது உடல் உறுப்புடன் ஏன் விளையாடுகிறார்கள்? ஏதோ தவறு செய்த பெரியவரைப் பற்றி நாம் பேசவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவன் இருந்தால், நபி (அல்-காதர்) பழிவாங்கத் தேடுகிறார் என்று சொல்லலாம்! ஆனால், சிறுவனாக இருந்த அவன் கொடூரமான முறையில் கொல்லப்பட்டான். தலையை துண்டித்துவிட்டு சுவரில் தலையை அடித்து நொறுக்கியதன் பயன் என்ன?

9. இறுதியில், இது இஸ்லாத்தின் அசிங்கமான பக்கத்தைக் காட்டும் விசித்திரக் கதை என்று சொல்லலாம். எந்த தவறும் செய்யாததற்காக ஒருவனைக் கொல்வது, அவன் எதிர்காலத்தில் ஏதாவது செய்வான் என்று நீங்கள் பயப்படுகிறீர்கள். இந்த கதை உண்மையாக இருந்தால், நாம் அனைவரும் பாவம் செய்தவர்களாக இருப்பதால், நாம் வயதாகிவிடும் முன் அனைத்து மனித இனமும் கொல்லப்பட வேண்டும். இந்த கதை முஹம்மதுவின் ஒரு பைத்தியக்காரக் கதை.

அல்லாஹ்வின் வழிநடத்துதல்

அல்லாஹ் தனக்குப் பிடித்தவரைத் தவறாக வழிநடத்துகிறான், தனக்குப் பிடித்தவரை சரியான வழிகாட்டுகிறான்.

குர்ஆன் 4:88-ல்

فَمَا لَكُمْ فِى ٱلْمُنَٰفِقِينَ فِئَتَيْنِ وَٱللَّهُ أَرْكَسَهُم بِمَا كَسَبُوٓا۟ ۚ أَتُرِيدُونَ أَن تَهْدُوا۟ مَنْ أَضَلَّ ٱللَّهُ ۖ وَمَن يُضْلِلِ ٱللَّهُ فَلَن تَجِدَ لَهُۥ سَبِيلًا

4:88 நயவஞ்சகர்களைப் பற்றி நீங்கள் இருவகையான (அபிப்பிராயங்கள் கொண்ட) பிரிவினர்களாக இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் செய்த தீவினைகளின் காரணத்தால் அல்லாஹ் அவர்களைத் தலை குனிய வைத்துவிட்டான்; எவர்களை அல்லாஹ் வழி தவறச் செய்து விட்டானோ, அவர்களை நீங்கள் நேர்வழியில் செலுத்த விரும்புகிறீர்களா? எவரை அல்லாஹ் வழி தவறச் செய்து விட்டானோ, நிச்சயமாக அவருக்கு (மீட்சியடைய) எவ்வித வழியையும் (நபியே!) நீர் காணமாட்டீர்.

குர்ஆன் 6:39-ல் நாம் அதிக விளக்கத்தைப் பெறுகிறோம்:

وَٱلَّذِينَ كَذَّبُوا۟ بِـَٔايَٰتِنَا صُمٌّ وَبُكْمٌ فِى ٱلظُّلُمَٰتِ ۗ مَن يَشَإِ ٱللَّهُ يُضْلِلْهُ وَمَن يَشَأْ يَجْعَلْهُ عَلَىٰ صِرَٰطٍ مُّسْتَقِيمٍ

6:39 மேலும் குர்ஆனைப் பொய்யாகக் குற்றம் சாட்டுபவர்கள் செவிடர்களாகவும், ஊமைகளாகவும், இருளில் உள்ளவர்களாகவும், அல்லாஹ் யாரை ஏமாற்றுவானோ, அவர்களுக்கு நேரான வழியைக் காட்டுவதில்லை.

குர்ஆன் 6:125-ல்

فَمَن يُرِدِ ٱللَّهُ أَن يَهْدِيَهُۥ يَشْرَحْ صَدْرَهُۥ لِلْإِسْلَٰمِ ۖ وَمَن يُرِدْ أَن يُضِلَّهُۥ يَجْعَلْ صَدْرَهُۥ ضَيِّقًا حَرَجًا كَأَنَّمَا يَصَّعَّدُ فِى ٱلسَّمَآءِ ۚ كَذَٰلِكَ يَجْعَلُ ٱللَّهُ ٱلرِّجْسَ عَلَى ٱلَّذِينَ لَا يُؤْمِنُونَ

6:125 அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்ட நாடுகிறானோ அவருடைய நெஞ்சை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்காக விசாலமாக்குகிறான் - யாரை அவன் வழி கெடுக்க நாடுகிறானோ, அவருடைய நெஞ்சை, வானத்தில் ஏறுபவன் நெஞ்சைப் போல் இறுகிச் சுருங்கும்படிச் செய்கிறான் - இவ்வாறே ஈமான் கொள்ளாதவர்களுக்கு அல்லாஹ் தண்டனையை ஏற்படுத்துகிறான்.

1. இஸ்லாத்தில் தீமைக்கு வழி வகிப்பவன் அல்லாஹ், நீங்கள் பார்ப்பது போல் ஷைத்தான் அல்ல!

2. அல்லாஹ் அப்படிச் செய்தால் ஷைத்தானின் வேலை என்ன?

3. இந்த வசனத்தில் முஹம்மதுவுக்கு எந்த உரிமையும இல்லை அல்லது அவர்களை வழிநடத்த அவருக்கு அனுமதி இல்லை என்று தெளிவாகக் கூறுவதால், முஹம்மது ஏன் கடவுளின் தூதராக நியமிக்கப்பட்டார்? அவர் கடமை என்ன?

4. இவர்களை நேர்வழியில் காட்ட முயலும் அவர் மீது அல்லாஹ் ஏன் கோபப்படுகிறான்?

குர்ஆன் 7:178-ல்

مَن يَهْدِ ٱللَّهُ فَهُوَ ٱلْمُهْتَدِى ۖ وَمَن يُضْلِلْ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْخَٰسِرُونَ

7:178 அல்லாஹ் எவருக்கு நேர்வழி காட்டுகின்றானோ அவர் நேர்வழியை அடைந்தவர் ஆவார்; யாரைத் தவறான வழியில் விட்டு விட்டானோ, அத்தகையவர்கள் முற்றிலும் நஷ்டம் அடைந்தவர்களே.

1. இந்தக் இறைவனைப் பாருங்கள்! அல்லாஹ் அவர்களை எப்படி வழிநடத்தி பின்பு வழிகெட்டுப்பொகச் செய்து, வழிகெட்டதற்காக அவர்களை தண்டிக்க முடியும்?

2. இஸ்லாம் அதிர்ஷ்டம் பற்றியது. நீங்கள் அதிர்ஷ்டசாலி என்றால் அல்லாஹ் எப்போதாவது தேர்ந்தெடுக்கும் நபர்களில் ஒருவராக இருப்பீர்கள், நீங்கள் அதிர்ஷ்டசாலி இல்லை என்றால், அல்லாஹ் நிராகரிப்பவர்களில் ஒருவராக இருப்பீர்கள்! உன்னுடைய தவறு என்னவென்று உனக்குத் தெரியாது!

அல்லாஹ் கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் தவறாக வழிநடத்துகிறான்

இயேசு சிலுவையில் அறையப்படவில்லை என்று முஸ்லீம்கள் சொல்லிக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவது ஒரு மிக முக்கியமான நம்பிக்கை, நீங்கள் அதை நம்பவில்லை என்றால், நீங்கள் ஒரு கிறிஸ்தவர் அல்ல. ஆனால் குர்ஆனில் உள்ள கதை விசித்திரமானது மற்றும் அர்த்தமற்றது. குர்ஆன் 4:157ஐப் படிப்பதன் மூலம், இயேசுவின் சிலுவையில் அறையப்படும்போது அல்லாஹ் மற்றும் முஹம்மதுவின் தர்க்கத்தைப் (logic) பார்ப்போம்:

> وَقَوْلِهِمْ إِنَّا قَتَلْنَا ٱلْمَسِيحَ عِيسَى ٱبْنَ مَرْيَمَ رَسُولَ ٱللَّهِ وَمَا قَتَلُوهُ وَمَا صَلَبُوهُ وَلَٰكِن شُبِّهَ لَهُمْ ۚ وَإِنَّ ٱلَّذِينَ ٱخْتَلَفُوا۟ فِيهِ لَفِى شَكٍّ مِّنْهُ ۚ مَا لَهُم بِهِۦ مِنْ عِلْمٍ إِلَّا ٱتِّبَاعَ ٱلظَّنِّ ۚ وَمَا قَتَلُوهُ يَقِينًۢا
>
> 4:157 இன்னும், "நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதராகிய - மர்யமின் குமாரராகிய- ஈஸா மஸீஹை கொன்றுவிட்டோம்" என்று அவர்கள் சொல்கின்றனர். அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை, அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. ஆனால் அவர்களுக்கு அதைப்போல் ஒருவரை ஒப்பாக்கப்பட்டான்;. மேலும் இ(வ் விஷயத்)தில் அபிப்ராய பேதம் கொண்டவர்கள், அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள் - வெறும் யூகத்தைப் பின்பற்றுவதேயன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது. நிச்சயமாக அவர்கள், அவரைக் கொல்லவே இல்லை.

“ஜாமா அல்-பைன் ஃபே தஃப்சீர்" என்ற புத்தகம். அல்-குர்ஆன், இஸ்லாம் வருடம் 310.

(تفسير جامع البيان في تفسير القرآن)/ الطبري (ت 310 هـ)
عن ابن إسحاق، قال: أن عيسى حين جاءه من الله إنّى رَافِعُكَ إليّ قال: يا معشر الحواريين: أيكم يحبّ أن يكون رفيقي في الجنة حتى يشبه للقوم في صورتي فيقتلوه مكاني؟ فقال سرجس: أنا يا روح الله قال: فاجلس في مجلسي فجلس فيه، ورُفع عيسى صلوات الله عليه، فدخلوا عليه فأخذوه، فصلبوه، فكان هو الذي صلبوه وشبّه لهم به. وكانت عدتهم حين دخلوا مع عيسى معلومة، قد رأوهم فأحصوا عدتهم، فلما دخلوا عليه ليأخذوه وجدوا عيسى فيما يرون وأصحابه وفقدوا رجلاً من العدّة، فهو الذي اختلفوا فيه. وكانوا لا يعرفون عيسى، حتى جعلوا ليودس زكريايوطا ثلاثين درهماً على أن يدلهم عليه ويعرّفهم إياه، فقال لهم: إذا دخلتم عليه فإني سأقبّله، وهو الذي أقبّل فخذوه فلما دخلوا عليه، وقد رُفع عيسى، رأى سَرْجس في صورة عيسى، فلم يشكّ أنه هو عيسى، فأكبّ عليه فقبله، فأخذوه فصلبوه.

இப்னு இஷாக்கிடம் இருந்து, அவர் கூறினார்: "'ஓ 'ஈஸாவுக்கு மேலாக நான் உன்னை உயர்த்துவேன்' என்று அல்லாஹ்விடமிருந்து ஈஸா அவருக்கு வெளிப்படுத்தியபோது, இயேசு தனது அப்போஸ்தலர்களிடம், 'உங்களில் யார் கொல்லப்படுவார்கள்? மேலும் சொர்க்கம் செல்ல எனக்கு துணையாக இருப்பானோ, அல்லாஹ் என் உருவத்தை வைத்து அவனைப் பார்ப்பான், அதனால் அவன் என்னைப் போல் இருப்பான், எனக்குப் பதிலாக அவனைக் கொன்று விடுவார்கள்?' அப்போஸ்தலர்களில் ஒருவர், அவர் பெயர் சர்ஜேஸ்! அவர் இயேசுவிடம், 'அல்லாஹ்வின் ஆவியே! நான்' என்றான்".

அப்பொழுது இயேசு அவனிடம் கூறினார். 'அப்படியானால் என் நாற்காலியில் உட்காருங்கள்' என்றார். அவர் அதில் அமர்ந்தார். பின்னர் அல்லாஹ் இயேசுவை சொர்க்கத்திற்கு உயர்த்தினான். யூதர்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள், அவர்கள் சர்ஜஸைப் பிடித்து சிலுவையில் அறைந்தார்கள், ஏனென்றால் அல்லாஹ் அவரை இயேசுவைப் போல தோற்றமளித்த பிறகு அவர் இயேசுவைப் போல தோற்றமளித்தார். அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தபோது உள்ளே 12 பேர் இருந்ததாகவும், மொத்த எண்ணிக்கையில் (13) ஒருவரைக் காணவில்லை என்றும் கணக்கிட்டனர். இயேசுவோ, அல்லாஹ் அவரை எழுப்பினான். ஏனென்றால், இயேசு எப்படி இருக்கிறார் என்று அவர்களுக்குத் தெரியாது, (யூதர்களுக்கு இயேசு எப்படி இருந்தார் என்று தெரியவில்லை?!) அதனால்தான் அவர்கள் யூதாஸ் ஸ்காரியாத்திடம் முப்பது வெள்ளி காசுகளை கொடுத்து இயேசுவிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் அவர்களிடம், 'நான் உள்ளே நுழையும் போது, நான் அவரை முத்தமிடுவேன், அதனால் இயேசு யார் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.' என்று அவர்களிடம் கூறினார். எனவே அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தபோது, இயேசு உயர்த்தப்பட்டார், ஆனால் அவர் இயேசுவைப் போன்ற சர்ஜஸைக் கண்டார், எனவே அவர் அவரை முத்தமிட்டார்". பின்னர் அவர்கள் அவரை சிலுவையில் அறைந்தார்கள்."

இந்தக் கதையை நாம் கருத்தில் கொள்ளும்போது, அதில் எதுவும் அர்த்தமுள்ளதாக இல்லை.

1. அல்லாஹ் தன் ஆட்களை பொய் சொல்லும்படி இயேசுவிடம் கேட்கிறான், அபோதுதான் இயேசு ஓட முடியும்!

2. யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் வழி தவறச் செய்கிறான். இயேசுவைபோலவே இருந்த அந்த மனிதரான சர்ஜஸுக்குப் பதிலாக ஏன் அல்லாஹ் சிலுவையில் இயேசுவைக் காணும்படி செய்தான்? அதற்கும் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் அங்கே இருந்ததற்கும் பின்னே உள்ள கதையின் நோக்கம் புரியும்படி இல்லை. 100,000 ஆண்கள் அது அவர் இல்லை என்று சொன்னாலும், என் கண்களால் சிலுவையில் இருப்பவரைப் பார்த்தால் அவர்களின் கதைகளை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்! மேலும், அவரது தோற்றமும் குரலும் ஒரே மாதிரியாக இருக்கும்போது, அவர் சிலுவையில் இருந்தவர் அல்ல என்பதை அவரது தாயார் மர்யம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? (ஒரு குளோனாக)?

3. ஏன் இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் எவரும் இந்தக் கதையை மீண்டும் கூறவில்லை அல்லது இயேசு சிலுவையில் குளோனிங் செய்யப்பட்ட கதையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை?

4. இயேசுவைக் காப்பாற்றி, வேறு சில மனிதரை எனது பாவங்களுக்காக இறந்துபோக வைப்பதில் என்ன பயன்? ‘ஓடிப்போய் தனக்காக வேறொருவரை இறக்கச் சொல்லும் இஸ்லாமிய ஈஸாவின் கோழைத்தனமான செயல் இது! ஹீரோக்கள் இப்படி நடந்து கொள்வதில்லை. உண்மையான ஹீரோக்கள் மற்றவர்களுக்காக இறக்கிறார்கள், மற்றவர்கள் தனக்காக இறக்க வேண்டும் என்று கேட்க மாட்டார்கள்.

5. அல்லாஹ் உண்மையான கடவுள் என்றால், அல்லாஹ்வுக்கு இந்த குளோனிங் (நகலான) ஈஸா, மனிதகுல வரலாற்றில் இன்றுவரை மூன்று பில்லியனுக்கும் அதிகமான கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட முஃமின்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருக்கவில்லையா அல்லது முன்னறிவிக்க முடியவில்லையா?

6. இது அல்லாஹ்வை மனிதகுல வரலாற்றில் எப்போதும் இல்லாத ஏமாற்றுக்காரனாக ஆக்குகிறது.

7. இது அல்லாஹ்வை ஷைத்தான் என்று பொருள்படுத்துகிறது. ஏனெனில் ஷைத்தான் மட்டுமே ஏமாற்றுகிறான்.

8. குரானின் சிலுவையில் அறையப்பட்ட கதை, “இயேசு சிலுவையில் அறையப்பட்டதைப் பற்றி பைபிள் நமக்கு சொல்வது ஒரு உண்மையான கதை என்பதை நிரூபிக்கிறது”. கண்ணால் பார்த்தவர்கள் பார்த்ததை பைபிள் சொல்கிறது, அவர்கள் தங்கள் கண்களால் பார்த்ததைத் தவிர வேறு ஏதாவது தெரிவித்திருந்தால் அது பெரிய ஏமாற்றுத்தனம். மேலும் குர்ஆன் இதைத்தான் கிறிஸ்தவர் சாட்சியாக கண்டார்; அதாவது சிலுவையில் கிறிஸ்து அறையப்பட்டதை.

9. வரவிருக்கும் கேள்வி மிகவும் முக்கியமானது: யூதர்கள் அவரைக் கொல்ல வருவதற்கு முன்பே அல்லாஹ் இயேசுவை மேலே உயர்த்தியிருந்தபோது, இயேசுவின்-குளோனை(நகலை) உருவாக்குவதன் நோக்கம் என்ன? இயேசுவைக் காப்பாற்றுவதற்காக அல்லாஹ் அவரைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றிருந்தால், ஏன் அவனுடைய அப்போஸ்தலர்கள் அனைவரையும் காப்பாற்ற முடியவில்லை? அல்லாஹ்விடம் அற்புதங்களும் தந்திரங்களும் இல்லாமல் போய்விட்டதா? பன்னிரண்டு பேரையும் இயேசுவைபோல ஒத்திருக்கும்படி செய்து எல்லா யூதர்களையும் இயேசுவைப் போல் காட்டுவது பற்றி என்ன? உலகம் முழுவதையும் இயேசுவைப் போல மாற்றுவது எப்படி? அப்படியானால் அவர் யார், எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்க வழியே இருக்காது அல்லவா!

10. இது மிகவும் முட்டாள்தனமான கதை. அதே சமயம், அல்லாஹ்வோ அல்லது முஸ்லிம்களோ மற்றவர்களை ஏமாற்றும் வரை இந்த நம்பிக்கையில் ஏமாற்றுதல் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதைக் காட்டி இந்த விசித்திரக் கதையை உருவாக்கிய முஹம்மதுவின் மனநிலையை இது நமக்குக் காட்டுகிறது.

11. அல்லாஹ் பொய் சொல்கிறான் என்பதை நிரூபித்து விட்ட்டான். யோவான் 8:44ல் கிறிஸ்து சொன்னதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்:

யோவான் 8:44 நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

12. அந்த வசனத்தைப் படித்த பிறகு, இந்தத் தலைப்பில் எனக்கு வேறு எந்தக் கருத்தும்

இல்லை என்று நினைக்கிறேன். கிறிஸ்து நமக்கு பதில் அளித்துள்ளார்.

மேசியாவின் மீண்டும் வருகை

மேசியாவின் மீண்டும் வருகை

முஸ்லீம் இயேசு (ஈஸா) இப்போது எப்படி பரலோகத்தில் இருக்கிறார், 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இன்னும் உயிருடன் இருக்கிறார், இது இன்னும் முடிவடையவில்லை.

ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 34, ஹதீஸ் 425 இல் நாம் படிக்கிறோம்:
அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள்: “எனது உயிர் யாருடைய கையில் இருக்கிறதோ, அவர் மீது சத்தியம் செய்கிறேன், மர்யமின் மகன் விரைவில் உங்களிடையே நீதியாகவும், ஆட்சியாளராகவும்-நீதிபதியாகவும் இறங்குவார். அவர் சிலுவைகளைக் உடைத்து, பன்றிகளை அறுத்து, ஜிஸ்யாவை ஒழிப்பார் (இஸ்லாத்தைத் தேர்ந்தெடுக்காததற்காக அவமானகரமான தண்டனை, கிறிஸ்தவர்கள் உயிருடன் இருப்பதற்காக செலுத்த வேண்டும்) மற்றும் செல்வத்தை யாரும் எடுத்துக்கொள்வதை நிறுத்தாத அளவுக்கு செல்வம் பாயும்.

1. இஸ்லாத்தில் கிறிஸ்துவின் புதிய உருவத்தை இங்கு காண்கிறோம். அல்லாஹ்வின் அனைத்து நபிகளிலும் முஹம்மது மிகப் பெரிய நபி என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் அவர் இறந்துவிட்டார்! இயேசு ஒரு நபி, ஆனால் அவருடைய புத்தகம் கெட்டுவிட்டது! ஈஸா (இஸ்லாமிய இயேசு) இன்று இவ்வுலகில் ஒருவரைக் கூட அவருடைய போதனைகளைப் பின்பற்றச் செய்ய முடியவில்லை! தன் உயிரைக் காப்பாற்ற ஓடிவந்து, தனக்குப் பதிலாக யாரையாவது சிலுவையில் ஏற்றி இறக்கும்படி கேட்டவர். குர்ஆன் கூறும் ஈஸா மீது இவ்வளவு மோசமான குற்றச்சாட்டுகளுக்குப் பிறகு, அவர் உலக இரட்சகராக வரவேண்டும்!

2. பூமியை ஆள்பவராக மீண்டும் வருவார்! நீங்கள் பார்க்கிறபடி, முஹம்மது ஜனங்களுக்கு "நீதியானவர் மற்றும் ஆட்சியாளர்" முழு உலகத்திற்கும் இருப்பார் என்று கூறினார்.

3. அப்படியானால் மேசியா என்பவர் ஏன் முஹம்மது அல்ல என்று கேட்க வேண்டும்.

4. எல்லா சினிமாவிலும்கூட ஹீரோவைத் தவிர அனைவரும் இறந்துவிடுகிறார்கள். கடைசியில் நல்லவர்களைக் காப்பாற்றி வெற்றியைத் தருபவர். மேற்குறிப்பிட்ட ஹதீஸின்படி, வெற்றியைத் தருபவர் இயேசு கிறிஸ்து, இறந்த நபி முஹம்மது அல்ல!

5. கிறிஸ்தவர்களாகிய நாம் தர்க்கரீதியானதை(logic) மற்றும் சரியானதைச் செய்கிறோம்

என்பதே இதன் பொருளாகும். யாராவது உங்களிடம் சொன்னால், “நாம் பின்பற்றுவதற்குத் தேர்வுசெய்ய இரண்டு நபர்கள் உள்ளனர். ஒருவர் இறந்துவிட்டார், மற்றவர் உயிருடன் இருக்கிறார். நாம் யார் பின்னால் செல்ல வேண்டும்?”

6. இயேசு "நீதிமான் மற்றும் ஆட்சியாளர்-நியாதிபதி" ஆகப் போகிறார் என்றால், இது இயேசுவைக் கடவுள் என்று ஆக்கவில்லையா? குர்ஆன் 6:57 இல் உள்ளதைப் போல, எந்த மனிதனும் நல்லவன் அல்ல, கடவுளைத் தவிர:

قُلْ إِنِّى عَلَىٰ بَيِّنَةٍ مِّن رَّبِّى وَكَذَّبْتُم بِهِۦ ۚ مَا عِندِى مَا تَسْتَعْجِلُونَ بِهِۦٓ ۚ إِنِ ٱلْحُكْمُ إِلَّا لِلَّهِ ۖ يَقُصُّ ٱلْحَقَّ ۖ وَهُوَ خَيْرُ ٱلْفَٰصِلِينَ

6:57 பின்னும் நீர் கூறும்; "என்னைப் பொறுத்தவரை, நான் என் இறைவனை அறிந்தவன், ஆனால் என்னிடம் இருப்பதை நீங்கள் நிராகரித்தீர்கள். தண்டனைக்காக அவசரப்படுவதை நீங்கள் பார்ப்பது என் அதிகாரத்தில் இல்லை. அல்லாஹ்வின் கையில் கட்டளைகள் மட்டுமே உள்ளன: அவர் சத்தியத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்கிறார், மேலும் அவர் தீர்ப்பளிப்பவர்களில் சிறந்தவர்.”

7. நாம் பார்க்கிறபடி, நீதிபதிகளில் சிறந்தவர் அல்லாஹ், ஏனென்றால் அவர் ஒருவரே சத்தியத்தைக் கொண்டிருக்கிறார். உண்மையைக் கொண்டிருப்பதென்றால், அவர் கண்ணுக்குத் தெரியாததை அறிந்தவர் என்று அர்த்தம். சரியான நீதிபதியாக இருப்பதற்கு, ஒவ்வொருவரின் பாவங்களையும், பொய்களையும், உண்மையையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்! இது இயேசுவை குர்ஆன் 3:49 இல் காணாத மற்றும் அறியப்படாததை அறிந்த ஒரு நபராக ஆக்குகிறது:

3:49 இஸ்ராயீலின் சந்ததியனருக்குத் தூதராகவும் (அவரை ஆக்குவான்; இவ்வாறு அவர் ஆகியதும் இஸ்ரவேலர்களிடம் அவர்;) "நான் உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் நிச்சயமாக வந்துள்ளேன்;. நான் உங்களுக்காக களிமண்ணால் ஒரு பறவையின் உருவத்தை உண்டாக்கி நான் அதில் ஊதுவேன்;. அது அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு (உயிருடைய) பறவையாகிவிடும். பிறவிக் குருடர்களையும், வெண் குஷ்டரோகிகளையும் குணப்படுத்துவேன்;. அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு இறந்தோரையும் உயிர்ப்பிப்பேன்;. நீங்கள் உண்பவற்றையும், நீங்கள் உங்கள் வீடுகளில் சேகரம் செய்து வைப்பவற்றையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். நீங்கள் முஃமின்கள் (நம்பிக்கையாளர்) ஆக இருந்தால் நிச்சயமாக இவற்றில் உங்களுக்குத் திடமான அத்தாட்சி இருக்கிறது" (என்று கூறினார்).

8. நீங்கள் பார்க்கிறபடி, நாம் என்ன சாப்பிடுகிறோம், நம் வீடுகளில் எதைச் சேமித்து வைக்கிறோம் என்பதை இயேசு அறிந்திருக்கிறார்.

இதன் பொருள் இயேசு:
• நீதியுள்ளவர் மற்றும் ஆட்சிசெய்பவர்
• எல்லா இடங்களிலும் (ஒரே நேரத்தில்) இருப்பவர்;
• இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு நபருடனும்;

• அவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது. நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும்;
• உயிருள்ள ஜீவனை உருவாக்கும் அவரது திறனை மறந்துவிடாதீர்கள்!
• பிறவி குருடனுக்கு ஒரு வார்த்தை சொல்லி கண்களையும் (அவற்றை புதிதாக உருவாக்கியது) பார்வையையும் கொடுத்தார்!

• இப்போது வேடிக்கை என்னவென்றால், குரானில் உள்ள இயேசு, அல்லாஹ்வை நம்ப வைப்பதற்காக இந்த அற்புதங்களைச் செய்தார்! ஆனால் அவைகளே நம்மை அல்லாஹ்வை நம்பவைக்காமல் இயேசுவை நம்ப வைக்கின்றன!

• குர்ஆன் 22:6 இல் ஆவணப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய நிகழ்வுகளை இறைவனால் மட்டுமே சாதிக்க முடியும். ஒரு இறைவனுக்கே உரித்தானவைகளை மனிதனுக்குச் கொடுப்பதால் அல்லாஹ் முட்டாள்.

ذَٰلِكَ بِأَنَّ ٱللَّهَ هُوَ ٱلْحَقُّ وَأَنَّهُۥ يُحْىِ ٱلْمَوْتَىٰ وَأَنَّهُۥ عَلَىٰ كُلِّ شَىْءٍ قَدِيرٌ

22:6 இது ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் அவனே உண்மையானவன் - (நிலையானவன்) நிச்சயமாக அவனே மரித்தோரை உயிர்ப்பிக்கின்றான் - இன்னும், நிச்சயமாக அவன்தான் எல்லாப் பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன் என்பதனால்.

குர்ஆன் 7:188 இல், முஹம்மது ஒரு மனிதனாக தன்னைப் பற்றி என்ன சொல்ல வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான்.

7:188 (நபியே!) நீர் கூறும்; "அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன்; மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன்; (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது - நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நான்

அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை."

• இங்கே முஹம்மது தன்னைப் பற்றிய உண்மையான உருவத்தை நமக்குத் தருகிறார். பாருங்கள்! அவர் கூறுகிறார், "நான் காணாததை அறிந்திருந்தால், என் சொந்த நலனுக்காக அதை நான் சேமித்திருப்பேன்!". “நான் உங்களுக்கு உதவுவேன்” என்று அவர் கூறவில்லை. அவர் முதலில் நினைத்தது தன்னைப் பற்றி!

• கண்ணுக்குத் தெரியாததைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெளிவாகச் சொல்லி அதற்கு ஆதாரம் கொடுத்திருக்கிறார். நாம் என்ன சாப்பிடுகிறோம், எதையெல்லாம் மறைத்து வைப்போம் என்பதை ஈஸா (இயேசு) நமக்குச் சொல்ல முடியும் என்று அல்லாவின் குர்ஆன் கூறுகிறது, ஆனால் முஹம்மதுவால் ஏன் சொல்ல முடியாது என்று நாம் கேட்க வேண்டும். முஹம்மது மிச்சம்-மீதியாக இருந்தாரா, அல்லாஹ் அவரை ஒரு நொடி கூட நபி போல் காட்ட விரும்பவில்லையா? எனவே முஹம்மது மற்றும் அவரது கடவுளின் இயலாமையை நிரூபிக்கும் மற்றொரு விஷயத்தை நாம் கற்றுக்கொள்கிறோம. இயேசுவின் அற்புதங்கள் அவருடைய இறைவனிடமிருந்து வந்ததாகக் கூறுவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. அதே சமயம், குரான் 17:59 கூறுவது போல், முஹம்மதுவை அல்லாஹ் ஒரு அற்புதத்தாலும் ஆதரிக்க வில்லை.

17:59 முந்தைய தலைமுறையினர் நாம் அனுப்பிய அற்புதங்களை உண்மையான அற்புதங்கள் என்று நம்ப மறுத்தபடியால் நாம் அற்புதங்கள் அனுப்புவதை தவிர்க்கிறோம்.

• முஹம்மதுக்கு எந்த அற்புதங்களையும் வழங்குவதைத் தவிர்த்துக் கொண்டதாக அல்லாஹ் தெளிவாகக் கூறினான். இது முஹம்மது கண்டுபிடித்த மேக்கப் (சித்தரிப்பு) வசனம்; எந்த அற்புதத்தையும் செய்யாமல் இருப்பதற்கு அது அவருக்கு சரியான காரணத்தை அளித்தது. அதற்கு மேல், இயேசு(ஈஸா) அல்லது மோசேயின்(மூஸா) அற்புதங்களை நிராகரித்த முன்னாள் தலைமுறை யார்? எல்லா கிறிஸ்தவர்களும், அன்றும் இன்றும், அற்புதங்களை நம்புகிறார்கள், அவைகளை ஒருபோதும் நிராகரித்ததில்லை. முஹம்மதுவின் குற்றச்சாட்டுகள் தவறானவை மற்றும் பொய்யானவை. இயேசு மற்றும் மோசே போன்ற முந்தைய தீர்க்கதரிசிகள் செய்ததைப் போலவே, அற்புதங்களை தன்னிடம் கேட்கும் அரேபியர்களைத் தவிர்க்க முயன்றார். இந்த பல கோரிக்கைகளுக்கு, அவர் மக்களை எதிர்கொள்ள திராணியற்றவராக உணர்ந்தார். பின்னர், இந்த தலைப்பைப் பற்றிய கூடுதல் விவரங்களுக்குள்ளே செல்வோம்:

• கடவுள் மட்டுமே செய்ய வேண்டியதை அல்லது செய்யக்கூடியதை நிறைவேற்றுவதற்கு இயேசுவுக்கு தெய்வீகத் திறன்களைக் கொடுப்பதன் மூலம் அவர் இறைவன் என்பதை நமக்கு நிரூபிக்க அல்லாஹ் விரும்பினான்!

• இந்த அற்புதங்கள் கிறிஸ்தவர்களை இயேசுவை நம்ப வைக்கும் என்றும், இயேசு எல்லா மனிதர்களுக்கும் மேலானவர் என்றும், அவர்கள் இயேசுவை இறைவனாக்குவார்கள் என்றும் அல்லாஹ் அறிந்திருந்தானா?

• எனது கருத்தை விளக்குவதற்கு, இயேசு யாரையும் மரணத்திலிருந்து எழுப்ப முடியாவிட்டால், ஒரு பறவையைப் படைக்க, பார்வையற்றவர்களுக்கு கண் கொடுக்க, தொழுநோயாளிகளைக் குணப்படுத்த, நம் வீடுகளில் நாம் மறைத்து வைத்திருப்பதைச் சொல்ல, நாம் சாப்பிடுவதைச் சொல்ல இயலாவிட்டால்; அவர் ஒரு கன்னிப் பெண்ணின் மகனாக இல்லாவிட்டால், இன்னும் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக உயிருடன் இல்லாவிட்டால்; முஹம்மது சொன்னது போல் ஷைத்தானால் அவரைத் தொட முடியாவிட்டால்; குரான் 19:19 கூறுவது போல் அவர் பரிசுத்தராக இல்லாவிட்டால்; அவர் நியாயாதிபதியாகவும், காலத்தின் முடிவில் உலகத்தை ஆளுபவராகவும் இல்லை என்றால், அவரை என் இறைவனாக ஆக்குவதற்கு எனக்கு எந்த காரணமும் இல்லை! எனவே இஸ்லாமிய அற்புதங்களின் தர்க்கத்திலிருந்து, அல்லாஹ் நம்மை இயேசுவை வணங்கச் செய்தான். அல்லாஹ் இயேசுவுக்கு நேர்வழிநடத்த சக்தியைக் கொடுத்தானா அல்லது தவறாக வழிநடத்த சக்தியைக் கொடுத்தானா?!

• இப்போது நாம் குரான் 3:49 ஐப் பார்த்தால், இயேசு கூறினார்: "நான் ஒரு பறவையின் உருவத்தை உருவாக்குகிறேன், நான் அதை சுவாசிக்கிறேன், அது உயிருடன் மாறும்!"

• இது மற்றொரு கேள்விக்கு வழிவகுக்கிறது. இது அல்லாஹ்வின் அனுமதியின் பேரில் இருந்தால், "**நான் படைக்கிறேன்**" என்று ஏன் வசனம் கூறுகிறது? "அல்லாஹ் இல்லாமை" என்பது அவரது செயலுக்கு ஒரு அங்கீகாரம் என்று அர்த்தம். வாழ்க்கையில் நாம் செய்யும் எந்தவொரு செயலும் அல்லாஹ்வின் அனுமதி அல்லது அனுமதிக்கு எதிராக இருக்கலாம். உதாரணமாக, ஒரு முஸ்லீம் தனது மனைவியை கற்பழிக்க முடியும், ஏனெனில் அது அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (அல்லாஹ்வின் அனுமதியால்). அதற்கான அனுமதியைப் பெறுவதால், ஆண் பலவீனமாக இருந்தாலும் உடல் ரீதியாக அதைச் செய்யலாம் என்று அர்த்தமல்ல. சில முஸ்லீம் நாடுகளில், ஒரு முஸ்லிம் பெண் பத்து ஆண்களை அடிக்க முடியும்! நாம் குர்ஆன் 55:33 க்கு செல்வோம்:

ஜின்கள் மற்றும் மனிதர்களின் கூட்டமே, நீங்கள் வானங்கள் மற்றும் பூமியின் எல்லையைக் கடந்து செல்ல முடிந்தால், கடந்து செல்லுங்கள்! அதிகாரம் இல்லாமல் நீங்கள் கடந்து செல்ல மாட்டீர்கள்.

• நீங்கள் பார்ப்பது போல், அல்லாஹ் தனது அனுமதியின்றி பூமியின் மண்டலத்தை விட்டு வெளியேறும்படி சவால் விடுகிறான். ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் பூமியின் மண்டலத்திற்கு

வெளியே சென்றார்களே! இந்த வசனத்தின்படி, இது அல்லாஹ்வின் அனுமதியின்றி செய்யப்பட்டது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் பரலோகத்திற்கு ஏறியபோது அது உண்மையாக இருக்கிறது.

• என் கருத்து என்னவெனில்: இயேசுவுக்கு ஏன் தெய்வீக திறன்கள் உள்ளன என்பதை விளக்க முஸ்லிம்கள் அந்த வார்த்தையை (அனுமதி) பயன்படுத்த முயற்சி செய்யலாம். உதாரணமாக, அவர்கள் உங்களிடம், “இயேசுவின் காலத்தில், மருத்துவம் மிகவும் முன்னேறியிருந்தது! இதனால்தான் இயேசுவின் அற்புதங்கள் எல்லாம் குணமடைவதைப் பற்றியவையாயிருந்தன!”

• முஹம்மதுவுக்கு 600 ஆண்டுகளுக்கு முன்பே இயேசுவின் சாதனைகள் நடந்தன என்பது நம் அனைவருக்கும் தெரியும். அறிவியல் இப்போது முன்னோக்கி செல்கிறது, பின்னோக்கி அல்ல;

• இன்று, கிறிஸ்து 2,000 ஆண்டுகளுக்குப் பிறகும், மனித குலத்தின் அறிவியல் அறிவு வளர்ந்தபின்பும், இயேசு செய்த அற்புத செயல்களில் ஒன்றையாவது செய்ய முடியுமா?!

• நினைவில் கொள்ளுங்கள், இயேசு ஒருபோதும் மருந்து கொடுக்கவில்லை, அவர் கட்டளையிட்டார்! எனவே இந்த வித்தியாசம் மிகவும் பெரியது!

குரானின் கவிதை நடை

ஒரு கவிதை நடையை உருவாக்க, நாங்கள் பொய்களை மிகைப்படுத்துகிறோம்!

குர்ஆன் 97:3 அத்தியாயத்திற்கு செல்வோம்

> نْ أَلْفِ شَهْرٍ
>
> 97:3 கண்ணியமிக்க (அல்-காதர் இரவு) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக மேலானதாகும்.

இந்த வசனத்தை கவனமாக படிப்போம். இந்த வசனம் குர்ஆனின் முதல் வசனத்தை அல்லாஹ் இறக்கிய இரவாக இருக்க வேண்டும். இந்த கண்ணியமிக்க இரவு (சக்தியின் இரவு) பற்றிய சில கேள்விகளுக்கு தீர்வு காண்போம்:

1. ஏன் இந்த இரவு, அல்லது இன்னும் குறிப்பாக இந்த இரவில் சொல்லப்படும் பிரார்த்தனை 1,000 மாதங்களை விட சிறந்தது?

நீங்கள் அரபு மொழியில் பேசினால், வசனத்தை கவிதையாக ஒலிக்க முஹம்மது வார்த்தைகளை இணைக்க முயற்சிக்கிறார். சற்றே பார்க்கலாம். இந்த வசனத்தில் உள்ள நான்கு சொற்றொடர்கள் இந்த வார்த்தைகளுடன் முடிவடைகின்றன:

قدر شهر أمر فجر

(கதேர், ஷகேர், அம்ர், ஃபெஜெர்.)

முஹம்மதுவின் குரான் உண்மையில் அர்த்தத்தைப் பற்றி கவலைப்படவில்லை. அவர் வெறுமனே ஒருவருக்கொருவர் நன்றாகப் போகும் வார்த்தைகளை ராப்பிங் செய்கிறார். இது எல்லா வார்த்தைகளுக்கும் தெளிவாக உள்ளது மற்றும் நீங்கள் முயற்சிக்கும் எந்த விதத்திலும் அவை எந்த அர்த்தத்தையும் தராது.

ஒரு இரவு பிரார்த்தனை = 1,000 மாதங்கள் =100/12= 83.33 = 83 ஆண்டுகள் மற்றும் 4

மாதங்கள் இரவுகளில் பிரார்த்தனை!

2. அது நியாயமா? 83 வருடங்களாக பிரார்த்தனை செய்யும் ஒருவரைவிட நான் ஒரு இரவில் பிரார்த்தனை செய்வது சிறந்ததா? அல்-ஜலாலைன் தஃப்சீர் (விளக்கம்), தொகுதி. 1, ப. 815, இஸ்லாமிய ஆண்டு 864, குரான் 97:3:

تفسير تفسير الجلالين/ المحلي و السيوطي (ت المحلي 864 هـ) { لَيْلَةُ ٱلْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ } ليس فيها ليلة القدر فالعمل الصالح فيها خير منه في ألف شهر ليست فيها

இந்த இரவின் செயல்களும், இந்த இரவின் நல்ல வேலையும் மற்ற இரவுகளை விட ஆயிரம் இரவுகளை விட சிறந்ததாகும்.

குர்ஆன் 2:82:

وَٱلَّذِينَ ءَامَنُوا۟ وَعَمِلُوا۟ ٱلصَّٰلِحَٰتِ أُو۟لَٰٓئِكَ أَصْحَٰبُ ٱلْجَنَّةِ ۖ هُمْ فِيهَا خَٰلِدُونَ

2:82 எவர் நம்பிக்கை கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் சுவர்க்கவாசிகள்; அவர்கள் அங்கு என்றென்றும் இருப்பார்கள்.
மேலும், எவர்கள் ஈமான் கொண்டார்களோ, அவர்களுக்கு நன்மை கிடைத்தது; அல்லாஹ்வின் சொர்க்கம், அவர்களுக்குக் கீழே ஆறுகள் ஓடும்

3. நம்மிடம் இரண்டு முஸ்லிம்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவர்களில் ஒருவர் “கண்ணியமிக்க இரவில்” ஒரு இரவு பிரார்த்தனை செய்கிறார். மற்றொருவர் 83 வருடங்கள் பிரார்த்தனை செய்தும் அந்த குறிப்பிட்ட இரவில் ஜெபிக்காத மற்ற தனிமனிதரை விட அவர் சிறந்தவராக இருக்கப் போகிறாரா? இருவரும் ஒரே சொர்க்கத்திற்கு வந்துவிடுவார்களா? அவர்களுக்கு அதே வெகுமதி இருந்தால், அந்த இரவு (கண்ணியமிக்க இரவு) ஏன் சிறந்தது? முதல் நபருக்கு 1,000 மடங்கு அதிகமாக பரிசு வழங்கப்படுமா?

இருவருக்கும் ஒரே பரிசு என்றால், “கண்ணியமிக்க இரவு” அர்த்தமற்றது மற்றும் முக்கியமற்றது. இது அடிப்படையிலே ஒரு ராப் பாடல் வரிகள்! நாம் பார்த்தது போல், குர்ஆன் அல்லாஹ்வின் நீதியைப் பற்றி கூறுகிறது. எனவே, அவன் ஒரு இரவு பிரார்த்தனை செய்ததற்காக அல்லது கடந்த 83 ஆண்டுகளில் பிரார்த்தனை செய்ததற்காக கூடுதல் புள்ளிகளை வழங்கமாட்டான். இது ஒரு வகையான பைத்தியக்காரத்தனமாக இருக்கும். எப்படியிருந்தாலும், முஹம்மதுதான்

குர்ஆனை உருவாக்கினார் என்றும், மேலும் அந்த வசனத்திற்கு ஏற்றவாறு வார்த்தைகள் கொண்டு வரப்பட்டன என்றும் மீண்டும் நமக்கு நிரூபித்திருக்கிறார்.

அல்லாஹ் வெளிப்பாட்டைக் காக்கிறான்

அல்லாஹ் தனது வஹீயைப்(வெளிப்பாடு-revelation) பாதுகாத்தான் என்று வசனங்களில் கூறினான். இதை ஆராய்ந்து அது உண்மையா என்று பார்ப்போம். முஸ்லிம்கள் சட்ட விரோதமான உடலுறவுக்காக கல்லெறிந்து கொல்வதை நாம் அனைவரும் அறிவோம், ஆனால் நடத்தைக்கு அல்லாஹ்வின் கட்டளை எங்கே? நாம் ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. 8, புத்தகம் 82, ஹதீஸ் 816:

இப்னு அப்பாஸ் அறிவித்தது: "'உமர் கூறினார், 'இப்போதிலிருந்து நீண்ட காலத்திற்குப் பிறகு, புனித நூலில் உள்ள ரஜம் (கல்லெறிந்து கொல்லுதல்) வசனங்களை நாம் அடையாளம் காண முடியாது என்று மக்கள் கூறக்கூடும் என்று நான் பயப்படுகிறேன், எனவே அவர்கள் அல்லாஹ் வெளிப்படுத்தியதை விட்டுவிட்டு வழிதவறிச் செல்லலாம். எனவே, சட்டத்திற்குப் புறம்பாக உடலுறவு கொள்பவருக்கு, அவர் ஏற்கனவே திருமணமாகி, சாட்சிகள் அல்லது கர்ப்பம் அல்லது ஒப்புதல்-வாக்குமூலம் மூலம் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு ரஜம் தண்டனை நடைமுறையில் இருக்கும் என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்'. சுஃபியான் மேலும் கூறினார்: 'இந்த ஒப்பித்தலை நான் இவ்வாறு மனப்பாடம் செய்துள்ளேன்'. உமர் மேலும் கூறினார், 'நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ரஜமின் தண்டனையைப் பயன்படுத்தினார், எனவே நாங்கள் அவரைப் பின்பற்றுகிறோம்.'"

இந்த ஹதீஸிலிருந்து நாம் என்ன புரிந்துகொள்கிறோம்? இது மிகவும் வலுவான, அனைத்து முஸ்லிம்களாலும் அங்கீகரிக்கப்பட்ட ஹதீஸ், விதிவிலக்குகள் இல்லை. இதன் பொருள்:

1. குர்ஆனில் ஒரு அத்தியாயம் மற்றும் பல வசனங்கள் விடுபட்டுள்ளன.

2. முஸ்லிம்களால் குரானில் அவற்றை வைக்க முடியவில்லை!

3. குர்ஆனை மனப்பாடம் செய்து ஒப்பிக்கிறோம் என்று முஸ்லிம்கள் நம்மிடம் கூறுவது தவறான கூற்று. காணாமல் போனது அவர்களுக்குத் தெரிந்திருந்தால், உஸ்மான் (உத்மான்) கலீஃப் அவர்கள் அதைச் சேகரித்து உருவாக்கியபோது அதை ஏன் தனது குர்ஆனில் சேர்க்கவில்லை?

இது நம்மை இன்னொரு இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. அல்-ஜலாலைனின் விளக்கத்தில், தொகுதி. 1, ப. 338:

{ إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ }
وَإِنَّا لَهُ لَحَٰفِظُونَ } من التبديل والتحريف والزيادة والنقص {.

எந்த திருத்தங்களில் இருந்தும் அல்லது சேர்ப்பதில் இருந்தும் அல்லது நீக்குவதிலிருந்தும் இந்த புத்தகத்தைப் என்றும் எப்போதும் பாதுகாப்போம் என்று உறுதியளிக்கிறோம்!

நாம் பார்ப்பது போல், அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையல்ல, இது குர்ஆனை தவறான வாக்குறுதிகள் மற்றும் தவறான தீர்க்கதரிசனங்களின் புத்தகமாக மாற்றுகிறது.

“கண்ணியமிக்க இரவில்” முஹம்மதுக்கு முதல் முதலாக வெளிப்படுத்தப்பட்ட முதல் வசனத்தை நாம் எங்கே காணலாம்? குர்ஆன் காலத்தின்-வரிசைப்படி இல்லை. ஆனால் அது குர்ஆன் 96:1 முதல் வசனம் என்று முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

96:1 (யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக.

வசனங்களின் இடத்தை மாற்றும் நபர் ஊழல் (கெட்டுபோகச்) செய்கிறார் என்று அல்லாஹ் சொல்லவில்லையா? இதற்கான நிரூபணங்களை குர்ஆன் 4:46, 5:13 மற்றும் 5:41ல் காணலாம்.

வார்த்தைகளின் இருப்பிடத்தை அதன் இருப்பிடத்திலிருந்து மாற்றிய யூதர்கள், தங்கள் இறைவனுக்கு கீழ்ப்படிந்ததார்களா?

• வசனங்களின் இடத்தை மாற்றும் நபர் அதை கெட்டுப்போகும்படி செய்கிறார் என்பது தெளிவாகிறது.
குர்ஆன் உருவானபோது வசனங்களை எண்ணும் முறையோ அல்லது பெயரிடுவதோ இல்லை என்பதை மறந்துவிடாதீர்கள்.

• முடிவில்லாத உதாரணங்களில் இன்னும் ஒன்றைப் பார்ப்போம்;

குர்ஆன் 5:3: (தானகச்) செத்தது, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாததின் பெயர் அதன் மீது கூறப்பட்ட (அறுக்கப்பட்; ட)தும், கழுத்து நெறித்துச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், கீழே விழுந்து செத்ததும், கொம்பால் முட்டப் பட்டுச் செத்ததும், (கரடி, புலி

போன்ற) விலங்குகள் கடித்(துச் செத்)தவையும் உங்கள் மீது ஹராமாக்கப் பட்டிருக்கின்றன. (அனுமதிக்கப்பட்டவற்றில்) எதை நீங்கள் (உயிரோடு பார்த்து, முறைப்படி) அறுத்தீர்களோ அதைத் தவிர (அதை உண்ணலாம். அன்றியும் பிற வணக்கம் செய்வதற்காகச்) சின்னங்கள் வைக்கப் பெற்ற இடங்களில் அறுக்கப்பட்டவையும்;, அம்புகள் மூலம் நீங்கள் குறி கேட்பதும் (உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளன) - இவையாவும் (பெரும்) பாவங்களாகும்;. இன்றைய தினம் காஃபிர்கள் உங்களுடைய மார்க்கத்தை (அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டார்கள்;. எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள்; எனக்கே அஞ்சி நடப்பீர்களாக. **இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்**; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்;. இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்;. ஆனால் உங்களில் எவரேனும் பாவம் செய்யும் நாட்டமின்றி, பசிக் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப்பட்டு (மேலே கூறப்பட்ட விலக்கப்பட்டவற்றைப் புசித்து) விட்டால் (அது குற்றமாகாது). ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணை மிக்கோனாகவும் இருக்கின்றான்.

• வசனத்தின் இந்தப் பகுதியைப் பாருங்கள்; "இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி, எனது அருளை உங்கள் மீது நிறைவு செய்து, உங்களுக்காக இஸ்லாத்தை உங்கள் மார்க்கமாக தேர்ந்தெடுத்துள்ளேன்."

நீங்கள் பார்ப்பது போல், "இன்று இஸ்லாம் பூரணமாகிவிட்டது!" என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இங்கு நமக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது. “இன்று இஸ்லாம் பரிபூரணமாகிவிட்டது” என்றால், அதை அத்தியாயம் 5:3ல் எப்படி சொல்ல முடியும்? அந்த "இன்று”-க்குப் பிறகு எத்தனை வசனங்கள். அதற்குபிறகு குர்ஆனில் மேலும் அத்தியாயங்களோ அல்லது வசனங்களோ தேவையில்லை, ஆனால் நமக்குத் தெரிந்தபடி இதற்கு(5-அத்தியாயம்) பிறகு 109 க்கும் மேற்பட்ட அத்தியாயங்கள் உள்ளன! குர்ஆனின் முடிவில் இருந்து குர்ஆனின் தொடக்கத்தில் உள்ளது வரை யாரேனும் அவற்றைச் சேர்த்தார்களா அல்லது யாரேனும் அவர்களை நகர்த்திச் சென்றார்களா? மேலும், தடைசெய்யப்பட்ட உணவுக்கும், குரானின் முழுமைக்கும் என்ன சம்பந்தம்? குரான், நிறைய போதனைகள் விடுபட்டுள்ள ஒரு வெற்றுப் புத்தகம். குரான் முழுவதையும் ஆய்வு செய்தால், முஸ்லிம்கள் நடைமுறைப்படுத்துவதில் 90% அதில் இல்லை! உதாரணமாக, முழு குர்ஆனிலும், கடத்தல் மற்றும் கற்பழிப்புக்கு என்ன தண்டனை என்று முஸ்லிம்களுக்கு தெரிவிக்க அல்லாஹ் மறந்துவிட்டானா? அதற்கு மேல், குரானில் ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் லெஸ்பியன்களுக்கான தண்டனை, முஹம்மதுவின் காலத்தில் முஹம்மது உட்பட இன்றுவரை முஸ்லிம்கள் கடைப்பிடித்தவற்றிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. குரான் 4:15-16ஐப் பார்த்தால், ஓரினச்சேர்க்கைக்கு மரண தண்டனை அல்ல. ஆனால் மாறாக, இன்று முஸ்லிம்கள் நடைமுறையில் இருப்பது முஹம்மதுவின் போதனையான மரணத்தையே தவிர, அல்லாஹ்

சொன்னது அல்ல, பெண்களின் விஷயத்தில் சாகும் வரை சிறையில் அடைத்து, அவர்கள் மனம் திரும்பும் வரை ஆண்களின் விஷயத்தில் அவமானப்படுத்துவதும் இன்று இல்லை.

குர்ஆன் 11:114 வசனத்தில் உள்ளதைப் போல, முஸ்லிம்களால் கடைபிடிக்க இயலாத பல விஷயங்களைக் கூட குர்ஆன் கற்றுத் தருகிறது.

மேலும் பகலின் இரு முனைகளிலும் இரவின் வருகையிலும் சாதாரண தொழுகைகளை செய்து காட்டுங்கள்.

ஜகாத் (Zakat) என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன என்பதை குர்ஆன் ஒருபோதும் விளக்கவில்லை, இது முஸ்லிம்கள் வேலை செய்து சம்பாதிக்கும் பணத்திலோ அல்லது கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களிடமிருந்து திருடுவதன் மூலமோஅவர்கள் செலுத்த வேண்டிய பணத்தின் ஒரு பகுதி.

திருடுவதில் தனக்கு எவ்வளவு பங்கு இருந்தது என்பதை முஹம்மது மறக்கவில்லை. அவருக்கும் அல்லாஹ்வுக்கும் ஐந்தில் ஒரு பங்கு கிடைத்தது, மீதமுள்ளவை அவருடன் சண்டையிட்டவர்களுக்கு சென்றன. குர்ஆன் ஒருபோதும் கூறவில்லை:

1. ஹஜ் செய்வது எப்படி?

2. எப்படி பிரார்த்தனை வேண்டும்?

3. கழுவுதல் (உளூ) செய்வது எப்படி என்று குர்ஆனில் எங்கே காணலாம்?

4. விரதம் இருப்பது எப்படி?

5. எப்போது விரதம் இருக்க வேண்டும்?

6. விரதத்தை எப்போது நிறுத்த வேண்டும்?

7. ஜகாத் எவ்வளவு கொடுக்க வேண்டும்? (முஹம்மது-அரசுக்கு பணம்)

மறுபுறம், எந்த வசனங்கள் **ரத்து** செய்யப்பட்டவை? குர்ஆனில் இரண்டும் சொல்லப்பட்டிருக்கும்போது எவற்றைப் பயிற்சி செய்ய வேண்டும், எவற்றைப் பயிற்சி செய்யக் கூடாது என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது? அதன் குழப்பத்திற்கும் தவறான புரிதலுக்கும் இதுவும் ஒரு காரணம்.

குர்ஆன் 8:41 போரில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் எவ்வாறு பிரிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

நீங்கள் எதைப் போரில் கொள்ளையடித்தாலும் (காஃபிர்களிடமிருந்து திருடப்பட்ட பொருட்கள் - நம்பிக்கையற்றவர்கள்), அதில் ஐந்தில் ஒன்று அல்லாஹ்வுக்காகவும், தூதருக்காகவும், மற்றவை ஏழைகள் மற்றும் அனாதைகளுக்காக (கொலையால் இறந்தவர்களின்) விட்டுச்செல்லும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மற்றும் முஹம்மது) மற்றும் தேவையுடையவர்களுக்கானது.

குரான் 3:161 இல் உள்ளபடி திருடப்பட்ட சில சிவப்பு உள்ளாடைகளைத் திருடியதாக முஹம்மது மீது முஸ்லிம்கள் குற்றம் சாட்டுவதை பின்னர் நாம் காண்கிறோம்.

> وَمَا كَانَ لِنَبِىٍّ أَن يَغُلَّ ۚ وَمَن يَغْلُلْ يَأْتِ بِمَا غَلَّ يَوْمَ ٱلْقِيَٰمَةِ ۚ ثُمَّ تُوَفَّىٰ كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ
>
> 3:161 மேலும் (கொள்ளையைப் பிரிப்பதில்) ஏமாற்றுவது ஒரு நபிக்கு உகந்தது அல்ல. மேலும் எவர் ஏமாற்றுகிறாரோ அவர் ஏமாற்றியதை (நேர்மையற்ற முறையில் சம்பாதித்த) மறுமை நாளில் கொண்டு வருவார். பின்னர் ஒவ்வொரு ஆத்மாவும் அது சம்பாதித்ததைக் கொடுக்கும், மேலும் அவர்கள் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்.

தஃப்சிர் அல்-ஜலாலைன், சூரா அல்-இம்ரான், குர்ஆனின் இந்த வசனம் 3:161-ன் விளக்கம்:

முஸ்லீம்கள் கொள்ளைப் பொருளைப் பிரிக்கத் தொடங்கியபோது, பத்ர் நாளில் சில சிவப்பு வெல்வெட் துணி காணாமல் போனது. “ஒருவேளை நபிகள் நாயகம் அதை தனக்காக மறைத்து வைத்திருக்கலாம்” என்ற சில முஸ்லிம்கள் சொல்லத் தொடங்கினர், . "நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும், திருடுவது நபிக்கு இல்லை" என்று பின்பு வசனம் வெளிப்படுத்தப்பட்டது.

கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் துணிகளைத் திருடியதாகக் குற்றம் சாட்டுவதை கற்பனை செய்து பாருங்கள்! நிச்சயமாக இது சாத்தியமற்றது. இந்த நடத்தை ஒரு குற்றவாளி கும்பலிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது, இறைவனின் மனிதர்களிடமிருந்து அல்ல. ஆனால் அதே சமயம், முஹம்மது யார், அவருடன் தொடர்புடைய மனிதர்கள் யார் என்பதை இது நமக்குச் சொல்கிறது!

ஒரு சவால்

இந்த குர்ஆனைப் போன்று உருவாக்க மனித இனத்திற்கும் ஜின்களுக்கும் ஒரு சவால்

குர்ஆன் 17:88: "இந்த குர்ஆனை போன்ற ஒன்றைக் கொண்டுவருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து (முயன்று), அவர்களில் ஒரு சிலர் சிலருக்கு உதவிபுரிபவர்களாக இருந்தாலும், இது போன்ற ஒன்றை அவர்கள் கொண்டு வரமுடியாது" என்று (நபியே) நீர் கூறும்.

• ஜின்கள் மற்றும் மனிதர்கள் இருவருக்கும் சவால் மிகவும் தெளிவாக உள்ளது. அவர்களால் இந்த குர்ஆனைப் போல் உருவாக்க முடியாது.

• குர்ஆனை போன்று ஒத்ததையோ அல்லது சிறந்ததாக இருக்கக்கூடிய ஏதேனும் ஒன்றை நாம் கண்டால், அல்லாஹ் தனது சவாலை இழந்துவிட்டான் என்று நினைக்கிறேன்.

முஹம்மதுவின் தோழனான உமர் மற்றும் முஹம்மதுவுக்குப் பிறகு நான்கு இஸ்லாமிய கலீஃப்களுக்கு ஒன்று இருந்து வரும் ஹதீஸில் (தி புக் ஆஃப் 'ஓல்-இத்'கான் ஃபீ 'ஓலும் அல்-குர்ஆன், தொகுதி. 1, ப. 137), உமர் கூறினார்:

الإتقان في علوم القرآن
الجزء الأول [ص: 137] النوع العاشر
وأخرج البخاري وغيره ، عن أنس قال : قال عمر : وافقت ربي في ثلاث : قلت : يا رسول الله لو اتخذنا من مقام إبراهيم مصلى ؟ فنزلت : واتخذوا من مقام إبراهيم مصلى [ص: 138] [البقرة : 125] وقلت : يا رسول الله ، إن نساءك يدخل عليهن البر والفاجر ، فلو أمرتهن أن يحتجبن ؟ فنزلت آية الحجاب . واجتمع على رسول الله صلى الله عليه وسلم - نساؤه في الغيرة ، فقلت لهن : عسى ربه إن طلقكن أن يبدله أزواجا خيرا منكن [التحريم : 5] فنزلت كذلك

அன்னாஸ் அவர்களால் அறிவிக்கப்பட்டது:

உமர் பின் அல்-கத்தாப் கூறினார்:
“மிகைத்தவன் (அல்லாஹ்) என்னுடன் மூன்று விஷயங்களில் உடன்பட்டான்”:

(முதலில்), நான், 'அல்லாஹ்வின் தூதரே, ஆபிரகாம் தொழுதுகொள்ளும் இடத்தை (அவரது) வழிபாட்டுத் தலமாக நீங்கள் எடுத்துக்கொள்ள நான் விரும்புகிறேன்’ என்று சொன்னேன். அதன்பின் தெய்வீக வெளிப்பாடு வந்தது: (பக். 137) (குர்ஆன் 2:125) ‘மேலும் நீங்கள் (முஸ்லிம்கள்) ஆபிரகாமின் இடத்தை பிரார்த்தனை செய்யும் இடமாக எடுத்துக் கொள்ளுங்கள்.'

(இரண்டாவது), மேலும் நான் அல்லாஹ்வின் நபியிடன், 'நல்லவர்களும் கெட்டவர்களும் உங்கள் மனைவிகளுடன் பேசுகிறார்கள், எனவே அவர்கள் தங்களுக்குத் திரையிடுமாறு (ஹிஜாப்) கட்டளையிடுங்கள்!' என்றேன். எனவே பெண்களின் திரைச்சீலை பற்றிய வசனத்தை அல்லாஹ் இறக்கி வைத்தான் (குர்ஆன் 24:31).

(மூன்றாவது), நபியின் மனைவிகள் நபிக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கினர், நான் அந்த மனைவிகளிடம், 'அவருடைய (நபியின்) இறைவன் உங்களை, (அனைத்து மனைவிகளையும்) விவாகரத்து செய்து, உங்களை விட சிறந்த மனைவிகளை பதிலாக மாற்றினால். ‘என்று சொன்னேன். எனவே நான் கூறியதுபோலவே அப்படியே (குர்ஆன் 66:5) வசனம் வெளிப்படுத்தலாக வந்தது.

இதே கதையை ஸஹீஹ் அல் புகாரியில் (புத்தகம் 8, ஹதீஸ் 395) காணலாம்.

1. அல்லாஹ்வின் சவால் போலியானது என்று பார்க்கிறோம்! எப்படி அவர் மனித இனத்திடமும் ஜின் இனத்திடமும் குர்ஆனை உருவாக்கச் சொல்ல முடியும், ஆனால் அவர் உமரின் வார்த்தைகளை அப்படியே காப்பி (copy) அடிக்கிறார்.

2. இந்த ஹதீஸ் அல்லாஹ் உமரை மூன்று முறை காப்பி (நகல்) எடுப்பதைக் காட்டுகிறது. அல்லாஹ் எத்தனை வசனங்களை மற்றவர்களிடமிருந்து நகல் எடுத்தான் என்று எனக்கு விந்தையாக இருக்கிறது, ஆனால் அவற்றைப் பற்றி நமக்குத் தெரியாது!

3. உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: “எனவே (66:5) வசனம் **நான் கூறியது போலவே** இறக்கப்பட்டது.”

4. அங்கே அல்லாஹ் இல்லை, எந்த வெளிப்பாடும் இல்லை என்பது மிகவும் தெளிவாக உள்ளது. உமர் முஹம்மதுவிடம் பேசிக்கொண்டிருந்தார். முஹம்மது உமர் சொன்னதைக் கேட்டார், அதை விரும்பினார், பின்னர் உமரின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டார். நாம் பார்ப்பது

போல், அல்லாஹ் வழக்கம் போல் முஹம்மதுவின் சேவையில் இருக்கிறான்!

உமர் ஒரு "**மனிதனாக**" எப்படி குர்ஆனை உருவாக்கினார், மேலும் அல்லாஹ் கூட அவரிடமிருந்து காப்பி (நகல்) எடுத்தான் என்பதை நாம் காட்டினோம்; ஜின்கள் பற்றி என்ன? இந்த வசனம் ஜின்கள் மற்றும் மனிதர்கள் இருவருக்கும் சவால் விடும் வகையில் இருந்தது என்பதை நினைவில் கொள்க.

அடுத்ததாக **ஜின்களால்** உருவாக்கப்பட்ட குர்ஆன் ஏதேனும் உள்ளதா?

சல்மான் ருஷ்டியின் (Salman Rushdie) புத்தகத்தில் உள்ளதைப் போன்ற ஷைத்தானின் வசனங்கள் நம்மில் பலருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

ஷைத்தானிய வசனங்கள். அப்படியானால் ஷைத்தானின் வசனம் என்ன? குர்ஆன் 22:52ல் ஷைத்தானின் வசனங்கள் விவரிக்கப்பட்டுள்ளன:

(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பி வைத்த ஒவ்வொரு தூதரும், நபியும், (ஓதவோ, நன்மையையோ) நாடும்போது, அவர்களுடைய அந்த நாட்டத்தில் ஷைத்தான் குழப்பத்தை எறியாதிருந்ததில்லை எனினும் ஷைத்தான் எறிந்த குழப்பத்தை அல்லாஹ் நீக்கியப் பின்னர் அவன் தன்னுடைய வசனங்களை உறுதிப்படுத்துகிறான். அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவனாகவும், ஞானம் மிக்கோனாகவும் இருக்கின்றான்.

கதை என்னவென்று பார்க்க, இந்த வசனத்தின் (குர்ஆன் 22:52) விளக்கத்திற்குச் செல்வோம், இபின் காதிர், அச்சிடுதல் 1999, தொகுதி. 5, ப. 441:

وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ وَلَا نَبِيٍّ إِلَّا إِذَا تَمَنَّى أَلْقَى الشَّيْطَانُ فِي أُمْنِيَّتِهِ {52}
فَيَنْسَخُ اللَّهُ مَا يُلْقِي الشَّيْطَانُ ثُمَّ يُحْكِمُ اللَّهُ آيَاتِهِ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ
قَدْ ذَكَرَ كَثِيرٌ مِنْ الْمُفَسِّرِينَ هَهُنَا قِصَّةَ الْغَرَانِيق وَمَا كَانَ مِنْ رُجُوع كَثِير مِنْ الْمُهَاجِرَة
إِلَى أَرْض الْحَبَشَة ظَنًّا مِنْهُمْ أَنَّ مُشْرِكِي قُرَيْش قَدْ أَسْلَمُوا وَلَكِنَّهَا مِنْ طُرُق لَهَا
مُرْسَلَة وَلَمْ أَرَهَا مُسْنَدَة مِنْ وَجْه صَحِيح وَاَللَّه أَعْلَم قَالَ اِبْن أَبِي حَاتِم حَدَّثَنَا يُونُس
بْن حَبِيب حَدَّثَنَا أَبُو دَاوُد حَدَّثَنَا شُعْبَة عَنْ أَبِي بِشْر عَنْ سَعِيد بْن جُبَيْر قَالَ : قَرَأَ
رَسُول اللَّه صَلَّى اللَّه عَلَيْهِ وَسَلَّمَ بِمَكَّة النَّجْم فَلَمَّا بَلَغَ هَذَا الْمَوْضِع " أَفَرَأَيْتُمْ اللَّات
وَالْعُزَّى وَمَنَاة الثَّالِثَة الْأُخْرَى " قَالَ فَأَلْقَى الشَّيْطَان عَلَى لِسَانه : تِلْكَ الْغَرَانِيق الْعُلَى
وَإِنَّ شَفَاعَتهنَّ تُرْتَجَى قَالُوا مَا ذَكَرَ آلِهَتنَا بِخَيْرٍ قَبْل الْيَوْم فَسَجَدَ وَسَجَدُوا فَأَنْزَلَ اللَّه
عَزَّ وَجَلَّ هَذِهِ الْآيَة "

(Ibn Kathir - இப்னு கதிர்) கூறினார்: “அல்லாஹ்வின் மூன்று மகள்களின் (அல் கரானிக்) கதையை பல உரையாளர்கள் குறிப்பிடுகிறார்கள், மேலும் எத்தியோப்பியாவுக்குச் சென்ற பல

முஸ்லிம்கள் புறமதத்தவர்கள் இஸ்லாம் மதம் மாறியதாக நினைத்துக்கொண்டு திரும்பி வந்தார்கள் என்பது தெரிந்தது. அது இப்னு ஹபீபிலிருந்து இப்னு யூனிஸிடமிருந்து இப்னு ஹபீப்பால்ல் இருந்து விவரிக்கப்பட்டது: அதாவது அல்லாஹ்வின் தூதர், அவர் மெக்காவில் அல் நஜீமின் அத்தியாயத்தை ஓதும்போது, ஷைத்தான் தனது வாயில், 'நீங்கள் தேவதைகளைக் (பெண்-தெய்வங்களை) கருத்தில் கொண்டீர்களா (**அல்-லாத்** மற்றும் **அல்-உசா**, மற்றும் மூன்றாவத **மனாத்**)? {குர்ஆன் 53:19-20}), நிச்சயமாக அவர்களின் பரிந்துரை நம்பிக்கைக்குரியது,' பின்னர் நபி வணங்கினார், புறமதத்தினரும் அவருடன் வணங்கினர்."

இந்தக் கதையைப் பற்றி நான் அதிக விவரங்களுக்குச் செல்ல விரும்பவில்லை, ஏனென்றால் அது மிகவும் பிரபலமான ஒரு சம்பவம், எனவே நான் அதை சுருக்கமாகச் சொல்கிறேன்:

1. வசனம் விளக்குகிறபடி, ஷைத்தான் (ஜின்களில் இருந்து வந்தவன்) குர்ஆனின் ஒரு பகுதியை உருவாக்கியது..

2. அல்லாஹ்வே "ஷைத்தான் எறிந்ததை அவன் எடுத்துவிடுவான்" என்று அதை ஒப்புக்கொள்கிறான். எனவே முஸ்லிம்கள் இந்தக் கதையை ஏற்கமுடியாது என்று கூற முடியாது. அவர்கள் அப்படிச் சொன்னால், இந்த வசனம் பொய் என்றும் குர்ஆனை உண்மையான தகவலாகக் கருத முடியாது என்றும் அர்த்தம்.

3. முஹம்மது இந்த ஷைத்தானிய வசனங்களைச் சொன்னபோது, அவர் சில விஷயங்களை நமக்கு நிரூபித்தார்:

   1. ஷைத்தானின் குர்ஆன் அல்லாவின் குர்ஆனை விட தரம் குறைந்ததல்ல.
   2. அது ஷைத்தானிடமிருந்து வந்ததை முஹம்மது கவனிக்கவில்லை, ஏனென்றால் அதுவும் சரியாகவே இருந்தது!
   3. அரபு மொழியில் அதன் அர்த்தத்தில் மிகவும் தெளிவாக உள்ளது. அது பின்வருமாறு:

4. ஷைத்தான் குரானை உருவாக்கினான் என்று அர்த்தம். முஹம்மதுவின் கணிப்பின்மூலம் அது மிகவும் நன்றாக இருந்தது, அவர் அதை அல்லாஹ்வின் வார்த்தைகளாக அறிவித்தார். அது மோசமாக இருந்தது என்றால், முஹம்மது ஏன் அப்படிச் செய்தார்?

5. குர்ஆனை உருவாக்குமாறு அல்லாஹ் நமக்கு சவாலை விடுத்த போது, "இந்த குர்ஆனைப் போன்று உருவாக்குங்கள்" என்று கூறினார். குர்ஆனை உருவாக்குவதில் அல்லாஹ்வுக்கு சவால் விடுப்பவனாக நான் இருக்கப் போகிறேன் என்று வைத்துக் கொள்வோம். நான் இந்த குர்ஆனை உருவாக்கிய பிறகு, நான் முஹம்மதுவிடம் சென்று, நான் உருவாக்கிய குர்ஆன் மற்றும் ஷைத்தானால் உருவாக்கப்பட்ட குர்ஆன் ஆகியவற்றை கணிப்பிடும் வேலையைக்கு அவரை நியமிப்பேன். அந்த வேலைக்க முஹம்மது ஒரு நல்ல நீதிபதி அல்ல என்று முஸ்லிம்கள் கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன்!

6. எனவே, ஏற்கனவே முஹம்மதுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஷைத்தானால் எறியப்பட்டவையை உறுதிப்படுத்தும் வசனங்கள், அவரின் இறைவனிடமிருந்து வந்தவை என்று தான் நினைக்கும் அளவுக்கு “இவை சிறந்த வசனங்கள்" என்று நீதிபதி (முஹம்மது) கூறினார் என்று அர்த்தம்!

7. அல்லாஹ்வின் வசனம் மனித குலத்திற்கு சவால் விடுவதாகவும், ஜின்கள் அறிவற்றவர்கள் என்றும் சொல்லி, குர்ஆனை உருவாக்கியவரின் பலவீனத்தை இது அம்பலப்படுத்துகிறது. அவர் யாராக இருந்தாலும் சரி.

உமர் குர்ஆனை உருவாக்கினார், ஷைத்தானும் செய்தான் என்பதை நிரூபித்த பிறகு, நமக்கு ஒரு சிக்கல் உள்ளது. உண்மை என்னவென்றால், பிரச்சனை இருப்பது நம்மிடம் இல்லை - அது அல்லாஹ் தான்!

ஷைத்தானின் எறிதலுக்குப் பின் வரும் வசனத்தில் நாம் இதைப் படிக்கிறோம் (குர்ஆன் 22:53):

لِّيَجْعَلَ مَا يُلْقِي الشَّيْطَانُ فِتْنَةً لِّلَّذِينَ فِي قُلُوبِهِم مَّرَضٌ وَالْقَاسِيَةِ قُلُوبُهُمْ ۗ وَإِنَّ
الظَّالِمِينَ لَفِي شِقَاقٍ بَعِيدٍ

ஷைத்தான் (மனங்களில்) எறியும் குழப்பத்தை, தங்களுடைய இருதயங்களில் நோய் இருக்கிறதே அவர்களுக்கும், தங்களுடைய இருதயங்கள் கடினமாக இருக்கின்றனவே அவர்களுக்கும் ஒரு சோதனையாக ஆக்குவதற்கே (அவ்வாறு செய்தான்) அன்றியும், நிச்சயமாக. அநியாயம் செய்பவர்கள், நீண்ட (எதிர்ப்பிலும்) பகையிலும் தான் திடனாக இருக்கிறார்கள்.

இந்த வசனம் முஸ்லிம்களுக்கு பல பிரச்சனைகளை தருகிறது.

1. ஷைத்தான் கெட்டவன் அல்ல, ஆனால் அவன் அல்லாஹ் பயன்படுத்தும் ஒரு கருவி மற்றும் கீழ்ப்படியும் வேலைக்காரன்.

2. 52 ஆம் வசனத்தில் இந்த ஷைத்தானிய வசனங்களை வெளியே எடுப்பதாக ஏன் அல்லாஹ் சொன்னான்? ஆனால் இப்போது அல்லாஹ் வசனங்களை "விசாரணை நடத்த" (எதிர்ப்பினை தூண்ட) பயன்படுத்துவேன் என்று கூறுகிறான்? அவர் எதையும் வெளியே எடுக்கவில்லை என்று அர்த்தம், ஏனென்றால் அல்லாஹ் அதை எடுத்துக் கொண்டால், இனி இல்லாத ஒன்றினால் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள்!

3. முஹம்மது சொன்னதும், புறஜாதிகளுக்க பிடித்ததுமான ஷைத்தானின் வசனங்கள் எப்படி

சோதனையாக இருக்கும்? அவர்கள் ஏற்கனவே தொலைந்து போய் இந்த வசனங்களால் மாற்றமில்லாமல் இருந்தனர். அவர்கள் இன்னும் அந்நிய கடவுள்களை வணங்கினர்!

4. இந்த வசனங்கள் அநீதியுள்ளவர்களை (புறமதத்தாரை) எவ்வாறு பாதிக்கின்றன? இந்த வசனங்கள் குரானில் இருந்தால் படித்து ஏற்றுக்கொள்பவர்கள் முஸ்லிம்களே!

5. அல்லாஹ் ஏன் இப்படி ஒரு பொய்யை தன் நபியின் வாயில் நுழைய அனுமதித்தான்?!

6. அல்லாஹ்வுக்கு எதிர்காலம் தெரியும் என்றால், ஏன் இப்படி நடக்க அனுமதித்தார்?

7. வழிநடத்துபவர் பொய்களைப் பரப்புவதில் மகிழ்ச்சியாக இருக்கும்போது, வழிகாட்டுதலின் பயன் என்ன? அநியாயம் செய்பவர்களுக்கு மனித குலத்தின் கொந்தளிப்புகளை அதிகரிக்கவே இதை விரும்புவதாக அல்லாஹ் தெளிவாகக் கூறுகிறான்! இஸ்லாத்தை நிறுவுவதின் நோக்கம் அநியாயத்தை, நீதியை ஆக்குவது என்று நினைத்தேன், அப்படி இல்லையோ!

இந்தக் கதையில் மேலும் ஒரு சிக்கல் உள்ளது. நீங்கள் பார்ப்பது போல் விஷயங்கள் மிகவும் துர்நாற்றம் வீசுகின்றன. ஒருவன் பொய் சொல்லும் போது, முதல் பொய்யை மறைக்க இன்னும் ஆயிரம் பேர் சொல்ல வேண்டும். அல்லாஹ் பேசும் குர்ஆன் 15:42 க்கு செல்வோம்:

إِنَّ عِبَادِي لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطَانٌ إِلَّا مَنِ اتَّبَعَكَ مِنَ الْغَاوِينَ
(سورة الحجر Al-Hijr, 42)

"நிச்சயமாக என் அடியார்கள் மீது உனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை - உன்னைப் பின்பற்றி வழிகெட்டவர்களைத் தவிர" என்று கூறினான்.

நல்லவர்களை (முஸ்லிம்களை) ஷைத்தானால் கட்டுப்படுத்த முடியாது என்றும், இழந்தவர்களை (காஃபிர்களை) தான் (சாத்தான்) கட்டுப்படுத்தவும் ஏமாற்றவும் முடியும் என்பதை இந்த வசனம் தெளிவாகக் கூறுகிறது.

1. இப்படி இருக்கும்போது, சாத்தான் எப்படி முஹம்மதுவைக் கட்டுப்படுத்தி அவனது வாயில் சாத்தானிய வசனங்களை வீச முடியும்? ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 71, ஹதீஸ் 658-ல் இருந்து இந்த பகுதியைப் பார்க்கவும்:

'ஆயிஷா கூறினார்: "பானி ஜராய்க் கோத்திரத்தைச் சேர்ந்த லபித் பின் அல் அஸ்ஸாம் என்று அழைக்கப்படும் ஒரு மனிதர் இருக்கிறார், அவர் அல்லாஹ்வின் தூதர் மீது பில்லிசூனியம் செய்தார். நபி உண்மையில் செய்யாத விஷயங்களைச் தான் செய்ததாக கற்பனை

செய்துகொண்டார்.

2. கெட்டவர்கள் மீது மட்டுமே சாத்தானுக்கு அதிகாரம் இருக்கும்போது, முஹம்மதுவை சாத்தானால் முஸ்லீம்கள் சூனியம் என்று அழைக்கும் பெயரில் எவ்வாறு கட்டுப்படுத்த முடிந்தது? முஹம்மது கெட்டவரா?

<u>இதற்கு முஸ்லிம்கள் எவ்வாறு பதிலளிப்பார்கள்?</u>

1. யதார்த்தத்தை கற்பனையிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கும் திறனை இழக்கும் அளவுக்கு முஹம்மது மாயையில் வாழ்கிறார். அந்த நேரத்தில் அவர் தூங்கவே இல்லை!

2. முஹம்மது தனது 13 மனைவிகளுடன் உடலுறவு கொள்ளும் போது கூட, யதார்த்தத்தையும் கற்பனையையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. ஒரு உண்மையான வானவரை (ஜிப்ரீலை) பார்த்ததை எப்படி நம்புவது? ஒருவேளை அதுவும் கற்பனையா? அவரும் அப்படித்தான் கற்பனை செய்தாரா?

3. இந்த மனிதனுக்கு என்ன ஆனது? பில்லிசூனியம், சிறுவர்களுடன் உடலுறவு, தன் மகனின் மனைவியை எடுத்துக்கொண்டது, விஷம் குடித்து இறப்பது என உலகில் உள்ள எல்லா தவறுகளும் அவரால் நடந்தன. பட்டியல் முடிவற்றது!

இஸ்லாத்தை சுருக்கமாக பார்த்தால், முஸ்லிம்கள் புறமதத்தவர்களைத் தாக்குவதையும், உருவ வழிபாடுகளில் ஈடுபடுபவர்களையம் அல்லது பலதெய்வ வழிபாட்டைப் பின்பற்றுகிறவர்களையும் தாக்கவுதை விரும்புவதைக் காண்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், உருவ வழிபாட்டையும் பல தெய்வ வழிபாட்டையும் ஊக்குவிக்கும் மதங்களில் இஸ்லாமும் ஒன்று! (அடுத்த பகுதில் காண்போம்)

காபா

இஸ்லாத்தில் உள்ள காபா:

காபா என்றால் என்ன?

காபா ஒரு கிறிஸ்தவ தேவாலயம்!
காபாவில் மர்யம்மின் (கிறிஸ்துவின் தாய்) சின்னம் இருந்தது, அது பல புத்தகங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

1. அல்-அஸ்ராக்கியின் அக்பர் மெக்கா, அச்சிடுதல் 2004, தொகுதி. 1, ப. 205.
2. அல்-வாகிடியால் அல்-மகாஸி அச்சிடுதல் 1989, தொகுதி. 1, ப. 833:

دخل النبي صلي الله عليه وسلم فرأى فيها صورة الملائكة وغيرها ، ورأى صورة
إبراهيم صلى الله عليه وسلم قال قاتلهم الله جعلوه شيخا يستقسم بالأزلام ثم

رأى صورة مريم ، فوضع يده عليها ثم قال امسحوا ما فيها من الصور إلا صورة
إبراهيم

“நபியவர்கள் காபாவுக்குள் நுழைந்தபோது பல படங்களைக் கண்டார்கள்; அவர்களில் ஒருவர் மர்யம் மற்றும் இப்ராஹீம் மற்றொருவர், எனவே அவர் இப்ராஹீமின் படத்தின் மீது கையை வைத்து, இதைத் தவிர(இப்ராஹீம்) எல்லாவற்றையும் துடைக்கவும் என்றார்.

காபாவில் இயேசு மற்றும் அவரது தாயார் சிலை இருந்தது

அல்-அஸ்ராக்கி எழுதிய அக்பர் மெக்கா, 2004 அச்சிடுதல், தொகுதி. 1, ப. 200:

وحدثني جدي ، قال : حدثنا داود بن عبد الرحمن ، عن ابن جريج ، قال : سأل
سليمان بن موسى الشامي عطاء بن أبي رباح وأنا أسمع : أدركت في البيت
تمثال مريم وعيسى ؟ قال : نعم ، أدركت فيها تمثال مريم مزوقا ، في حجرها
عيسى ابنها قاعدا مزوقا . قال : وكانت في البيت أعمدة ست سوار ، وصفها كما
نقطت في هذا التربيع « قال : وكان تمثال عيسى ابن مريم ومريم عليهما السلام
في العمود الذي يلي الباب . قال ابن جريج : فقلت لعطاء : متى هلك ؟ قال : في
الحريق في عصر ابن الزبير

“கோரியேஜ் மகனான தாவூத்-இப்னு-அப்த்-அல்-ரஹ்மான் மற்றும் சுலிமான் பின் மௌசா அல்-ஷாமி அதாபின் ரபா ஆகியோர்களால் சொல்லப்பட்டதாக என் தாத்தா என்னிடம் கூறினார்:

காபாவில் மரியாள் மற்றும் அவரது மகன் இயேசுவின் உருவம் அவள் மடியில் இருந்ததாகவும், இரண்டும் அழகுப் பொருட்களால் மூடப்பட்டிருந்ததாகவும் அதற்கு நீங்கள் சாட்சியாக இருந்ததாக நான் கேள்விப்பட்டேன்? அதற்கு அவர் ஆம், காபாவில் ஆறு நெடுவரிசைகள் உள்ளன, அதன் மேல் மர்யம் மற்றும் ஈஸாவின் சிலை உள்ளது, அது எப்போது அழிக்கப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டு, அவர் கூறினார்: இப்னு அல்-ஸுபைர் (முஸ்லிம்களுக்கு இடையிலான போர்) காலத்தில் நெருப்பால் என்று கூறினார்."

வரும் பட்டியலில், புறமதத்தினரான கோசா பழங்குடியினர், கிறிஸ்தவர்களை தோற்கடித்து, காபாவை மீண்டும் ஒரு புறமத வழிபாட்டுத் தலமாக மாற்றினர் மற்றும் பழைய நாட்களில் இருந்ததுபோல் சிலை வழிபாட்டாளர்களின் ஸ்தலமாக எவ்வாறு மாற்றினர் என்பதைப் பார்ப்போம்.

முதலில் காபா என்ற கட்டிடத்தைக்குறித்து முஸ்லிம்கள் என்ன நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை முதலில் பார்ப்போம். முஸ்லிம்களின் கூற்றுப்படி, **காபா இவர்களால் கட்டப்பட்டது**:

1. மலக்குகள் (வானவர்)
2. ஆதம்

இர்ஷாத் அல்-அகேல் அல்-சாலெம் பே அல்-குரான் மஸாயியா அ, பெய்ரூட் 1999, தொகுதி. 1, பி. 160:

(إرشاد العقل السليم إلى مزايا القران الكريم):

أنها بنيت عشر مرات منها بناء الملائكة عليهم السلام وذكره النووي في تهذيب
الأسماء واللغات والأزرقي في تاريخه وذكر أنه كان قبل خلق آدم عليه السلام ومنها
بناء آدم عليه السلام

"தஹ்ஸெப் அல்-அஸ்மா' வா-அ-லுகாத் புத்தகத்தில், இமாம் அல்-நவவியால் குறிப்பிடப்பட்ட கதைகளில்: காபா பத்தலமுறை முதன்முறையாக மலக்குகளால்(வானவர்களால்) கட்டப்பட்டது மற்றும், அல்-அஸ்ராகி புத்தகத்தில் கூட ஆதமுக்கு முன்பே கட்டப்பட்டது பிறகு ஆதம் அதையும் கட்டினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. ஆதமின் மகனாகிய சேத்.

அல்-மஜ்ஸ், அல்-ஷமாயில் மற்றும் அல்-சர் பே அல்-சஃபா கலைகளின் மீதான விளைவு, தொகுதி.1, பி. h, 1977, பெய்ரூட்:

الشافعي عيون الأثر في فنون المغازي والشمائل والسير
وكانت الكعبة قبل ان يبنيها شيث عليه السلام خيمة من ياقوتة حمراء يطوف بها آدم
ويأنس بها لانها أنزلت إليه من الجنة وكان قد حج إلى موضعها من الهند.

"காபா ஆதமின் மகன் சேத்தால் கட்டப்படுவதற்கு முன்பு, அது மாணிக்கக் கற்களால் ஆன கூடாரமாக இருந்தது, ஆதம் அதைப் பார்த்து மகிழ்ந்தார், அது அந்த நேரத்தில் இந்தியாவில் இருந்தது."

4. இப்ராஹீம் மற்றும் இஸ்மாயில்: மிக நீண்ட ஹதீஸில் விவரிக்கப்பட்டுள்ளது; ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 55, ஹதீஸ் 583.

5. ராட்சதர்கள்: ஃபதே அல்-பாரி ஃபே ஷேர் சாஹி அல்-புகாரி, தொகுதி. 6, புக் ஆஃப் அஹதித், பெய்ரூட் லெபனான் 1953, ப. 464:

'ஆஹ் பின் அல்-சாபியின் கதையின்படி, அவர்களின் முன்னோர்கள் ஜுர்ஹும் பழங்குடியினர்.

وَفِي رِوَايَةِ عَطَاءِ بْنِ السَّائِبِ " وَكَانَتْ جُرْهُمٌ يَوْمَئِذٍ بِوَادٍ قَرِيبٍ مِنْ مَكَّةَ ، وَقِيلَ إِنَّ أَصْلَهُمْ مِنَ الْعَمَالِقَةِ

6. ஜுர்ஹும் பழங்குடியினர் (இஸ்லாமுக்கு முன்பே அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினர்), ஃபதே அல்-பாரி ஃபே ஷேர் புத்தகத்தின்படி, சாஹிஹ் அல்-புகாரி, பெய்ரூட் லெபனான், 1953, தொகுதி. 6, ப. 548, மகேப் புத்தகம்; ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 40, ஹதீஸ் 556:
நபி கூறினார்கள், "அல்லாஹ் இஸ்மாயீலின் தாயாருக்கு தாராளமாக இருப்பானாக! அவள் ஜம்-ஜம் நீரூற்றின் தண்ணீரை அப்படியே விட்டிருந்தால், அல்லது அவள் பயன்படுத்தாமல் இருந்திருந்தால் அந்த நீரூற்று ஒரு ஓடும் நீரோடையாக இருந்திருக்கும்". ஜுர்ஹும் பழங்குடியினர் வந்து அவளிடம், 'நாங்கள் உங்கள் குடியிருப்பில் தங்கலாமா?' என்றனர். அவள், 'சரி. இருப்பினும், நீரை உடைமையாக்கும் உரிமை உங்களுக்கு இல்லை' என்றாள். ஏற்றுக்கொண்டார்கள்."

7. ஜுர்ஹும் பழங்குடியினரை மக்காவிலிருந்து கோஜா பழங்குடியினர் வெளியேற்றி 300 ஆண்டுகளுக்கும் மேலாக காபாவை தங்கள் வசத்தில் வைத்திருந்தனர். ஃபதே அல்-பாரி ஃபே ஷேர், சாஹிஹ் அல்-புகாரி, அச்சிடுதல் 2, 02, பெய்ரூட் லெபனான், 1953, தொகுதி. 10, ப. 32:

فتح الباري، شرح صحيح البخاري، الإصدار 2.05 - للإمام ابن حجر العسقلاني
المجلد السادس >> كِتَاب الْمَنَاقِبِ >> باب قِصَّةِ خُزَاعَةَ ص 548
فهيرة بنت عمرو بن الحارث بن مضاض الجرهمي وكان أبوها آخر من ولي أمر مكة من جرهم فقام بأمر البيت سبطه عمرو بن لحي فصار ذلك في خزاعة بعد جرهم، ووقع بينهم في ذلك حروب إلى أن انجلت جرهم عن مكة، ثم تولت خزاعة أمر البيت ثلاثمائة سنة

"உமாரோ இபின் அல்-ஹரேத் பின் முதாத் அல்-ஜுர்ஹுமின் மகள் ஃபஹோரா, காபாவின் ஆட்சியாளராக ஜுர்ஹும் பழங்குடியினரில் கடைசியாக இருந்தவர், அவரது தந்தை ஜுர்ஹும்

மற்றும் கோஜா இடையே போர் நடந்தது. கோஜா வெற்றி பெற்று அவர்களை மக்காவிலிருந்து வெளியேற்றியதுடன் போர் முடிவடைந்தது, எனவே கோஜா முந்நூறு ஆண்டுகள் காபாவைக் கைப்பற்றினார்.

8. குசாய், நாய்களின் மகன் (முஹம்மதுவின் மூதாதையர்), அவர் கோஜாவை (குரிஷ் பழங்குடியினரின் முதல் மனிதர்) மக்காவிலிருந்து வெளியேற்றினார். ஃபதே அல்-பாரி ஃபே ஷேர் சாஹி அல்-புகாரி புத்தகம், பெய்ரூட் லெபனான், 1953, தொகுதி. 6, ப. 548, மகேப் புத்தகம்:

فغلب قصي حينئذ على أمر البيت، وجمع بطون بني فهر وحارب خزاعة حتى أخرجهم من مكة؛

“குசாய் வெற்றி பெற்று காபாவைக் கைப்பற்றினார், மேலும் அவர் ஃபஹரின் (பழங்குடியினரின்) அனைத்து குலங்களையும் ஒன்று திரட்டி அவர்களை மக்காவிலிருந்து வெளியேற்றினார்.”

குசாய் (நாய்களின் மகன்) காபாவிற்கு அடுத்ததாக இரண்டு சிலைகளை வழிபடச் சேர்த்தார். சாஹிஹ் முஸ்லிம்-பெஷர் அல்-நவாவி, தொகுதி. 9, ஹஜ் புத்தகம், பெய்ரூட் லெபனான், 2006, ப. 401:

فَالرَّجُلُ اسْمُهُ إِسَافُ بْنُ بَقَاءٍ ، وَيُقَالُ ابْنُ عَمْرٍو ، وَالْمَرْأَةُ اسْمُهَا نَائِلَةُ بِنْتُ ذِئْبٍ ، وَيُقَالُ بِنْتُ سَهْلٍ ، قِيلَ : كَانَا مِنْ جُرْهُمَ فَزَنَيَا دَاخِلَ الْكَعْبَةِ ، فَمَسَخَهُمَا اللَّهُ حَجَرَيْنِ ، فَنُصِبَا عِنْدَ الْكَعْبَةِ ، وَقِيلَ : عَلَى الصَّفَا وَالْمَرْوَةِ لِيَعْتَبِرَ النَّاسُ بِهِمَا وَيَتَّعِظُوا ، ثُمَّ حَوَّلَهُمَا قُصَيُّ بْنُ كِلَابٍ فَجَعَلَ أَحَدَهُمَا مُلَاصِقَ الْكَعْبَةِ وَالْآخَرَ بِزَمْزَمَ ، وَقِيلَ : جَعَلَهُمَا بِزَمْزَمَ ، وَنَحَرَ عِنْدَهُمَا وَأَمَرَ بِعِبَادَتِهِمَا

"அந்த மனிதனின் பெயர் 'இசாஃப் பின் பா'கா' அல்லது பின் 'உமர், மற்றும் அந்த பெண்ணின் பெயர் நாலாஹ் பென்ட் ஸீப் அல்லது பென்ட் சாஹேல், அவர்கள் இருவரும் ஜுர்ஹூமிலிருந்து வந்தவர்கள், மேலும் அவர்கள் காபாவில் விபச்சாரம் செய்தார்கள். அல்லாஹ் அவர்களை இரண்டு சிலைகளாக மாற்றினான், அதனால் அவை காபாவின் அருகில் வைக்கப்பட்டன, மேலும் அது ஸஃபா & அல்-மர்வாவில் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஹஜ் யாத்திரையில் முஸ்லிம்கள் பார்க்க வேண்டிய இரண்டு இடங்கள்-குரான் 2:158 ஐப் பார்க்கவும்), எனவே நாய்களின் மகனாகிய குசாய் அவர்கள் இருவரையும் காபாவின் அருகில் வைத்து அவர்களுக்கு (இரண்டு சிலைகளுக்கு) பலியிட்டு, அவற்றை வணங்கும்படி மக்களை வற்புறுத்தினார்.

9. முஹம்மது நபி ஆவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு குரிஷ் பழங்குடியினர் காபாவைக் கட்டினார்கள்! புத்தகத்தின் தலைப்பு ஃபைட் அல்-'காதர், 2000 இல் அச்சிடப்பட்டது, எகிப்து, தொகுதி. 1, ப. 639:

إعادة بنائها في زمن المصطفى صلى الله عليه وسلم وله من العمر خمس وثلاثون سنة

நபி முப்பத்தைந்து வயதாக இருக்கும்போது காபா மீண்டும் கட்டப்பட்டது.

10. அப்துல்லாஹ் இப்னு அல் ஜோபீர் இஸ்லாமிய ஆண்டு 65 (கி.பி. 684) இல். (அல்-கமல் ஃபே அல்-தாரிக் புத்தகம், இபின் 'ஆத்தரின் பக்கம் 362);

11. காபாவை முழுவதுமாக அழித்து மீண்டும் கட்டியவர் அல் ஹஜாஜ் இப்னு யூசுப் அல் தகாஃபி! மேலும் காபா குப்பைகளால் மூடப்பட்டிருந்தது. (அல்-பிதாய்யா வா அல்-நிஹாயாவின் புத்தகம், இப்னு காதர் எழுதியது, தொகுதி. 8, பக். 246.)

12. ஒட்டோமான் சுல்தான் முராத், ஆண்டு கி.பி. 1630.
ஆனால் கடவுளின் தூதர்களால் கட்டப்பட்ட உலகின் முதல் வீடு காபா என்று முஸ்லீம்களின் கூற்றை, இப்னு அதெல் அல்-அன்பலியின் தஃப்சீர் அல்-லெபாப் போன்ற முஸ்லிம்களின் சில நூல்களைப் படிப்பதன் மூலம் எளிதாக மறுக்க முடியும். 4, ப. 225:

وعن علي : أن رجلا قال له : هو أول بيت؟ قال : لا ، كان قبله بيوت ، أول بيت وضع للناس ، مباركا ، فيه الهدى والرحمة والبركة ، أول من بناه إبراهيم ، ثم بناه قوم من العرب من جرهم ، ثم هدم ، فبنته العمالقة ، وهم ملوك من أولاد عمليق بن سام بن نوح ، ثم هدم فبناه قريش .

அலியின் கூற்றுப்படி, ஒரு மனிதர் அவரிடம், "இது முதல் வீடா?" (அவர் பதிலளித்தார்) "இல்லை, அதற்கு முன் வீடுகள் இருந்தன, ஆனால் இது மனிதகுலத்திற்காக உருவாக்கப்பட்ட முதல் வீடு. மேலும் அதற்கு வழிகாட்டுதலும் கருணையும் ஆசீர்வாதமும் உண்டு. அதை முதலில் கட்டியவர் இப்ராஹிம், பின்னர் அரபு மக்கள், பின்னர் அவர்களிடமிருந்து ஜுர்ஹூம் கோத்திரம். பின்னர் அது அழிக்கப்பட்டது, பின்னர் அது ராட்சதர்களால் கட்டப்பட்டது. அந்த ராட்சதர்கள நோவாவின் மகன் சாமின் மகன் அம்லிக்கின் குழந்தைகளில் இருந்து வந்த ராஜாக்கள். பின்னர் அது மீண்டும் அழிக்கப்பட்டு குரிஷ் பழங்குடியினரால் கட்டப்பட்டது."

முஸ்லீம்கள் தங்கள் காபாவைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை உங்களுக்குக் காண்பிப்பதன் நோக்கம், அது ஏன் புனிதமானது என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கே!

காபா பல முறை திரும்பக் கட்டப்பட்டத என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளும்போது, அது பல முறை அழிக்கப்பட்டது என்பதை கவனியுங்கள்! அதே நேரத்தில், குர்ஆன் யானையின் அத்தியாயத்தில் (குரான் 105:1-5) உள்ள கதையின்படி, அல்லாஹ் எப்போதும் காபாவைக் காத்ததாக குர்ஆன் கூறுகிறது:

1. யானை (ப் படை)க்காரர்களை உமது இறைவன் எவ்வாறு நடத்தினான் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?
2. அவர்களுடைய திட்டத்தை அவன் தோல்வியடையச் செய்யவில்லையா?
3. சண்டையிடும் பறவைகளின் படையை அவர்களுக்கு எதிராக அனுப்பி.
4. அவர்கள் மீது சுட்ட களிமண் கற்களை எறிந்து.
5. மேலும் அவற்றை கால்நடைகள் தின்ற பச்சை இலை போல ஆக்கவில்லையா?.

இந்தக் கதை காபாவை அழிக்க விரும்பிய அப்ரஹா (ஏமனின் கிறிஸ்தவ ஆட்சியாளர்) தலைமையில் எத்தியோப்பியாவின் அரசனால் அனுப்பப்பட்ட கிறிஸ்தவர்களின் படையைப் பற்றியது.

நூற்றுக்கணக்கான யானைகளுடன் ஆயுதம் ஏந்திய இந்தப் படையை அழிக்க பறவைகளை அல்லாஹ் அனுப்பினான். முஸ்லிம்கள் கூட அந்த ஆண்டை யானை ஆண்டு (கி.பி. 570) என்று அழைக்கிறார்கள். இந்த தேதியின்படி, இந்தக் கதை முஹம்மதுவின் பிறப்பிற்கு நீண்ட காலத்திற்கு முன்பு ஒன்றும் இல்லை என்று தெரிகிறது. இந்தக் கதையில் கொஞ்சம்கூட அர்த்தம் இல்லை. அதை ஒவ்வொன்றாக, ஏன் என்று பார்ப்போம்.

1. அரேபிய தீபகற்பத்தில் யானைகள் இருந்ததில்லை.

2. ஏமனில் யானைகள் இல்லை.

3. இன்றைய சவூதி அரேபியாவிற்கு யானைகள் கொண்டு வரப்பட்டது என்பது செங்கடல் வழியாகத்தான் சாத்தியம்! எனவே, இது சாத்தியமற்றது, ஏனென்றால் அந்தக் காலத்தில் யாரும் நூற்றுக்கணக்கான யானைகளை ஏற்றிச் செல்ல இவ்வளவு பெரிய கப்பல்களைக் கட்டியிருக்க முடியாது, குறிப்பாக கதை கூறுவது போல் ஆயிரக்கணக்கானவை அல்ல!

4. யானைகளை ஏற்றி அமெரிக்க விமானம் பறந்து கொண்டு சென்றன, யானைகள் ஏமனில் பாதுகாப்பாக தரையிறங்கின என்று நாம் கருதலாமா?

5. அவர்கள் எப்படி பாலைவனத்தில் அவைகளுக்கு உணவளிக்க முடியும்? யானை ஒரு நாளைக்கு 140-270 கிலோ (300-600 பவுண்டுகள்) வரை உட்கொள்ளும், ஆனால் அது அவை செய்யும் வேலையைப் பொறுத்து இந்த எண்ணிக்கை மாறலாம்! அவைகள் வேலை செய்யவில்லை என்றால், ஒரு நாளில் குறைவான உணவு தேவைப்படுகிறது. இருப்பினும், இந்த போர் விஷயத்தில் அவர்களுக்கு இயல்பை விட அதிகமாக தேவைப்படும், ஏனென்றால் அவைகள் மிகவும் வெப்பமான பாலைவனத்தில் நடந்து சென்று அனைத்து போர் உபகரணங்களையும் மற்றும்/அல்லது ஆட்களையும் தங்கள் மேல் ஏற்றிச் சென்றன. நீங்கள் ஏமனை விட்டு வெளியேறிய பிறகு, நிலம் ஒரு வெற்று பாலைவனம் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அங்கே எதுவும் பச்சை நிறத்தில் எப்போதும் இல்லை! ஒவ்வொரு யானைக்கும் தேவையான உணவை அவர்களுடன் எடுத்துச் செல்வதுதான் அவர்களுக்கு ஒரே

வழி. அதுவும் சாத்தியமற்றது, ஏனென்றால் யானை ஒரு நாளைக்கு போதுமான அளவு மட்டுமே சுமக்க முடியும்!

6. பிறகு நமக்கு தண்ணீர் ஒரு பிரச்சினை. யானைகளின் தண்ணீர் தேவையை எப்படி நிறைவேற்றுவார்கள்? அவைகள் ஒரு நாளைக்கு 100 முதல் 300 லிட்டர்கள் வரை குடிக்கும். இந்த அளவு மிருகக்காட்சிசாலையின் வாழ்க்கை அல்லது வனவிலங்குகளை அடிப்படையாகக் கொண்டது. நமது கதையில் வரும் யானைகள் வெப்பமான பாலைவனம் ஒன்றில் நடப்பதற்கு இன்னும் நிறைய தேவைப்படும். அவைகள் குடிப்பதற்கு தேவையான தண்ணீரை ராணுவம் எப்படி வழங்க முடியும்?

7. யானைகளுக்குத் தாங்களே தெளித்துக் கொள்ளும் அளவுக்கு தண்ணீர் எங்கே கிடைக்கும்? நாம் அறிந்தபடி, யானைகளுக்கு குளிரூட்டும் அமைப்பு இல்லை (அவை வியர்வை இல்லை), எனவே அவை பகல் நேரத்தில் தண்ணீரில் தங்கியோ அல்லது தண்ணீரைத் தெளிப்பதன் மூலமாகவோ தங்களைக் குளிர்விக்க வேண்டும். சவூதி அரேபியாவின் பாலைவனத்தில் அவர்களின் பயணத்தின் போது நிழல் தரும் மரங்கள் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

8. இந்த ராஜாவுக்கு யானைகள் ஏன் தேவை? காபாவை இரண்டு மனிதர்களால் அழிக்க முடியும். அந்த வேலையைச் செய்ய ஒரு ஆள் போதும்! ஒரு அறையை அழிப்பது மிகவும் எளிதானது. அது அந்தக் காலத்தில் கான்கிரீட் போன்ற கணிசமான எதனாலும் கட்டிடம் செய்யப்படவில்லை!

9. ஒருவேளை இந்த எத்தியோப்பிய ராஜா ஒரு முட்டாளாக இருக்கலாம். ஒரு ஆப்பிரிக்கராகிய அவர் இதற்கு முன் பாலைவனத்தில் இல்லாதவர்!

10. காபா பல முறை அழிக்கப்பட்டது என்றால், (நாம் காட்டியது போல் இதை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்கிறார்கள்), அல்லாஹ் ஏன் இந்த முறை அதைப் பாதுகாக்க விரும்பினான்?

11. இதற்கு முன்பு காற்றினாலோ அல்லது பூகம்பத்தினாலோ அழிக்கப்பட்டதாக முஸ்லிம்கள் கூறலாம்! உண்மை என்னவென்றால், இது பொய். இந்த கூற்று உண்மையாக இருந்தால் நான் சில முக்கியமான கேள்விகளைக் கேட்பேன்.

அல்லாஹ்வின் படை எங்கே இருந்தது?

1. யெசெத் இப்னு மோவியா முஸ்லீம் இப்னு ஒக்பா மற்றும் அவரது படையின் தலைமையில் காபாவைத் தாக்கியபோது இஸ்லாமிய ஆண்டு 63 , அதாவது கி.பி. 682! அப்துல்லாஹ் இப்னு அல் ஜுபியருடன் சண்டையிட, அவர்கள் மக்காவையும் காபாவையும் கவண் மூலம் தாக்கி, காபாவை தரைமட்டமாக்கினார்கள்! அப்துல்லாஹ் இப்னு அல் ஜுபியரின் ஆட்கள் அதில் அடைக்கலம் தேடியும் தரைமட்டமாக்கினர்!

2. சில ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 692, இஸ்லாமிய ஆண்டு 73, அபேத் அல்-மாலிக் இபின்

மிர்வான் என்பவர, அப்துல்லா இபின் அல் ஜுபியரைக் கொல்ல அல்-ஹாஜா-இப்னு-யூசுப்-அல்-சகாபியை அனுப்பினார், ஏனெனில் அவர்கள் முந்தைய தாக்குதலில் காபாவை அழித்தார்கள். இருப்பினும், அவர் மீண்டும் மெக்காவைக் கைப்பற்றினார், அதே நபருடன் (அப்துலா இப்னு அல் ஜுபியர்) சண்டையிட்டு பத்து ஆண்டுகளுக்குள் காபா மீண்டும் அழிக்கப்பட்டது. அவரது ஆட்கள் மீண்டும் காபாவில் அடைக்கலம் தேடினர், பின்னர் அவர் (அல்-ஹஜாஜ்) காபாவை மறுபடியும கவண் மூலம் தாக்கி அழித்தார்!

3. இப்னு கதீரின் புத்தகத்தில், அல்-பிதாயா & நிஹாயா, தொகுதி. 11, ப. 135/137. இஸ்லாமிய ஆண்டில் 317, கி.பி 929, இபின் கல்டன் புத்தகம் தொகுதி. 2, ப. 84/258.

هـ حيث هاجموا الحجاج يوم التروية واستباحوا دماءهم وأموالهم وقتلوهم في 317
جوف الكعبة وقلعوا باب الكعبة وكسوتها والحجر الأسود وحملوه إلى بلادهم ومكث
عندهم اثنتان وعشرون سنة. انظر فضائح الباطنية للغزالي ص تحقيق عبد
الرحمن بدوي، وانظر البداية والنهاية، 11/135-137.. وانظر الموسوعة الميسرة في
الأديان المعاصرة، الندوة العالمية، مرجع سابق، ص 395. الأعلام، الزركلي، 5/194.

ஈராக்கைச் சேர்ந்த அபு-தாஹர்-அல்-குர்மோதி (குர்மோதி-Qurmoti)) மக்காவைத் தாக்கி 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களைக் கொன்று, காபாவை அழித்து, அதில் இருந்த புனிதமான கல்லை (கருப்புக் கல்) எடுத்து 20 ஆண்டுகளுக்கும் மேலாக குளியலறையாக கல்லை(மீது சிறுநீர் கழித்தல்) பயன்படுத்தினர். இவை எல்லாவற்றிற்கும் மேல் அவனுடைய ஆட்கள் காபாவை அழிப்பதில் மும்முரமாக இருந்தபோது, அவன் “நான்தான் படைப்பவன்! அல்லாஹ்-வே உன் பறவைகள் எங்கே? ஏ அல்லாஹ் எங்கே இருக்கிறாய்?" என்றான். ஃபத்மீனின் கலீஃப் (அல்-மன்சூர் லீ தீன் அல்லா அல்-ஃபாத்திமி) கருப்புக் கல்லைத் திருப்பித் தருமாறு அவர்களிடம் (அல்-கராமிதா) தாழ்மையோடு சிபாரிசு கேட்கும் வரை கருப்புக் கல் காபாவுக்குத் திரும்பவில்லை.

(الخليفة المنصور بن المعز لدين الله الفاطمى)

இதே கதையை நீங்கள் அல்-மௌசுவா அல்-'அலமியா அல்-மிசாரா ஃபே அல் அடியனில் காணலாம். 395; மற்றும் அல்-ஆலம் புத்தகம், தொகுதி. 5, ப. 194, அல்-சர்கலி எழுதியது.

அபுதாஹிர் அல் குர்மோதியின் முக்கியமான மற்றும் தனித்துவமான விஷயம் என்னவென்றால், அவர் குர்ஆனின் பொய்களை நிரூபித்தார், காபாவை அழித்ததன் மூலம் மட்டுமல்ல, “அல்லாஹ் எங்கே? கற்களை ஏற்றிய பறவைகள் எங்கே?” என்று கேட்டார். அவர் கீழே உள்ளவற்றை முயற்சிப்பது போல்:

1. காபாவில் புனிதமான எதுவும் இல்லை என்பதை நிரூபிக்கும்படி;
2. குர்ஆன் புராணக்கதை மற்றும் பொய்யான விசித்திரக் கதைகளின் புத்தகம்;
3. முஸ்லிம்கள் பயனற்ற மற்றும் ஒன்றும்செய்ய இயலாத சிலைகளை வணங்குகிறார்கள்;

4. கருப்புக் கல் என்பது இஸ்லாத்திற்கு முன் அரேபியர்கள் வழிபட்ட ஒரு விண்கல் தவிர வேறில்லை.
அது கடவுளிடமிருந்து வந்தது என்று நினைத்ததால், அவர்கள் அதிகமாக வழிபாடு செய்தனர். பின்னர், கருப்புக்கல் யோனி(பெண்ணுறுப்பு) வடிவிலான முடி-அடைப்பில் போடப்பட்டது.

5. அல்லாஹ் தனது புனிதமான கல்லைக் காப்பாற்ற எதையும் செய்யவில்லை, அதைத் திரும்பப் பெற யாரையும் போருக்கு அனுப்பி பெறமுடியவில்லை. அதற்காக அவர்களிடம் பரிந்துரை செய்த பின்னரே அது திருப்பிக் கொடுக்கப்பட்டது;

இதற்குமேல் இந்த ஒரு எளிய கேள்வியை நான் சேர்க்கிறேன்: யானைப்படை வந்தபோது அல்லாஹ் ஏன் காபாவை பாதுகாத்தான்? அந்த நேரத்தில் இருந்த காபாவின் நிலை என்ன என்பதை நினைவில் கொள்ளுங்கள்:
1. அது விக்கிரகங்களால் நிறைந்திருந்ததால் பரிசுத்தமானதல்ல;
2. முஸ்லிம்களின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை;
3. வழிபாட்டுத் தலம் அல்ல - வணிக இடம் மட்டுமே!
4. காபா அசுத்தமாக இருந்தபோது அல்லாஹ்வால் பாதுகாக்கப்பட்டது (காஃபிர்களால் அசுத்தமானது மற்றும் அவர்களின் சிலைகளால் நிரம்பியது), ஆனால் அது சுத்தமான, நல்ல முஃமின்களான முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் இருந்தபோது அவன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை!
5. இன்று, அமெரிக்க இராணுவ விமானம் பறக்கும் போது அல்லாஹ்வின் பறவைகள் எங்கே? அவனுடைய ஒரு பறவை கூட இன்னும் தலை காட்டவில்லை!

ஒரு காபாவா, பல காபாவா?

அரேபிய தீபகற்பத்தில் 26 காபாக்கள் இருந்தன என்பதும் அவற்றில் ஒன்று தான் மெக்கா காபா என்பது அநேகருக்கு தெரியாது. அதில் தனித்தன்மை எதுவும் இருக்கவில்லை. அவை அனைத்தும் ஒரு புனித கல்லின் மீது கட்டப்பட்டவை என்பது உங்களுக்குத் தெரியுமா, அவை அனைத்தும் உயரத்திலும் அகலத்திலும் ஒரே அளவாகத் தோற்றமளிக்கின்றன. ஸஹீஹ் அல்-புகாரி, அல் மகாஸியின் புத்தகம், ஹதீஸ் 4117:

حدثنا الصلت بن محمد قال سمعت مهدي بن ميمون قال سمعت أبا رجاء 4117
العطاردي يقول كنا نعبد الحجر فإذا وجدنا حجرا هو أخير منه ألقيناه وأخذنا الآخر فإذا
لم نجد حجرا جمعنا جثوة من تراب ثم جئنا بالشاة فحلبناه عليه ثم طفنا به فإذا
دخل شهر رجب قلنا منصل الأسنة فلا ندع رمحا فيه حديدة ولا سهما فيه حديدة إلا
نزعناه

அபு-ராஜா கூறுகையில், "நாங்கள் கற்களை வணங்கி வருகிறோம், மற்ற கல்லை விட சிறந்த கல் கிடைத்தால், முதல் கல்லை வணங்குவதை விட்டு, புதியதை வணங்க ஆரம்பித்தோம்."

இந்த ஹதீஸிலிருந்து நாம் பின்வருவனவற்றைப் புரிந்துகொள்கிறோம்.
1. கற்கள் அவர்களுடைய தெய்வங்களாக இருந்தன;
2. கல்லின் தோற்றத்தையே அவர்கள் அதிகம் விரும்பினர்.
3. இந்தக் கல் என்று சொல்லும்படி ஒன்று அவர்களின் கடவுள் அல்ல, ஆனால் அது அந்தசமயம் அவர்களின் கைகளில் உள்ளவற்றில் சிறந்த கல்லே கடவுள்.

கருப்புக்கல் மட்டும் புனித கல் அல்ல! ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 26, ஹதீஸ் 676:
இப்னு உமர் சொன்னார, "காபாவின் இரண்டு கற்களான கருப்புக்கல் மற்றும் ஏமன் மூலைக்கல் ஆகிய இரண்டையும் நான் நபிகள் நாயகம் தொடுவதைப் பார்த்ததில் இருந்து, நான் பொதுமக்கள் இருந்தாலும் இல்லாதபோதும் தொட மறந்ததில்லை. நான் நஃபியிடம் கேட்டேன், 'இப்னு உமர் இரண்டு மூலைகளுக்கு இடையில் பயணம் செய்தாரா?'. நஃபீ பதிலளித்தார், 'இரண்டுக்கும் இடையில் அவர் நடந்தார், ஏனெனில் அதைத் தொடுவது அவருக்கு எளிதாக இருந்தது'

இஸ்லாம் புறமதத்திற்கு எதிரானது என்றால், முஹம்மது ஏன் புறமதத்தினரைக் காப்பியடித்த காபாவை பிரார்த்தனை ஸ்தலமாக எடுத்துக் கொண்டார்? உமர் இப்னு அல்-கத்தாப் (ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 8, ஹதீஸ் 395) கூறுவதைப் பற்றி உங்களுக்கு நாம் பேசியது நினைவிருக்கிறதா?:

உமர் பின் அல்-கத்தாப் கூறினார்:

"மிகைத்தவன் (அல்லாஹ்) என்னுடன் மூன்று விஷயங்களில் உடன்பட்டான்":

(முதலில்), நான், 'அல்லாஹ்வின் தூதரே, ஆபிரகாம் தொழுதுகொள்ளும் இடத்தை (அவரது) வழிபாட்டுத் தலமாக நீங்கள் எடுத்துக்கொள்ள நான் விரும்புகிறேன்' என்று சொன்னேன். அதன்பின் தெய்வீக வெளிப்பாடு வந்தது: (பக். 137) (குர்ஆன் 2:125) 'மேலும் நீங்கள் (முஸ்லிம்கள்) ஆபிரகாமின் இடத்தை பிரார்த்தனை செய்யும் இடமாக எடுத்துக் கொள்ளுங்கள்.'

(இரண்டாவது), மேலும் நான் அல்லாஹ்வின் நபியிடன், 'நல்லவர்களும் கெட்டவர்களும் உங்கள் மனைவிகளுடன் பேசுகிறார்கள், எனவே அவர்கள் தங்களுக்குத் திரையிடுமாறு (ஹிஜாப்) கட்டளையிடுங்கள்!' என்றேன். எனவே பெண்களின் திரைச்சீலை பற்றிய வசனத்தை அல்லாஹ் இறக்கி வைத்தான் (குர்ஆன் 24:31).

(மூன்றாவது), நபியின் மனைவிகள் நபிக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கினர், நான் அந்த மனைவிகளிடம், 'அவருடைய (நபியின்) இறைவன் உங்களை, (அனைத்து மனைவிகளையும்) விவாகரத்து செய்து, உங்களை விட சிறந்த மனைவிகளை பதிலாக மாற்றினால். 'என்று சொன்னேன். எனவே நான் கூறியதுபோலவே அப்படியே (குர்ஆன் 66:5) வசனம் வெளிப்படுத்தலாக வந்தது.

இந்த ஹதீஸைக் கூர்ந்து கவனித்தால், முஹம்மது காபாவை நேசிப்பவர்களை மகிழ்விக்க முயன்றதைக் காணலாம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அது அவர்களின் பிரார்த்தனை ஸ்தலமாக இருந்தது. முஹம்மது முஸ்லீம்களை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று அறிந்திருந்தார். அது தன்னை மறுத்தவர்களுக்கு இஸ்லாத்தை மேலும் ஏற்றுக்கொள்ளச் செய்யும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். புறமதத்தினர் பழகிய வாழ்க்கை முறையை தான் மாற்ற விரும்பவில்லை என்பது அவருக்குத் தெரியும்!

உண்மை என்னவென்றால், அவர் அவர்களை மகிழ்ச்சியடையச் செய்ய விரும்பினார் என்பது மட்டுமல்ல, அது பொருளாதார காரணங்களுக்காகவும் இருந்தது. முஹம்மது அனைத்து யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் மெக்காவில் கொன்ற பிறகு, இந்த நகரத்தில் வணிகம் இறந்துவிட்டது; யாரும் நகரத்திற்குள் வணிகம் செய்ய வரவில்லை. முஹம்மது மற்றும் அவனது படைகளை பார்த்து அனைவரும் பயந்தனர், ஏனென்றால் அவர் அவர்களைக் கொன்றுவிடுவார் என்று அவர்கள் அறிந்திருந்தனர் (அவர்கள் காஃபிர்கள் என்பதால்). முஹம்மது நகரத்திற்குள் ஒரு வர்த்தக இயக்கத்தை உருவாக்க வேண்டியிருந்தது, மேலும் உமர் சொன்னதை அவர் விரும்பியதால், அவருக்கு ஒரு சிறந்த யோசனையும் கிடைத்தது.

1. நான் மெக்காவை முஸ்லீம்களின் மையமாக மாற்றினால், அந்த நகரம் வந்து பார்க்க வேண்டிய முஃமின்களால் பரபரப்பாக இருக்கும்;

2. அவர்கள் வருகை தந்தால், அவர்கள் ஹோட்டல்களில் தூங்க வேண்டும் மற்றும் உணவு மற்றும் அன்பளிப்புகளை வாங்க வேண்டும்;

3. அதே சமயம், விற்பதற்குப் பொருட்களைக் கொண்டு வருவார்கள்;

4. அது நகரத்தை ஒரு மத அல்லது புனித நகரத்தை விட வணிக மையமாக மாற்றும்;

5. அதற்கு மேல், முஹம்மதுவின் பழங்குடியினருக்கு அனைத்து அரேபியர்களின் மீதும் அதிகாரத்தை அளிக்கும் ஒரு முடிவு;

6. இந்தக் குறிப்புகள் அனைத்தையும் நிரூபிக்க, குர்ஆனுக்குச் சென்று, அது உண்மையில் முஹம்மது விரும்பிய காபா அல்ல என்பதை நாமே பார்ப்போம். குர்ஆன் 2:142ல் நாம் வாசிக்கிறோம்:

سَيَقُولُ ٱلسُّفَهَآءُ مِنَ ٱلنَّاسِ مَا وَلَّىٰهُمْ عَن قِبْلَتِهِمُ ٱلَّتِى كَانُوا۟ عَلَيْهَا ۚ قُل لِّلَّهِ ٱلْمَشْرِقُ وَٱلْمَغْرِبُ ۚ يَهْدِى مَن يَشَآءُ إِلَىٰ صِرَٰطٍ مُّسْتَقِيمٍ

2:142 மக்களில் அறிவீனர்கள் கூறுவார்கள்; "(முஸ்லிம்களாகிய) அவர்கள் முன்னர் நோக்கியிருந்த கிப்லாவை விட்டுத் திருப்பிவிட்டது எது?" என்று. (நபியே!) நீர் கூறும்; "கிழக்கும், மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியவை, தான் நாடியவரை அவன் நேர்வழியில் நடத்திச் செல்வான்" என்று.

1. நாம் இங்கு பார்ப்பது போல், முஹம்மது ஏற்கனவே ஒரு திசையை நோக்கி தொழுதார். அவர் ஒரு நபி என்று கூறிய முதல் நாளிலிருந்து, அது எருசலேமை நோக்கி எப்போதும் இருந்தது. ஆனால் அந்த வசனம் அவருக்கு உண்மையில் திசை தேவையில்லை என்கிறது!

2. வசனம் சொல்வது போல் எல்லா திசைகளும் அல்லாஹ்விற்கே. எனவே கருத்து என்ன? வரும் வசனத்தில் முஹம்மது ஏன் திசையை மாற்றினார் என்பதை விளக்க முயல்கிறார். அவர் தொழுகைக்கான திசைகளை மாற்றிக்கொண்டே இருந்ததால் சிலர் அவரை கேலி செய்தனர். குர்ஆன் 2:143:

وَكَذَٰلِكَ جَعَلْنَٰكُمْ أُمَّةً وَسَطًا لِّتَكُونُوا۟ شُهَدَآءَ عَلَى ٱلنَّاسِ وَيَكُونَ ٱلرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًا ۗ وَمَا جَعَلْنَا ٱلْقِبْلَةَ ٱلَّتِى كُنتَ عَلَيْهَآ إِلَّا لِنَعْلَمَ مَن يَتَّبِعُ ٱلرَّسُولَ مِمَّن يَنقَلِبُ عَلَىٰ عَقِبَيْهِ ۚ وَإِن كَانَتْ لَكَبِيرَةً إِلَّا عَلَى ٱلَّذِينَ هَدَى ٱللَّهُ ۗ وَمَا كَانَ ٱللَّهُ لِيُضِيعَ إِيمَٰنَكُمْ ۚ إِنَّ ٱللَّهَ بِٱلنَّاسِ لَرَءُوفٌ رَّحِيمٌ

2:143 எனவே, நீங்கள் மக்களுக்குச் சாட்சியாக இருப்பதற்காகவும், இறைத்தூதர் உங்களுக்குச் சாட்சியாக இருப்பதற்காகவும், நாங்கள் உங்களை ஒரு நடுத்தர நேர்மையான தேசமாக ஆக்கியுள்ளோம்; நீங்கள் கிப்லாவாக (தொழுகையின் திசையாக) இருக்க வேண்டியதை நாங்கள் ஆக்கவில்லை, ஆனால் இறைத்தூதரைப் பின்தொடர்பவரைத் தன் குதிகால்களில் சுற்றிச் செல்பவரிடமிருந்து வேறுபடுத்துவதற்காக நாங்கள் செய்யவில்லை, மேலும் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களுக்கு இது கடினமாக இருந்தது. நேர்வழி காட்டியது; அல்லாஹ் உங்கள் ஈமானை(நம்பிக்கையை)பயனற்றதாக ஆக்கப் போவதில்லை, நிச்சயமாக அல்லாஹ் மக்கள் மீது கருணை உள்ளவன். நிகரற்ற அன்புடையவன்.

எருசலேமில் இருந்து மெக்காவிற்கு தொழுகையின் திசையை மாற்றியதற்கான காரணம் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்களை வேறுபடுத்துவதற்கே ஆகும் என்று சொல்கிறது. இங்கே தவறு ஏதோ இருக்கிறது!

அதற்கு ‘காபா புனிதமான இடமே இல்லை’ என்று அர்த்தம் என்பதை என்னுடன் கவனியுங்கள். **யார் முஸ்லீம், யார் இல்லை என்பதை அல்லாஹ் தெரிந்து கொள்ள இது ஒரு வழி!**

அப்படியானால், அது (காபா) புனிதமானதாக இல்லாதபோது, நாம் அசுத்தமாக இருக்கிறோம் என்றும், நாம் (முஸ்லிம்கள் அல்லாதவர்கள்) இனி மெக்கா நகருக்குள் நுழைய முடியாது என்றும் அல்லாஹ் ஏன் கூறினான்? காபாவே புனிதமாக இல்லாத போது முஹம்மது கருப்புக்கல்லை ஏன் முத்தமிட்டார்? இதன் விளைவாக, கருப்புக்கல் புனிதமானது அல்ல, அதாவது காபா முக்கியமானதல்ல. இது ஹஜ்ஜிற்கும் (மெக்கா யாத்திரை) அதே பொருள்படும்.

காஃபிர்களும் பிறமதத்தவர்களும் காபாவின் திசையில் தொழுதார்கள் என்றால், முஸ்லிம்களும் அவ்வாறே செய்தால், முஸ்லிம்கள் யார் என்று நமக்கு எப்படித் தெரியும்?

இது ஒரு தவறான சாக்கு, இதில் ஒரு புத்திசாலித்தனம் கூட இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது! இந்தச் சாக்குப்போக்கைச் சொன்னவன் புத்திசாலி இல்லை என்பதைக்கூட அடுத்த வசனம் காட்டுகிறது. குர்ஆன் 2:144:

قَدْ نَرَىٰ تَقَلُّبَ وَجْهِكَ فِى ٱلسَّمَآءِ ۖ فَلَنُوَلِّيَنَّكَ قِبْلَةً تَرْضَىٰهَا ۚ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ ٱلْمَسْجِدِ ٱلْحَرَامِ ۚ وَحَيْثُ مَا كُنتُمْ فَوَلُّوا۟ وُجُوهَكُمْ شَطْرَهُۥ ۗ وَإِنَّ ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَٰبَ لَيَعْلَمُونَ أَنَّهُ ٱلْحَقُّ مِن رَّبِّهِمْ ۗ وَمَا ٱللَّهُ بِغَٰفِلٍ عَمَّا يَعْمَلُونَ

2:144 (நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்கக் காண்கிறோம். எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாக திருப்பி விடுகிறோம்;. ஆகவே நீர் இப்பொழுது (மெக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும். (முஸ்லிம்களே!) இன்னும் நீங்கள் எங்கிருந்தாலும் (தொழுகையின் போது) உங்கள் முகங்களை அந்த (கிப்லாவின்) பக்கமே திருப்பித் கொள்ளுங்கள்; வேதமுடையவர்கள் தங்கள் இறைவனிடமிருந்து வந்த உண்மை என்பதை நன்கு அறிவார்கள், மேலும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அல்லாஹ் அறியாமல் இல்லை.

1. இங்கே பார்க்கவும்! முஹம்மதுவை அல்லாஹ் திருப்திப்படுத்துகிறான். உமரின் யோசனையை காப்பியடிக்க (நகலெடுக்க) வேண்டும் என்பது முஹம்மதுவின் விருப்பம்.

2. முஹம்மது ஒரு தீர்வைத் தேடிக்கொண்டிருந்தார். அவர் என்ன தீர்க்க முயன்றார்? தொழுகையின் திசையைப் பற்றி முஸ்லிம்கள் ஒருபோதும் குறை கூறவில்லை. அவர்களிடம் ஏற்கனவே இருந்த ஒன்று அது!

3. எல்லோரும் பயன்படுத்திய திசையை அல்லாஹ் தேர்ந்தெடுக்கிறான்!

4. அவர்கள் பயன்படுத்திய திசை மிகவும் சரியானது ஆகும். முஹம்மதுமட்டும் தவறானதை

செய்தவர் ஆவார்!

5. இதற்கு மேல், முஹம்மது காபாவை நோக்கியும் பிரார்த்தனை செய்தார் என்று வசனம் தெளிவாகக் கூறுகிறது, அதாவது அவர் தனது வாழ்நாள் முழுவதும் ஒரு பேகன் (புறமதத்தார்). அவர் தன்னை அல்லாஹ்வின் நபி என்று கூறுவதற்கு முன்பு தனது குடியினர் செய்ததையே அவர் செய்து வந்தார்.

இஸ்லாத்தில் உள்ள கருப்பு கல்

சில பின்னணி குறிப்பிடல்களுக்காக, முஹம்மது எவ்வாறு பழைய நம்பிக்கை அமைப்புகளையும் மதங்களையும் கலந்து ஒரு புதிய மதத்தை உருவாக்கினார் என்பதை விரைவாகப் பார்ப்போம். ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 26, ஹதீஸ் 679 கூறுகிறது:

صحيح البخاري - كِتَاب الْحَجِّ - سعى النبي صلى الله عليه وسلم ثلاثة أشواط ومشى أربعة

ص 582 - «1528 حَدَّثَنَا سَعِيدُ بْنُ أَبِي مَرْيَمَ أَخْبَرَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ بْنِ أَبِي كَثِيرٍ -» قَالَ أَخْبَرَنِي زَيْدُ بْنُ أَسْلَمَ عَنْ أَبِيهِ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ لِلرُّكْنِ أَمَا وَاللَّهِ إِنِّي لَأَعْلَمُ أَنَّكَ حَجَرٌ لَا تَضُرُّ وَلَا تَنْفَعُ وَلَوْلَا أَنِّي رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ اسْتَلَمَكَ مَا اسْتَلَمْتُكَ فَاسْتَلَمَهُ ثُمَّ قَالَ فَمَا لَنَا وَلِلرَّمَلِ إِنَّمَا كُنَّا رَاءَيْنَا بِهِ الْمُشْرِكِينَ وَقَدْ أَهْلَكَهُمْ اللَّهُ ثُمَّ قَالَ شَيْءٌ صَنَعَهُ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَلَا نُحِبُّ أَنْ نَتْرُكَهُ

ஸைய்த்-பின் இஸ்லாம் தனது தந்தை கூறியதாக சொன்னார்: "உமர் பின் அல்-கத்தாப் கருப்புக் கல்லை முத்தமிட்டதை நான் பார்த்தேன், பின்னர் அவர் கல்லை முத்தமிட்டுக்கொண்டே, 'அல்லாஹ்வின் தூதர் உன்னை (கல்லை) முத்தமிடுவதை நான் பார்க்கவில்லை என்றால், நான் உன்னை முத்தமிட்டிருக்க மாட்டேன்.'

ஸஹீஹ் அல்-புகாரி, புக் கத் (ஹஜ்), ஹதீஸ் 1520, (அரபு அச்சு):

صحيح البخاري - كِتَاب الْحَجِّ - بَاب مَا ذُكِرَ فِي الْحَجَرِ الْأَسْوَدِ

بَاب مَا ذُكِرَ فِي الْحَجَرِ الْأَسْوَدِ

1520 حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ كَثِيرٍ أَخْبَرَنَا سُفْيَانُ عَنْ الْأَعْمَشِ عَنْ إِبْرَاهِيمَ عَنْ عَابِسِ بْنِ رَبِيعَةَ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ جَاءَ إِلَى الْحَجَرِ الْأَسْوَدِ فَقَبَّلَهُ فَقَالَ إِنِّي أَعْلَمُ أَنَّكَ حَجَرٌ لَا تَضُرُّ وَلَا تَنْفَعُ وَلَوْلَا أَنِّي رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يُقَبِّلُكَ مَا قَبَّلْتُكَ

முஹம்மது இப்னு கதீர் மற்றும் இப்ராஹேமிலிருந்து சுஃபியான் ஆகியோர் அபேயின் பின் ரபியிடமிருந்து உமர் கூறினார்: "உமர் கருப்புக் கல்லின் முன்புறம் சென்று அதை முத்தமிட்டார், மேலும் அவர் கூறினார் ‘நீ ஒரு கல், மற்றும் உன்னால் எந்த ஒரு விஷயத்திலும் யாருக்கும் நன்மையை கொடுக்கவோ அல்லது யாருக்கும் தீங்கு செய்யவோ முடியாது என்று எனக்குத் தெரியும். அல்லாஹ்வின் தூதர் உன்னை முத்தமிடுவதை நான் பார்க்காமல் இருந்திருந்தால், எந்த சூழ்நிலையிலும் நான் உன்னை முத்தமிட்டிருக்க மாட்டேன்.’ ”

1. இங்கு நாம் பார்ப்பது போல, 'உமருக்கு கல்லை முத்தமிடுவது பிடிக்கவில்லை, ஏனென்றால் அது ஒரு பேகன் (புறமதத்தார்) செயல் என்று அவருக்குத் தெரியும், ஆனால் அதைத் தவிர வேறு வழியில்லை, ஏனென்றால் முஹம்மது - என்னும் பெருந் தலைவன் செய்தான்!

2. 'இது பாதிப்பில்லாதது மற்றும் பயனற்றது’ என்று உமர் கூட கூறினார், ஆனால் முஹம்மதுவுக்கு சொல்ல வேறு ஏதோ இருந்தது. இதன் பொருள், முஹம்மது ஒரு பொய்யர் என்றும் ஒரு நபி அல்ல என்றும் உமருக்குத் தெரியும். முஹம்மது அல்-திர்மிதி, ஹதீஸ் 877, பக். 226:

سنن الترمذي - كِتَاب الْحَجِّ عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ - بَاب مَا جَاءَ فِي فَضْلِ الْحَجَرِ الْأَسْوَدِ وَالرُّكْنِ وَالْمَقَامِ

ص 226 - »بَاب مَا جَاءَ فِي فَضْلِ الْحَجَرِ الْأَسْوَدِ وَالرُّكْنِ وَالْمَقَامِ -«

877 حَدَّثَنَا قُتَيْبَةُ حَدَّثَنَا جَرِيرٌ عَنْ عَطَاءِ بْنِ السَّائِبِ عَنْ سَعِيدِ بْنِ جُبَيْرٍ عَنْ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ نَزَلَ الْحَجَرُ الْأَسْوَدُ مِنْ الْجَنَّةِ وَهُوَ أَشَدُّ بَيَاضًا مِنْ اللَّبَنِ فَسَوَّدَتْهُ خَطَايَا بَنِي آدَمَ قَالَ وَفِي الْبَاب عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو وَأَبِي هُرَيْرَةَ قَالَ أَبُو عِيسَى حَدِيثُ ابْنِ عَبَّاسٍ حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ

"இந்தக் கருப்புக் கல் சொர்க்கத்திலிருந்து வந்திருக்கிறது, அது பாலை விட வெண்மையாய் இருந்தது, ஆனால் மனிதகுலத்தின் பாவங்களும் தவறுகளும் அதை கருமையாக்கியது."

3. கருப்புக் கல்லை இறைவனால் அனுப்பப்பட்ட புனிதக் கல் என்று முஹம்மது கூறியதாக இங்கே கூறுகிறது. மனிதகுலத்தின் பாவத்தை உறிஞ்சும் ஒரு வேலை அதற்கு இருப்பதாகவும் அவர் கூறினார். காலப்போக்கில், பாவம் கல்லின் வெள்ளை நிறத்தை கருப்பு நிறமாக மாற்றியது என்று அவர் கூறினார்!

முஹம்மதுவின் இந்தக்கதை உமருக்கு நம்பும்படி இல்லை, ஏனென்றால் உமர் அதை ஏற்கவில்லை, ஆனால் இந்த கும்பல் தலைவர் என்னும் பலனைப் பெற அவர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இந்த மனிதர்களில் யாரோ ஒருவர் சொல்வதுதான் சரி. இரண்டும் சரியாக இருக்க முடியாது. இந்த விஷயத்தில் உமர் சொன்னது சரிதான் என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம் என்று நினைக்கிறேன்.

4. சுனன் அல்-திர்மிதி, ஹதீஸ் 961, பக் இல் காணப்படுவது போல், கருங்கல் ஒரு வெள்ளை மாணிக்கம் என்றும் அது ஒவ்வொரு முஸ்லிமின் பாவத்திற்கும் நியாயத்தீர்ப்பு நாளில் அல்லாஹ்வுக்கு சாட்சியாக இருக்கும் என்றும் முஹம்மது கூறினார். பக். 294:

سنن الترمذي - كِتَاب الْحَجِّ عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ - بَاب مَا جَاءَ فِي الْحَجَرِ الْأَسْوَدِ

ص 294 - »بَاب مَا جَاءَ فِي الْحَجَرِ الْأَسْوَدِ -«

961 حَدَّثَنَا قُتَيْبَةُ عَنْ جَرِيرٍ عَنْ ابْنِ خُثَيْمٍ عَنْ سَعِيدِ بْنِ جُبَيْرٍ عَنْ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي الْحَجَرِ وَاللَّهِ لَيَبْعَثَنَّهُ اللَّهُ يَوْمَ الْقِيَامَةِ لَهُ عَيْنَانِ يُبْصِرُ بِهِمَا وَلِسَانٌ يَنْطِقُ بِهِ يَشْهَدُ عَلَى مَنْ اسْتَلَمَهُ بِحَقٍّ قَالَ أَبُو عِيسَى

இப்னு அப்பாஸிடமிருந்து ஜரீரிலிருந்து குதீபா விவரிக்கிறார்: “தீர்ப்பு நாளில் கருப்புக்கல்லை அல்லாஹ் உயிர்ப்பித்து உயிருடன் எழுப்புவார் என்று நபி கூறினார்! அதற்குக் கண்கள் உண்டு, அவைகளால் பார்க்கிறது; மற்றும் காதுகள் உண்டு, அதன் மூலம் கேட்கும்! அதுமட்டுமல்லாமல் ஒரு நாக்கு உண்டு.
தன்னை கைகளால் பிடித்த ஒவ்வொருவருக்கும் அது(கல்) சத்தியத்தின் மூலம் சாட்சியமளிக்கும் "

இந்தக் கதையைப் பற்றி முஸ்லிம்கள் எங்கே இருக்கின்றனர்? கண்ணும் காதும் உள்ள பேசும் கல்லின் அறிவியலைப் பற்றி நான் ஒரு காணொளியோ அல்லது அறிக்கையோ பார்த்ததில்லை! நம்மை முட்டாளாக்குவதற்காகவே இஸ்லாத்தை எது சிறந்ததாகத் தோன்றும்படிசெய்கிறதோ அதை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. முஹம்மது அறிவியலைப் பேசுகிறார் என்றால், அவர் சில சமயங்களில் சரியாகவும், சில சமயம் வெற்றுபீஸாகவும் இருந்தாரா? உண்மை என்னவென்றால், அவர் சரியானவை என்று சொன்னவற்றை, அவர் மற்ற மதங்களின் புத்தகங்களிலிருந்து எடுத்தார்.

கற்கள் பேசுகின்றன, மனிதர்களின் பாவங்களை எடுத்துக் கொள்கின்றன, கடவுளுக்காக வேலை செய்கின்றன என்ற இந்த எண்ணத்தை முஹம்மது எங்கிருந்து பெற்றார்?

நபித்துவம் யாஃகூப்பிலிருந்து

அனைத்து நபிகளும் யாஃகூப் (இஸ்ராயீல்) இருந்து வந்தவர்கள் என்று குர்ஆன் கூறுகிறது. அவர்களில் முஹம்மது ஒருவரா?

அல் குர்ஆன் 45:16:

> وَلَقَدْ ءَاتَيْنَا بَنِىٓ إِسْرَٰٓءِيلَ ٱلْكِتَٰبَ وَٱلْحُكْمَ وَٱلنُّبُوَّةَ وَرَزَقْنَٰهُم مِّنَ ٱلطَّيِّبَٰتِ وَفَضَّلْنَٰهُمْ عَلَى ٱلْعَٰلَمِينَ
>
> 45:16 நிச்சயமாக நாம், இஸ்ராயீலின் சந்ததியினருக்கு வேதத்தையும், அதிகாரத்தையும், நுபுவ்வத்தையும் கொடுத்தோம்; அவர்களுக்கு மணமான உணவு (வசதி)களையும் கொடுத்தோம் - அன்றியும் அகிலத்தாரில் அவர்களை மேன்மையாக்கினோம்.

நுபுவ்வத்துவம் - நபித்துவம்: நபிகள் பிறக்கும் வம்சம்.

1. முஹம்மது இஸ்ராயீல் (இஸ்ரவேல்) புத்திரர் அல்ல;

2. அல்லாஹ் இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளைகளையும் நபித்துவத்தையும் கொடுத்தான் என்று வசனம் தெளிவாகக் கூறுகிறது! இஸ்ரவேல் புத்திரர் என்றால் யாஃகூபின்(யாக்கோபின) பிள்ளைகள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஆதியாகமம் 32:28 (KJV): அவர் கூறினார், "உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே".

3. அல்லாஹ் இஸ்ரவேலைப் பற்றி மட்டுமே பேசுகிறான், அதனால்தான் அவர் அதிக விவரங்களைக் கொடுக்கவில்லை என்று முஸ்லிம்கள் கூறலாம். அந்த அத்தியாயத்தைப் படித்தால், முஹம்மதுவின் இறைவன் காரணமே இல்லாமல் இதில் குதித்தார் என்பது தெரியும்! யாஃகூபின் (இஸ்ரேலின்) பிள்ளைகளுக்கு மட்டும் நபித்துவம் இல்லை என்று அல்லாஹ் அறிந்திருந்தால், உண்மையில்லாத ஒன்றைச் சொல்வதில் என்ன பயன்? குறிப்பாக, மாபெரும் அலெக்சாண்டர் அல்லது இட்ரெஸ், சாலே அல்லது ஷுயேப் (அவர்களுடன் முஹம்மதுவையும்

சேர்த்து) இது போன்ற அரபியர் அல்லாத பலரை நபிகள் என்று முஸ்லிம்கள் நம்புவதினாலேயே. இதன் பொருள் அவர் உண்மையில் அவர்கள் மூலம் நபியை உருவாக்கவில்லை;

4. இது ஒரு முரண்பாடாக மட்டும் நிரூபிக்கப்படவில்லை, ஆனால் முஹம்மது ஒரு நபியாக இருக்க முடியாது என்பதையும் இது காட்டுகிறது, ஏனென்றால் அவர் இஸ்ரவேலைச் சேர்ந்தவர் அல்ல. அவர் உண்மையில் அவர்களின் மோசமான எதிரி;

5. நமது கருத்தை மேலும் தெளிவுபடுத்த, நாம் குர்ஆன் 29:27க்கு செல்ல வேண்டும்: மேலும் [இப்ராஹீமுக்கு] நாம் அவருக்கு இஸ்ஹாக்கையும், யஃகூபையும் கொடுத்தோம், மேலும் அவருடைய சந்ததியினரிடையே நபித்துவத்தையும் வஹீயையும்(வெளிப்பாடு) பிரத்தியேகமாக உருவாக்கினோம்...

6. முஸ்லீம்கள் தங்களுக்கு பிடித்த மொழிபெயர்ப்புடன் அவர்கள் விரும்பும் அளவுக்கு விளையாடலாம், ஆனால் இறுதியில், நபி எங்கிருந்து வர வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது; ஈஸாக்கு மற்றும் யாக்கோபின் (இஸ்ஹாக், யஃகூப்)சந்ததி;

7. விஷயங்களை தெளிவுபடுத்துவதற்கான மற்றொரு அத்தியாயம் குர்ஆன் 37:112-113:
112 இப்ராஹீமுக்கு, இஸ்ஹாக்கைப் பற்றிய நற்செய்தியை நாம் அவருக்கு வழங்கினோம், அவர் ஒரு நபி மற்றும் சட்டத்தை மதிக்கும் ஒருவர்,

113. நாம் அவரையும் ஈஸாக்கையும் ஆசீர்வதித்தோம், மற்றும் அவரது சந்ததிகளில் மற்றும் வம்சத்திலிருந்து தங்கள் சொந்த ஆன்மாவிற்கு கெட்டுப்போகாத நல்லவர் மற்றும் கெட்டவர் உண்டு .

8. இஸ்மாயீல் வயது முதிர்ந்தவராகவும், நபியாகவும் இருந்தால், அல்லாஹ் ஏன் அவருடைய பெயரை மறந்தான்? அல்லாஹ் இஸ்மாயீலின் பெயரை அங்கே வைத்திருந்தால் இந்த வசனம் இஸ்லாத்தின் நம்பிக்கையுடன் மிகவும் துல்லியமாக இருக்கும். இது மிகவும் எளிமையான கேள்வி, ஏன் இல்லை?

• இஸ்மாயில் மூத்தவர்;

• இஸ்மாயில் இஸ்லாத்தில் ஒரு நபி;

• முஹம்மது இஸ்மாயீலின் சந்ததியைச் சேர்ந்தவர் என்று முஸ்லிம்கள் கூறுகின்றனர். இந்தக் கூற்றில் எனக்கு சிறிதும் உடன்பாடு இல்லை, ஆனால் முஸ்லிம்களுடன் சென்று, இஸ்மாயீல்

முக்கியமென்றால், ஏன் அல்லாஹ், வசனத்திற்கு வசனம் தான் இருப்பதை மறந்து விடுகிறான்? ஆனால் பின்னர், "ஓ, இஸ்மாயீலும் ஒரு நபி!" என்று ஒரு வசனத்தை உருவாக்கினார்.

• என்னைப் பொறுத்தவரை, முஹம்மது இஸ்மாயிலிலிருந்து இருக்க முடியாது. துரதிர்ஷ்டவசமாக, சில கிறிஸ்தவர்கள் கூட அவர் இஸ்மாயீலை (இஸ்மவேல்)ச் சேர்ந்தவர் என்று நினைக்கிறார்கள், இது ஒரு பெரிய தவறு. தேவாலயங்களில் யாரோ சொன்னதைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். மிக எளிமையான விளக்கம் உள்ளது;

(அ) இஸ்மவேலுக்கு முன் அரேபியர்கள் இருந்தனர், அப்படியானால் அவர் எப்படி அவர்களின் தந்தையாக இருக்க முடியும்?

(ஆ) ஆபிரகாம்(இப்ராஹீம்) **அராமிக்**(Aramaic). ஹாகர் (இஸ்மாயீலின் தாய்) **எகிப்தியர்**. மகன் **அரேபியனா**?

(இ) முஸ்லிம்களின் புத்தகங்கள் கூட (இப்னு ஹிஷாம் எழுதிய அல்-சிரா அல்-நப்வியாவின் புத்தகம், தொகுதி. 1, ப.5) இஸ்மாயில் அவர்களின் மகள்களில் ஒருவரை ஜர்ஹோம் (அவள் பெயர் ரலாஹ், மகள்) திருமணம் செய்ததாகக் கூறுகின்றன. முஸ்லிம்களின் கூற்றுப்படி அம்ரோ அல்-ஜோஹ்ரிமி). ஜார்ஹோம் பழங்குடியினர் இஸ்லாத்திற்கு சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்தவர்களாக ஆனார்கள் (அல்-அகானி புத்தகம் 13:109). முஹம்மது அந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர் அல்ல, அதாவது அவர் இஸ்மவேலிலிருந்து இருக்க முடியாது;

(ஈ) கடவுள் தம்முடைய சந்ததியை வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போலவோ அல்லது கடல் கரையிலுள்ள மணலைப் போலவோ அதிகமாக்குவார் என்று பைபிள் சொல்லவில்லையா?

> ஆதியாகமம் 22:17: நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றார்.

(உ) ஆனால் இன்றைய உண்மையான அரேபியர்கள் (அரபு மொழி பேசுபவர்கள் அல்ல) எண்ணிக்கையில் 40 மில்லியன் கூட இல்லை என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். இந்தோனேசியர்கள் அரேபியர்களா? பாகிஸ்தானியர்கள் அரபியரா? அல்லது வேறு பல மக்களை நாம் பெயரிட முடியுமா? எனவே, இது மிகவும் தவறான தகவல் நமது சபைகளில் பரப்பப்படுகிறது. இதன் மூலம் முஸ்லிம்களுக்கு நாம் பொய்யை பரப்ப உதவுகிறோம். அதற்கு

மேல், முஹம்மது ஏன் இஸ்மாயிலின் சந்ததி என்று கூறப்பட விரும்பினார் என்று நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்! அவர் நபிகளின் தந்தையுடன் சட்டப்பூர்வ உறவையும் பரம்பரையையும் கொண்டிருக்க விரும்பியதால் தான், அப்படியிருந்தால்தான் அவர் ஒரு நியாயமான உரிமையை கோர முடியும் என்பதாலேயே;

(ஊ) முஹம்மது ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 55, ஹதீஸ் 596 இல் கூறினார்:
இப்னு உமரின் அறிக்கை: “கௌரவமான (honorable) மனிதர் கௌரவமான மனிதரின் மகன்; கௌரவமானவர் கௌரவமான இப்ராஹீமின் மகனான இஸ்ஹாக்கின் மகனான யாஃகூபின் மகனைப் பிரதிபலிக்கிறார்.”

(எ) இஸ்மாயீலின் பெயரை முஹம்மது கைவிட்டதை இங்கே கவனித்தீர்களா? இந்த ஹதீஸ் இன்னும் பல கேள்விகளுக்கு கதவுகளைத் திறக்கிறது என்பதே உண்மை!

1. முஹம்மதுவின் கூற்றுப்படி, மரியாதைக்குரியவராக இருக்க, நீங்கள் ஒரு மரியாதைக்குரிய நபரின் மகனாக இருக்க வேண்டும்! ஆனால் முஹம்மது தனது தந்தை மற்றும் தாய் இருவரும் காஃபிர்கள் என்பதை மறந்துவிட்டார், மேலும் அல்லாஹ் காஃபிர்களை அசுத்தம் என்று கூறினார்;

2. "கௌரவமான" என்ற வார்த்தைக்கு ஒரே மத அர்த்தம் மட்டுமே உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்;

3. மேலும், அந்த ஹதீஸில் இஸ்மாயீலின் பெயரை முஹம்மது ஒரு கௌரவமான மகனாகச் சேர்க்கவில்லை. குர்ஆன் 9:28ஐப் பாருங்கள்:
“முஃமின்களே, பல தெய்வ வழிபாடு செய்பவர் நிச்சயமாக அசுத்தமானவர் [அவர்கள்] அசுத்தமானவர்கள், அவர்களுடைய உள்ளக் கெட்ட குணங்களைக் கூறுவதால், இந்த வருடத்திற்குப் பிறகு அவர்களை புனித மசூதிக்கு அருகில் வர விடாதீர்கள்...!”

4. காஃபிர்களாக இருந்த தன் குடும்பத்தாரிடம் முஹம்மது பிரார்த்தனை செய்வதைப் பற்றி குரான் கூறியது இதுதான். குர்ஆன் 9:113: காஃபிர்களுக்கு அவர்கள் உறவினராக இருந்தாலும், அவர்கள் நரக நெருப்பின் மக்கள் என்பது தெளிவாகத் தெரிந்த பிறகு, அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரி பிரார்த்தனை செய்வது நபிக்கும், நம்பிக்கை கொண்டவர்களும் ஏற்றது அல்ல.

5. இந்த வசனம் பல விஷயங்களை நமக்குக் காட்டுகிறது. முஹம்மதுவின் குடும்பம் நரக நெருப்பில் உள்ளது, ஏனென்றால் அவர்கள் மரியாதைக்குரியவர்கள் அல்ல;

6. முஹம்மது ஒரு கௌரவமான மனிதராக இருக்க முடியாது, ஏனென்றால் அவர் தனது சொந்த வார்த்தையின்படி ஒரு மரியாதைக்குரிய மனிதனின் மகன் அல்ல. குர்ஆன், அல்லது அல்லாஹ், தன் பெற்றோரைப் போல் இருப்பவர், அசுத்தமாகவும் அழுக்காகவும் இருப்பதாகக் கூறியுள்ளது! இதை நாம் ஸஹீஹ் முஸ்லீம், புத்தகம் 001, ஹதீஸ் 0398 இல் பார்க்கிறோம்:

حَدَّثَنَا أَبُو بَكْرِ بْنُ أَبِي شَيْبَةَ، حَدَّثَنَا عَفَّانُ، حَدَّثَنَا حَمَّادُ بْنُ سَلَمَةَ، عَنْ ثَابِتٍ، عَنْ أَنَسٍ، أَنَّ رَجُلاً، قَالَ يَا رَسُولَ اللَّهِ أَيْنَ أَبِي قَالَ " فِي النَّارِ " . فَلَمَّا قَفَّى دَعَاهُ فَقَالَ " إِنَّ أَبِي وَأَبَاكَ فِي النَّارِ " .

அனஸ் தெரிவித்தார். "உண்மையாகவே, ஒரு நபர் கூறினார்: 'அல்லாஹ்வின் தூதரே, என் தந்தை எங்கே?' அதற்கு நபி கூறினார்: 'உன் தந்தை நரக நெருப்பில் இருக்கிறார்.' அவர் திரும்பிச் சென்றதும், அல்லாஹ்வின் தூதர் அவரை அழைத்து, 'நிச்சயமாக, என் தந்தையும் உங்கள் தந்தையும் நரக நெருப்பில் உள்ளனர்' என்று கூறினார்.

ஸஹீஹ் முஸ்லிம், புத்தகம் 004, ஹதீஸ் 2129:
அல்லாஹ்வின் தூதர் கூறியதாக அபு ஹுரைரா அறிவித்தார்: “என் தாயிடம் மன்னிப்புக் கேட்க நான் அல்லாஹ்விடம் அனுமதி கேட்டேன், ஆனால் அவர் அதை எனக்கு வழங்க மறுத்துவிட்டார். அவளுடைய கல்லறைக்குச் செல்ல நான் அவரிடம் அனுமதி கேட்டேன், அவர் அதை எனக்கு வழங்கினார்.”

• முஹம்மது தனது தாய் அல்லாஹ்வை நம்பாததற்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டார். அவர் தனது தந்தைக்காக மன்னிப்பு கேட்கவில்லை என்பதை நீங்கள் கவனித்தீர்களா? அவர் தனது உண்மையான அப்பாவை ஒருபோதும் சந்திக்கவில்லை, உண்மையில் அவர் யார் என்று அவருக்குத் தெரியாது. எப்படி அவருக்காக மன்னிப்பு கேட்க முடியும்? இங்கே சிலர், “முஹம்மதுவின் தந்தை அப்துல்லாஹ்” என்று கூறுவார்கள். இந்த புத்தகத்தில் வேறு இடத்தில் நாம் விவாதித்தது போல், உண்மை என்னவென்றால், அவரது தந்தை யார் என்று யாருக்கும் தெரியாது, ஏனென்றால் முகம்மது தனது தந்தை அப்துல்லாஹ் இறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தார்!. அவர் எப்படி தந்தையாக முடியும்?

• இஸ்லாத்தின் பாகுபாடு மற்றும் தப்பெண்ணம் என்னவென்றால், நீங்கள் அவர்களைச் சார்ந்தவராக இல்லாவிட்டால், நீங்கள் குப்பையாகவும் அசுத்தமாகவும் கருதப்படுவீர்கள்! சவூதி அரேபியாவில் உள்ள பல நகரங்களுக்குள் முஸ்லிம் அல்லாதவர்கள் நுழைய முடியாது, தெரியாமல் தவறுதலாகச் சென்றாலும் நீங்கள் கொல்லப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

"முஸ்லிம்கள் நியூயார்க்கிற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை, ஏனென்றால் அவர்கள்

சுத்தமாக இல்லை!" என்று ஒரு பலகை இருந்தால் கற்பனை செய்து பாருங்கள். கிறிஸ்தவர்கள் எவ்வளவு அசிங்கமானவர்கள் என்று எல்லோரும் சொல்வார்கள்! இதே நடவடிக்கைக்காக யாரும் முஸ்லிம்கள் மீது அதே குற்றச்சாட்டை முன்வைப்பதை நான் பார்க்கவில்லை!

யோவான் 3:16, பைபிள் கூறுகிறது:

> யோவான் 3:16 தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிற எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

கிறிஸ்துவின் வார்த்தைகளில், அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்காக மட்டுமல்ல, உலகத்திற்காகவும் அவர் தனது கரங்களை எவ்வாறு திறக்கிறார் என்பதை நாம் காண்கிறோம்.

மத்தேயு 5:44 கூறுகிறது:

> மத்தேயு 5:44 "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்."

சிவப்பு கீழ்-உள்ளாடைகளை திருடியதாக முஸ்லிம்களால் குற்றம் சாட்டப்படும் "கௌரவமானவர்" என்னும் முஹம்மதுவுடன் இதை ஒப்பிடுங்கள்! முஹம்மது குர்ஆனின் கட்டளைகளை ஏற்றுக்கொண்டதில்லை, தனது சொந்த ஹதீஸ் (ஒழுங்கு அல்லது பேச்சு) சொன்னது கூட செய்யவில்லை.

இஸ்மாயில் அரேபியர்?

முஹம்மது அரேபியர் - இஸ்மாயீலுமா?

இப்ராஹீம் **அராமியர்** + ஆகார் **எகிப்தியர்** = இஸ்மாயீல் **அரபியர்**?

பலர், நமது சபைகளில் கூட, இஸ்மாயீல் ஒரு அரேபியர் என்று கற்பிக்கிறார்கள், மேலும் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் தகவலை ஆராயாமல் இந்த கட்டுக்கதையை மீண்டும் விடுகிறார்கள். முஸ்லீம்கள் கூட தங்கள் புத்தகங்களில் அத்தகைய கூற்றைக் கூறவில்லை என்பதை நான் உங்களுக்குக் காட்டுகிறேன் (ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 55, ஹதீஸ் 583):

“ஜுர்ஹூம் கோத்திரத்தைச் சேர்ந்த சில சமூகமோஅல்லது ஜுர்ஹூம் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குடும்பமோ காடா சாலையின் வழியாக வரும்ப்பொது அவளையும் (இஸ்மாயீலின் தாய்) அவளுடைய குழந்தையையும்கடந்து செல்லும்வரை அவள் அப்படித்தான் வாழ்ந்தாள். அவர்கள் மெக்காவின் தாண்டிய பகுதியில் தரையிறங்கினார்கள், அங்கு அவர்கள் தண்ணீரைச்சுற்றி பறந்து செல்லும் பழக்கம் கொண்ட ஒரு பறவையைப் பார்த்தார்கள். 'இந்தப் பள்ளத்தாக்கில் தண்ணீர் இல்லை என்று நாங்கள் அனுபம்கொண்டிருந்தாலும் இந்தப் பறவை தண்ணீருக்கு மேல்தால் சுழன்று பறந்து கொண்டிருக்க வேண்டும்' என்றாரகள். அவர்கள் ஓரிரு தூதுவர்களை அனுப்பி, நீரின் ஆதாரத்தைக் கண்டுபிடித்து, தண்ணீரைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கத் திரும்பினர். எனவே, அவர்கள் தண்ணீரை நோக்கி நகர்ந்தார்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "இஸ்மாயீலின் தாயார் தண்ணீருக்கு அருகில் அமர்ந்திருந்தார். அவர்கள் அவளிடம், 'எங்கள் கூடாரங்களை இங்கே வைக்க அனுமதிக்கிறீர்களா? அவள் ஆம் என்று பதிலளித்தாள், ஆனால் தண்ணீரைச் சொந்தமாக்க உங்களுக்கு உரிமை இல்லை.’ அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்." மேலும் நபியவர்கள் கூறினார்கள், இஸ்மாயீலின் தாயார், மக்களின் சகவாசத்தில் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவதால், நிலைமையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். எனவே, அவர்கள் அங்கு குடியேறினர், பின்னர் அவர்கள் தங்கள் குடும்பங்களை அனுப்பினார்கள். அவர்களுடன் வந்து குடியேறினர், இதனால் சில குடும்பங்கள் அருகிலேயே நிரந்தரமாக குடியிருந்தன.குழந்தை (இஸ்மாயீல்) அவர்களிடையே வளர்ந்து, அவர்களிடமிருந்து (ஜுர்ஹூம் மக்கள்) அரபு மொழியைக் கற்றுக்கொண்டார், மேலும் அவர் வளர்ந்ததும் அவர்கள் அவரை விரும்பினர். அவர்களில் இருந்து ஒரு பெண்ணை அவருக்கு மணமுடித்தார்கள்.

1. "குழந்தை (இஸ்மாயீல்) அவர்களிடையே வளர்ந்தார் மற்றும் அவர்களிடமிருந்து (ஜுர்ஹும் மக்கள்) அரபு மொழி கற்றார்";

2. அவன் அரேபியன், ஆனால் அவனுக்கு அரபு மொழி தெரியாது!

3. அவர் அவர்களில் ஒரு பெண்ணை மணந்தார், இது அவரது குழந்தைகளை அரேபியர்களாக ஆக்குகிறதா?

4. பதில் இல்லை. அரபு பாரம்பரியத்தில் நீங்கள் தாய்க்கு அல்ல தந்தைக்கு சொந்தமானவர். மேலும் கதையைச் சொல்லுபவர்கள் அரேபியர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்;

5. இதன் பொருள் ஆபிரகாம் மற்றும் இஸ்மாயிலின் தாய் இருவரும் அரபு மொழி பேசாதவர்கள். அதனால்தான் அவர் அதை ஜுர்ஹும் பழங்குடியினரிடமிருந்து கற்றுக்கொண்டார். நாம் அல்-ஃபதே புத்தகத்தில், தொகுதி. 6, ப. 403, (அல்-ஹஃபீஸ் இபின் 'ஹஜர், பெய்ரூட் லெபனானில் அச்சிடப்பட்டது, 1991) வாசிக்கிறோம்:

(قال الحافظ ابن حجر في الفتح(6/403
(قوله (وتعلم العربية منهم
فيه اشعار بأن لسان أمه وأبيه لم يكن عربيا

அவர் கூறினார், "அவர்(இஸ்மாயீல்) அவர்களிடமிருந்து (ஜுர்ஹும்) அரபு மொழியைக் கற்றுக்கொண்டார், இது இஸ்மாயீல் தாய் மற்றும் தந்தை இருவருக்கும் அரபு தெரியாது என்பதை நமக்குத் தெரிவிக்கிறது" • பிறகு இஸ்மாயீல் அரபு மொழி பேசத் தொடங்கியபோது அவருக்கு எவ்வளவு வயது? இதற்கான பதிலை பல இஸ்லாமிய புத்தகங்களில் காண்கிறோம்.

அலி (முஹம்மதுவின் உறவினர்) அவர்களிடமிருந்து அவரது சொந்த வார்த்தைகளில் கண்டுபிடிப்போம். சாஹி அல்-ஜேம் புத்தகம், தொகுதி. 1, ப. 435, ஹதீஸ் 2581:

அலி (முஹம்மதுவின் பெரியப்பா மகன்) அவர்களிடமிருந்து அவரது சொந்த வார்த்தைகளில் கண்டுபிடிப்போம். சாஹி அல்-ஜேம் புத்தகம், தொகுதி. 1, ப. 435, ஹதீஸ் 2581:

أول من فتق لسانه بالعربية المبينة إسماعيل و هو ابن أربع الجزء الأول ص -
435عشرة سنة
. الشيرازي في الألقاب) عن علي)
قال الشيخ الألباني : (صحيح) انظر حديث رقم : 2581 في صحيح الجامع

அவர் கூறினார், "முதன்முதலில் சரியான அரபியை பேசியவர் இஸ்மாயீல் மற்றும் அவர் பதினான்கு வயதில் அதை பேசினார்." மேலும் இது சரியான ஹதீஸ் என்று இமாம் அல்பானி கூறினார்.

இதன் அடிப்படையில், இஸ்மாயீல் அரபு பரம்பரையைச் சேர்ந்தவர் அல்ல என்பதை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்கிறார்கள்; அவரது பெற்றோர், தாய் மற்றும் தந்தை இருவரும் அரேபியர்கள் அல்ல; அவர்கள் இருவருக்கும் அரபு மொழி தெரியாது; அரேபியர்களிடம் அரபு மொழி கற்றார்; பதினான்கு வயதில் அவர் அதைப் பேசினார் - என்றால் அது அவரை எப்படி அரேபியனாக ஆக்குகிறது!

நாம் கேட்க வேண்டிய முக்கியமான கேள்வி என்னவென்றால், ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதன் மூலம் ஒருவரின் இனக்குழு மாறுமா? நிச்சயமாக அது கேலிக்குரியது. அல்லாஹ் இஸ்மாயீலை அரபியின் முதல் மனிதனாக ஆக்கினான் என்று சிலர் கூறலாம். ஆனால் நாம் அது தவறு என்று அவர்களின் சொந்த புத்தகங்களிலிருந்து எடுத்து நிரூபித்துள்ளோம், அவர் ஜுர்ஹும் பழங்குடியினரிடமிருந்து அரபு மொழியைக் கற்றுக்கொண்டார் என்று! ஆனால் ஒரு வாதத்திற்காக, அல்லாஹ் அவனுக்கு அரபு மொழியைக் கற்றுக் கொடுத்தாலும், அது அவனை அரேபியனாக மாற்றவில்லை.

முஹம்மதுவின் கூற்றுப்படி யாரை அரேபியர் என்று அழைக்கலாம்?

அல்-காஸாவின் எல்-குப்ரா, ஆசிரியர் அல்-சியூட்டி, பெய்ரூட் லெபனான் 1985, தொகுதி. 1, ப. 66:

الكتاب : الخصائص الكبرى
المؤلف / أبو الفضل جلال الدين عبد الرحمن أبي بكر السيوطي
دار النشر / دار الكتب العلمية - بيروت - 1405هـ - 1985م.
عدد الأجزاء / 1
قال رسول الله {صلى الله عليه وسلم} إن الله خلق الخلق فاختار من الخلق بني آدم واختار من بين آدم العرب واختار من العرب مضر واختار من مضر قريشا واختار من قريش بني هاشم واختارني من بني هاشم فأنا من خيار إلى خيار

நபி கூறினார்: "அல்லாஹ் தனது படைப்பைப் படைத்து, அவர்களிடமிருந்து ஆதாமின் மகன்களைத் தேர்ந்தெடுத்தான், ஆதாமின் மகன்களிடமிருந்து அரேபியரை தேர்ந்தெடுத்தான், அரேபியரிடம் இருந்து முடாரை (பழங்குடி) தேர்ந்தெடுத்தான், முடாரில் இருந்து ஹாசிமின் (குலம்) மகன்களைத் தேர்ந்தெடுத்தான், மற்றும் ஹாஷிமிடமிருந்து, அவர் மிகச்சிறந்த என்னைத் தேர்ந்தெடுத்தார்,."

முஹம்மதுவின் சொந்த வார்த்தைகளிலேயே தெளிவான ஆதாரத்தை இங்கே காண்கிறோம், அது
அல்லாஹ் மனிதர்களை எவ்வாறு பிரித்தார் என்பது பற்றியது, மொழிகளால் அல்ல, இனக்குழுக்கள் மற்றும் பழங்குடியினராக. அரேபிய மொழியில் "இபன்" என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுவதை நீங்கள் கவனிப்பீர்கள், அதாவது "மகனாகிய" என்று அர்த்தம். மேலே சொல்லப்பட் ஹதீஸில், அல்லாஹ் மொழியால் அல்ல, "மகன்" மூலம் தேர்ந்தெடுத்தான்; அவர்கள் பேசும் மொழியை விட ஓடும் இரத்தம் மூலம். அரேபியராக இருப்பது அரபு மொழி பேசுபவர் மட்டுமல்ல, அரேபிய தந்தையிடமிருந்து வந்தவராயிருக்கவேண்டும் என்பதை இது நிரூபிக்கிறது. எல்லா பெயர்களிலும், நீங்கள் யார் என்பதை நிரூபிக்க தந்தை மட்டுமே பயன்படுத்தப்படுவார். உங்கள் தந்தை யார் என்று தெரிந்தவரைக்கும், தாய் பெயர் அல்ல, தந்தையே.

எனவே, இஸ்மாயீலை அரபு என்று அழைக்க முடியாது, ஏனென்றால் அவர் சில சமயங்களில் அரபு மொழி பேசினார், அரபு பாரம்பரியத்திலோ அல்லது இஸ்லாமிய சட்டத்திலோ நாம் மேலே வழங்கிய குறிப்பில் கூறியது போல் முஹம்மது இல்லை.

ஆனால் முஹம்மது தன்னை இப்ராஹீமின் வித்தில் ஒருவராக ஆக்குவதற்காக இஸ்மாயிலுடன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது, அதன்மூலம் அவரை ஒரு நபியாக ஏற்றுக்கொள்ளும்படியாக.

மேலும் ஒரு தகவல். இஸ்மாயிலின் பன்னிரண்டு மகன்களும் அராமியக் பெயர்களால் அழைக்கப்பட்டனர். ஆனால் அவன் அரேபியன்?

ஆதியாகமம் 25:12-15 (பைபிள்)

12. சாராளுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்துதேசத்தாளான ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரனாகிய இஸ்மவேலின் வம்சவரலாறு:
13. பற்பல சந்ததிகளாய்ப் பிரிந்த இஸ்மவேலின் புத்திரருடைய நாமங்களாவன; இஸ்மவேலுடைய மூத்த மகன் நெபாயோத்; பின்பு கேதார், அத்பியேல், மிப்சாம்,
14. மிஷ்மா, தூமா, மாசா,
15. ஆதார், தேமா, யெத்தூர், நாபீஸ், கேத்மா என்பவைகளே.

இஸ்மவேலும் அவருடைய மகன்களும் எங்கே வாழ்ந்தார்கள்? ஆதியாகமம் 25:16-18

ஆதியாகமம் 25:16-18 (பைபிள்)

16. தங்கள் கிராமங்களிலும் அரண்களிலும் குடியிருந்த தங்கள் ஜனத்தாருக்குப் பன்னிரண்டு பிரபுக்களாகிய இஸ்மவேலின் குமாரர்கள் இவர்களே, இவர்களுடைய நாமங்களும் இவைகளே.

17. இஸ்மவேலின் வயது நூற்று முப்பத்தேழு. பின்பு அவன் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

18. அவர்கள் ஆவிலா துவக்கி எகிப்துக்கு எதிராக அசீரியாவுக்கு போகிற வழியிலிருக்கும் **சூர்**மட்டும் வாசம்பண்ணினார்கள். இது அவன் சகோதரர் எல்லாருக்கும் முன்பாக அவன் குடியேறின பூமி.

சூர்(Shur) எங்குள்ளது என்பதை நீங்களே பார்க்க விரும்பினால், இந்த தளத்தைப் பார்வையிடவும், அது செங்கடலின் மறுபுறத்தில் இருப்பதையும், மெக்காவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதையும் நீங்கள் காண்பீர்கள்: https://www.bible.ca/archeology/bible-archeology-exodus-route-wilderness-of-shur-ishmaelites-midianites-amalekites.htm

ஒழுக்கமான முஹம்மது

முஹம்மதுவும் ஒழுக்கமும்

(முஹம்மது அனைத்து முஸ்லிம் பெண்களுடனும் படுக்க தயாராக இருக்கிறார்)

ஜேம் அல்சாகர் புத்தகத்தில் (இமாம் அல்-சோயுத்தி), ஹதீஸ் 2994, முஹம்மது கூறினார்:

الجامع الصغير للسيوطي حديث رقم 2994
عن معاذ قال النبي صلعم أيما امرأة زوجت نفسها من غير ولي فهي زانية.

எந்தப் பெண்ணும், தன் தந்தையின் அனுமதியின்றி, அல்லது வீட்டின் ஆணின் அனுமதியின்றி, ஒரு ஆணுக்குத் தன்னைத் திருமணம் செய்யக் கொடுத்தால், அவள் ஒரு விபச்சாரி!

இதை நாம் படிக்கும் குர்ஆன் 33:50 உடன் ஒப்பிடுவோம்:

... மேலும் ஒரு முஃமினான பெண் தன்னை நபியிடம் (அவனுடன் படுக்க) ஒப்புக்கொடுத்தால், மேலும் நபி அவளை விரும்பினால், அவனுக்கு “உனக்காக மட்டுமே ஒரு சிறப்புரிமை உண்டு” (எனவே முஹம்மதுவுக்குப் பிறகு வேறு எந்த ஆணும் அவளுடன் படுக்க முடியாது) ...

1. ஒரு ஆணுக்குத் தன்னை திருமணத்துக்கு கொடுக்கும் பெண் எப்படி வேசியாக இருக்க முடியும்? அதே சமயத்தில் முஹம்மதுவுக்குத் தன்னைக் கொடுக்கும் பெண் எப்படி நல்ல பெண்ணாக இருக்க முடியும்?

2. ஒரு பெண் ஏன் அதை செய்வாள்? முஸ்லீம் பெண்கள் அல்லாஹ்விடம் தங்கள் அன்பைக் காட்ட முஹம்மதுவுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள விரும்பினார்களா?

3. முஹம்மதுவின் இறைவன் அதை ஏன் குர்ஆனில் கட்டளையாக உருவாக்குகிறான்? முஸ்லீம்கள் மற்றும் அரேபியர்களுக்கு முன்னால் இது மிகவும் மோசமான காரியமாக காணப்பட்டதால், முஹம்மதுக்கு தனது பொய்யான இறைவனிடமிருந்து ஒரு வசனம் தேவைப்பட்டது, அதுவும் அது தனது இறைவனின் விருப்பம், அவரது சொந்த விருப்பம் அல்ல என்று ஏன் உருவாக்க வேண்டும்? அவரடைய இறைவனின் விருப்பமா, அவருடைய சொந்த

ஆசையா? (கொஞ்சம் யோசியுங்கள்)

4. “அல்லாஹ்வின் விருப்பம் என்றால்” நாம் ஏன் என்று கேட்க வேண்டாமா? முஹம்மதுக்கு முஸ்லிம்கள் சொல்வதுபோல் பல மனைவிகள் இருந்தனர். பதின்மூன்று மனைவிகள்! (13) மற்றும் அவர் விரும்பும் அனைத்து அடிமைகளும் போதுமானதாக இல்லையா? அவர் இன்னும் பாலியலில் முரட்டாயுள்ள (sexually agressive) பெண்களை வைத்திருக்க விரும்பவேண்டியது என்ன?

5. பெண்கள் தங்களை முஹம்மதுவிடம் கொடுக்க(அர்ப்பணிக்க) என்பதைப் பற்றி முஸ்லீம்களிடம் கேட்டால், “முஹம்மதுவிடம் தங்களை திருமணம் செய்து கொள்ளுமாறு பெண்கள் கேட்கிறார்கள்” என்று மொழிபெயர்க்கிறார்கள்! அவர்களின் பொய்களை அம்பலப்படுத்த, முஹம்மதுவின் 13 மனைவிகளில் ஒருவரான ஏதேனும் ஒரு பெண் தானாக முன்வந்து, தன்னை அவருக்குக் கொடுத்து, அவருக்கு மனைவியாக மாறினாள் என்றால் அவள் பெயரை எனக்குச் சொல்லுங்கள்! அவர்களின் பதில் பூஜ்ஜியமாக இருக்கும். முஹம்மதுக்கு தன்னைக் கொடுத்தவர்களில் அவருடைய மனைவிகளில் ஒருவர் கூட இல்லை. இது திருமணத்தைப் பற்றியது அல்ல என்பதற்கு இதுவே சான்று. இது செக்ஸ் பற்றியது, மற்றும் செக்ஸ் மட்டுமே! ஆயிஷா (முஹம்மதுவின் சிறுமி-மனைவி) மற்றும் முஹம்மதுவின் இச்சையைப் பற்றி தனது கோபத்தை எப்படி வெளிப்படுத்தினார் என்பதைப் பார்ப்போம். ஆயிஷா சொன்னதை என்னுடன் படியுங்கள். முஸ்லீம்கள் மொழிபெயர்ப்புடன் விளையாடி அவள் சொன்னவற்றின் உண்மையான அர்த்தத்தை மாற்ற முயற்சிக்கின்றனர். இங்கே நாம் ஸஹீஹ் முஸ்லீம், புத்தகம் 60, ஹதீஸ் 311ல் இருந்து படிக்கிறோம்:
ஆயிஷா அவர்கள் கூறியதாவது: “அல்லாஹ்வின் நபிக்கு தங்களை ஒப்புக்கொடுத்த பெண்களை நான் கீழ்நோக்குப்பார்வையோடு பார்த்தேன். மேலும் நான் சொன்னேன் ‘ஒரு பெண் தன்னைத்தானே (உடலுறவுக்காக ஒரு மனிதனிடம்) அர்ப்பணிப்பவள் தன்னைக்குறித்து வெட்கப்படாமல் இருப்பது எப்படி?’ ’’

6. இது சாதாரணமாக திருமணமாக இருந்தால், 'ஆயிஷா ஏன் இப்படிச் சொல்கிறார்? ஆணுக்குத் தன்னைக் கொடுக்கும் பெண்ணை வேசி என்று சொன்னவர் முஹம்மது என்பதை நினைவில் வையுங்கள்!

இதே கதையை நாம் இந்த புத்தகங்களில் படிக்கலாம்:
சாஹிஹ் முஸ்லிம், முலை-உண்ணுதல் புத்தகம், பி. 1065 ஹதீஸ் 49 (அல்லது)
சாஹிஹ் அல்-புகாரி, விளக்கம் புத்தகம், அத்தியாயம் அஹ்சாப் ஃபுல். ப, பி. 118, 163, 164:

صحيح مسلم، كتاب الرضاع، ص 1065، الحديث 49.

صحيح البخاري ، كتاب التفسير ، باب ال
تفسير ، تفسير سورة الأحزاب ، 3 / 118
/ صحيح البخاري ، كتاب النكاح ، باب هل للمرأة أن تهب نفسها ، 3
كانت خولة بنت حكيم من اللاتي وهبن أنفسهن للنبي صلى الله عليه وآله . فقالت
عائشة : أما تستحي المرأة أن تهب نفسها للرجل ، فلما نزلت ترجي من تشاء منهن
. قلت : يا رسول الله صلى الله عليه وآله ما أرى ربك 164

உமைமா பின்த் அந்-நுமான் பின் ஷராஹிலை முஹம்மது கற்பழிக்க முயன்றார். இந்த பெண் அல் நுமானின் மகள், அவர் தனது ராஜ்ஜியத்தில் மக்களின் ஆட்சியாளர். ஆனால் முஹம்மதுவின் இராணுவம் வளர்ந்து வந்ததால், அவரது பழங்குடியினர் முஹம்மதுவின் கட்டளையின் கீழ் வந்தனர். முஹம்மதுவை “இல்லை” என்று சொல்ல ஒருவருக்கு எப்படி தைரியம் வரும்? ஆனால் அவள் மிகவும் தைரியமானவள், “இல்லை, முடியாது” என்று சொன்னாள்.

நீங்கள் குரானைப் பார்த்தால், "ஒரு பெண் தன்னை நபிக்குக் கொடுத்தாள்" என்று கூறுகிறது, ஆனால் முஹம்மது அத்துடன் நிறுத்த முடியவில்லை. அவருக்கு எல்லாப் பெண்களும் இருந்தபோதிலும், அவருக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள் இருந்தபோதிலும், அது போதவில்லை. ஏனென்றால் தன்னால் முடிந்தவரை கற்பழிக்க அவர் வெட்கப்படவில்லை!

ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. எச், புத்தகம் தா, ஹதீஸ் 182:

صحيح البخاري ، كتاب التفسير ، باب ال
تفسير ، تفسير سورة الأحزاب ، 3 / 118
/ صحيح البخاري ، كتاب النكاح ، باب هل للمرأة أن تهب نفسها ، 3
كانت خولة بنت حكيم من اللاتي وهبن أنفسهن للنبي صلى الله عليه وآله . فقالت
عائشة : أما تستحي المرأة أن تهب نفسها للرجل ، فلما نزلت ترجي من تشاء منهن
. قلت : يا رسول الله صلى الله عليه وآله ما أرى ربك 164

ஸஹீஹ் புகாரி ஜாமியா அல்-சாஹி அல்-முக்தாசர் புத்தகம், 1987 அச்சிடுதல், தொகுதி. I, ஹதீஸ் 4957:

[صحيح البخاري]
الكتاب : الجامع الصحيح المختصر
المؤلف : محمد بن إسماعيل أبو عبدالله البخاري الجعفي
الناشر : دار ابن كثير ، اليمامة - بيروت
الطبعة الثالثة ، 1407 - 1987
تحقيق : د. مصطفى ديب البغا أستاذ الحديث وعلومه في كلية الشريعة - جامعة دمشق
عدد الأجزاء : 6

Sahih Al-Bukhari Kitab Jami' Al-Sahih Al-Mu'khtaser, 1987 printing, Vol. 6, Hadith 4957:

4957 دَخَلَ عَلَيْهَا النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ هَبِي نَفْسَكِ لِي قَالَتْ وَهَلْ **تَهَبُ الْمَلِكَةُ نَفْسَهَا لِلسُّوقَةِ** قَالَ فَأَهْوَى بِيَدِهِ يَضَعُ يَدَهُ عَلَيْهَا لِتَسْكُنَ فَقَالَتْ أَعُوذُ بِاللَّهِ مِنْكَ فَقَالَ قَدْ عُذْتِ بِمَعَاذٍ ثُمَّ خَرَجَ عَلَيْنَا فَقَالَ يَا أَبَا أُسَيْدٍ اكْسُهَا رَازِقِيَّتَيْنِ وَأَلْحِقْهَا بِأَهْلِهَا

ஸஹீஹ் அல் புகாரி, தொகுதி. எச், புத்தகம் தா, ஹதீஸ் 182:

நபி அவளிடம் நுழைந்து, அவளிடம், “உன்னை நீயே எனக்குக் கொடு! (அவளுடன் படுக்க)” என்று கையை நீட்டினான். அதற்கு அவள், “நான் ஒரு ராணி, ஒரு காட்டுமிராண்டி மனிதனுக்கு எப்படித் தன்னைக் கொடுக்க முடியும்?" என்று சொன்னாள். நபி தன் கையை உயர்த்தி அவளை அடிக்கும்படி சொன்னார். அவள், "நான் உன்னிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்" என்றாள். நபி, "உன்னை மீட்கக்கூடிய ஒருவனிடம் நீ அடைக்கலம் தேடினாய்" என்றார்.

இதே கதையை அல்-சிரா புத்தகம், தொகுதி உட்பட பல இஸ்லாமிய புத்தகங்களிலும் காணலாம். 4, ப. 588/599, பெய்ரூட், 1952; மற்றும் தஃப்சீர் அல்-குர்துபி, தொகுதி. 14, பக். 167, பெய்ரூட், 1973.

நான் அரபு மற்றும் ஆங்கில வாசகத்தை **தடிமனாகப்** போட்டேன், அங்கு அவள் அவனிடம், “நான் ஒரு ராணி, **தன்னை ஒரு காட்டுமிராண்டித்தனமான மனிதனுக்கு எப்படிக் கொடுக்க முடியும்**?" முஸ்லிம்கள் இந்த வெட்கக்கேடான ஹதீஸை மறைக்க முயல்கிறார்கள், வார்த்தைகளை மாற்றி, அவர் அவளை திருமணம் செய்து கொள்ளச் சொன்னது போல் தோன்றவைக்கின்றனர், அவளிடம் உடலுறவு கேட்டபோது, அவள் அவனை **காட்டுமிராண்டி** என்று அழைத்தாள். இது சஹிஹ்-ஹதிஸ்!

1. இந்த சம்பவத்தில் பாலுறவுக்கு அடிமையான மனிதனாகிய, அல்லாஹ்வின் நபி, எங்கு

நிறுத்தலாம் அல்லது நிறுத்த வேண்டும் என்பதற்கு எந்த எல்லையும் இல்லாமல் இருந்தார் என்பதை காண்கிறோம். இந்த ஹதீஸைப் படித்ததால், அவர் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறார் என்று பாருங்கள். தன்னைப் பரிசாகக் கொடுக்க! அவள் அதை ஒரு பெரிய அவமானமாக எடுத்துக் கொண்டாள் என்பது தெளிவாகிறது. தன்னை மதிக்கும் எந்த ஒரு பெண்ணுக்கும் இது ஒரு பெரிய அவமானம். ஒரு ஆண் இதுவரை சந்திக்காத ஒரு பெண்ணின் வீட்டிற்குள் நுழைவதை கற்பனை செய்து பாருங்கள். விநோதமான பெண்ணின் வீட்டிற்குள் ஆண் ஒருவர் நுழைந்து, அவளிடம் உடலுறவு கொள்ள அன்பளிப்பாகக் கேட்பது இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமா என்று நாம் எந்த முஸ்லிமிடமும் கேட்டால், "**நிச்சயம் முடியாது, அது தவறு!**" என்பர். ஆனால் முஹம்மதுக்கு அது பரவாயில்லை! இன்று முஹம்மதுவை விட முஸ்லிம்களுக்கு அதிக ஒழுக்கம் உள்ளது என்பது தெளிவாகிறது. முஹம்மது அன்று செய்ததை இன்று செய்ய முயற்சித்தால், அரேபியர்கள் முன்பு செய்தது போல் அவருடன் சண்டையிடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

16 விஷயங்களில் நபி அனைத்து மனிதர்களையும் விட முன்னுரிமை கொண்டார்:

அல்-குர்ஆனின் விளக்கம் (அல்-காமா அல்-அஹ்காம், அல்-குர்ஆன்) இமாம் அல்-குர்'தாபி, பெய்ரூட், 1992, தொகுதி. 14, பி. 212

(تفسير الجامع لاحكام القرآن/ القرطبي (ت 671 هـ

فجملته ستة عشر: الأوّل: صَفِيّ المغنم. الثاني: الاستبداد بخمس الخمس أو الخمس. الثالث: الوصال. الرابع: الزيادة على أربع نسوة. الخامس: النكاح بلفظ الهبة. السادس: النكاح بغير وليّ. السابع: النكاح بغير صداق. الثامن: نكاحه في حالة الإحرام. التاسع: سقوط القَسْم بين الأزواج عنه؛ وسيأتي. العاشر: إذا وقع بصره على امرأة وجب على زوجها طلاقها؛

16 விஷயங்களில் முஹம்மதுக்கு சிறப்புரிமை:

1. கொள்ளையடித்ததில் சிறந்தவை;
2. கொள்ளையடித்ததில் சிறந்தவைகளில் ஐந்தில் ஒன்று பங்கு;
3. உடலுறவின் மூலம் அடைவது (திருமணம் செய்யாமல் எந்தப் பெண்ணுடனும்);
4. மனைவிகள் அதிகரிப்பு: நான்கு மனைவிகளுக்கு மேல்!
5. சொல்லின் மூலம் செக்ஸ் (தங்களையே வழங்கும் பெண்கள்), ஒரு பரிசாக!
6. பாதுகாவலர் (பெற்றோர் அல்லது வளர்த்தவர்) இல்லாத திருமணம்;
7. வரதட்சணை இல்லாத திருமணம்;
8. இஹ்ராம் விஷயத்தில் திருமணம் (ஹஜ் செல்லும்போதும் உடலுறவு கொள்ளக்கூடிய ஒரே முஸ்லிம் முஹம்மது மட்டுமே)!

9. தன் மனைவிகளுடன் சத்தியம் செய்தால் அதை மீறலாம்!
10. திருமணமான ஒரு பெண்ணின் மீது அவனது பார்வை விழுந்தால், அவளுடைய கணவன் அவளை விவாகரத்து செய்ய வேண்டும், அதன்மூலம் அவர் அவளை அடையும்படி!

நாம் இத்துடன் நிறுத்தி, மனிதகுலத்தை விட மேலான முஹம்மதுவின் பத்து விஷயங்களைப் பார்ப்போம்:

1. செக்ஸ் (பாலியல்) மற்றும் பணம் ஆகிய இரண்டு விஷயங்களைப் பற்றி அல்லாஹ் அவருக்குச் சாதகமாக இருந்ததைக் கவனியுங்கள்!

2. அல்லாஹ்வின் எல்லா கட்டளைகளுக்கும் மேலாக முஹம்மது இருக்கிறார். முஸ்லீம்கள் கூறுவது போல், அல்லாஹ் மனித குலத்திற்கு கொடுத்த கட்டளைகள் சரியானது என்று கருதப்படுகிறது, ஆனால் அந்த விதிகள் முஹம்மதுக்கு ஏற்றவை அல்ல என்பது தெளிவாகிறது. அவருக்கு இன்னும் கூட தேவை!

3. எல்லா சட்டத்திற்கும் மேலாக அல்லாஹ்வும் முஹம்மதுவும் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் சட்டம் இரண்டு வழிகளில் உருவாக்கப்பட்டது. ஒன்று முஸ்லீம்கள் கடைபிடிக்கவேண்டும், மற்றொன்று முஹம்மதுக்கு அனுகூலமாக இருக்கும்படியாக. இது முஹம்மதுவை அனைத்து மனிதர்களுக்கும் மேலாக ஆக்குகிறது. இது குர்ஆன் 49:13க்கு முரணானது: மனிதர்களே! நாம் உங்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்து, நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களை நாடுகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். இதோ, உங்களில் சிறந்தவர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவர். அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன்.

• எனவே “அல்லாஹ்வின் விதிகளுக்குக் கீழ்ப்படிபவரே சிறந்தவர்”. இருப்பினும் நாம் பார்ப்பது போல், முஹம்மது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியவில்லை. குரான் நான்கு மனைவிகள் என்று சொன்னது, ஆனால் முகம்மது தான் விரும்பும் எத்தனைபேரையும் திருமணம் செய்து கொள்கிறார்!

• சட்டப்பூர்வமான திருமணத்திற்கு ஒரு பெண்ணிடம் கேட்க ஒரு பாதுகாவலர் தேவை என்று அல்லாஹ் கூறினான். முஹம்மதுவுக்கு அது பிடிக்கவில்லை;

• குர்ஆன் படி பெண்களை திருமணம் செய்ய பணம் கொடுக்க வேண்டும். முஹம்மது பெண்களை இலவசமாக விரும்பினார்!

• திருமணமான பெண்களின் பின்னால் செல்ல வேண்டாம் என்று ஆண்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டான், ஆனால் முஹம்மது திருமணமான பெண்ணை விரும்பினால், அந்த ஆண்கள் தங்கள் மனைவிகளை விவாகரத்து செய்துவிட்டு வெளியேறும்படி

கட்டளையிட்டார். ஆம், அவள் திருமணமாவளாயிருந்தாலும் சரி!

• இவை அனைத்திற்கும் பிறகு, அவர் சிறந்த மனிதர்; மற்றும் நபி!

• இயேசு மத்தேயு 5:28 இல் கூறினார்:

> மத்தேயு 5:28
> நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று.

• கிறிஸ்துவின் போதனைகளுடன் முஹம்மது எங்கே?

முஹம்மதுவின் மரணம்

முஹம்மதுவின் மரணம் அவர் ஒரு பொய்யான நபி (தீர்க்கதரிசி) என்பதை நிரூபித்தது.

உண்மையான கடவுளைப் பற்றி பொய் சொல்பவருக்கு அல்லாஹ்வின் தண்டனை:
...நம்மைப் (அல்லாஹ்) பற்றி பொய்யான வாசகத்தை உருவாக்கி விட்டால் நிச்சயமாக நாம் அவனுடைய உயிர் தமனியை (இதய-நாளத்தை) துண்டித்திருப்போம்...

இந்நிலையில், முஹம்மது ஒரு பொய்யான நபி என்று குர்ஆனில் இருந்து அற்புதமான ஆதாரத்தை குரான் 69 இல் காண்போம். அவரைப் பற்றி பொய் சொல்பவரின் உயிர் தமனியை (இதய-நாளத்தை) துண்டித்து விடுவார் என்று அல்லாஹ் கூறுகிறான்.

தயவு செய்து என்னுடன் படிக்கவும், குர்ஆன் 69:44-47:

69:44-47
44. மேலும் அவர் (முஹம்மது) நம்மைப் (அல்லாஹ்) பற்றி போலியான அறிக்கையை வைத்திருந்தால்,
45. நிச்சயமாக நாம் நமது வலது கையால் (விசையினாலும் பலத்தினாலும்) அவரைப் பறிமுதல் செய்திருப்போம்.
46. பின்னர் நாம் நிச்சயமாக அவருடைய உயிர்த் தமனியை (இதய-நாளத்தை) துண்டித்திருப்போம்,
47 அவரைத் தண்டிப்பதில் இருந்து உங்களில் எவராலும் தடுக்க முடியாது.

இது அல்லாஹ்வின் வாக்குறுதி, , தன்னைப் (அல்லாஹ்வை) பற்றி பொய் சொல்பவரை ஒரு குறிப்பிட்ட முறையில் கொல்வது. பொய்யான வார்த்தைகளை கூறுபவர்களை கொல்ல அல்லாஹ் தீர்மானித்தது போல் முஹம்மது இறக்காமல் இருந்திருந்தால் எல்லாம் சாதாரணமாக தோன்றியிருக்கும்!

ஸஹீஹ் அல்-புகாரியின் புத்தகத்தில், முஹம்மது மற்றும் அவரது ஆட்களால் தன் குடும்பத்தின் மரணத்திற்கு பழிவாங்கும் ஒரு யூத பெண்ணின் கதையை நாம் காண்கிறோம். ஸஹீஹ் அல்-புகாரியில் இருந்து, புத்தகம் 47, ஹதீஸ் 786; சாஹிஹ் முஸ்லிம், புத்தகம் 026, ஹதீஸ்கள்

5430 மற்றும் 5431:

அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவித்தது: “ஒரு யூதப் பெண், விஷம் கலந்த ஆட்டை நபியவர்கள் உண்பதற்காகக் கொடுத்தார், அதன் விளைவாக அவர் அதைச் சாப்பிட்டார். அவள் பிடிக்கப்பட்டு நபியிடம் கொண்டு வரப்பட்டு, 'அவளைக் கொல்வோமா?' என்றனர். அதற்கு நபியவர்கள், 'இல்லை, வேண்டாம்' என்று பதிலளித்தார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதரின் வாயின் மேற்பகுதியில் விஷத்தின் தாக்கத்தை நான் தொடர்ந்து கவனித்தேன்.

பின்னர் அந்த பெண் தலை துண்டிக்கப்பட்டாள், ஆனால் முஹம்மதுவின் ஆரம்ப தயக்கத்துக்கான காரணம் என்னவெனில் அவளிடம் விஷத்திற்கு மருந்து இருக்கிறதா என்று தெரியும்படி காத்திருந்தது. நாம் ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. 5, புத்தகம் 59, ஹதீஸ் 713:

...ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: “நபி(ஸல்) அவர்கள் தாம் நோயினால் இறந்தார், அவர் இப்படியாக சொல்லுவார், 'ஆயிஷாவே! 'கைபரில் நான் உண்ட உணவினால் ஏற்பட்ட வலியை இப்போதும் உணர்கிறேன், இப்போது அந்த விஷம் (poison) சாப்பிட்டதில் இருந்து என் இதய-நாளம் வெட்டப்படுகிறது போல் உணர்கிறேன்.’ “

1. இப்படி நடந்தது என்று ஆயிஷா கூறியதைக் கவனியுங்கள்: "நபியவர்கள் நோய்வாய்பட்டு இறந்தார்" என்று கூறினார், மேலும் முஹம்மது “இப்படியாக சொல்லுவார்" என்று அவர் கூறினார். ஆயிஷாவின் கூற்றுப்படி, முஹம்மது தனது மரணத்தில் கைபரில் சாப்பிட்ட விஷம் கலந்த உணவைத் தவிர வேறு எதையும் பற்றி ஒருபோதும் புகார் செய்யவில்லை.

2. இதன் பொருள் முஹம்மதுவின் மரணத்திற்கு விஷம் கலந்த உணவு மட்டுமே காரணம்.

3. குர்ஆன் 69:44-46 ல், இறைவனைப் பற்றி பொய் சொல்பவரின் இதய-நாளத்தை அல்லாஹ் வெட்டி விடுவான் என்று தெளிவாக கூறுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். குர்ஆன் 69:46: "அப்போது நிச்சயமாக நாம் அவருடைய உயிர் தமனியை (இதய-நாளத்தை - aorta) துண்டித்திருப்போம்."

4. விஷம் சாப்பிட்டதால், முஹம்மதுக்கு இதுதான் நடந்தது!

5. முஹம்மதுவின் இறைவனால், தன்னைப் பற்றி (அல்லாஹ்) பொய் சொல்பவருக்கு இப்படித்தான் சாகவேண்டும் என்று இருக்கும் வரை, முஹம்மதுவின் மரணத்தை அல்லாஹ் பார்த்துக் கொண்டான் என்பதை முஸ்லிம்கள் எப்படி விளக்க முடியும்? அந்த வசனத்தின்படி, அல்லாஹ் தனக்குத் தீமை செய்பவர்களுக்கு மட்டும் இப்படித்தான் செய்கிறான்.

6. உங்களுக்கு ஞாபகம் இருந்தால், முஸ்லிம்கள் "அல் கதர், ردقلا" என்று அழைக்கபடும் ஒன்றை நம்புகிறார்கள், அதாவது தலைவிதி அல்லது தெய்வீக முன்தெரிந்தெடுப்பு; விதிவிலக்கு இல்லாமல், யாரேனும் எப்படி இறக்க வேண்டும் என்பதை அல்லாஹ் மட்டுமே முடிவு செய்வான்.

7. முஹம்மது இவ்வாறு இறக்க வேண்டும் என்று விரும்பியவர் அல்லாஹ்தான் என்று இது நிச்சயமாகப் பொருள்படும். முஹம்மதின் பொய்களுக்கு அது தண்டனையாக இருந்திருக்க வேண்டும்!

8. இதை செய்தது உண்மையான கடவுள் என்று நான் சொல்கிறேன், முகம்மதுவின் கடவுள் அல்ல. உண்மையான கடவுளைப் பற்றி பொய் சொன்னவருக்கு முஹம்மது விரும்பியதை அவர் நனவாக்குவார் என்றும், அதே நேரத்தில் முஹம்மது தனது அனைத்து பொய்களையும் அம்பலப்படுத்தவும் அவர் விரும்பினார்.

9. கடைசியாக ஒன்று. யூதர்களின் கைகளால் இயேசுவை இறக்க அனுமதிக்காமல் அல்லாஹ் இயேசு கிறிஸ்துவை மரணத்திலிருந்து காப்பாற்றினான் என்று முஸ்லிம்கள் கூறினால், ஏன் முஹம்மதுவை யூதர்களின் கைகளால் கொல்ல அல்லாஹ் அனுமதித்தான்? அப்படியென்றால் முஹம்மதுவை விட அல்லா ஈஸவை (இயேசுவை) அதிகமாக நேசித்தார் என்று அர்த்தமா? முஹம்மது அல்லாஹ்வின் சிறந்த படைப்பு என்று குரான் கூறவில்லையா?

முஹம்மது: கடவுளா அல்லது மனிதனா?

குர்ஆன் 33:45-46ல் வாசிக்கிறோம்

وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُّنِيرً (Al-Ahzab, Verse 46 , سورة الأحزاب)
(Al-Ahzab, Verse 45 , سورة الأحزاب)

45 நபியே! நாம் உன்னை ஒரு சாட்சியாகவும், தூதுவராகவும், நற்செய்தியை அறிவிப்பவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் நியமித்துள்ளோம்.
46. அல்லாஹ்வின் தூதுவர் அவனது அனுமதியுடனும், ஒளிரும் ஒளியுடன் கூடிய விளக்காகவும் இருக்கிறான்

அல்-தபரி (தொகுதி 4, பக்கம் 501) தனது விளக்கத்தில் கூறினார்:

قال الإمام الطبري رحمه الله : [{ من الله نور } يعني بالنور محمدا صلى الله عليه وسلم الذي أنار الله به الحق وأظهر به الإسلام ومحق به الشرك فهو نور لمن استنار به...] تفسير الطبري ج 4ص 501.

அதாவது, 'ஒளி' என்பது முஹம்மதுவைக் குறிக்கிறது, ஏனென்றால் மக்கள் ஒளியினால் வழிநடத்தப்படுகிறதுபோல அவரால் நடத்தப்படுகிறார்கள், ... மற்றொரு வசனத்தில், குர்ஆன் 5:15 இல் இதைக் காண்கிறோம்:

> يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ قَدْ جَآءَكُمْ رَسُولُنَا يُبَيِّنُ لَكُمْ كَثِيرًا مِّمَّا كُنتُمْ تُخْفُونَ مِنَ ٱلْكِتَٰبِ وَيَعْفُوا۟ عَن كَثِيرٍ ۚ قَدْ جَآءَكُم مِّنَ ٱللَّهِ نُورٌ وَكِتَٰبٌ مُّبِينٌ
>
> “ஓ வேத நம்பிக்கையாளர்களே (கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள்)! நிச்சயமாக, நம் தூதர் உங்களிடம் வந்துள்ளார், அவர் நீங்கள் புத்தகத்தில் (பைபிளில்) மறைத்து வைத்திருக்கும் பலவற்றை உங்களுக்குத் தெளிவுபடுத்துவதோடு, நீங்கள் பலவற்றை மன்னிக்க வேண்டும்; நிச்சயமாக, ஒளியாகவும், அல்லாஹ்விடமிருந்து விளக்கப்பட்ட வேதமாகவும் (குர்ஆன்) உங்களிடம் வந்துள்ளது.”

இந்த வசனத்தில் நாம் பார்ப்பது போல், அல்லாஹ் இரண்டு விஷயங்களை அனுப்பினான்; ஒளி மற்றும் புத்தகம். ஒளியை புத்தகம் என்று அர்த்தப்படுத்த முடியாது, ஏனென்றால் அது தெளிவாக "ஒளி” மற்றும் “புத்தகம்" என்று கூறுகிறது, புத்தகத்தின் ஒளி அல்ல. மேலும் அந்த வசனம் முஹம்மதுவைப் பற்றியும் அவர் அவர்களிடம் வருவதைப் பற்றியும் சொல்லப்பட்டதைக் கவனியுங்கள்.

ஷியா மற்றும் சுன்னி முஸ்லீம்கள் இருவரும் முஹம்மது ஒரே நேரத்தில் ஒரு மனிதராக இருந்தாலும், அவர்களுக்காக ஒளியால் உருவாக்கப்பட்டதாக நம்புகிறார்கள். முஹம்மது ஒரு ஒளி என்று முஸ்லீம்கள் நம்பும்போது, அவர் ஒரே நேரத்தில் **மனிதனாகவும் கடவுளாகவும்** இருக்கிறார்! "அவர் கடவுள் என்று நாங்கள் நம்பவில்லை" என்று முஸ்லிம்கள் கூறுவார்கள். அல்லாஹ் ஒளி என்று குரான் தெளிவாகச் சொல்லும் போது முஹம்மது எப்படி "ஒளி" ஆவார்?

முஹம்மது ஆதாமுக்கு முன் படைக்கப்பட்டவர்!

தஃப்சீர் இப்னு கதீரின் புத்தகத்தில், தொகுதி. 3, ப. 470, நாம் படிக்கிறோம்:

عن أبي هريرة -رضي الله عنه- عن النبي -صلى الله عليه وسلم- في قوله تعالى: قال النبي -صلى الله عليه وسلم-: كنت أول النبيين في الخلق وآخرهم في البعث فبدأ بي قبلهم وكِتَابٌ مُّبِينٌ

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "நான் நபிமார்களில் முதலில் படைக்கப்பட்டவனும் அவர்களில் கடைசியாக அனுப்பப்பட்டவனும் நானே."

முஹம்மதுவைப் பாருங்கள்! அவர் இயேசுவின் வார்த்தைகளை நகலெடுப்பது(காப்பியடிப்பது) போல் தெரிகிறது. முஹம்மது தன்னை ஆல்பா மற்றும் ஒமேகா என்பதுபோல் தெரிகிறது! யோவான் 9:5:

> யோவான் 9:5:
> நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.

முஹம்மது உலகிற்கு வெளிச்சம் என்று குரான் சொல்கிறது, ஆனால் அவர் தவறு செய்யும் போது எப்படி ஒளியாக இருக்க முடியும்? அவர் பாவம் செய்தார் என்று குரான் பல அத்தியாயங்களில் கூறுகிறது. குர்ஆன் 47.19 இல் உள்ளதைப் போல, மன்னிப்பு கேட்குமாறு அல்லாஹ்வால் முஹம்மதுவிடம் கேட்கப்பட்டதாக கூறுகிறது:

47.19: “அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும், மேலும் உம்முடைய (முஹம்மது) பாவத்திற்காகவும் மற்றும் நம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்களின் பாவத்திற்காகவும் மன்னிப்புக் கேளுங்கள்.”

• “உலகத்திற்கு ஒளி”யானது வழிநடத்தப்பட வேண்டும் என்று நீங்கள் எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா?

• இந்த வசனம் முஹம்மதுவின் நினைவாற்றல் எப்படி இருக்கிறது என்பதை காட்டுகிறது, அது அவருடைய புகழ். இது வானிலை போன்றது, மாறக்கூடியது, அவர் மற்ற வசனங்களுடன் மிகத் தெளிவான முறையில் முரண்படுகிறார். உதாரணமாக குர்ஆன் 9:80:

9:80 “அவர்களுக்காக நீ [முஹம்மதே] மன்னிப்புக் கேட்டாலோ அல்லது மன்னிப்புக் கேட்காவிட்டாலோ அல்லது எழுபது முறை அவர்களுக்காகக் கேட்டாலும் அல்லாஹ் அவர்களை மன்னிக்க மாட்டான்!”

நாம் ஸஹீஹ் முஸ்லிமின் ஹதீஸ், புத்தகம் 4, ஹதீஸ் 2129 க்கு சென்றால், நாம் இவ்வறு படிக்கிறோம்:

அபு ஹுரைரா அறிவித்தார்: “அல்லாஹ்வின் தூதர், அல்லாஹ் அவர் மீது பிரார்த்தனை செய்வானாக: ‘என் தாயாருடைய மன்னிப்புக்காக நான் அல்லாஹ்வின் அனுமதியைக் கோரினேன், ஆனால் அவன் அதை எனக்கு அனுமதிக்கவில்லை. அவளுடைய கல்லறையைப் பார்க்க நான் அவனிடம் ஒப்புதல் கேட்டேன், அவன் எனக்கு அனுமதி அளித்தான்.”

அல்-அஹ்வாஸ்-ஃபே-ஷாரேஸ் துஹாவாஸ் (பொருத்தமின்மை) புத்தகம், அல்-துர்முசி தஃப்சீர்

அல்-குர்ஆன், 1953 அச்சிடுதல், பக். 401:

تحفة الأحوذي شرح سنن الترمذي - كتاب تفسير القرآن - استغفار النبي صلى الله
عليه وسلم لأبي طالب
ص 401 - قوله : (وهما مشركان) جملة حالية (أوليس استغفر إبراهيم لأبيه) أي
أتقول هذا أوليس استغفر
إلخ ماكان للنبي والذين آمنوا أن يستغفروا للمشركين

முஹம்மது தனது மாமாவிற்காக (அபு தாலிபுக்காக) அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார், அலி (முஹம்மதுவின் உறவினர்) கூறினார் (ஆச்சரியத்துடன), "நீங்கள் காஃபிர்களுக்கு மன்னிப்பு கேட்கிறீர்களா!". அதற்கு முஹம்மது கூறினார், “இப்ராஹீம் தன் தந்தைக்காக மன்னிப்பு கேட்கவில்லையா?"

இதே கதையை அஸ்பாப்-அல்-நசுல 1963 அச்சு, தொகுதி 1 பக் 176. போன்ற பல புத்தகங்களிலும் காணலாம்.

இப்ராஹீமின் தந்தை பெயர்

இப்ராஹீமின் தந்தை பெயர்

இது வேடிக்கையானது. ஆபிரகாமின் தந்தையின் பெயர் பற்றிய தகவலை முஹம்மது எங்கிருந்து பெற்றார்? ஆபிரகாமின் தந்தையின் பெயர் கூட தவறாக "ஆஜர் (அஸார்)" என்று குர்ஆனில் உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள் (குர்ஆன் 6:74). அப்படியானால் "தேராகு" யார்?

> யோசுவா 24:2 (பைபிள்): அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள்.
>
> லூக்கா 3:34 (பைபிள்): யாக்கோபின் மகன், இவன் ஈஸாக்கின் மகன், இவன் ஆபிரகாமின் மகன், இவன் தேராகின் மகன், இவன் நாகோரின் மகன்.

நீங்கள் பார்ப்பது போல், குர்ஆனில் உள்ள **பல தவறுகளில்** இதையும் ஒன்றாக சேர்க்கலாம். முஸ்லீம்கள் பைபிள் கெட்டுப்போனது, பைபிள் தவறு, குரான் அல்ல என்று சொன்னால், ஆபிரகாமின் தந்தையின் பெயரை யூதர்கள் மாற்றுவதற்கு உங்களால் ஒரு காரணத்தைச் சொல்ல முடியுமா?

• குரானில் முகம்மதுவைப் பற்றிய வேடிக்கை என்னவென்றால், அவர் கதைகளை உண்மையான சம்பவம் போல் உருவாக்கினார். இந்த மனிதர் ஒரு சிறந்த திரைக்கதை எழுத்தாளராக இருப்பார் என்று சொல்லலாம். ஒரு சந்தர்ப்பத்தில் முஹம்மது "அல்-அவ்ஸ் மற்றும் அல்கஸ்ராஜ்" கோத்திரங்களின் சக்திவாய்ந்த தலைவராக இருந்த "அப்துல்லா இப்னு உபை" அவரின் பழங்குடிகளை முட்டாளாக்க முயன்றார். "இப்னு உபை" இறந்தபோது, முஹம்மது அவரது கல்லறையில் பிரார்த்தனை செய்தார். அவர் தன் இனத்தாருக்கு நயவஞ்சகனாக காணப்பட்டார். அது தனக்கு எந்தப் பலனையும் தரவில்லை என்பதை பின்னர் கவனித்தார். உண்மையில் அது முஸ்லிம்களுக்கு நேர்மாறாகவே வேலை செய்தது. அவர்கள் 'ஏன் அல்லாஹ்வின் எதிரியை மன்னிக்க வேண்டினார்' என்று கேட்டனர். காரணம் குர்ஆன் 4:48 ல்

“அல்லாஹ் கூறியதை அவர்கள் நினைவுகூர்ந்தனர்”:

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கமாட்டான்;. இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்;. யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.

குர்ஆன் 9:80 ல் சொல்லப்பட்டதற்கு மாறாக, முஹம்மது செய்யக்கூடாததைச் செய்கிறார். ஏனெனில் அவர் அப்போது இராணுவம் இல்லாத மனிதராக இருந்ததால் புறமதத்தினரைத் திருப்திப்படுத்த முயற்சிக்கிறார். எனவே, அவர் காஃபிரின் கல்லறை மீது பிரார்த்தனை செய்யும் அளவுக்கு மென்மையாகவும் கனிவாகவும் இருப்பவராக நடிக்கிறார்.

فتح الباري شرح صحيح البخاري
أحمد بن علي بن حجر العسقلاني
دارالريان للتراث
سنة النشر: 1407هـ / 1986م
رقم الطبعة: ---
عدد الأجزاء: ثلاثة عشرجزءا
باب قوله استغفر لهم أو لا تستغفر لهم إن تستغفر لهم سبعين مرة فلن يغفر الله لهم

4393 لما توفي عبد الله بن أبي جاء ابنه عبد الله بن عبد الله إلى رسول الله صلى الله عليه وسلم فسأله أن يعطيه قميصه يكفن فيه أباه فأعطاه ثم سأله أن يصلي عليه فقام رسول الله صلى الله عليه وسلم ليصلي عليه فقام عمر فأخذ بثوب رسول الله صلى الله عليه وسلم فقال يا رسول الله تصلي عليه وقد نهاك ربك أن تصلي عليه فقال رسول الله صلى الله عليه وسلم إنما خيرني الله فقال استغفر لهم أو لا تستغفر لهم إن تستغفر لهم سبعين مرة وسأزيده على السبعين قال إنه منافق قال فصلى عليه رسول الله صلى الله عليه وسلم فأنزل الله ولا تصل على أحد منهم مات أبدا ولا تقم على قبره

சஹி-அல்-புக்காரி, அல்-ரெய்யான் நிறுவனம் பதிப்பு 1896, தொகுதி. 8, பக். 334, ஹதீஸ் 4393ஆகியவற்றின் விளக்கத்தில் ஃபதே-அல்-பாரி:

அதே நேரத்தில், “அப்துல்லா இப்னு உபை” இறந்தபோது, அவரது மகன் அப்துல்லாஹ் இப்னு அப்துலா நபியிடம் வந்து, அவரது சட்டையை தன் தந்தைக்கு கொடுக்க முடியுமா என்று கேட்டார், எனவே அவர் தனது தந்தையை அதை வைத்து மூடிவிடலாம். எனவே நபி அவருக்கு தனது சட்டையைக் கொடுத்தார், மேலும் அவர் தன் தந்தை மீது பிரார்த்தனை செய்யும்படி கேட்டார், அதனால் அல்லாஹ்வின் தூதர் அவருக்காக (இறந்த மனிதனுக்காக) பிரார்த்தனை செய்ய எழுந்து நின்றார், உடனே உமர் எழுந்து நின்று நபியின் ஆடையை இழுத்து முஹம்மதுவிடம் கூறினார்: "அல்லாஹ் உம்மை அவர் மீது பிரார்த்தனை செய்வதிலிருந்து தடைசெய்திருக்க, நீங்கள் அவர் மீது எப்படி பிரார்த்தனை செய்கிறீர்கள்?”. அதற்கு பதிலளித்த

நபி: “அல்லாஹ் என்னிடம் சொன்னான்: நீங்கள் அவன்மீது பிரார்த்தனை செய்தாலும் செய்யாவிட்டாலும, நீங்கள் எழுபது முறை அல்லது அதற்கு மேல் பிரார்த்தனை செய்தாலும், அல்லாஹ் அவர்களை மன்னிக்க மாட்டான்”. இப்படி நயவஞ்சகராகிய நபி உடனே பல்டி அடித்து பதில் கூறினார். இருந்தாலும் அவர் (ஹதிஸ்-அறிவிப்பாளர்) கூறினார் “**நபி அவர் மீது பிரார்த்தனை செய்தார்**” என்று! எனவே அல்லாஹ் ஒரு வசனத்தை அனுப்பினான், “அவற்றில் ஒவ்வொன்றின் மீதும் தொழாதீர்கள் அல்லது அவர்களின் கல்லறைகளின் மீது நிற்காதீர்கள்.”

குர்ஆன் 9:113 இல், முஹம்மது தனது கடவுளின் கட்டளையை மீண்டும் மீறினார், ஏனென்றால் இறந்த மனிதன் அவனுடைய மாமாவாக இருந்ததால். சஹி-அல்-புக்காரி தஃப்சிர் அல் குர்ஆன், பிரிண்டிங் 1993, பக். 1718, ஹதீஸ் 4398:

அபு-தாலிபுக்கு மரணம் வந்தபோது, நபி அவரிடத்தில் சென்றார, அபு-ஜஹேல் (முஹம்மதுவின் மாமா) அங்கு இருந்தார். அப்போது நபி கூறினார், “ஓ என் மாமா, நான் அல்லாஹ்வின் முன் பரிந்துரையாகப் பயன்படுத்தும் படியாக நீங்கள் ஏன் அல்லாஹ்வைத் தவிர கடவுள் இல்லை என்று நீங்கள் ஏன் சொல்லுகிறதில்லை?”. அதற்கு அபு-ஜஹேல் கூறினார்: "அபு-தாலிப், உங்கள் தந்தையின் ஈமானை விட்டுவிடப் போகிறீர்களா?”. அப்போது முஹம்மது கூறினார், "நான் உங்களுக்காக அல்லாஹ்வின் முன் பரிந்து பேசுவேன், அவனுடைய மன்னிப்பைக் கேட்பேன்”. எனவே, "ஒரு நபி புறமதத்தினருக்காக பரிந்துரை செய்யக்கூடாது" என்கிற வசனம் உம்மிடம வந்தது.

நீங்கள் பார்ப்பது போல், முஹம்மது ஒரு நயவஞ்சகர். அல்லாஹ்வின் எதிரி மீது பிரார்த்தனைசெய்யக்கூடாது என்று முஹம்மது அறிந்திருந்தார். மேலும் இந்த மனிதர் இஸ்லாத்திற்கு எவ்வளவு மோசமானவர் என்பது அங்கிருந்த அனைத்து முஸ்லிம்களுக்கும் தெரியும். அப்படிசெய்வது அல்லாஹ்வின் போதனைக்கும் கட்டளைக்கும் எதிரானது என்பது உமருக்குத் தெரியும். ஆனால் முஹம்மது ஒரு நயவஞ்சகனாக இருக்க முடிவு செய்தார். அல்லாஹ் யாருடைய பிரார்த்தனையும் ஏற்றுக்கொள்ள மாட்டான். இருப்பினும் முஹம்மது பிரார்த்தனை செய்தார். அப்படியானால் முஹம்மது ஏன் பிரார்த்திக்கிறார்?

விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் சட்டம் மாறக்கூடியது மற்றும் சரிசெய்யப்படக்கூடியது. அது முஹம்மதுவின் ஏமாற்றும் திட்டங்கள் மற்றும் தேவைகளைப் பொறுத்தது. காஃபிர்களை அல்லாஹ் மன்னிக்க வேண்டும் என்று அவர் விரும்பியபோது, அவர் அந்த கதாபாத்திரத்தை வகித்தார். அது பலனளிக்காதபோது அவருக்கு இனிமேல் அது தேவையில்லை. அல்லது இந்த செயல்கள் அவருக்கு உதவாதபோது, அல்லாஹ் தன் மீது வருத்தப்பட்டதைப் போல அவர் ஒரு வசனத்தை உருவாக்குவார். இந்த வழியில் அவர் முஸ்லிம்களுக்கு முன்னால் ஒரு தெளிவான வழி நடத்தப்படுகிறவர். "ஆம், அல்லாஹ்தான் என்னை வழிநடத்துகிறான், நீங்கள் பார்ப்பது போல், நான் தவறு செய்தாலும், அல்லாஹ்

நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறான்!"

இது முஹம்மது என்ற பாவிக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.
மற்றும் இது முஹம்மது பாவம் செய்ய அல்லாஹ்விடமிருந்து திறந்த லைசன்ஸ் (உரிமம்)! ஆகும்.

1. குர்ஆன் 47.19-ல்: அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும், மேலும் உங்கள் (முஹம்மது) பாவத்திற்காகவும் மற்றும் நம்பிக்கை கொண்ட (முஃமின்களான) ஆண்கள் மற்றும் பெண்களின் பாவத்திற்காகவும் மன்னிப்பு கேட்க வேண்டும். உங்களுக்கு என்ன மாறுகிறது என்பதை அல்லாஹ் அறிந்தான்.

2. குர்ஆன் 48:2: அல்லாஹ்வின் அனுதாபத்தை முழுமைப்படுத்தவும், நேர்வழியில் உன்னை வழிநடத்தவும், (உம்முடைய) முந்தைய மற்றும் வரவிருக்கும் பாவங்களை இறைவன் மன்னிக்கட்டும்.

இங்கே நீங்கள் பார்ப்பது போல், அல்லாஹ் முஹம்மதுக்கு அனைத்து வகையான பாவங்களுக்கும் ஒரு திறந்த கதவைத் தருகிறான், மேலும் வரவிருக்கும் பாவங்களுக்கும் அவன் மன்னிப்பு வழங்கினான்! முஹம்மது அவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் இல்லாமல்!

அதே சமயம், "நேர்வழியில் உன்னை நடத்தவும்.." என்று வசனம் கூறுவதை நீங்கள் காண்கிறீர்கள். அல்லாஹ் வரவிருக்கும் பாவத்திற்காக முஹம்மதுவை மன்னிக்கிறான், மேலும் அவன் வழிகாட்டுதலின் மூலம் முஹம்மதுவின் மீது தனது ஆதரவை நிறைவு செய்கிறான்! முஹம்மது ஒரு பாவியாக இல்லாமல் இருக்கும்படி தடுக்க போதுமானபடி இல்லாத இந்த வகையான வழிகாட்டுதல் என்ன வழிகாட்டுதல்? அதற்குமேல் அவர் உலத்தின் ஒளி. முஹம்மது ஸஹீஹ் அல்-புகாரியின் ஹதீஸ்களில், தொகுதி. 9, ப. 403; மற்றும் ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 93, ஹதீஸ் 534:

...எனவே அல்லாஹ்வே, தயவு செய்து முந்தைய பாவங்களையோ அல்லது எதிர்காலத்தில் நான் செய்யப்போகும் பாவங்களையோ, நான் மறைமுகமாகவோ அல்லது பகிரங்கமாகவோ செய்த பாவங்களையும், என்னை விட நீ அறிந்த பாவங்களையும் மன்னிப்பாயாக. புகழப்படுவதற்கு உன்னைத் தவிர யாருக்கும் உரிமை இல்லை...

மீண்டும் மீண்டும்! எதிர்காலத்தில் வரப்போகும் பாவத்திற்கு மன்னிப்பு வழங்கப்பட்டபின்பும், ஏன் மன்னிப்பு கேட்கவேண்டும்? விஷயங்கள் இத்துடன் நிற்பதோ முடிவதோ இல்லை. குரான் 66:1

கூறுவது போல், முஹம்மது அல்லாஹ்விடமிருந்து வராத விதிகளையும் சட்டத்தையும் உருவாக்கினார்:

66:1 “நபியே, உமது மனைவியரை [பாலியல்]திருப்திப்படுத்துவதற்காக அல்லாஹ் உமக்கு அனுமதித்ததை நீர ஏன் தடுக்கிறீர்? அல்லாஹ் மன்னிப்பவன், கருணை உள்ளவன்.”

இந்த அத்தியாயத்தில் முஹம்மது தனது மனைவிகளில் ஒருவரின் (ஹஃப்ஸா) வீட்டில் வாழ்ந்த தனது அடிமைகளில் ஒருவருடன் உடலுறவு கொண்டிருந்தார். அதானால் மனைவியுடன் பெரும் சண்டை வந்தது. அவளும் அவனது மற்ற மனைவிகளும் முஹம்மதின் இழிவான செயலை தாங்க முடியவில்லை. பின்னர் அல்லாஹ்வே, முஹம்மதுவின் மனைவிகளை அச்சுறுத்தும்படி ஒரு அத்தியாயத்தை அனுப்புகிறான். அவர்கள் முஹம்மதுவின் பாலியல் வாழ்க்கையிலும் அவருக்கு பிடித்த பொழுதுபோக்கிலும் தொந்தரவு செய்யக்கூடாது என்று! (முஹம்மது விரும்புவதற்கு அல்லாஹ் எப்பொழுதும் தயாராக இருக்கிறார், வீட்டிற்குள் கூட) குர்ஆன் 66:5:

66:5 ஒருவேளை அவருடைய (முஹம்மதுவின்) இறைவன், அவர் உங்கள் அனைவரையும் விவாகரத்து செய்தால், அவர் உங்களை விட சிறந்த மனைவிகளை அவருக்குக் கொடுப்பார், அவர்கள் அடிபணிந்தவர்கள், நம்பிக்கை கொண்டவர்கள், பக்திமான்கள், தவம், பக்தி கொண்டவர்கள், பயணம் செய்பவர்கள்! மற்றும் வேகமானவர்கள், கன்னிகள் மற்றும் விவாகரத்து பெற்றவர்கள்.

இந்த சண்டை எவ்வளவு பெரியது என்று எனக்கு ஒரு வியப்பு இருக்கிறது. ஏனெனில் ஜின்னாவில் இறைவன் அதைப் பற்றி ஒரு அத்தியாயத்தை உருவாக்குகிறான்! மேலும், முஹம்மதுவின் மனைவிகள் தங்களைத் தவிர வேறு யாருடனும் உடலுறவு கொள்ளக்கூடாது என்று அவர்கள் கேட்கும் போது, அல்லாஹ் ஏன் முஹம்மதுவின் பக்கம் சாய்ந்து அவரது மனைவிகளுக்கு எதிராக நிற்கிறான்? நீங்கள் நன்றாய் கவனித்தீர்களானால், முஹம்மது “அதை மீண்டும் செய்யமாட்டேன்” என்று உறுதியளித்தார், ஆனால் பின்னர் அவர் அதிக அதிகாரத்தை அடைந்தபோது, இந்தப் பெண்களுடனான நல்ல நேரத்தை செலவிட அவர் தவறிவிட்டார். பின்னர் அவர் 66:1 வசனத்தை உருவாக்கினார், அவர் மற்ற பெண்களுடன் உடலுறவு கொள்ள விரும்புவது (நான் அல்ல) அல்லாஹ் தான் என்பது போல் முன்வைத்தார். தன் மனைவிகளை வாயை அடைக்க மற்றும் அவர்கள் இனி ஒருபோதும் புகார் செய்ய மாட்டார்கள் என்பதில் உறுதியாக இருக்க அவர் 66:5 வசனத்தை உருவாக்கினார்.

உண்மை என்னவென்றால், முஹம்மது இதை உமர் இபின் அல்-கத்தாப் என்பவரின் ஆலோசனையிலிருந்து குர்ஆனுக்காக எடுத்துக் கொண்டார், ஏனெனில் அவர் அதை விரும்பினார், பின்வரும் ஹதீஸில் நாம் பார்க்கிறோம் ('ஓல்-இட்'கான் ஃபீ' ஓலும் அல்-குர்ஆன், தொகுதி 1, ப. 137):

(முதலில்), நான், 'அல்லாஹ்வின் தூதரே, ஆபிரகாம் தொழுதுகொள்ளும் இடத்தை (அவரது) வழிபாட்டுத் தலமாக நீங்கள் எடுத்துக்கொள்ள நான் விரும்புகிறேன்’ என்று சொன்னேன். அதன்பின் தெய்வீக வெளிப்பாடு வந்தது: (பக். 137) (குர்ஆன் 2:125) ‘மேலும் நீங்கள் (முஸ்லிம்கள்) ஆபிரகாமின் இடத்தை பிரார்த்தனை செய்யும் இடமாக எடுத்துக் கொள்ளுங்கள்.'

(இரண்டாவது), மேலும் நான் அல்லாஹ்வின் நபியிடன், 'நல்லவர்களும் கெட்டவர்களும் உங்கள் மனைவிகளுடன் பேசுகிறார்கள், எனவே அவர்கள் தங்களுக்குத் திரையிடுமாறு (ஹிஜாப்) கட்டளையிடுங்கள்!' என்றேன். எனவே பெண்களின் திரைச்சீலை பற்றிய வசனத்தை அல்லாஹ் இறக்கி வைத்தான் (குர்ஆன் 24:31).

(மூன்றாவது), நபியின் மனைவிகள் நபிக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கினர், நான் அந்த மனைவிகளிடம், 'அவருடைய (நபியின்) இறைவன் உங்களை, (அனைத்து மனைவிகளையும்) விவாகரத்து செய்து, உங்களை விட சிறந்த மனைவிகளை பதிலாக மாற்றினால். ‘என்று சொன்னேன். எனவே நான் கூறியதுபோலவே அப்படியே (குர்ஆன் 66:5) வசனம் வெளிப்படுத்தலாக வந்தது.

இதே கதையை ஸஹீஹ் அல் புகாரியில் (புத்தகம் 8, ஹதீஸ் 395) காணலாம்.

பின்னர் இந்த ஹதீஸில் இன்னும் ஆழமாகச் செல்வோம், ஆனால் இப்போதைக்கு, "அல்லாஹ் என் வார்த்தைகளை அப்படியே பயன்படுத்தினான்!" என்று உமர் கூறியதைக் கவனியுங்கள். முஹம்மதுவின் உத்வேகம்(inspiration) இறைவனால் அல்ல, மாறாக அவரைச் சுற்றியுள்ள மனிதர்களின் கருத்துக்களால் ஆனது. இது காபாவைத் தேர்ந்தெடுப்பதில் கூட தெளிவாகத் தெரிகிறது. அது உமர் (ரலி) செய்த தேர்ந்தெடுப்பு, அல்லாஹ் அல்ல! முஹம்மது வெறும் வார்த்தைகள், யோசனைகள், திட்டங்கள், கவிதைகள், பெயர்கள் மற்றும் கதைகளைக் கூட கடத்தினார். குர்ஆன் 66:5 வசனத்தை மீண்டும் படிப்போம்:

• ஒருவேளை அவருடைய (முஹம்மதுவின்) இறைவன், அவர் உங்கள் அனைவரையும் விவாகரத்து செய்தால், அவர் உங்களை விட சிறந்த மனைவிகளை அவருக்குக் கொடுப்பார், அவர்கள் அடிபணிந்தவர்கள், நம்பிக்கை கொண்டவர்கள், பக்திமான்கள், தவம், பக்தி கொண்டவர்கள், பயணம் செய்பவர்கள்! மற்றும் வேகமானவர்கள், கன்னிகள் மற்றும் விவாகரத்து பெற்றவர்கள்.

பின்வருவனவற்றைக் கவனியுங்கள்:

• ஒரு மனிதனின் மனைவிகள் அனைவரும் அவருக்கு எதிராகச் செல்லும்போது, விதிவிலக்கு

இல்லாமல், முஹம்மது தனது மனைவிகளுக்கு ஒரு நல்ல மனிதர் அல்ல என்பதற்கு இது மிகத் தெளிவான சான்றாகும். இருப்பினும் முஸ்லிம்கள் இந்த விஷயத்தில் நம்மை நம்பும்படி முட்டாளாக்க முயற்சிக்கிறார்கள்.

• குடும்ப விஷயங்களில் அல்லாஹ் ஏன் தலையிடுகிறான்? நான் என் மனைவியுடன் சண்டையிட்டால், அவள் மீது அல்லாஹ் ஒரு வசனத்தை அனுப்புவானா?

• 11 மனைவிகளிடமிருந்து ஒரே விவாகரத்து பற்றி நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவர்கள் அனைவறும் கூறுவது தவறு, ஆனால் முஹம்மது கூறுவதுமட்டும் சரியா?

• மனைவிகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உமரிடம் இருந்து வந்தது. முஹம்மதுக்கு மறுமணம் செய்து கொள்ளாமல் பரிமாற்றம் மட்டும் ஏன் தேவைப்பட்டது? இங்கு பரிமாற்றம் என்றால் இஸ்லாத்தில் பெண்கள் இயந்திரத்தின் உதிரிபாகங்களைப்போல என்று ஆகிறது அல்லவா? பெண்களுக்கு ஒரு மனிதராக எந்த மதிப்பும் இல்லை, அவர்களின் வேலை அல்லது செயல்பாட்டின் மதிப்பு மட்டுமே. வேறொன்றும் இல்லை.

இஸ்லாம் ஏன் பெண்களை இழிவாக பார்க்கிறது என்பதை இது விளக்குகிறது.

இஸ்லாத்தில் பெண்கள்

இஸ்லாத்தில் பெண்கள்

முஸ்லீம்கள் மற்றும் முஸ்லிம் பெண்களால் எழுதப்பட்ட பல கட்டுரைகளை நான் பார்த்திருக்கிறேன். இஸ்லாத்தையும் முஸ்லிம்களின் கலாசாரத்தையும் வேறுபித்து பார்க்கவேண்டும் என்று சொல்லி எல்லோரும் நம்மை முட்டாளாக்கப் பார்க்கிறார்கள்! நாம் கலாச்சாரம் பற்றி பேசப்போவதில்லை, ஆரம்பத்தில் இருந்தே காரியங்களை தெளிவுபடுத்த, இஸ்லாத்தையும் கலாச்சாரத்தையும் கலக்க மாட்டோம். என் வார்த்தைகளைப் படிக்கும் முஸ்லிம்களே, வரவிருக்கும் குறிப்பு கலாச்சாரத்திலிருந்து அல்ல, மாறாக:

1. பெண்கள் பற்றிய குரான் வசனங்கள்;
2. பெண்களைப் பற்றிய முஹம்மதுவின் ஹதீஸ் அல்லது கூற்றுகள்;
3. பெண்கள் மீதான முஹம்மதுவின் சட்டங்கள் மற்றும் உத்தரவுகள்;
4. பூஜ்ஜியம் கலாச்சார பேச்சு;
5. இஸ்லாமிய குறிப்பிடல்கள் மற்றும் இஸ்லாமிய நீதிமன்றங்கள் அங்கீகரிப்பவை.

பெண்கள் முகத்தில் முடியை அகற்றக்கூடாது, செய்தால் அவர்கள் நரக நெருப்பை அடைவார்கள்

ஸஹீஹ் அல்-புகாரியில் இருந்து, தொகுதி. 6, புத்தகம் 60, ஹதீஸ் 408: அல்லாஹ்வின் படைப்பை மாற்ற முயற்சித்து முகத்திலுள்ள முடியை அகற்றும் பெண்களை அல்லாஹ் சபிக்கிறான்.

அப்படியென்றால் எல்லா முஸ்லீம் பெண்களும் நரகத்தை அடைவார்களா? அரேபிய ஆண்களைப் போலவே அனைத்து அரேபியப் பெண்களும் உடலில் முடி உடையவர்கள்; அல்லாஹ்வை மகிழ்விக்க பெண்கள் தாடியும் மீசையும் வளர்க்க வேண்டுமா?

வேடிக்கையான முகம்மதுவின் சாக்கு என்னவென்றால், இந்த பெண்கள் அல்லாஹ் தங்களுக்குக் கொடுத்த தோற்றத்தை மாற்றுகிறார்கள், ஆனால் முகம்மது பல்டி அடித்து, பெண்களின் யோனிகளையை(பிறப்புறுப்புகளை) சவரம் செய்ய உத்தரவிட்டார். முஹம்மது தனது தலைமுடியை மருதாணியால் சிவப்பு நிறமாக்கிக் கொண்டார்.

ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 56, ஹதீஸ் 668; மற்றும் ஸஹீஹ் அல்-புகாரி, புத்தகம் 72, ஹதீஸ் 786:

அபு ஹுரைரா அறிவித்தார்: அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள், "யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், அவர்கள் தங்கள் நரை முடிக்கு சாயம் பூசுவதில்லை, எனவே முஸ்லிம்களாகிய நீங்கள் அவர்கள் செய்வதற்கு நேர்மாறாக செய்ய வேண்டும், எனவே **உங்கள் நரைக்கும் தாடிக்கும் சாயம் பூசுங்கள்**..."

முஹம்மது ஏன் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் நேர்மாறாக ஏதாவது செய்கிறார்? முகத்திலுள்ள முடியை அகற்றி தோற்றத்தை மாற்ற முயலும் பெண்களை சபித்தார், ஆனால் அதே சமயம் ஆண்கள் சாயம் பூசினாலும் பரவாயில்லை!

இந்த ஹதீஸ், முஹம்மது அது நீதியாக இருந்ததாலோ, தவறு அல்லது சரியானது என்பதாலோ அல்ல, மாறாக கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் எதிர்ப்பதற்காக விதிகளை உருவாக்கினார் என்பதை நிரூபிக்கிறது. ஸஹீஹ் முஸ்லிம், புத்தகம் 024, ஹதீஸ் 5243:

...அவரது தலையும் தாடியும் ஈசோப்பைப்போன்று போன்று வெண்மையாக இருந்தது. எனவே, அல்லாஹ்வின் தூதர், அவர் தனது தலைமுடியின் நிறத்தை மாற்றக்கூடிய பெண்களுக்கு அறிவுறுத்தினார். அவர்கள் அதைப் பற்றி ஏதாவது செய்து அதை மாற்றும்படி கட்டளையிடப்பட்டனர்.

இஸ்லாம் மற்றும் அல்லாஹ்வை கவனம் செலுத்துவதைவிட முஹம்மதுக்கு தன் தாடியின் நிறம் ஏன் வாழ்க்கையில்   மிகவும் முக்கியமானது?

பெண்கள் சாட்சிகள் சொல்ல...

முதலாவதாக, இஸ்லாத்தில் பெண்கள் பண ஒப்பந்தங்கள் அல்லது உடன்பாடுகள் தொடர்பான வழக்குகளில் மட்டுமே நீதிமன்றத்தில் சாட்சிகளாக இருக்க முடியும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனால் எந்த வகையான சொத்து அல்லது குற்றத்திற்காக சாட்சியமளிப்பது இதில் அடங்காது. இதன் பொருள் பின்வரும் **அனைத்து வழக்குகளிலும் பெண்கள் நீதிமன்றத்தில் சாட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை**:

1. **குற்றம்**: (கொலை, திருட்டு, முதலியன) படே அல்-சனே புத்தகம், தொகுதி. 9, ப. 4079:
"தண்டனையுடன் வரும் அனைத்து வகையான குற்றங்களிலும் பெண்கள் சாட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள்."

بدائع الصنائع ج9, ص4079

2. **விபச்சாரம்**: குர்ஆன் 24:4, அல்-குர்துபியின் விளக்கம்; அவர் தனது விளக்கத்தில் கூறினார்: "அனைத்து வலிமைடையவன் சொன்னபடி நான்கு சாட்சிகளை (விபச்சாரம் வழக்கில்) அவர்கள் மீது கொண்டு வாருங்கள். சாட்சிகள் ஆண்களாக மட்டுமே இருக்க வேண்டும் என்று அவர் கூறினார், மேலும் அனைத்து (இஸ்லாமிய) நாடுகளும் அதை ஒப்புக்கொள்கின்றன."

وقال القرطبي في تفسير قوله تعالى (فَاسْتَشْهِدُواْ عَلَيْهِنَّ أَرْبَعةً مِّنكُمْ): ولا بد أن يكون الشهود ذكوراً؛ لقوله منكم، ولا خلاف فيه بين الأمة

3. **உருவ வழிபாடு**

யூசுஃப் அலி மொழிபெயர்ப்பில், அந்த கடைசிப் பகுதியை "நபிக்கு தன் ஆன்மாவை அர்ப்பணிக்கும் எந்த நம்பிக்கையுள்ள பெண்ணும்" என்று மொழிபெயர்த்துள்ளார். இது முஸ்லிம்களின் ஏமாற்றும் செயல்/எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும், இது அவர்களின் நபி பாலியலாக பெறும் பரிசுகளை மறைக்க முயற்சிக்கிறது. இதைப் பற்றி யோசித்துப் பாருங்கள், “தன் ஆன்மாவை நபிக்கு அர்ப்பணிக்கிறாள்,” முஹம்மது அவளுடைய ஆன்மாவை என்ன செய்வார்? நிக்காஹ் என்ற வார்த்தைக்கு எங்கே போனது? அது திருமணத்தை குறிக்கும் என்றால், முஸ்லிம்கள் அதை ஏன் இந்த வசனத்தில் மறைக்க முயல்கிறார்கள்?

முஹம்மதுக்கு தன்னையே பாலினப் பரிசாகக் கொடுத்த எல்லாப் பெண்களிலும், அவர்களில் ஒருவர் கூட மனைவி என்று அழைக்கப்படவில்லை என்பதால், இப்போது விஷயங்கள் தெளிவாகத் தெரிகிறது. முஹம்மதுவுக்கு உடலுறவுக்காகத் தங்களைக் கொடுத்த சில பெண்களின் பெயர்களில் சில: “கவ்லா பின்த் ஹக்கீம்”, “ஜேனாப் பின்த் குசிமா” மற்றும் “உம் ஷரீக்”.

ஸஹீஹ் முஸ்லிம், புத்தகம் 008, ஹதீஸ் 3453:

ஆயிஷா கூறினார். "அல்லாஹ்வின் தூதரிடம் தங்களைக் கொடுத்த பெண்களைப் பார்த்து நான் பொறாமைப்பட்டேன்," மேலும் அவர் கூறினார்: "பின்னர், உயர்ந்த மற்றும் மகிமையுள்ள அல்லாஹ், இதை வசனத்தை வெளிப்படுத்தியபோது: 'நீங்கள் அவர்களில் யாரையும் தாமதப்படுத்தலாம், நீங்கள் விரும்பினால், எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் எப்படி விரும்பியபடியோ அப்படியே; நீங்கள் எதையாவது விரும்பினால்

ஒதுக்கிவைத்துக்கொள்ளுங்கள்." ' அதற்கு ஆயிஷா கூறினார்: "உங்கள் இறைவன் உங்கள் (பாலியல்) விருப்பத்தை திருப்திப்படுத்துவதில் வேகமாக இருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது."

முஹம்மது இந்த பெண்களில் யாரையும் தாமதப்படுத்தலாம். பெண்களின் நீண்ட வரிசையில் நின்ற பெண்களுக்கு முஹம்மது படுக்கையில் மிகவும் தேவைப்பட்டதுபோல் தெரிகிறது. மேலும் ஆயிஷா முஹம்மது ஒரு பொய்யான நபி என்பதை எப்படி கவனித்தார் என்று பாருங்கள்: "உங்கள் இறைவன் உங்கள் (பாலியல்) ஆசையை பூர்த்தி செய்ய விரைகிறார் என்று எனக்குத் தோன்றுகிறது." அவர் தனது பாலியல் பைத்தியக்காரத்தனத்தை நியாயப்படுத்தவே குர்ஆனை உருவாக்குகிறார் என்பது அவளுக்குத் நன்றாகத் தெரியும். ஏற்கனவே பல மனைவிகளைக் கொண்ட ஒரு மனிதன் ஏன் இப்படிச் செய்ய அனுமதித்துள்ளான் என்று நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அவருடைய மனைவிகள் போதாதா, ஏன் முஹம்மதுக்கு மட்டும் இந்த சலுகை வழங்கப்பட்டது?

சற்று யோசித்துப் பாருங்கள், இந்த உலகத்தின் அதிபதி முஹம்மதுவின் சிறப்பு செக்ஸ் தேவைகளைப் பற்றி குர்ஆனில் அத்தியாயங்களை உருவாக்குவதில் மும்முரமாக இருக்கிறான்.

பலதார மணம்

இஸ்லாத்தில் பலதார மணம்

குர்ஆன் 4:3:

> அனாதைகளுக்கு நியாயமாயிருக்க இயலாது என்று என்று நீங்கள் பயந்தால், நீங்கள் விரும்பும் யாராக இருந்தாலும், இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு பேருடன் உடலுறவு கொள்ளுங்கள். நீங்கள் அவர்களுக்கு சமநீதியாய் இருக்கமுடியாது என்று நீங்கள் பயந்தால், ஒரே ஒரு பெண் அல்லது உங்கள் வலது கைகள் வைத்திருக்கும் [கைதிகள் மற்றும் அடிமைகள்] ஆகியோரோடு கொள்ளுங்கள . அப்படி நீங்கள் சமத்துவமற்றவராக இருக்க மாட்டீர்கள்.

• இரண்டு வகையான பெண்கள் மனைவிகளாக படுக்கையில் படுக்க சுதந்திரமாக உள்ளனர், மூன்றாவது அடிமைகளுடன் படுக்கையில் படுக்க (நிக்கா: உடலுறவு செயல்), ஆனால் திருமணம் அல்ல.

• அனாதைகள் ஏழைகளாக இருப்பதால் உங்களுக்கு ஏற்றதாக இல்லாவிட்டால், அந்த காரணத்திற்காக உங்களால் அவர்களுடன் அன்பாக இருக்க முடியாது என்றால், மற்றவர்களிடம் செல்லுங்கள்.

• உங்களுக்கு இரண்டு அல்லது மூன்று அல்லது நான்குபேர் தேர்வு செய்யலாம். ஆனால் உங்களால் சமாளிக்க முடியாது என்றால் ஒன்று மட்டும்.

• முஹம்மது முஸ்லிம்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை வைத்துக்கொள்ள விரும்பினார், அவர்களால் இயலவில்லையென்றால், ஒரு பெண் .

• குர்ஆன் முஸ்லிம் ஆண்களுக்கு நான்கு மனைவிகள் இருக்கலாம் என்று குறிப்பிடுகிறது, ஆனால் அவர்களுக்கு ஒரே நேரத்தில் சமத்துவம் வழங்க வேண்டும். வசனத்தின் முடிவு கூறுகிறது, நீங்கள் சமத்துவமற்றவராக (அநியாயமாகவோ அல்லது நியாயமற்றவராகவோ) இருக்கக் கூடாது!

• இதற்கு முஸ்லிம்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது அல்லது நான்கு பெண்களை விட அதிகமாக படுக்கையில் இருக்கக் கூடாது என்று அர்த்தமாகும். அவர்களைப் பெறுவதற்கான நிபந்தனைகளினால், முஸ்லிம் ஆண்களால் ஒருவரைக் கூட வைத்திருக்க முடியவில்லை. குர்ஆன் 4:129ல் நாம் பார்ப்பது போல், இதே அத்தியாயத்தில் உள்ள மற்ற வசனங்களிலும் இதைக் காணலாம்.

• உங்கள் மனைவிகளுக்கு இடையே சமமாக நீதியை நீங்கள் கையாள முடியாது, நீங்கள் எப்படி முயற்சி செய்தாலும்!

• முஹம்மதுவின் சட்டம் முரண்படுகிறது என்பது தெளிவாகிறது. நான்கு மனைவிகள் இருக்க, அவர்கள் அனைவரையும் நான் நியாயமாக நடத்த வேண்டும், ஆனால் என்னால் முடியாது. அப்படியானால் நான் நான்கு பேரை திருமணம் செய்து கொள்ளலாம் என்று ஏன் சொல்கிறீர்கள்?

முஹம்மது தன் மனைவிகளை சமநீதியாக நடத்திய இஸ்லாத்தின் சிறந்த மனிதரா?

ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. 3, புத்தகம் 47, ஹதீஸ் 755:
ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நபியவர்களின் மனைவியர் இரு பிரிவாக இருந்தனர். முதல் குழுவில் ஆயிஷா, ஹஃப்ஸா, ஸஃபிய்யா மற்றும் சௌதா ஆகியோர் அடங்குவர், மற்ற குழுவில் உம்-சலமா மற்றும் அல்லாஹ்வின் தூதரின் மற்ற மனைவிகள் இருந்தனர். அல்லாஹ்வின் தூதர் ஆயிஷாவை இலட்சிய நபர் (idol) போல வைத்திருந்தார் என்பதை அனைத்து முஸ்லிம்களும் அறிந்திருந்தனர், எனவே அவர்களில் யாராவது அன்பளிப்பை அல்லாஹ்வின் தூதருக்கு வழங்க விரும்பினால், அல்லாஹ்வின் தூதர் ஆயிஷாவின் வீட்டிற்குச் செல்லும் வரை அதை பெறுவதை நிறுத்திக் கொள்வார். பின்னர் அவர்கள் தங்கள் பரிசை ஆயிஷாவின் வீட்டில் அல்லாஹ்வின் தூதரிடம் வழங்குவர். உம்-சலமாவின் தரப்பு இந்த விஷயத்தை ஒன்றாக விவாதித்து, உம்-சலமா அல்லாஹ்வின் தூதரிடம் அவர் எந்த மனைவியின் வீட்டில் இருந்தாலும் அவருக்கு பரிசுகளை அனுப்புமாறு அல்லாஹ்வின் தூதரிடம் கேட்க வேண்டும் என்று முடிவு செய்தார். உம் சலமா அல்லாஹ்வின் தூதரிடம் தாங்கள் அதைப்பற்றிக் கேட்டார், ஆனால் அவர் பதிலளிக்கவில்லை. பின்னர் அவர்கள் (உம் சலமா குழுவினர்) உம் சலமாவிடம் இது பற்றி கேட்டார்கள். அவள், 'அவர் பதில் சொல்லவில்லை, என்னிடம் எதுவும் சொல்லவில்லை' என்றாள். அவருடன் மீண்டும் பேச முயற்சிக்குமாறு அவர்கள் கேட்டனர். அவள் அன்று அவரைச் சந்தித்தபோது அவள் அவருடன் மீண்டும் பேசினாள், ஆனால் அவர் அவளைப் புறக்கணித்து எந்தப் பதிலும் சொல்லவில்லை. அவர்கள் அவளிடம் (உம் சலமா குழு) கேட்டபோது, அவர் 'எந்த பதிலும் சொல்லவில்லை' என்று பதிலளித்தார். அவர்கள் அவளிடம், 'அவர் பதில் சொல்லும் வரை அவரிடம் கேட்டுக்கொண்டே இருங்கள்' என்றார்கள். அவள்

முறை வந்ததும் அவனிடம் மீண்டும் பேசினாள். அவர் (முஹம்மது) அவளிடம் கூறினார்: 'ஆயிஷாவைப் பற்றிய விஷயத்தில் என்னைத் காயப்படுத்தாதீர்கள், ஏனெனில் 'ஆயிஷாவின் ஆடையைத் தவிர வேறு எந்த (ثوب) ஆடையிலும் “தெய்வீக தூண்டுதல்கள்(inspirations)” என்னிடம் வராது! அந்த பதிலுடன் உம் சலமா கூறினார்: 'உன்னை காயப்படுத்தியதற்காக நான் அல்லாஹ்விடம் வருந்துகிறேன்.' பின்னர் உம் சலமாவின் குழுவினர் அல்லாஹ்வின் தூதரின் மகள் பாத்திமாவை அழைத்து அவரிடம் செல்லுமாறு கூறி அவளை அல்லாஹ்வின் தூதரிடம் அனுப்பி, 'உங்கள் மனைவிகள் தங்களுக்கும் அபுபக்கரின் மகளுக்கும்(ஆயிஷா) சமநீதியாக நடத்தும்படி கேட்டுக்கொள்கிறார்கள். ' அப்போது பாத்திமா அவருக்கு செய்தியை வழங்கினார். நபி (ஸல்) அவர்கள், 'என் மகளே! நான் நேசிப்பவளை நீ நேசிக்கவில்லையா?’. பாத்திமா சாதகமாக பதிலளித்தார், அவள் திரும்பிச் சென்று சூழ்நிலையை அவர்களிடம் கூறினார். இருப்பினும், உம் சலமா குழு அவளை மீண்டும் அவரிடம் செல்லும்படி கேட்டது, ஆனால் அவள்(பாத்திமா) நிராகரித்தார். பின்னர் அவர்கள் ஸைனப்-பின்த்-ஜஹ்ஷை அனுப்பினார்கள், அவள் அவரிடம் சென்று கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினார், 'உங்கள் மனைவிகள் இப்னு -அபு-கோஹாஃபாவின் (ஆயிஷா) மகளிளோடு சம உரிமை தரும்படி கோருகிறார்கள்.' அதைத் தொடர்ந்து அவள் குரலை உயர்த்தி, 'ஆயிஷாவின் முகத்தை நோக்கி மிகவும் கத்தினாள், அதனால் அல்லாஹ்வின் தூதர் ஆயிஷா அவளைத் திரும்ப தாக்குவாளா என்று பார்த்தார். பின்னர் ஆயிஷா ஸைனப்பை அமைதியாக்கும் வரை கத்த ஆரம்பித்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவைப் பார்த்துக் கூறினார்கள். 'அவள்(ஆயிஷா) நிச்சயமாக அபூபக்கரின் மகள்தான்!"

1. முஹம்மது தனது இறைவனின் சட்டத்தை உறுதியாக கடைப்பிடிக்கவில்லை. குர்ஆன் 4:129 கூறுகிறது, "உங்கள் மனைவியிடையே சமமாக நீதியை நீங்கள் நடத்த முடியாது, நீங்கள் எப்படிச் செய்ய முயற்சித்தாலும்!"

2. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருப்பது எவ்வளவு அசிங்கமானது என்பதற்கு இதுவே உயிருள்ள உதாரணம்.

3. மனைவிகள் எப்படி இரு படைகளாகக் கூடுகிறார்கள் என்பதை இது காட்டுகிறது!

4. குழந்தைகள் என்ன ஆவர்? அவர்கள் குழுவாகச் சென்று ஒருவரையொருவர் வெறுப்பார்களா?

5. மனைவிகள் முஹம்மதுவிடம் பெரிதாக ஒன்றும் கேட்கவில்லை. முஹம்மது மற்ற மனைவிகளுக்கு செய்ததைப் போல ஒரு பெண் தன் கணவனைப் பற்றி முஹம்மதுவிடம் புகார் அளிக்கும்படி வந்தாளா என்று எனக்கு ஆர்வமாக இருக்கிறது, அந்த மனிதனை நியாயமாகவும் நீதியாகவும் நடந்து கொள்ளுமாறு முஹம்மது கேட்பார் என்று நான் நம்புகிறேன்! ஆனால்,

முஹம்மதுவே செய்யமாட்டார்!

6. அவர்கள் எப்படி அவரைச் சுற்றி பூனைகளைப் போல நடந்து கொள்கிறார்கள் என்பதையும் கவனியுங்கள். அவர்களில் ஒருவரான உம் சலமா வாயைத் திறந்தபோது, "ஆயிஷாவைப் பற்றி என்னை காயப்படுத்தாதீர்கள்" என்று கூறினார். இது அவளைப் பயமுறுத்தியது, ஏனென்றால் “அது அவரை காயப்படுத்துகிறது” (ஆயிஷாவை அல்ல!) என்று அவர் தெளிவாகச் சொன்னார், அவள் (உம் சலமா) ஒரு பாவப்பட்ட பூனை போல பதிலளித்தாள், "உங்களை காயப்படுத்தியதற்காக நான் அல்லாஹ்விடம் வருந்துகிறேன்."

7. மனைவிகள் அவனுடைய எண்ணத்தை மாற்ற முயற்சி செய்கிறார்கள். இது அவர்கள் எவ்வளவு கோபமாக இருக்கிறார்கள் என்பதை இது நமக்குச் சொல்கிறது, ஏனென்றால் பணம் மற்றும் பரிசுகள் அனைத்தும் ஆயிஷாவின் வீட்டிற்கு மட்டுமே செல்கிறது, இது அநியாயம்!

8. முஸ்லிம்களும் தீயவர்களாக நடந்துகொண்டனர். முஹம்மது ஆயிஷாவின் வீட்டிற்கு போகும்வரை அவர்கள் காத்திருந்தார்கள், ஏனென்றால் அவர்கள் வேறு எந்த மனைவியர் வீட்டிற்கும் பரிசை அனுப்பினால், 'ஆயிஷா அவர்கள் மீது நரகத்தின் கதவுகளைத் திறந்திடுவாள்! அவள் கட்டுப்பாட்டில் அவர் இருப்பதை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொண்டனர். அவளுடைய கோபத்தைத் தவிர்க்க, பரிசின் பலனை முழுமையாகப் பெறுவதற்காக அவர்கள் தங்கள் பரிசுகளை ஆயிஷாவுக்கு அனுப்பினர்.

9. இதன் பொருள், முஹம்மது மற்றவர்களை விட ஆயிஷாவை விரும்பினார், ஏனென்றால் அவள் இளையவள் (அவரது குழந்தை-மனைவி)! சுற்றியிருந்த முஸ்லிம்கள் அனைவருக்கும் இது தெளிவாகத் தெரிந்தது. அது அவருடைய வீட்டின் சுவர்களுக்குள்ளானது மட்டும் அல்ல, பரவலான அறிவு!

10. பிறகு நாம் நம்மை நாமே கேட்கவேண்டும்: எந்த விதிவிலக்குமின்றி அனைத்து முஸ்லிம்களும் தங்கள் பரிசுகளை ஆயிஷாவின் வீட்டிற்கு மட்டும் அனுப்பும் அளவிற்கு, மற்ற மனைவிகளுடன் முஹம்மது எவ்வளவு வன்மையாக நியாயமற்றவர்?

11. மற்ற மனைவிகள், உம் சலமா மூலம், அவரிடம் நியாயமான முறையில் நடந்து கொள்ளுமாறு கேட்டபோது, அவர்களின் கோரிக்கைக்கு பதிலளிக்க அவருக்கு ஏன் நீண்ட காலம தேவைப்பட்டது? அவர்களுக்குத் பதில் சொல்லக்கூட தகுதி இல்லையா?

12. ஆயிஷாவும் ஸைனப்பும் சண்டையிடுவதை முஹம்மது பார்த்துக் கொண்டிருந்தார். பார்த்துக் கொண்டிருக்கும்போதே, ஆயிஷாவை பார்த்து திருப்பி தாக்குவதற்கு பச்சை விளக்கு காட்டினார். "அவள் அவளை அமைதியாக்கினாள்”என்று சொல்லும் அளவிற்கு ஆயிஷா ஒரு

பெரிய வாயாடி பெண் என்பது மிகவும் தெளிவாக உள்ளது.

13. அதற்குப் பிறகு, முஹம்மது ஸைனப்பை அவமதித்தார், ஆயிஷாவிடம், “அவள் உண்மையில் அபு பக்கரின் மகள்!” அதாவது அவள் மிகவும் நல்லவள்! அபுபக்கர் இஸ்லாம் என்னும கூட்டுறவு நிறுவனத்தின் சிறந்த நண்பர் மற்றும் பங்குதாரர் ஆவார்.

14. முஹம்மதுவின் ஒரே உண்மையான மகள் என்று ஷியா பிரிவினர் கூறும் அவரது மகள் பாத்திமாவால் கூட உதவ முடியவில்லை. அதற்கு மேல், “ஆயிஷாவைப் பற்றி என்னைக் காயப்படுத்தாதீர்கள், ஏனென்றால் ஆனால் அவளுடைய உடையில்லாமல் நான் குர்ஆனைப் பெற்றதில்லை!” என்றார்.

• முஸ்லீம்கள் 'ஆடை' என்ற சொல்லை ஆயிஷாவின் வீட்டைக் குறிக்கிறது என்று சொல்ல முயற்சி செய்கிறார்கள், ஆனால் அவர்கள் இதைச் சொல்லும்போது; கதீஜாவின் வீட்டில் முஹம்மது குரானைப் பெறவில்லை என்று அர்த்தம்! அவர் பொய் சொல்கிறார் என்று அர்த்தம்!

• அவர்களின் பல ஹதீஸ்கள் தெளிவாக ஆயிஷாவின் உடையை கூறினாலும், அவர்கள் தங்கள் நபி பெண்களின் ஆடைகளை அணிவதை கற்பனை செய்வதை விரும்புவதில்லை. ஆடை என்ற சொல்லுக்கு ஆயிஷாவின் வீடு என்று பொருள், ஆனால் முஹம்மது கதீஜாவை மணந்தபோது பெற்ற வெளிப்பாடுகள் அனைத்தும் பொய் என்று அவர்களின் நிலைப்பாட்டையே ஏற்றுக்கொள்வோம். இது குறிப்பாக கண்டிக்கத்தக்கது, ஏனென்றால் அந்த நேரத்தில் முஹம்மதுக்கு கதீஜா மட்டுமே மனைவியாக இருந்தார்!

முஹம்மதுவும் சௌதாவும்

முஹம்மதுவும் சௌதாவும்

சௌதாவுக்கு வயதாகி, குண்டாகவும், அசைவுகள் அதிகமாகவும் இருந்தபோது, முஹம்மது அவளது இரவில் அவளுடன் உடலுறவு கொள்ள வருவதை நிறுத்தினார்! அவள் படுக்கைக்கு பயனற்றவள் என்பதால் முஹம்மது தன்னை விவாகரத்து செய்யலாம் என்று சவுதா கேள்விப்பட்டார். அவளால் எந்த தீர்வையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த வயதில், தனக்கு குழந்தைகள் இல்லாததால், யாரும் தன்னை திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அவள் ஆயிஷாவிடம் பேசி அவளிடம் உதவி கேட்டாள், ஏனென்றால் ஆயிஷா எவ்வளவு சக்தி வாய்ந்தவள் என்பதை அவள் அறிந்திருந்தாள். அப்போது ஆயிஷாவுக்கு ஒரு யோசனை வந்தது. பல இடங்களில் ஆயிஷா சொன்னது பற்றிய குறிப்பை நாம் காணலாம். அவற்றில் ஒன்று சுனன் அபு தாவூத், நிக்காஹ் புத்தகத்தில் (உடலுறவு- இதை முஸ்லிம்கள் ‘திருமணம்’ என்று மொழிபெயர்த்துள்ளனர்), பக். 243, ஹதீஸ் 2135:

ஆயிஷாவிடமிருந்து அறிவிக்கப்பட்டது: “நபி எங்கள் ஒவ்வொருவரையும் அவரவருடைய நாளில் சென்று சந்திப்பார், ஒவ்வொரு பெண்ணுடனும் அவளது நாளில் மட்டுமே உடலுறவு கொண்டார்!" (அவர் எவ்வளவு நியாயமானவர் என்று பாருங்கள். பேசுபவர் 'ஆயிஷா' என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். அவள் மற்றவரை குறை சொல்ல வாய்ப்பேயில்லை.)

سنن أبي داود - كِتَاب النِّكَاحِ

حَدَّثَنَا أَحْمَدُ بْنُ يُونُسَ حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ يَعْنِي ابْنَ أَبِي الزِّنَادِ «- ص 243 - 2135
»عَنْ هِشَامِ بْنِ عُرْوَةَ عَنْ أَبِيهِ قَالَ قَالَتْ عَائِشَةُ يَا ابْنَ أُخْتِي كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى
اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا يُفَضِّلُ بَعْضَنَا عَلَى بَعْضٍ فِي الْقَسْمِ مِنْ مُكْثِهِ عِنْدَنَا وَكَانَ قَلَّ يَوْمٌ
إِلَّا وَهُوَ يَطُوفُ عَلَيْنَا جَمِيعًا فَيَدْنُو مِنْ كُلِّ امْرَأَةٍ مِنْ غَيْرِ مَسِيسٍ حَتَّى يَبْلُغَ إِلَى الَّتِي
هُوَ يَوْمُهَا فَيَبِيتَ عِنْدَهَا وَلَقَدْ قَالَتْ سَوْدَةُ بِنْتُ زَمْعَةَ حِينَ أَسَنَّتْ وَفَرِقَتْ أَنْ يُفَارِقَهَا
رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَا رَسُولَ اللَّهِ يَوْمِي لِعَائِشَةَ فَقَبِلَ ذَلِكَ رَسُولُ اللَّهِ
صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنْهَا قَالَتْ نَقُولُ فِي ذَلِكَ أَنْزَلَ اللَّهُ تَعَالَى وَفِي أَشْبَاهِهَا أُرَاهُ
قَالَ وَإِنْ امْرَأَةٌ خَافَتْ مِنْ بَعْلِهَا نُشُوزًا

சௌதாவுக்கு வயதாகி, நபி தன்னை விவாகரத்து செய்துவிடுவார் என்று நினைத்தபோது அல்லது பயந்தபோது, “அல்லாஹ்வின் தூதரே, நான் எனது நாளை ஆயிஷாவுக்குக்

கொடுக்கிறேன்” என்று சொன்னாள். எனவே சௌதா சொன்னதை ஏற்றுக்கொண்ட நபி, இந்த நிகழ்வில் அல்லாஹ் குர்ஆன் 4:128ஐ அனுப்பினான்:

ஒரு மனைவி பாலியல் ஈர்ப்பு குறைவையோ (نشوز)। அல்லது தனது கணவர் கைவிடுவார் என்றோ அஞ்சினால், அவர்கள் மீது எந்த அவதூறோ பழியோ இல்லை என்றால், அவர்கள் (மனைவிகள்) தங்களுக்குள் சமரச தீர்வுக்கு ஏற்பாடு செய்தால், பேராசையால் ஆண்களின் ஆன்மா மாறினாலும், அத்தகைய தீர்வு சிறந்தது; ஆனால் நீங்கள் நன்மை செய்து அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து பாதுகாப்பைத் தேடினால், நீங்கள் செய்யும் அனைத்தையும் அல்லாஹ் அறிந்தவனாக இருக்கின்றான்.

வேடிக்கையான வார்த்தை (**Nshoze**, نشوز)। “நோஷோஸ்” என்பது குரான் 4:34-ல் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாகும், இது ஆண் தனது மனைவியை அடிப்பதற்கான காரணத்தை அளிக்கிறது. ஆண் அதைச் செய்தால், அவள் அதை மனதைவிட்டுபோகும்படிசெய்து அவனை மகிழ்விக்க அவனது விருப்பங்களைச் செய்ய வேண்டும்!

ஃபதே அல்-பாரி ஃபே ஷேர் சாஹிஹ் அல்-புகாரி, 1986 அச்சிடுதல், பதிப்பாளர் அல்-ரையன், பக். 223:

فتح الباري شرح صحيح البخاري
أحمد بن علي بن حجر العسقلاني
دارالريان للتراث
سنة النشر: 1407هـ / 1986م
ص: 223
ولقد قالت سودة بنت زمعة حين أسنت وخافت أن يفارقها رسول الله صلى الله عليه وسلم : يا رسول الله يومي لعائشة ، فقبل ذلك منها ، ففيها وأشباهها نزلت وإن امرأة خافت من بعلها نشوزا الآية
وله نحوه من رواية جرير عن هشام ، وأخرج أبو داود هذا الحديث وزاد فيه بيان سببه ، أوضح من رواية مسلم

"சௌதா சொன்னாள்: எனக்கு வயதாகிவிட்டதால், நபி என்னை விவாகரத்து செய்வார் என்று நான் பயந்தேன், எனவே நான் அவரிடம், 'என்னை விவாகரத்து செய்யாதீர்கள், என்னை உங்கள் மனைவிகளில் ஒருவராக வைத்துக் கொள்ளுங்கள், நான் ஆயிஷாவுக்கு என் நாளைக் கொடுக்கிறேன்! என்றேன். எனவே குர்ஆன் 4:128 வசனம் வெளிப்படுத்தப்பட்டது," இந்த ஹதீஸ் ஹிஷாம் மற்றும் அபு-தாவூதில் இருந்து ஜரேர் ஆகியோரால் அறிவிக்கப்பட்டது. மேலும் இது சாஹிஹ் முஸ்லிமில் விளக்கப்பட்டுள்ளது.

ع[ص: 428] سودة كانت امرأة قد أسنت ، ففزعت أن يفارقها رسول الله صلى الله
عليه وسلم ، وضنت بمكانها منه ، وعرفت من حب رسول الله صلى الله عليه وسلم
عائشة ومنزلتها منه ، فوهبت يومها من رسول الله صلى الله عليه وسلم لعائشة ،
فقبل ذلك النبي صلى الله عليه وسلم .

தஃப்சீர் இப்னு கதிர் பெய்ரூட், 2002 இல் வெளியிடப்பட்டது, தொகுதி. 2, பக். 428:

இப்னு அபாஸிடமிருந்து அறிவிக்கப்பட்டது: “சௌதாவுக்கு வயதாகிவிட்டதால், நபி தன்னை விவாகரத்து செய்துவிடுவாரோ என்று அவள் பயந்தாள். மேலும் அவள் மனைவி என்ற பதவியை இழந்துவிடுவாள், மேலும் நபி ஆயிஷாவை எவ்வளவு நேசித்தார் என்பதை அவள் அறிந்திருந்தாள். அதனால் அவள் தன் நாளை அவளுக்கு (ஆயிஷா) கொடுத்தாள், நபி ஏற்றுக்கொண்டார்"

குர்ஆன் 4:128 இல் ஃபக்ர் அத்-தின் அல் ரஸி, அல் தஃப்சிர் அல் கபர் (பெரும் விளக்கம்) : சௌதா பின்த் ஜமாவை விவாகரத்து செய்ய நபி விரும்பினர், ஆனால் சௌதா தன் நாளை ஆயிஷாவிற்கு விட்டுக்கொடுக்கும் நிபந்தனையின் பேரில் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளுமாறு அவர்டம் முன்மொழிந்தார். அவர் அதை அனுமதித்தார் மற்றும் அவர் அவளை (சௌதா) விவாகரத்து செய்யவில்லை.

இதே கதையை மிஷ்கத் அல் மஸாபிஹ் புத்தகத்தில் காணலாம். 2/966, எண். 3237 ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. 3, புத்தகம் 48, ஹதீஸ் 853:

...சௌதா பின்த் ஜமாஅல்லாஹ்வின் தூதரை திருப்திப்படுத்தவும் மகிழ்விக்கவும் முயற்சிக்கும் நபியின் மனைவி ஆயிஷாவுக்கு தனது இரவையும் பகலையும் (மனைவியாக தனது செக்ஸ்/பாலியல் உரிமையை) வழங்கினார்.

அரபு ஹதீஸில் வேறு எண் உள்ளது; 2454:

البخاري - كِتَاب الْهِبَةِ وَفَضْلِهَا وَالتَّحْرِيضِ عَلَيْهَا - أما إنك لو أعطيتها أخوالك كان أعظم لأجرك
2454 حَدَّثَنَا حِبَّانُ بْنُ مُوسَى أَخْبَرَنَا عَبْدُ اللَّهِ أَخْبَرَنَا يُونُسُ عَنْ الزُّهْرِيِّ عَنْ عُرْوَةَ عَنْ
عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا قَالَتْ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا أَرَادَ سَفَرًا
أَقْرَعَ بَيْنَ نِسَائِهِ فَأَيَّتُهُنَّ خَرَجَ سَهْمُهَا خَرَجَ بِهَا مَعَهُ وَكَانَ يَقْسِمُ لِكُلِّ امْرَأَةٍ مِنْهُنَّ
يَوْمَهَا وَلَيْلَتَهَا غَيْرَ أَنَّ سَوْدَةَ بِنْتَ زَمْعَةَ وَهَبَتْ يَوْمَهَا وَلَيْلَتَهَا لِعَائِشَةَ زَوْجِ النَّبِيِّ صَلَّى
اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ تَبْتَغِي بِذَلِكَ رِضَا رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ

முஹம்மது ஏன் இந்த பாவப்பட்ட பெண்ணை விவாகரத்து செய்து அவளுடன் படுக்கையைப்

பகிர்ந்து கொள்வதை நிறுத்த விரும்பினார்? நாம் ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. 2, புத்தகம் 26, ஹதீஸ் 740-ல் படித்து அறிகிறோம்:

ஆயிஷா விவரித்தார்: "ஜம்-இரவில் தன்னை சீக்கிரமாக போகும்படி அனுமதிக்குமாறு சௌதா நபியிடம் கேட்டார், மேலும் அவர் சௌதா ஒரு குண்டான மற்றும் மிகவும் மெதுவாக செல்லும் பெண்மணி. நபியவர்கள் அவள் செல்ல அனுமதித்தார்.

1. இந்தக் கதையைப் பற்றி நான் மென்மேலும் குறிப்பிடல்களைக் காட்ட முடியும், ஆனால் அனைத்தும் அல்லது சிலவும், முஹம்மது தனது மனைவிகளுடன் ஒருபோதும் பாரபட்சமின்றி இருந்ததில்லை என்பதை விளக்குவதற்கு போதுமானது.

2. இஸ்லாத்தின் சிறந்த மனிதர் தனது மனைவிகளுடன் பாரபட்சமின்றி இல்லாவிட்டால், மற்ற முஸ்லிம்கள் இருக்க முடியுமா?

3. சிறந்த மனிதன் ஒரு சுயநலவாதி. அவர் இந்த பெண்ணை (சௌதா) அவள் வயதாகி, பருமனாகும் வரை, பல ஆண்டுகளாகப் பயன்படுத்தினார், பின்னர் அவளை தனது குப்பைப் தொட்டியில் கொட்டினார்!

4. அல்லாஹ் எப்போதும் அத்தியாயங்களை முஹம்மதுவின் பாலியல் காமத்துடன் சரியாகப் பொருத்தி அதை புனித கட்டளையாக்கிக் கொள்கிறான்.

5. முஸ்லீம்கள் ஒரு முஸ்லீம் ஆண் தனது மனைவிகளுடன் எப்போதும் பாரபட்சமின்றி இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் ஒரு பெண்ணின் வயது மற்றும் அழகைத் தவிர வேறு எந்த தவறும் இல்லாமல் அவளை விவாகரத்துடன் மிரட்டுகிறார்கள். இது நியாயமா?

6. அல்லாஹ் அவனிடம், "இந்தக் கிழவியை வாலிபத்தில் பாவித்து இப்போது இழிவுபடுத்துகிறாய்" என்று ஏன் கூறவில்லை?

7. முஹம்மது செய்தது போல், ஒருவர் தங்களின் தாய், சகோதரி அல்லது மகளுக்கு அப்படிச் செய்தால் அவரை எந்த முஸ்லிமும் பாராட்டுவாரா?

8. முஹம்மதுவின் வீட்டை அதிகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வரவிருக்கும் வாய்ப்பை பயன்படுத்த ஆயிஷா குதிப்பது எவ்வளவு மோசமானது, அப்போதுதானே அதிகாரம் கிடைக்கும்.

9. பெண்கள் ஒருவருக்கொருவர் உடன்பாடு செய்து கொள்வதில் அல்லாஹ்வுக்கு ஓகே(சரி), என்று குர்ஆனில் வசனம் கூறுகிறது. இது எல்லா முஸ்லீம்களுக்கும் தானா அல்லது முஹம்மதுவுக்காக மட்டுமா? உண்மை என்னவென்றால், அது எப்போதும் போல

முஹம்மதுவுக்கு மட்டுமே! இது உண்மையில் ஒரு ஒப்பந்தமா அல்லது அவளுடைய உணவு மற்றும் தங்குமிடத்திற்காக ஒரு பரிமாற்றமா? அதற்காக மட்டுமே அந்த பாவப்பட்டதும் வயதுமான பெண் கட்டாயப்படுத்தப்பட்டாளா?

நோஷோஸ் என்ற சொல்

பின்வரும் வசனங்களில் உள்ள **noshoze-நோஷோஸ்** என்ற வார்த்தையின் அர்த்தம் படுக்கையில் இருக்கும் மனைவியை நிராகரிப்பது அல்லது அவரை/அவளை இனி விரும்பாதது. பெண்களை படுக்கைக்கு செல்லுமாறு கணவன் கட்டளையிடும் விஷயத்தில் கீழ்படியாமையையும் பற்றியது.

விசித்திரமான விஷயம் என்னவென்றால், இதே வார்த்தை குர்ஆன் 4:34 வசனத்தில் உள்ளது.
نُشُوزَهُنَّ

நோஷோஸ் என்பது தண்டனையாக தனது மனைவியை அடிப்பதற்கான உரிமையை ஆணுக்குக் கொடுக்கும் ஒரு சாக்கு அல்லது காரணம். ஏனெனில் அவள் படுக்கையில் இருக்கும் தன் கணவனை அதிகமாக விரும்புவதில்லை, அல்லது படுக்கைக்குச் செல்வதற்கு (உடலுறவு) அல்லது வேறு எந்த காரணத்திற்காகவும் அவருக்குக் கீழ்ப்படிவதில்லை. ஒரு ஆண் தன் மனைவிக்கு "நோஷோஸ்" செய்பவராக இருந்தால், அவளுடன் இனி தூங்க விரும்பாததால், ஆணுக்கு அவர் கொடுத்த அதே உரிமையை (அடிக்கும் உரிமையை) அல்லாஹ் பெண்களுக்கு வழங்க மாட்டான். ஒரே வார்த்தையாக இருந்தாலும், ஒரே செயலாக இருந்தாலும், அது செய்யப்படும் ஆளைப் பொறுத்து எல்லாமே மாறும்.

1. ஆண் பெண்ணுக்கு நோஷோஸ் செய்வது (நபி சௌதாவுக்க)= ஆண் நல்லவன், அல்லாஹ் அதற்குப் உடன்படுகிறான், அந்தச் செயலை அல்லாஹ் ஆசீர்வதித்து ஒரு அத்தியாயத்துடன் ஆதரிக்கிறான்.

2. பெண் ஆணுக்கு நோஷோஸ் செய்தால் = அடித்தல், சிறையில் அடைத்தல் மற்றும் அவமானப்படுத்துதல் ஆகியவை பதில்.

ஒரே செயலுக்கு அல்லாஹ் இரண்டு வெவ்வேறு சட்டங்களை வைத்திருக்கிறான் என்பது தெளிவாகிறது. பாலினம் மாறும்போது சட்டம் மாறுகிறது. ஒரு ஆண் செய்தால் அது நல்லது, சிறந்தது, அல்லாஹ்வால் ஆசீர்வதிக்கப்பட்டது. ஆனால் அதை பெண் செய்தால் அது கண்டிக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது மற்றும் அடித்து தண்டிக்கப்படுகிறது.

குர்ஆன் 4:34 பற்றிய முக்கிய குறிப்பு

அந்த வசனத்தில், முஸ்லிம்கள் '**Ohjroin' (ஒஹ்ஜ்ரொய்ன்)**, என்ற வார்த்தையை,

أهجروهن,

"தண்டனையாக அவர்களை படுக்கையில் (தனியாக)விடுங்கள்" என்று மொழிபெயர்க்கின்றனர்.

ஆனால் அந்த “நோஷோஸ்" என்ற வார்த்தை என்பது: வாழ்க்கைத் துணையின் படுக்கையை விட்டு வெளியேறும் நபர் என்பதைக் கண்டறிந்தோம். எனவே முஸ்லீம்கள் உண்மையைச் சொல்லவில்லை என்பது தெளிவாகிறது, ஏனென்றால் ஒரு பெண் உங்கள் படுக்கையை விட்டு வெளியேறினால், இது அவளுடனுள்ள உங்கள் பிரச்சனை. அப்படியானால், (அவளை படுக்கையில் தனியாக விட்டுவிட்டு) உங்களுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும்படி அவளை எப்படி வற்புறுத்துவது?

உண்மை என்னவென்றால், அந்த வார்த்தை ஆணை நிராகரித்ததற்காக அவர்களை சிறையில் அடைப்பதும், அவர்களை கட்டி வைத்து கற்பழிப்பதும் தண்டனையாக இருக்கிறது. நான் எப்பொழுதும் போல் அவர்களின் இஸ்லாமிய புத்தகங்களில் இருந்து மட்டுமே ஆதாரம் காட்டுவேன்.

முஹம்மது வகுத்த விதிகளில் ஒன்று, பெண்கள் எப்போது அடிக்கப்படத் தகுதியானவர்கள் என்பதை ஆணுக்கு வெளிப்படையாகத் தெரிவிப்பதும், கணவனின் நடத்தையை கேள்வி கேட்க யாருக்கும் உரிமை இல்லை என்பதும், பின்வரும் ஹதீஸில் நாம் பார்க்கிறோம்.

சுனன் அபு தாவூத், புத்தகம் 11, ஹதீஸ் 2142:

உமர் இப்னு அல் கத்தாப் அவர்கள் கூறினார்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எந்தவொரு ஆணும் தன் மனைவியை எப்படி, ஏன் அடிக்கிறான் என்று கேட்கவோ, வினவவோ கூடாது.

” சுனன் அபு தாவூத், புத்தகம் 12, எண் 2220:

سنن أبي داود - كِتَاب الطَّلَاقِ - خذ بعض مالها وفارقها

2228 حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ مَعْمَرٍ حَدَّثَنَا أَبُو عَامِرٍ عَبْدُ الْمَلِكِ بْنُ عَمْرٍو حَدَّثَنَا أَبُو عَمْرٍو السَّدُوسِيُّ الْمَدِينِيُّ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي بَكْرِ بْنِ مُحَمَّدِ بْنِ عَمْرِو بْنِ حَزْمٍ عَنْ عَمْرَةَ عَنْ عَائِشَةَ أَنَّ حَبِيبَةَ بِنْتَ سَهْلٍ كَانَتْ عِنْدَ ثَابِتِ بْنِ قَيْسِ بْنِ شَمَّاسٍ فَضَرَبَهَا فَكَسَرَ بَعْضَهَا فَأَتَتْ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ بَعْدَ الصُّبْحِ فَاشْتَكَتْهُ إِلَيْهِ فَدَعَا النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ثَابِتًا فَقَالَ خُذْ بَعْضَ مَالِهَا وَفَارِقْهَا فَقَالَ وَيَصْلُحُ ذَلِكَ يَا رَسُولَ اللَّهِ قَالَ نَعَمْ قَالَ فَإِنِّي أَصْدَقْتُهَا حَدِيقَتَيْنِ وَهُمَا بِيَدِهَا فَقَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ خُذْهُمَا وَفَارِقْهَا فَفَعَلَ

'ஹபீபா பிண்ட்(மகள்) சஹேல், அவள் தாபெத்தின் மனைவி, அவன் அவளுடைய உடலின் சில பாகங்களை உடைக்கும் வரை அவளை அடித்தான்! எனவே அவள் நபியிடம் நீதி கேட்டு வந்தாள், அதனால் நபி அவனை அழைத்தார். அவன் வந்தபோது நபி அவரிடம், "அவளுடைய பணத்தில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு அவளை விட்டுவிடு" என்று கூறினார். அதற்கு தாபெத், “அது பரவாயில்லையா?! நான் அவளுக்கு இரண்டு தோட்டங்களை வரதட்சணையாகக் கொடுத்தேனே”. நபி (ஸல்) அவர்கள், "அவைகளைத் திரும்ப எடுத்துக்கொள், அவளை விட்டுவிடு" என்றார்.

மனைவியை அடிப்பதைப் பற்றிய கடைசி துணுக்கு

• அடிபட்டு எலும்புகள் உடைந்த பெண்ணை, தான் திருமணத்திற்காகப் பெற்ற பணத்தை இழக்கும்படி முஹம்மது கட்டாயப்படுத்தினார்.

• இந்த மனிதனை திருமணம் செய்ததற்காக அவர் அந்த பெண்ணை தண்டிக்கிறார் என்று அர்த்தம். எலும்பு முறிந்த நிலையில், பணமும் இல்லாமலும், வீடும் இல்லாமலும் திருமணத்தை விட்டு வெளியேறுகிறாள்; அதனால் அவள் அனைத்தையும் இழந்தாள்.

• முஹம்மது அந்த மனிதனிடம் எவ்வளவு கடுமையாக அவளை அடித்தான் என்பது பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை, ஏன் இப்படி செய்தான் என்று அந்த நபரிடம் கூட அவர் கேள்வியும் கேட்கவில்லை.

• இதன் பொருள் என்னவென்றால், இஸ்லாத்தின் படி, ஒரு பெண் தனது கணவனை மோசமாக அடித்ததற்காக நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றால், அவள் எல்லாவற்றையும் இழப்பாள், அவன் எதையும் இழப்பதில்லை. அவன் தனது முழு பணத்தையும் திரும்பப் பெறுகிறான். அவன் ஒரு புதிய மனைவியை வாங்கலாம்!

- இஸ்லாத்தில் பெண்களுக்குமேல் ஆண் கடவுள் போன்றவன் என்பதற்கு இது சான்றாகும்

இஸ்லாத்தில் பாலியல்

இஸ்லாத்தில் பாலியல்/செக்ஸ்

இஸ்லாத்தில் உள்ள பெரிய முரண்பாடுகளில் ஒன்று பாலியல்/செக்ஸ்-பற்றிய அதன் கட்டளைகளும் போதனைகளும் ஆகும். ஒருபுறம், ஒழுக்கம் என்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை என்று இஸ்லாம் போதிக்கிறது. மறுபுறம், இஸ்லாம் ஒரு பிளேபாய் (playboy) காம புத்தகம்.

முஹம்மது ஆண்களை பாலியல் வாக்குறுதிகளால் கவர்ந்திழுக்கிறார், சில சமயங்களில் இந்த வாக்குறுதிகள் நிஜத்தில் நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளை விட வெறும் கற்பனைகளாகும்.

துஹ்ஃபட்-அல்-ஹபிப் அலா ஷேர்-எல்-அல்-கத்தெப், Nukah புத்தகம் (ஓத்தல்- F--- என்ற வார்த்தை புத்தகம்), ப. 356, இமாம் அல்குர்துபி கூறினார்:

تحفة الحبيب على شرح الخطيب - وفائدته
ص 356 - كتاب النكاح
بل صرح القرطبي بأنه يجوز نكاح سائر المحارم في الجنة إلا الأم والبنت ؛ لأن العلة هنا التباغض وقطيعة الرحم وهي منتفية هناك ، لا ما فيه رذيلة كوطء في دبر ومنه وطء الأبعاض كبنته وأمه ؛ وقد ورد : " يعطى أحدكم في الجنة ذكرا مثل النخلة السحوق وفرجا يسع ذلك "ص 356 - كتاب النكاح قدم العبادات

சுருக்கமாக, உங்கள் தாய் மற்றும் மகளைத் தவிர, சொர்க்கத்தில் உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் உடலுறவு கொள்வது சட்டபூர்வமானது என்று மேலுள்ள உரை கூறுகிறது. குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான செக்ஸ்[பாலுறவு] முறையற்ற செக்ஸாக[புணர்ச்சியாக] கருதப்படுவதில்லை, ஏனெனில் அது இனப்பெருக்கத்தை ஏற்படுத்தாது. இது ஆசனஓட்டையில் உடலுறவு கொள்வது போல் மோசமானதல்ல என்றும் கருதப்படுகிறது. கூடுதலாக, அல்லாஹ் ஒவ்வொரு ஆணுக்கும் சிசினத்தின்[ஆண்குறியின்] முடிவைக் காண முடியாத நீளத்திற்கு ஒரு பனை மரத்தின் தடிமனான சிசினத்தைக்[ஆண்குறியைக்] கொடுப்பான் என்று முஹம்மது கூறியதாகக் கூறப்படுகிறது.

நாம் உரையை தொடர்ந்து படிக்கும்போது, இஸ்லாமிய ஜின்னாவில்(சொர்க்கத்தில்) ஒரு ஆண் தனது தாய் மற்றும் மகளைத் தவிர, அவனது குடும்பத்தைச் சேர்ந்த அனைத்து பெண்களுடனும் உடலுறவு கொள்ள அனுமதிக்கப்படுகிறான். இதன் பொருள் முஸ்லீம் ஆண்கள் தங்கள் சகோதரிகள், பாட்டி, அத்தைகள் மற்றும் மருமகள்களுடன் உடலுறவு கொள்ளலாம். இவ்வாறே

முஹம்மது அந்த அதிகாரத்தை நீட்டி ஆண்கள் அனைவருடனும் உடலுறவு கொள்ள அனுமதித்தார். அதன் மூலம், முஹம்மது பெடுயின் ஆண்களின் பாலியல் தேவைகளையும் கற்பனைகளையும் பூர்த்தி செய்கிறார். இதன் விளைவாக, அவர் அவர்களின் மனதைக் கட்டுப்படுத்தினார், மேலும் இந்த வாக்குறுதிகளைப் பற்றி சிந்திக்க அவர்களுக்கு போதுமான இடம் கொடுக்கவில்லை—அதாவது, அவை நிறைவேற்றப்படுமா இல்லையா—ஏனெனில் அவை புறக்கணிக்கப்பட முடியாத அளவுக்கு நல்லவை.

சிசினம்(ஆண்குறி) முடிவில்லாத பனை மரத்தைப் போன்றது

முஹம்மது முஸ்லீம் ஆண்களுக்கு அவர்கள் விரும்புவதைக் கொடுப்பதன் மூலம் அதை மேலும் எடுத்துச் செல்கிறார். அவர்கள் மிகப் பெரிய அந்தரங்க பாகங்களை வைத்திருக்க விரும்புகிறார்கள். ஆண்களுக்கு சிசினம் (ஆணுறுப்பு) பனைமரத்தின் அளவு இருக்கும், அதன் முடிவைப் பார்க்க முடியாது. முஹம்மது قوحس என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார், அதாவது முடிவைக் காண முடியாது. கூடுதலாக, ஆணின் மிகவும் தடிமனான சிசினத்துக்கு பொருந்தக்கூடிய யோனியை(பெண்ணுறுப்பை)க் கொண்ட ஒரு பெண்ணை அல்லாஹ் ஆண்களுக்கு வழங்குவான்.

பாலியல் ஒழுக்கம்

குர்ஆனில் காணப்படும் அறநெறிகளைக் காட்டும் சில வசனங்களுடன் ஆரம்பிக்கலாம். குர்ஆன் 23:5-7:

> 23:5-7
>
> وَٱلَّذِينَ هُمْ لِفُرُوجِهِمْ حَٰفِظُونَ
> إِلَّا عَلَىٰٓ أَزْوَٰجِهِمْ أَوْ مَا مَلَكَتْ أَيْمَٰنُهُمْ فَإِنَّهُمْ غَيْرُ مَلُومِينَ
> فَمَنِ ٱبْتَغَىٰ وَرَآءَ ذَٰلِكَ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْعَادُونَ
>
> 5 தங்கள் அந்தரங்க உறுப்புகளை (மற்றவர்களிடமிருந்து) பாதுகாத்துக் கொள்பவர்கள்.
> 6 அவர்களின் பெண்களிடமிருந்தோ அல்லது அவர்களுக்குச் சொந்தமான அடிமைகளிடமிருந்தோ தவிர
> 7 இந்த விதிவிலக்குகளுக்கு அப்பால் செல்பவர் அல்லாஹ்வுக்கு எதிரானவர்.

இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவென்றால், முஸ்லீம் ஆண்கள் தங்கள் பாலியல்

ஆசைகளைப் பூர்த்தி செய்ய பல வழிகளைக் கொண்டுள்ளனர்:
1. அவர் ஒரே நேரத்தில் நான்கு மனைவிகளை திருமணம் செய்து கொள்ளலாம் மற்றும் புதிய மனைவிகளுக்கு இடமளிக்க அவர்களில் யாரை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் விவாகரத்து செய்யலாம்.

2. முத்தா எனப்படும் தற்காலிக திருமணத்தில் அவர் ஒரு பெண்ணை உடலுறவுக்கு அமர்த்தலாம். முத்தா (Mut'a) என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு படுக்கையைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு ஒப்பந்தமாகும், அதில் ஒப்பந்தத்தின் காலம் மற்றும் பணம் செலுத்தும் அளவு ஆகியவை முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகின்றன.

3. தனது அடிமைகள் அனைவருடனும் அவர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் உடலுறவு கொள்ள அவனுக்கு உரிமை உண்டு. அவர்கள் கோடிக்கணக்கில் இருக்கலாம், ஆனால் அவன் அவர்களை வைத்திருக்கும் வரை, அவர்கள் அனைவருடனும் படுப்பதற்கு அவனுக்கு உரிமை உண்டு. இது அவனுக்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச மனைவிகளின் எண்ணிக்கைக்கு முரணானது.

இஸ்லாத்தில் "திருமணம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதன் நோக்கம் திருமணத்திற்குப் புறம்பான உறவுகளை சட்டப்பூர்வமாக்குவதற்கு மட்டுமே. இது உண்மையான திருமணம் அல்ல:

• உடலுறவுக்காக பெண்கள் பறிக்கப்படுகிறார்கள்.

• அவர்களோடு உண்மையாயிருக்க எதுவும் வழங்கப்படவில்லை.

• ஒரு ஆண் தன் மனைவி அல்லது மனைவிகளை விவாகரத்து செய்வது எளிது.

• திருமணம் தோல்வியானது. இது ஆணின் விருப்பத்தின்படி செய்யப்படுகிறது, இருவருடையது (ஆண் மற்றும் பெண்) அல்ல.

• சட்டப்படி, ஒரு ஒப்பந்தமானது இரு தரப்பினருக்கும் தொடங்குதல் மற்றும் முடிப்பது உட்பட வரை சம உரிமைகளை வழங்குகிறது. இருப்பினும், குரான் மற்றும் முஹம்மதுவின் படி, உரிமை என்பது செக்ஸை(பாலினத்தை) மட்டுமே அடிப்படையாகக் கொண்டது - அதாவது ஆண்கள் சிறப்பு சிகிச்சை பெறுகிறார்கள். இது ஆண்களுக்கு முழுமையான அதிகாரத்தையும் ஒப்பந்தத்தின் முழு கட்டுப்பாட்டையும் வழங்குகிறது. இது பெண்ணை ஒரு பணியாளருக்கு ஒப்பிடுகிறது, அவள் ஆணுக்கு அவர் விரும்பும் அல்லது தேவையிருக்கும் வரை சேவையை வழங்குகிறாள். அவர் எப்போது வேண்டுமானாலும் ஒப்பந்தத்தை ரத்து செய்யலாம். அவர்

சொல்லலாம் “எனக்கு இனி நீ தேவையில்லை. வெளியே போ!"

• இஸ்லாம் கூறும் திருமணத்தின் முழுக் கருத்தும் ஒரு ஆணை மகிழ்ச்சியடையச் செய்வதற்கான வழி என்பதை இது நிரூபிக்கிறது. பெண் என்பவள் வெறும் செக்ஸ் பொம்மை. ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ளதைத் தவிர அவளுக்கு எந்த உரிமையும் இல்லை, இதில் பணம் செலுத்துவதைத் போன்றதைத் தவிர வேறில்லை.

இதற்கு முன் எந்த பெண்களுக்கும் இல்லாத அனைத்து உரிமைகளும் முஸ்லிம் பெண்களுக்கு வழங்கப்படுவதாக முஸ்லிம்கள் கூறுகின்றனர். இருப்பினும், உண்மை என்னவென்றால், அவர்கள் குறிப்பிடும் உரிமைகள் விலங்குகளுக்கு வழங்கப்பட்ட அதே உரிமைகளைத் தவிர வேறில்லை; அதாவது அவர்களுக்கு உணவளிப்பது மற்றும் தங்குமிடம் கொடுப்பது. ஆண், "வழங்குபவர்", தனது விலங்குகளுக்கும் அதே "உரிமைகளை" வழங்குகிறார்.

மேலும், இஸ்லாம் பெண்களுக்கு சொத்துரிமையை வழங்கியதாகக் கூறப்படுகிறது, ஆனால் அவள் ஆண்கள் பெறுபவற்றில் பாதியை மட்டுமே அவள் பெறுகிறாள் என்று அவர்கள் நம்மிடம் கூறவில்லை. இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் பற்றி நான் விவாதிக்கும் பகுதியில் இதைப் பற்றி மேலும் விவாதிப்பேன்.

இந்த வகையான போதனை கிறிஸ்து மத்தேயு 19:5-6 (KJV) இல் கூறியதற்கு நேர்மாறானது:

> மத்தேயு 19:5-6
>
> “இதன் காரணமாக ஒரு மனிதன் தன் தந்தையையும் தாயையும் விட்டுத் தன் மனைவியுடன் இணைந்திருப்பான், இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆகவே, அவர்கள் இருவரல்ல, ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆதலால், கடவுள் இணைத்ததை, மனிதன் பிரிக்காதிருப்பானாக.”

கிறிஸ்தவ திருமணம் என்பது இறைவனின் ஒற்றுமை, உடலுறவுக்கான ஒப்பந்தம் அல்ல.

குர்ஆன் 4:24 வசனத்தின்படி இந்த வகையான பாலியல் ஒப்பந்தம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதை காட்ட உங்களுக்கு ஒரு உதாரணம் தருகிறேன். நாம் ஒரு ஆணும் பெண்ணும் முத்தா (தற்காலிக உடலுறவு) ஏற்பாட்டைப் பற்றி விவாதிக்கிறார்கள். அவர்களில் ஆணை அஹ்மத் என்றும் பெண்ணை பாத்திமா என்றும் அழைப்போம்.

அஹ்மத் : ....பாத்திமா, உங்களுக்கு சலாம் அலைக்கும்.

பாத்திமா: ....உங்களுக்கும்! நான் எப்படி உங்களுக்கு உதவலாம்?
அஹ்மத் : ....இன்பத் திருமணம் (முத்தா) செய்ய வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளையின்படி உங்களுடன் ஒரு அரை மணி நேரம் படுக்கையைப் பகிர்ந்து கொள்வதில் எனக்கு மிகுந்த ஆசை இருக்கிறது.
பாத்திமா : ....அதுக்கு நான் ரெடி, ஆனா எனக்கு எவ்வளவு கூலி கொடுப்பீங்க?
அகமது: ....நான் உனக்கு மூன்று டாலர்கள் மற்றும் 50 காசுகள் தருகிறேன்.
பாத்திமா: ....ம்ம்ம், பத்து டாலருக்கு நான் உனக்கு முன் ஒரு மனிதனை செய்தேன்.
அஹ்மத்: ....சரி, நான் ஐந்தாக வைக்கிறேன். ஒருவேளை அவர் பணக்காரராக இருக்கலாம். நான் பணக்காரன் இல்லை!
பாத்திமா: ....சரி. நாம் அரை மணி நேரம் உடலுறவு கொள்வோம், நபி கூறியது போல் என் வியர்வை காய்வதற்குள் நீங்கள் எனக்கு பணம் கொடுங்கள்.
அஹ்மத்: .... சரி ஒப்பந்தம் ஏற்கிறேன். நாம் படுக்கைக்குச் செல்வோம். அரை மணி நேர ஒப்பந்தம் முடிந்ததும், முத்தா திருமணம் தானாகவே முடிவடைகிறது, அதாவது விவாகரத்து நடைமுறை தேவையில்லை (அதாவது மனிதன் "நான் உன்னை விவாகரத்து செய்கிறேன்" என்று மூன்று முறை ஓத வேண்டிய அவசியமில்லை).

இங்கே நீங்கள் கவனிக்காதது என்னவென்றால், **முத்தா** என்பது சாட்சிகள் தேவைப்படாத திருமணம். இஸ்லாமிய சட்டத்தில் விபச்சாரம் கண்டிக்கப்படுகிறது என்பதால் இது ஒரு முக்கியமான விஷயம். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தவறான பாலியல் உறவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு நான்கு ஆண் சாட்சிகளால் சான்றளிக்கப்பட்டால் (குரான் 24:4 இன் படி விபச்சாரத்தை நிரூபிக்க குறைந்தபட்சம் நான்கு சாட்சிகள் தேவை), தம்பதியினர் செய்ய வேண்டியது என்னவென்றால் அவர்கள் தாங்கள் முத்தா திருமணத்தில் ஈடுபட்டிருந்தோம் என்றால் போதும். இதை யாரும் நிரூபிப்பதை மறுக்க முடியாது, ஏனென்றால் இந்த தற்காலிக திருமணத்திற்கு தம்பதிகள் சாட்சிகளைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இமாம் அல்-பஹ்போதியின் சாஹிஹ் அல் காஃபி புத்தகத்தில் இதைப் பற்றி படிக்கலாம். 3, எண் 46:

قال البهبودي : صحيح 3/46

** الْحُسَيْنُ بْنُ مُحَمَّدٍ عَنْ أَحْمَدَ بْنِ إِسْحَاقَ عَنْ سَعْدَانَ بْنِ مُسْلِمٍ عَنْ عُبَيْدِ بْنِ زُرَارَةَ عَنْ أَبِيهِ عَنْ أَبِي عَبْدِ اللَّهِ (عليه السلام) قَالَ ذَكَرْتُ لَهُ الْمُتْعَةَ أَ هِيَ مِنَ الْأَرْبَعِ فَقَالَ تَزَوَّجْ مِنْهُنَّ أَلْفاً فَإِنَّهُنَّ مُسْتَأْجَرَاتٌ

முஹம்மதுவின் மகன் அல்-ஹுசின், இஷாக்கின் மகன் அகமதுவிடமிருந்து முஸ்லிமின் மகனான சடானிடமிருந்து அப்துல்லாவிடமிருந்து அவனுடைய தந்தையிடமிருந்து ஜராவின் மகன் ஆபித் மகன் அப்துல்லாஹ்விடமிருந்து அவனுடைய தந்தையிடமிருந்து அவருக்கு ஸலாம் உண்டாகட்டும். “இந்த முத்தாவைக் குறித்து இது நான்கில் (அங்கீகரிக்கப்பட்ட

பாலியல் உறவுகளின் வகைகள்) ஒன்றா" என்று கேட்டேன். அவர் கூறினார், "அவர்களிடமிருந்து (பெண்களை) ஆயிரம்பேரை திருமணம் செய்து கொள்ளுங்கள். அவர்கள் வாடகைப் பெண்கள்."

இதன் பொருள் என்னவென்றால், உடலுறவுக்கு எத்தனை பெண்களை வேண்டுமானாலும் வாடகைக்கு வாங்கலாம். வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயிரம் என்கிற எண், பணம் இருக்கும் வரையில், ஆண்கள்பெண்களை வாடகைக்கு எடுக்க (படிக்கவும்: விபச்சாரிகள்) வரம்பற்ற உரிமம் உள்ளது என்று அர்த்தம்.

உண்மையில், அவர்கள் வாடகையாக வாங்கும்போது, "திருமணம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி அவர்கள் எவ்வாறு தப்பித்துக்கொள்கிறார்கள் என்பதும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! முஸ்லிம்கள் "திருமணம்" என்று அழைப்பதை நாம் விபச்சாரம்" என்று அழைக்கிறோம் - அவர்களின் திருமணமானது விபச்சாரமாக இருந்தால், அவர்களின் விபச்சாரத்தை அது என்னவாக்குகிறது?

நாம் கவனமாகப் படித்தால், இதுவும் முத்தாவைப் போலவே இருப்பதை நீங்கள் கவனிப்பீர்கள்; உங்களிடம் பணம் இருந்தால் பெண்களை விலைக்கு வாங்கி அவர்களுடன் உடலுறவு கொள்ளலாம். அவள் ஒரு சுதந்திரப் பெண்ணாக இருந்தால், அது அவளுக்கும் தற்காலிக கணவனுக்கும் இடையேயான ஒப்பந்தம்; இல்லையெனில் அது அடிமையை வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையேயான கொள்முதல் ஒப்பந்தம், ஆனால் அது முழுதும் செக்ஸ் பற்றியது.

சுன்னி பிரிவினர் முஸ்லீம் புத்தகங்களிலிருந்து நாம் தெளிவாக காணலாம். புத்தகம், அல்-முஹல்லா, தொகுதி. 6, பகுதி 9, பக். 467, அஹ்லு-சுன்னாவின் இமாம், இப்னு ஹஸ்ம் மூலம் அவர் கூறினார்:
நான்கு பெண்களுக்கு மேல் யாருக்கும் வைத்துக்கொள்ள அனுமதி இல்லை, ஆனால் அவர்களைத் தவிர, அவன் விரும்பும் பல பெண்களை வாங்க அனுமதிக்கப்படுகிறது.

விபச்சாரத்தைப் பற்றிய இஸ்லாமிய சட்டத்தின் மேலோட்டமான பார்வை இது. நாம் ஆழமாக தோண்டினால், அது தோற்றமளிப்பதை விட மிகவும் சிக்கலானது என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

கடைசி வசனத்தில் நான் உங்களுக்குக் காட்டியது சட்டப்பூர்வ பாலியல் உறவின் வரையறை, ஆனால் இஸ்லாம் பல கேவலமான நடத்தைகளை தடை செய்யவில்லை: குரான் 4:23, உசாமா தக்டோக் மொழிபெயர்ப்பு:

4:23
உங்களுக்கு விலக்கப்பட்டவர்கள்; உங்கள் தாய்மார்கள், உங்கள் மகள்கள், உங்கள் சகோதரிகள், உங்கள் தந்தைவழி அத்தைகள், உங்கள் தாய்வழி அத்தைகள், சகோதரனின் மகள்கள், சகோதரியின் மகள்கள் மற்றும் உங்களுக்குப் பாலூட்டிய தாய்மார்கள் (ஆணுக்கு ஐந்து வேளை உணவளிக்கும் எந்தப் பெண்ணும் அவனது தாய்) மற்றும் தாய்ப்பால் கொடுப்பதில் உனது சகோதரிகள் (ஒரு ஆணின் தாயால் குறைந்தபட்சம் ஐந்து முறை பாலூட்டப்பட்ட பெண் அவனது சகோதரியாகிறாள்) மற்றும் உனது பெண்களின்(மனைவிகள்) தாய் மற்றும் உன்னுடைய மடியில் இருக்கும் உனது மாற்றான் மகள்கள் நீங்கள் நுழைந்த பெண்கள் (மனைவிகள்) எனவே நீங்கள் அவற்றில் நுழையவில்லை என்றால் (அவர்களுடன் உடலுறவு கொள்ளவில்லை), அதனால் நீங்கள் தவறு செய்யவில்லை, மேலும் உங்கள் முதுகெலும்பிலிருந்து வெளியேறும்(இது மனிதனின் விந்தணுவின் தோற்றம் என்று நம்பப்படுகிறது) உங்கள் மகன்களின் மனைவிகள் மற்றும் ஒன்றாக இரண்டு சகோதரிகள். இது ஏற்கனவே முடிந்ததைத் தவிர. நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும் கருணையுடையவனாகவும் இருந்தான்.

Qur'an 4:24: (وَالْمُحْصَنَاتُ مِنَ النِّسَاءِ إِلَّا مَا مَلَكَتْ أَيْمَانُكُمْ)

4:24
மேலும் அல்லாஹ் உங்கள் மீது விதித்தபடி (பிடிக்கப்பட்ட) அடிமையைத் தவிர திருமணமான பெண் உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர, அல்லாஹ்வின் சட்டத்தை மீறாமல், உங்கள் சொத்துக்களிலிருந்து பணத்தை ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்களைத் தேடினால், மற்ற அனைத்தும் சட்டபூர்வமானவை. எனவே அவர்களிடமிருந்து நீங்கள் அனுபவித்தவற்றுக்கு, நீங்கள் செலுத்த ஒப்புக்கொண்டதை அவர்களுக்குச் செலுத்துங்கள். அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன், ஞானமுள்ளவன்.

இதன் பொருள் என்னவென்றால், இஸ்லாமிய ஆணுக்கும் அவனது திருமணமான அடிமை பெண்ணுக்கும் இடையிலான பாலியல் உறவை இஸ்லாம் சட்டப்பூர்வமாக்குகிறது. இந்த ஹதீஸ் நமக்கான வசனத்தை விளக்குகிறது; ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. 7, புத்தகம் 62, எண் 137:

போர்க் கொள்ளையிலிருந்து பெண்களை சிறைபிடித்து, அவர்களுடன் படுத்தோம். எனவே அவர்களுடன் உடலுறவு கொள்வது பற்றி நாங்கள் அல்லாஹ்வின் தூதரிடம் கேட்டோம், அவர் கூறினார்: "நீங்கள் உண்மையில் அதைச் செய்கிறீர்களா?" என்ற கேள்வியை மூன்று முறை மீண்டும் கூறி, பின்னர் அவர் கூறினார்: “(அல்லாஹ்வினால்) உண்டாக்கப்பட்ட ஆன்மாவும்

மறுமை நாளில் திரும்பவும் வரும்வரை இருக்கப்போவதில்லை.”

திருமணமான பெண்ணுடன் உடலுறவு கொள்வது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது, அதாவது திருமணமான முஸ்லீம் பெண்ணுடன்!! திருமணமான முஸ்லிம் அல்லாத பெண்கள் நியாயமான விளையாட்டுக்கு உட்பட்டவர்கள். அவர்கள் முதலில் தங்கள் கணவரிடம் இருந்து கடத்தப்பட்டாலும் இல்லாவிட்டாலும், முஸ்லிம் அல்லாத மனைவிகள் முஸ்லீம் ஆணுக்கு வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்ள இலவசம். கடத்தல் இஷ்டமானது, ஏனெனில் அது கற்பழிப்பை "சட்டப்பூர்வமாக்காது". முஸ்லிமல்லாத மனைவிகளை பலாத்காரம் செய்வது ஏற்கனவே சட்டப்பூர்வமானது அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடத்தப்பட்ட முஸ்லிம் அல்லாத பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்த முஸ்லிம்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் கடத்தப்பட்டவரின் சொத்தாகக் கருதப்படுகிறார்கள், எனவே, வணிகத்திற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்படுவார்கள்.

பெண்களின் அடிமைத்தனம்

இஸ்லாத்தில் பெண்களின் அடிமைத்தனம்

இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல், ஒவ்வொரு முஸ்லிமின் பொருளாதாரம், இராணுவம் மற்றும் பாலியல் வாழ்க்கையின் மிக முக்கிய அங்கமாக ஆக்குகிறது. இதை நாம் குர்ஆன் 30:28-ல் காணலாம்:

> 30:28
> உங்களிலிருந்தே அவன் உங்களுக்காக ஓர் கதையை எடுத்துக் கூறுகிறான்; உங்கள் வலக்கரம் உரிமைப்படுத்திக் கொண்டவர்களில் (அடிமைகளில்) எவரையும், நாம் உங்களுக் அளித்திருப்பதான உணவு, அதிகாரம், மரியாதை, செல்வம் ஆகியவற்றில் அடிமைகளை உங்களுடன் பங்காளிகளாக ஆக்கிக் கொள்கிறீர்களா? இருப்பினும், நீங்கள் உங்கள் செல்வத்தை உங்களுடன் பகிர்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் அஞ்சுவதுபோல நீங்கள் அவர்களுக்கு அஞ்சுவதில்லை. இவ்வாறு செய்யுங்கள். புரிந்துகொள்ளும் மக்களுக்காக நாம் விளக்கம் தருகிறோம்.

இந்த உவமை என்று அழைக்கப்படுவதில், அல்லாஹ்விடமிருந்து செல்வத்தையும் அதிகாரத்தையும் பெற்ற முஸ்லிம்கள் தங்கள் அடிமைகளுடன் செல்வத்தையும் மரியாதையையும் பகிர்ந்து கொள்வதை அல்லாஹ் தடை செய்கிறான். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு கடவுள் என்றும், முஸ்லிம்கள் அடிமைகளுக்கு கடவுள் என்றும் தெளிவாக்குகிறான். பங்காளிகள் தனது அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதை அல்லாஹ் விரும்பவில்லை. எனவே, முஸ்லிம்கள் தங்களுடைய செல்வத்தையும் மரியாதையையும் அடிமைகளுடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது. இந்த மொழிபெயர்ப்பை உறுதிப்படுத்தும் இஸ்லாமிய விளக்கங்களை நீங்கள் ஆங்கிலத்தில் படிக்கலாம். http://www.altafsir.com க்குச் செல்லவும்; திரையின் இடதுபுறத்தில், "ஆங்கிலத்தில் Tafsir Al-Jalalayn;" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். பக்கத்தின் கீழே உள்ள "இங்கே கிளிக் செய்க(Click here)” என்பதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் Tafsir ஐ உள்ளிடவும்; சூராவிற்கு, "30 அர்-ரம்" என்பதைத் தேர்ந்தெடுக்கவும் மற்றும் வசன எண்., "28;" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இறுதியாக "காட்டவும்(Display)” என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

அடிமைத்தனம் மற்றும் கிறிஸ்தவம்

பலர் பைபிளில் உள்ள கட்டளைகளை இன்றைய சட்டங்களுடன் ஒப்பிட்டு நியாயந்தீர்க்க முயற்சி செய்கிறார்கள். இன்றைய மனித உரிமைச் சட்டங்களுக்குப் பொருந்தாத ஒரு கட்டளையை அவர்கள் எனக்காகப் பெயரிடும் வரையில் எனக்கு அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் படைக்கப்பட்டவை அந்தக் காலகட்டத்திற்கு ஏற்றதாக ஆக்கப்பட்டது, எல்லாரும் வாளாலேயே வாழ்ந்து மடிந்த காலத்தில். இஸ்ரவேல் தேசம் (முழு தேசமும்) அடிமைப்படுத்தப்பட்டது. அது அந்தக் கால வாழ்க்கை முறை; அவர்கள் அதற்குள் வாழ வேண்டும், ஆனால் அதை நேசிக்க வேண்டியதில்லை. அந்த நேரத்தில் உங்களுக்கு தேர்வுசெய்ய நிறைய வாய்ப்புகள் இல்லை. நீங்கள் ஒரு அடிமையை வைத்திருப்பதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நீங்களும் ஒரு அடிமையாக ஆகலாம்!

என்னைப் பொறுத்தவரை, கிறிஸ்துவின் போதனை மனிதர்கள் கடந்து வந்த ஒரு வேதனையான வரலாற்றிற்கான தீர்வாக மட்டுமல்லாமல், பசி, போர், வெறுப்பு, வன்முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற மனிதர்கள் பாதிக்கப்படும் பயங்கரமான பிரச்சினைகளுக்கு எல்லாம் அறிந்த தீர்வாகும்.

இது கிறிஸ்துவின் போதனை, அதனால்தான் நான் கிறிஸ்தவன்; மத்தேயு 5:44:

> மத்தேயு 5:44 (பைபிள்)
> ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், உங்கள் எதிரிகளை நேசியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களைத் துன்புறுத்துகிறவர்களுக்காக ஜெபம் செய்யுங்கள்.

அடிமைகள் தொடர்பான வழக்குகளை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய சட்டங்களை பைபிள் வழங்குகிறது. உண்மையில், இந்த சட்டங்கள் அடிமையைப் பாதுகாத்தன.

> யாத்திராகமம் 21:20 (பைபிள்)
> "ஒருவன் தன் அடிமையையோ, பெண்ணையோ தடியால் அடித்து அவன் கையால் இறந்தால், அவன் தண்டிக்கப்பட வேண்டும்."

எஜமான் அடிமையை விடுவிப்பதற்கான எல்லா காரணங்களையும், அடிமையின் பல்லை உடைப்பது போன்ற குற்றங்கள் உட்பட, பைபிள் வழங்குகிறது! இதன் பொருள், "நீ என் பல்லை உடைத்தால், நான் விடுதலை!”

யாத்திராகமம் 21:26-27 (பைபிள்)
26. ஒருவன் தன் அடிமையானவன் கண்ணையாகிலும் தன் அடிமைப்பெண்ணின் கண்ணையாகிலும் அடித்ததினால் அதைக் கெடுத்தால், அவன் கண்ணுக்குப் பதிலாக அவனை விடுதலைபண்ணிவிடவேண்டும்.

27. அவன் தன் அடிமையானவன் பல்லையாவது தன் அடிமைப்பெண்ணின் பல்லையாவது உதிர அடித்தால், அவன் பல்லுக்குப்பதிலாக அவனை விடுதலைபண்ணிவிடவேண்டும்.

தன் எஜமானிடம் இருந்து விடுதலை தேடி ஓடும் அடிமையின் பாதுகாப்பைக் கூட பைபிள் கட்டளையிடுகிறது.

உபாகமம் 23:15 (பைபிள்)
தன் எஜமானுக்குத் தப்பி உன்னிடத்தில் வந்த வேலைக்காரனை அவனுடைய எஜமான் கையில் ஒப்புக்கொடாயாக.

அடிமையின் உரிமையாளர் தனது அடிமையை அடித்துக் கொன்றால், அவர் செய்த குற்றத்திற்காக அவர் தண்டிக்கப்படுவார்.

யாத்திராகமம் 21:20 (பைபிள்)
ஒருவன் தனக்கு அடிமையானவனையாவது தனக்கு அடிமையானவளையாவது, கோலால் அடித்ததினாலே, அவன் கையால் இறந்துபோனால், பழிக்குப்பழி வாங்கப்படவேண்டும்.

ஒரு அடிமையின் மரணத்தை ஏற்படுத்துவது பைபிளில் மரண தண்டனைக்குரியது.

யாத்திராகமம் 21:12 (பைபிள்)
ஒரு மனிதனைச் சாகும்படி அடித்தவன், நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்.

பழைய நாட்களில், ஒரு மனிதன் ஆதரவற்ற நிலையில் இருந்தால், அவன் தன்னைத்தானே அடிமையாக விற்க முடியும். அத்தகைய மனிதனுக்கு பைபிள் பாதுகாப்பையும் அளித்தது.

லேவியராகமம் 25:39-43 (பைபிள்)
உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமையைப்போல ஊழியஞ்செய்ய நெருக்கவேண்டாம்.

அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன்.

பின்பு, தன் பிள்ளைகளோடுங்கூட உன்னை விட்டு நீங்கலாகி, தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிப்போகக்கடவன்.

அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என்னுடைய ஊழியக்காரர்; ஆகையால், அவர்கள் அடிமைகளாக விற்கப்படலாகாது.

நீ அவனைக் கொடூரமாய் ஆளாமல், உன் தேவனுக்குப் பயந்திரு.

அடிமையின் துஷ்பிரயோகத்திற்கு எதிராகவும் பைபிள் எச்சரிக்கிறது, அத்தகைய குற்றத்தை யார் செய்தாலும் அதற்கு தண்டனை வழங்கப்படும். அடிமைகள் மீது குடும்ப அன்பையும் கூட பைபிள் ஊக்குவிக்கிறது.

நீதிமொழிகள் 29:21 (பைபிள்)
ஒருவன் தன் அடிமையைச் சிறுபிராயமுதல் இளக்காரமாக வளர்த்தால், முடிவிலே அவன் தன்னைப் புத்திரனாகப் பாராட்டுவான்.

அடிமைத்தனம் மனித துயரத்தின் ஒரு பகுதியாக இருந்தது. யூத தேசமே வெள்ளையர்கள் (பாபிலோனியர்கள்) மற்றும் ஆப்பிரிக்கர்கள் (எகிப்தியர்கள்) இருவராலும் அடிமைப்படுத்தப்பட்டது. அடிமைத்தனம் நிறத்திற்கு எதிரான குற்றம் அல்ல, மற்ற நாடுகளுக்கு எதிரான குற்றம் என்பதை இது நமக்குச் சொல்கிறது. வெள்ளையர்கள் வெள்ளையர்களையும், கறுப்பர்கள் கறுப்பர்களையும், கறுப்பர்களும் வெள்ளையர்களும் கறுப்பர்களையும் வெள்ளையர்களையும் அடிமைப்படுத்தினார்கள்.

பைபிளில், யாத்திராகமம் 21:16ஐக் காண்கிறோம், அதை பலர் குறிப்பிட விரும்புவதில்லை:

யாத்திராகமம் 21:16 (பைபிள்)
ஒருவன் ஒரு மனிதனைத் திருடி விற்றுப்போட்டாலும், இவன் அவன் வசத்திலிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்.

இதன் பொருள், ஒரு நபரை சொந்தமாக கடத்துவது அல்லது அடிமையாக விற்பது குற்றமாகும். மரணத்திற்கு தண்டனை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது, ஆனால் அடிமைத்தனத்தை நிறுத்த அது போதுமா? நிச்சயமாக அது இல்லை, ஏனென்றால் மனிதனின் பேராசை முடிவற்றது.

1 தீமோத்தேயு 6:1-2 இல் விளக்கப்பட்டுள்ளபடி, மனிதர்களை அதிக மனிதர்களாக ஆக்குவதற்காக, பைபிள் எப்போதும் ஒரே திசையில் செயல்படுவதை நாம் காணலாம்.

1 தீமோத்தேயு 6:1-2 (பைபிள்)
தேவனுடைய நாமமும் உபதேசமும் தூஷிக்கப்படாதபடிக்கு, அடிமைத்தன நுகத்திற்குட்பட்டிருக்கிற வேலைக்காரர் யாவரும் தங்கள் எஜமான்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திரரென்று எண்ணிக்கொள்ளக்கடவர்கள்.

விசுவாசிகளாகிய எஜமான்களை உடையவர்கள், தங்கள் எஜமான்கள் சகோதரராயிருக்கிறதினாலே அவர்களை அசட்டைபண்ணாமல், நல்வேலையின் பலனைப் பெற்றுக்கொள்ளுகிற அவர்கள் விசுவாசிகளும் பிரியருமாயிருக்கிறபடியால், அவர்களுக்கு அதிகமாய் ஊழியஞ்செய்யக்கடவர்கள்; இந்தப்படியே போதித்துப் புத்திசொல்லு.

கிறிஸ்தவர்களை நல்ல அடிமைகளாக இருக்க வேண்டும் என்று பைபிள் கட்டளையிடுகிறது என்று அதே வசனத்தைப் பயன்படுத்தி கிறிஸ்தவத்தை வெறுக்கிறார்கள்! மாறாக, அந்த வசனம் எஜமானையும் அடிமையையும் சகோதரர்கள் - சமமானவர்கள் என்று அழைப்பது தெளிவாக உள்ளது. ஒருவருக்கு ஒருவர் நல்லபடி இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கிறது. கிறிஸ்துவின் பணி இதுவே - அமைதி மற்றும் அன்பு. இது சண்டைக்கு முற்றிலும் எதிரானது.

சிலர், “வெள்ளைக்காரன் கிறிஸ்தவனாக இருந்தால், அவன் ஏன் மற்றவர்களை அடிமைப்படுத்துகிறான்?” என்று வாதிடுகின்றனர். இதற்கு எளிய பதில் பேராசையாகும். அதே காரணம் தான் ஆப்பிரிக்கர்கள் தங்கள் சக ஆப்பிரிக்கர்களையும் இஸ்ரவேலர்களையும் அடிமைப்படுத்தியது. மனிதர்களில் மாற்றம் மிக மெதுவான வேகத்தில் செல்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், அதனால்தான் எல்லா வகையான அடிமைத்தனமும் இன்றும் உள்ளது. அதிகம் மாறவில்லை. கடவுளுக்குமுன்பு நாம் அனைவரும் சமம் என்று பைபிள் மீண்டும் மீண்டும் கூறியுள்ளது. நாம் அனைவரும் அவருடைய பிள்ளைகள்.

கலாத்தியர் 3:28 (பைபிள்)
யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

கொலேசெயர் 3:11
அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.

தேவபக்தியற்ற செல்வந்தர்களைப் பற்றியும் கிறிஸ்து பேசினார்.

மத்தேயு 19:24 (பைபிள்)
மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

நாம் அனைவரும் அறிந்தபடி, முஸ்லிம்கள் எப்போதுமே ஆப்பிரிக்க அமெரிக்கர்களை முட்டாளாக்க முயற்சிக்கிறார்கள், இஸ்லாம் மட்டுமே பாரபட்சம் இல்லாத ஒரே மதம் என்று நம்புகிறார்கள்.

முஸ்லிம்கள் மத்தேயு 23:24 இல் விவரிக்கப்பட்டுள்ள மனிதர்கள்.

மத்தேயு 23:24 (பைபிள்)
குருட்டு வழிகாட்டிகளே, அவர்கள் கொசுவை வடிகட்டுகிறார்கள், ஒட்டகத்தை விழுங்குகிறார்கள்.

இப்போது இஸ்லாத்தில் அடிமைத்தனம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

அடிமைத்தனம்

அடிமைத்தனம் மற்றும் இஸ்லாம்

இஸ்லாத்தில் அடிமைத்தனத்தின் ஆதாரம்:

1. **முஸ்லிம் அல்லாதவர்களுக்கு எதிரான போர்**.
கிறிஸ்தவர்கள், யூதர்கள் மற்றும் சஃபியா மற்றும் ஜுரியா போன்ற காஃபிர்களை முஹம்மது அவர்களின் முழு பழங்குடியினரையும் கொன்ற பிறகு அடிமைப்படுத்தினார்.

2. **பரிசுகள்**, மரியா-தி-காப்டின் விஷயத்தில் உள்ளதுபோல.
அவள் தன் உறவினர்களுடன், முஹம்மதுக்கு பரிசாக அனுப்பப்பட்டாள், அவர் அவைகளை ஏற்றுக்கொண்டான்.

3. **வாங்குதல் மற்றும் விற்பது**.
முஹம்மது அடிமைகளை விற்று வாங்கினார்.

4. **சந்ததி**. ஒரு அடிமையின் மகன் ஒரு அடிமை.

5. **ஒரு வகையான தண்டனை**.
விபச்சாரம் செய்யும் சுதந்திரப் பெண்ணின் மகன் தானாகவே அடிமையாகிறான். ஒரு பெண்ணின் விபச்சார உறவின் விளைவாக பிறந்த மகன்கள் தானாக அடிமையாகிவிடுவார்கள் என்று முஹம்மது கட்டளையிட்டார்.

6. **சொத்துரிமை**.
ஆயிரக்கணக்கானவற்றில், இந்த புள்ளிகளை நிரூபிக்க ஒரு சில எடுத்துக்காட்டுகள் போதும்.

போரிலிருந்து அடிமை

ஸஹீஹ் அல்-புகாரி, தொகுதி. 3, புத்தகம் 46, ஹதீஸ் 717:
...அல்லாஹ்வின் நபி எதிர்பாராத விதமாக அல்-முஸ்தாலிக் பழங்குடியினரை எந்த எச்சரிக்கையும் இல்லாமல் தாக்கினார், அவர்கள் கவலையற்றவர்களாகவும், தங்கள் விலங்குகளுக்கு தண்ணீர் கொடுப்பதில் மும்முரமாகவும் இருந்தனர் . அவர்களின் சண்டையிடும் ஆண்கள் கொல்லப்பட்டனர், அவர்களின் பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாக

எடுத்துக்கொள்ளப்பட்டனர்; அன்று நபியவர்களுக்கு ஜுரேயா (முஸ்தாலிக் கோத்திரத் தலைவரின் மகள்) கிடைத்தாள்.

அடாவா அல்-பயான் புத்தகம், தொகுதி. 3, எண் 387:

قال الشيخ الشنقيطي رحمه الله : وسبب الملك بالرق : هو الكفر ، ومحاربة الله
ورسوله ، فإذا أقدر الله المسلمين المجاهدين الباذلين مُهَجهم وأموالهم وجميع
قواهم وما أعطاهم الله فتكون كلمة الله هي العليا على الكفار : جعلهم ملكاً لهم
